# அஸ்மா பின்த் அபூபக்கர் (ரலி)

இப்போது நாம், இஸ்லாமிய வரலாற்றில் புகழுடன் ஒளிவீசும் தாரகையாய்த் திகழ்கின்ற ஒரு மகத்தான பெண்மணியின் சரிதையைக் காணப் போகின்றோம்.

அண்ணல் நபியின் ஆருயிர்த் தோழர் அபூபக்கர் (ரலி) அவர்களின் மூத்த புதல்வியும் சுவனத்தைக் கொண்டு நற்செய்தி சொல்லப்பட்டவர்களில் ஒருவரான ஜுபைர் இப்னுல் அவ்வாம் (ரலி) அவர்களின் மனைவியும் மாபெரும் வீரத் தியாகியாய்த் திகழ்ந்த அப்துல்லாஹ் ஜுபைர் (ரலி)யின் அன்பு அன்னையுமான மரியாதைக்குரிய அஸ்மா (ரலி) அவர்களின் வரலாறுதான் அது!

இறைவனின் மீது உண்மையான - உறுதியான நம்பிக்கை கொண்ட அஸ்மா (ரலி) அவர்கள் சிறுவயது முதலே இஸ்லாத்தின் வெற்றிக்காக அரும்பெரும் பணிகளை ஆற்றும் நல்வாய்ப்பைப் பெற்றார்கள்!

ஜுபைர் (ரலி) அவர்களின் குடும்பத் தலைவியை வறுமையும் துன்பமும் வந்து வாட்டிய காலமும் உண்டு. அப்போது அவர்கள் பொறுமையின் சிகரமாய் ஒளிர்ந்தார்கள். பிறகு செழிப்பும் வளவாழ்வும் வந்து மகிழ்வித்தன. அப்போது கிஞ்சிற்றும் செருக்குறாமல் குணத்தின் குன்றாய் வாழ்ந்துகாட்டி பெண்குலத்திற்கு ஒரு சிறந்த முன்மாதிரியைப் படைத்தார்கள்.

அவர்களின் வாழ்க்கை -

வறுமைக்கு இலக்காகும் இல்லத்தரசிகளுக்கு ஒரு நம்பிக்கை நட்சத்திரம்! பெண்ணினத்தை இழிவுக் கண்கொண்டு பார்ப்பவர்களுக்கு - ஒரு பெண் ஆணைவிடவும் அதிக அறிவு பெற்றவளாக, சிறந்தவளாக திகழ முடியும் எனும் உண்மையின் நிரூபணம்!

பெண் என்றால் ஓர் இன்பப் பொருளாகவே இருக்க வேண்டும், வெளியலங்காரத்தையும் பகட்டையும் தவிர வேறெந்த நன்மையோ குறிக்கோளோ அவளிடம் இல்லை என்று கருதுபவர்களுக்கு -

பெண் என்பவள் வெறும் வெளியலங்காரம் எனும் நிலையை விட்டு உயர்ந்தவள், சமுதாயப் புத்தமைப்பில் ஓர் அங்கமாகவும் சமுதாயத்தின் உயர்வையும் சிறப்பையும் நிலைநாட்டுவதற்கு உறுதுணையாகவும் அவள் இருந்திட முடியும் எனும் உண்மையின் தெளிவுரை!

## இஸ்லாத்தைத் தழுவுதல்

அண்ணல் நபி (ஸல்) அவர்களின் அழைப்பை ஏற்று சுமார் 17 பேர் மட்டுமே இரகசியமான முறையில் இஸ்லாத்தைத் தழுவியிருந்த காலத்திலேயே 18வது நபராக அஸ்மா (ரலி) அவர்கள் இஸ்லாத்தின் முன்னணிப படையில் தம்மை இணைத்துக் கொண்டார்கள்!

மக்காவில் இஸ்லாத்தின் அழைப்புப் பணி பகிரங்கமாக மேற்கொள்ளப்படத் தொடங்கிய ஆரம்ப காலத்தில் இணை வைப்பாளர்களான குறைஷிகளின் உள்ளத்தில் கோபக்கனல் பொங்கி எழுந்ததும் - பிறகு எத்துணை பயங்கரமான கொடுமைகள் தலைவிரித்தாடின என்பதும் யாவரும் அறிந்ததே!

அல்லாஹ்வின் அருமைத் தூதரும் அவர் தம் ஆருயிர்த் தோழர் அபூபக்கர் ஸித்தீக் (ரலி) அவர்களும்கூட அக்கொடுமைகளிலிருந்து தப்பித்திருக்க முடியவில்லை. இவை அனைத்தையும் கண்ணுற்ற சிறுவயதுப் பெண்ணாய் இருந்த அஸ்மா (ரலி) அவர்களின் உள்ளத்தில் ஈமான் மென்மேலும் உறுதிப்பட்டது. எவ்விதத் தளர்வோ தயக்கமோ அடைந்தார்களில்லை. இக்கொடுமைகளுக்கு ஒரு முற்றுப் புள்ளி வைக்கப்பட வேண்டுமெனப் பொறுமையுடன் எதிர்பார்த்திருந்தார்கள்!

இறுதியில் மதீனா நகர் நோக்கி ஹிஜ்ரத் செய்வதற்கு இறைவன் தன் அன்புத் தூதருக்கும் அவர்தம் தோழர்களுக்கும் அனுமதி வழங்கினான்! வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அப்பயணம் வெற்றிபெற அஸ்மா (ரலி) அவர்கள் ஆற்றிய சேவை என்ன?

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மக்காவைத் துறந்து மதீனா புறப்பட்ட இந்நிகழ்ச்சி வெளிரங்கத்தில் - ஏதோ இரு மனிதர்கள் மக்காவிலிருந்து மதீனாவுக்குப் புறப்பட்டார்கள் எனும் வகையில் ஒரு சாதாரணமான பயணமாகத் தெரியலாம்! ஆனால் அந்தப் பயணம் - அதன் விளைவைப் பொறுத்து மகத்தானதொரு நிகழ்ச்சியே!

ஆம்! ஹிஜ்ரத் ஒரு சாதாரணப் பயணம் அல்ல! அண்ணலார் அவர்கள் 13 ஆண்டுகாலமாக மக்காவில் ஆற்றிவந்த ஏகத்துவப் பிரச்சாரத்தின் வீரப்பயணம்!

இஸ்லாத்தின் அழைப்புப்பணி ஒளிவுமறைவு, பலவீனம் எனும் நிலையிலிருந்து விடுபட்டு மனத்திண்மையுடனும் வலிமையுடனும் வெற்றிச் சிகரத்தை எட்டிப்பிடிக்கத் தொடங்கிய பயணம்!

ஒரு மாபெரும் சகாப்தத்தின் தொடக்கமான இந்த ஹிஜ்ரத் பயணம் அன்று தோல்வி அடைந்திருக்குமாயின், இறுதித் தூதரின் உயிரே பேராபத்திற்குள்ளாகும் நிலைமை!

ஆகையால்தான் நபியவர்கள் அந்தப் பயணத்தை மிகமிக இரகசியமாக மேற்கொண்டார்கள்! மிகவும் முக்கியமானவர்களுக்குத்தான் அதன் இரகசியம் தெரியும். அத்தகையவர்கள் மட்டுமே அதில் துணைபுரிய அனுமதிக்கப்பட்டார்கள்! அண்ணலாரின் குடும்பத்தைச் சார்ந்தவர்களில் அலீ (ரலி) அவர்களுக்குத் தெரியும்! அடுத்து, சித்தீகுல் அக்பரின் மூத்த புதல்வி அஸ்மா (ரலி) அவர்களுக்கும் அந்தப் பயணத்தின் அனைத்து விபரங்களும் தெரியும்! அவர்கள்தான் அதில் நபியவர்களுக்கும் தம் தந்தை அபூபக்கர் (ரலி) அவர்களுக்கும் மற்றவர்களைக் காட்டிலும் அதிகமாக பொறுப்புமிக்க உதவிகளை அளித்தார்கள்.!

### அஸ்மா (ரலி) அவர்களின் சாதுர்யம்

அண்ணல் நபி (ஸல்) அவர்கள், குறைஷி குலத்து வன்னெஞ்சர்களால் முற்றுகையிடப்பட்டிருந்த தம்முடைய இல்லத்திலிருந்து இரகசியமாக வெளியேறி - தம் தோழர் அபூபக்கர் (ரலி) அவர்களுடன் மக்காவின் அருகிலிருந்த தௌர் குகையை அடைந்தார்கள். எதிரிகளின் நிலைமைகளை அனுசரித்து சில நாட்களாக அங்கே தங்கியிருக்க வேண்டும் என்பதும் - அந்நாட்களில் அஸ்மா (ரலி) அவர்கள்தான் அவ்விருவருக்கும் உணவு தயாரித்து மிகமிக இரகசியமாகக் குகைக்குச் சென்று கொடுத்து வரவேண்டும் என்பதும் திட்டம்!

அங்கே மக்காவில்.......! அண்ணலாரின் வீட்டுக்கு வெளியே தங்களின் கொடிய கொலைபாதகத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக நபியவர்கள் எப்போது வெளியே வருவார்கள் என்று எதிர்பார்த்து காத்துக் கொண்டிருந்த எதிரிகளுக்கு....... பாவம்:....! வீட்டினுள் விரிப்பில் படுத்துக் கொண்டிருப்பது முஹம்மத் (ஸல்) அல்ல, அலீ (ரலி) தான் என்பது அதிகாலை நேரம் புலர்ந்ததும் தான் தெரிய வந்தது! ஆனால் அப்போது அவர்களால் என்ன செய்திட முடியும்?

அவர்களின் தலைவன் அபுஜஹ்ல் தன்னுடைய திட்டம் தோல்வி அடைந்தது கண்டு வெகுண்டெழுந்தான்.......! அவனுக்குப் பைத்தியமே பிடித்து விடும்போல் இருந்தது!

அவனும் அவனுடைய தோழர்களும் அவர்களுக்கே உரிய போலிப் பகட்டெனும் செருக்குடனும் அபூபக்கர் (ரலி) அவர்களின் இல்லத்திற்கு வந்தார்கள். அபூஜஹ்ல் வேகமாகக் கதவைத்தட்டினான்! உள்ளே இருந்து வெளியே வந்தது வேறு யாருமல்ல, இளம் வயதுப் பெண்மணியாகிய அஸ்மா (ரலி) தான்!

குகையில் தங்கியுள்ள அண்ணலாருக்கம் தம் அன்புத் தந்தையாருக்கும் வீட்டில் உணவு தயார் செய்து கொண்டிருந்தார்கள்!.

உன் தந்தை எங்கே? இது அபூஜஹ்லின் அகங்காரக் கேள்வி! அவர்களைப் பற்றி எனக்கு எதுவும் தெரியாது:

உரிய பதில் வராததைக் கண்டதும் அபூஜஹ்ல் அதட்டினான்: மிரட்டினான் ஆனால் அஸ்மா (ரலி) அவர்கள் எதற்கும் அஞ்சவில்லை: அசைந்து கொடுக்கவில்லை. அப்போது கொடியோன் அபூஜஹ்ல் அன்பே உருவான அஸ்மா (ரலி) அவர்களின் அழகிய கன்னத்தில் கையை ஓங்கி பளீரென அறைந்தான்!

ஆத்திரத்தால் அறிவிழந்தவர்கள் இப்படித்தான் செய்வார்கள் ஆண்களிடம் தங்களின் ஜம்பம் பலிக்காவிட்டால் பாவம்! பெண்களைத்தான் அடிப்பார்கள்!

பொறுமைக் கடலான அஸ்மா (ரலி) அவர்கள் அந்த அற்பனின் அடியைத் தாங்கிக்கொண்டு ஆற்ற வேண்டிய பணிகளை முறையோடு கவனித்திடலானார்கள். அந்தக் கோழைகளின் மிரட்டல்களுக்கெல்லாம் அஞ்சி நடுங்கிச் சோர்ந்து உட்கார்ந்து விடவில்லை - ஹிஜ்ரத் பயணம் இப்போது முன்னைவிட ஜாக்கிரதையாக தௌர் குகையிலிருந்து தொடர்ந்திட வேண்டியதிருப்பதால்!

அஸ்மா (ரலி)யின் சகோதரர் - அபூபக்கர் அவர்களின் மூத்த புதல்வர் அப்துல்லாஹ் என்பவர் (அதுவரை அவர் முஸ்லீம் ஆகாமல் இருந்தார்) பகல் நேரங்களில் மக்காவின் தெருக்களில் சுற்றித் திரிந்து எதிரிகளின் திட்டங்கள், செயல்பாடுகள் என்னவென்பதை அறிந்து கொண்டு வருவார். மாலை நேரத்தில் தம் சகோதரியுடன் குகைக்கு வந்து எல்லாச் செய்திகளையும் அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் தெரிவிப்பார்!

அபூபக்கர் (ரலி) அவர்களின் வேலையாள் அமீர் இப்னு ஃபுஹைரா என்பவரின் மூலம் ஒரு தற்காப்புப் பணி மேற்கொள்ளப்பட்டது! அது என்ன? அவர் அபூபக்கர் (ரலி) அவர்களுக்குச் சொந்தமான ஆடுகளை மேய்ச்சலுக்காக ஓட்டிக்கொண்டே சென்று குகை அருகே வருவார். அங்கு அண்ணல் நபி (ஸல்) அவர்களுக்கும் அபூபக்கர் (ரலி) அவர்களுக்கும் பால் கறந்து கொடுத்துவிட்டு, பிறகு அஸ்மா (ரலி) அவர்களும் அவர்தம் சகோதரரும் குகையிலிருந்து வீட்டுக்குத் திரும்பும்போது பின்னாலேயே அந்த ஆடுகளை ஓட்டிக்கொண்டு வருவார்! அதன்மூலம் அவ்விருவரின் காலடிச் சுவடுகளை அழித்து விடுவார். எதிரிகளில் எவனாவது ஒருவன் அவ்விருவரின் காலடிச் சுவடுகளைப் பின்பற்றிச் சென்றுவிட்டால்..! இரகசியம் வெளிப்படுவதற்கான அந்த வழியும் இந்த ஏற்பாட்டினால் அடைக்கப்பட்டது!

இளம் வயதுடைய அஸ்மா (ரலி) அவர்கள் இத்தகைய நுட்பமான ஏற்பாடுகளையெல்லாம் செவ்வனே நிறைவேற்றினார்களெனில் அவர்களின் அறிவுத் திறனை என்னவென்றுரைப்பது!

குகையில் மூன்று நாட்கள் தங்கியிருந்த பிறகு நபி (ஸல்) அவர்கள் அஸ்மா (ரலி) அவர்களிடம் கூறினார்கள், ‘அலீ (ரலி) அவர்களிடம் சென்று நாளை இரவு இரு ஒட்டகங்களையும் வழிகாட்டியாக நியமிக்கப் பட்டவரையும் அழைத்துக் கொண்டு இங்கு வரவேண்டும் என்று அறிவித்து விடுவீராக!

..அலீ (ரலி) அவர்கள் இரு ஒட்டகங்களையும் வழிகாட்டியையும் அழைத்துக் கொண்டு உரிய நேரத்தில் கட்டளைப்படி வந்து சேர்ந்தார்கள்!

மறுபுறத்தில்.. அஸ்மா (ரலி) அவர்கள் பல நாட்களுக்குப் போதுமான உணவையும் தண்ணீரையும் தயார் செய்து கொண்டு வந்தார்கள்! அங்கே உணவு மற்றும் தண்ணீர் நிரம்பிய தோல் பைகளை முறையாகக் கட்டுவதற்கு கயிறு எதுவும் கிடைக்கவில்லை! என்ன செய்வது? சித்தீகின் மகளுக்கு பளிச்சென்று ஒரு யோசனை பட்டது!

உடனே தனது இடுப்பில் கட்டியிருந்த வார்த் துணியை அவிழ்த்து இரண்டாகக் கிழித்து இரு பைகளையும் கட்டினார்கள்.

இந்த புத்திசாலித்தனத்தைக் கண்ட நபி (ஸல்) அவர்கள் ஷதாதுந் நிதாகைன் (இரு வாருடையவரே!) என்று அழைத்தார்கள்! அன்றிலிருந்து இன்று வரை அஸ்மா (ரலி) அவர்கள் இதே பெயரில் புகழடைந்துள்ளார்கள்!

## பணமும் பாட்டனாரும்

அஸ்மா (ரலி) அவர்களின் அறிவு அவர்களின் ஈமானைப் போன்று உயர்வானதாய் இருந்தது. அவர்களின் நடவடிக்கைகள் அனைத்தும் அறிவுப்பூர்வமாய் அமைந்திருந்தன. இதோ! மற்றொரு நிகழ்ச்சி!

அபூபக்கர் (ரலி) அவர்கள் ஹிஜ்ரத்தின்போது வீட்டிலிருந்த பணம் முழுவதையும் எடுத்துச் சென்றிருந்தார்கள்! எதற்காக? தம் குடும்பத்தினருக்கு எதுவும் கொடுக்கக் கூடாது என்பதற்காக அல்ல! மாறாக, முஹம்மர் (ஸல்) அவர்களுக்கு உதவ வேண்டும், அவர்கள் மேற்கொண்ட அழைப்புப் பணி உலகமெங்கும் பரவிட வேண்டும் என்பதற்காகத்தான்! தம்மை விடவும் தம் குடும்பத்தை விடவும் உயர்வாய்க் கருதிக் கொண்டிருந்த ஏகத்துவப் பரச்சாரத்தை வெற்றியடையச் செய்ய வேண்டும் எனும் உன்னதக் குறிக்கோளுக்காகத்தான் அபூபக்கர் (ரலி) அவர்கள் இவ்வாறு செய்தார்கள்.

இந்த விஷயம் அவர்களின் தந்தை அபூகுஹா∴பாவுக்குத் தெரிய வருகிறது. அவர் முதியவராகவும கண்பார்வை இழந்தவராகவும் இருந்தார். அதுவரை அவர் இஸ்லாமிய நெறியை ஏற்றிருக்கவில்லை! மிகுந்த மனவேதனையுடனும் கோபத்துடனும் வந்து தம்முடைய பேத்தியான அஸ்மா (ரலி) அவர்களை நோக்கிக் கேட்டார்.

அபூபக்கர் உங்களை மற்றொரு துன்பத்தில் ஆழ்த்தியுள்ளார். உங்களைத் தன்னந்தனியே விட்டு விட்டுச் சென்றது மட்டுமல்லாமல் தன்னுடைய பணம் முழுவதையும் - உங்களுக்குத் தராமல் கொண்டு சென்று விட்டாரே?”

என் அன்புப் பாட்டனாரே! அப்படியல்ல என்று பதிலளித்த அஸ்மா (ரலி) அவர்கள் முதியவராகவும் கண்பார்வை இழந்தும் உள்ள தம் பாட்டனாரை இந்நேரத்தில் மனம் நோகவைப்பது நல்லதல்ல எனக் கருதி, சிறுசிறு கற்களைக் கொஞ்சம் பொறுக்கி எடுத்துக் கொண்டுவந்து அபூபக்கர் (ரலி) அவர்கள் பணம் வைத்துக் கொண்டிந்த பையில் அவற்றைப் போட்டு அதனைப் பணப் பெட்டியில் வைத்துவிட்டார்கள்.!

இங்கு வந்து பாருங்களேன்!” என்று கூறி பாட்டனாரின் கையைப் பிடித்து அழைத்துக்கொண்டு சென்று அந்தப் பையில் வைத்து இது என்னவென்று சொல்லுங்கள்” என்றார்கள்!

அப்போது அபூகுஹா∴பா (ரலி) அவர்கள் மனம் நிம்மதி அடைந்து, ‘இதனை உங்களுக்காக விட்டுச் சென்றுள்ளாரெனில் நல்லதைத்தான் செய்துள்ளார்” என்று கூறினார்கள்.

## அசத்தியவாதிகளின் நரித்தனமான பிரச்சாரம்.

ஹிஜ்ரத் மேற்கொள்ளுமாறு இறைவன் பிறப்பித்த கட்டளையை ஏற்று முஸ்லிமகள் மக்காவை விட்டு மதீனாவில் குடியேறிய தொடக்கத்தில் - மதீனாவின் தட்பவெப்ப சூழ்நிலை முதலில் அவர்களின் உடல்நிலைக்கு ஒத்துவரவில்லை. இறைவனின் நாட்டப்படி, சிறிது காலம் முஹாஜிர்களின் எந்தக் குடும்பத்திலும் குழந்தைகளே பிறக்கவில்லை.

இஸ்லாத்தின் எதிரிகளான யூதர்கள் இந்த இயற்கையான நிலையைக்கூட எதிர்ப்பு ஆயுதமாகக் பயன்படுத்தத் தவறவில்லை. உடனே வதந்திகளைக் கிளப்பினார்கள். அதாவது, முஸ்லிம்களுக்கு சூனியம் வைக்கப்பட்டுள்ளது. அதனால்தான் அவர்களில் ஒருவருக்குக்கூட குழந்தை பிறக்கவில்லை. அவர்களுக்குப் பிறகு அவர்களின் பெயரைக் கூற சந்ததிகளே இருக்கமாட்டார்கள் என்று அறிவுக்குப் புறம்பான - அநாகரீகமான பொய்யைப் பரப்பிவிட்டு, அதன்மூலம் முஸ்லிம்களின் இறைநம்பிக்கையைப் பலவீனப்படுத்த முயன்றார்கள்.

அசத்தியவாதிகளின் எல்லா வழிகளிலும் தங்களின் நரித்தனத்தைக் காண்பித்துக் கொண்டிருப்பார்கள் என்பது இன்று வரைக்கும் நாம் கண்டுவரும் உண்மைதானே!

அஸ்மா (ரலி) அவர்கள் இதுவரை ஹிஜ்ரத் செய்து மதீனாவுக்கு வரவில்லை. அவர்களின் மாமி மகன் ஜு பைர் இப்னு அவ்வாம் (ரலி) அவர்களுடன் மக்காவிலேயே அவர்களுக்குத் திருமணம் நடைபெற்றிருந்தது!

ஓரிரு மாதங்களுக்குப் பிறகு நபி (ஸல்) அவர்கள் தம் மனைவியரையும் ஏனைய நெருங்கிய உறவினர்களையும் அழைத்து வருவதற்காக ஜைத் இப்னு ஹாரிஸா (ரலி) மற்றும் அபூ ரா∴பிஉ (ரலி) இருவரையும் மக்காவுக்கு அனுப்பினார்கள். இதுபோன்று அபூபக்கர் (ரலி) அவர்கள் தம் பணியாளின் மூலம் தம் மகன் அப்துல்லாஹ்வுக்குக் கடிதம் கொடுத்து விட்டார்கள். அதில் அப்துல்லாஹ்வின் தாயார் உம்மு ரூமானையும் (அபூபக்கர் (ரலி) அவர்களின் இரண்டாவது மனைவி) அவரது சகோதரிகளையும் மதீனாவுக்கு அழைத்து வருமாறு ஏவப்பட்டிருந்தார்.

அதற்கு ஏற்ப அப்துல்லாஹ் தம் தாயாரையும் சகோதரிகள் அஸ்மா, ஆயிஷா (ரலி) இருவரையும் அழைத்துக் கொண்டு மதீனா நோக்கிப் புறப்பட்டார்!

அஸ்மா (ரலி) அவர்கள் மதீனாவுக்கு வந்ததும் கொஞ்ச நாட்களில் அவர்களுக்கு ஓர் ஆண்குழந்தை பிறந்தது! ஹிஜ்ரத்திற்குப் பிறகு முஹாஜிர்களில் முதன் முதலில் பிறந்த குழந்தை இதுவே! இதனை அறிந்த முஸ்லிம்கள் அளவிலா மகிழ்ச்சி அடைந்தார்கள். ஆனந்த மிகுதியால் ஷஅல்லாஹூ அக்பர் என்று முழங்கினார்கள்.

அஸ்மா (ரலி) அவர்கள் தம் குழந்தைக்கு அப்துல்லாஹ் எனப் பெயர் சூட்டி, அதனைத் தூக்கிக் கொண்டு அண்ணல் நபி (ஸல்) அவர்களின் திருச்சமூகம் வந்தார்கள். மாநபி (ஸல்) அவர்கள் மகிழ்வோடு குழந்தையை வாங்கி, மடியில் வைத்துக் கொண்டு ஒரு பேரீச்சம் பழத்தைத் தம் திருவாயில் இட்டு மென்று அதனைக் குழந்தைக்கு ஊட்டினார்கள். பிறகு குழந்தைக்காக நற்பாக்கியம் வேண்டி இறைவனிடம் பிரார்த்தனை செய்தார்கள்!

இந்தச் செய்தியைக் கேட்ட யூதர்கள் பொறாமைத் தீயில் வெந்தார்கள்.

## ஏழை மணாளரின் மனைவி!

அஸ்மா (ரலி) அவர்கள் பிறந்து வளர்ந்த குடும்பமும் வாழ்க்கைப்பட்ட குடும்பமும் மக்கா நகரில் பெரும் செல்வாக்குப் பெற்ற, வளம் கொண்ட குடும்பங்களாய் இருந்தன. ஆம்! அவர்கள் மக்கா நகரின் பெருந்தலைவரின் (அபூபக்கர் (ரலி) அவர்களின்) மகள், மாபெரும் தலைமைக் கோத்திரத்தின் செல்வச் செழிப்புள்ள இளைஞரின் (ஜு பைர் (ரலி) அவர்களின்) மனைவி! குறைஷிகளிடையே மதிப்பு மரியாதை கொண்ட தலைவரான அப்துல் உஸ்ஸா என்பவரின் மகளார் கதீலா என்பவர்தான் அவர்களின் தாயார்!

ஆயினும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட ஷகுற்றத்திற்காக மக்கத்து குறைஷிகளின் தயவினால் எவ்வாறு பெரிய பெரிய மனிதர்களின் பொருளாதார நிலை பாழாக்கப்பட்டதோ - அவ்வாறே அஸ்மா (ரலி) அவர்களின் கணவர் ஜூபைர் (ரலி) அவர்களும் எல்லாவற்றையும் இழக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. வறுமையின் கோரப் பிடிக்குள் தள்ளப்பட்டார்கள்!

ஜூபைர் (ரலி) அவர்கள் அப்போது 17 வயது இளைஞர். இஸ்லாத்தை தழுவியதற்காக முதலில் அவர்களுடைய குடும்பத்தினர் அவர்களை அடித்து உதைத்தார்கள். வீட்டில் அடைத்த வைத்தார்கள். அப்படியும் அவர்களின் பிடிவாதம் தெளியவில்லை என்றானபோது அவர்களை வீட்டிலிருந்து விரட்டினார்கள். இறுதியில் ஜூபைர் (ரலி) அவர்கள் அபிசீனியா நோக்கி ஹிஜ்ரத் மேற்கொள்ள வேண்டியதாயிற்று!

செல்வம் கொழித்த குடும்பத்தின் இந்த ஏழை மணாளருக்குத்தான் அஸ்மா (ரலி) அவர்கள் மணம் முடிக்கப்பட்டார்கள். அவர்கள் மனம் சோர்ந்திடவில்லை. ஏழை என்றாலும் பரவாயில்லை. அவர் ஓர் இறைநம்பிக்கையாளர் எனும் வகையில் மகிழ்வோடு அந்தத் திருமணத்தை அஸ்மா (ரலி) அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள்.

கொஞ்ச நாட்களுக்குப் பிறகு இருவரும் ஒருவர் பின் ஒருவராக ஹிஜ்ரத் மேற்கொண்டு மதீனாவுக்கு வந்தபோது கொஞ்சநஞ்சம் இருந்த பொருள்களும் மக்காவில் மாட்டிக் கொண்டன! இப்போது மதீனாவில் அவ்விருவருக்கும் அல்லாஹ்வின் பெயரைத் தவிர வேறு எந்தச் சொத்தும் இல்லை! ஒருசில நாட்களுக்குப் பிறகு அண்ணல் நபி (ஸல்) அவர்கள் ஒரு சிறிய பேரீச்சந் தோட்டத்தை வழங்கினார்கள்!

மதீனாவில் ஆரம்ப காலத்தில் தாம் பட்ட கஷ்டங்களைப் பற்றிய ஒரு சித்திரத்தை அஸ்மா (ரலி) அவர்களே விளக்கிக் காட்டியுள்ளார்கள். அதனை அவர்களின் வாய்மொழியாகவே கேட்டால் நல்லது என்கின்றீர்களா? இதோ கூறுகின்றார்கள், கேளுங்கள்!

ஜூபைர் (ரலி) அவர்களுடன் எனக்குத் திருமணம் நடைபெற்ற நேரத்தில் அவரிடம் பணம் இல்லை, எந்தப் பணியாளும் இல்லை! வறுமை வயப்பட்டும் அளவு கடந்த துன்பத்திற்குள்ளானவராகவும் இருந்தார்கள். அவருக்கென உரியவை ஒரு குதிரையும் ஓர் ஒட்டகமும்தான்! மேலும் நானே அவற்றைக் கவனித்துக் கொள்ள வேண்டியதாயிற்று!

மதீனாவுக்கு வந்தபோது நபி (ஸல்) அவர்கள் பேரிச்சந் தோட்டமாக கொஞசம் நிலத்தை ஜூபைர் (ரலி) அவர்களுக்கு வழங்கினார்கள். அது மதீனாவிலிருந்து சுமார் ஒன்பது மைல் தொலைவில் இருந்தது! நான் தினமும் அங்கு சென்று பேரீச்சங் கொட்டைகளை பொறுக்கி, ஒன்று சேர்த்து மூட்டையாகக் கட்டி தலையில் சுமந்து கொண்டு வருவேன். வீட்டிற்கு வந்து அவற்றை எனது கையாலேயே உடைத்து ஒட்டகத்திற்கு தீனியாகப் போடுவேன். வாளியினால் தண்ணீர் இறைத்து நிரப்புவேன். மேலும் வீட்டின் எல்லா வேலைகளையும் நானே செய்து கொண்டிருந்தேன். எனக்கு நல்லவிதமாக ரொட்டி சமைக்கத் தெரியாது. ஆகையால் மாவைப் பிசைந்து மட்டும் வைத்துவிடுவேன். எனது வீட்டுக்கு அருகில் அன்ஸாரிப் பெண்கள் சிலர் வசித்தார்கள். அவர்கள் வந்து அன்புடனும் பாசத்துடனும் ரொட்டிகள் சமைத்துத் தந்து கொண்டிருந்தார்கள்!”

தினமும் இத்தகைய சரமங்கள் எனக்கு நேர்ந்து கொண்டிருந்தன. ஒருநாள் தோட்டத்திலிருந்து பேரீச்சங் கொட்டைகளை மூட்டை கட்டி சுமந்து வந்து கொண்டிருந்தேன். வழியில் நபி (ஸல்) அவர்கள் சந்தித்தார்கள். அவர்கள் ஒட்டகத்தின் மீது இருந்தார்கள். அவர்களின் தோழர்கள் சிலரும் அவர்களுடன் வந்தார்கள்.

இவ்வாறு சிரமப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையில் என்னை நபியவர்கள் கண்டபோது என் மீது இரக்கப்பட்டு - ஒட்டகத்தைப் படுக்கச் செய்தார்கள். நானும் அதில் ஏறி அவர்களுக்குப் பின்னே அமர்ந்து செல்வதற்காக! ஆனால் நான் வெட்கத்தின் காரணத்தால் அதில் பயணமாகவில்லை!

இந்த நிகழ்ச்சிக்கு சில நாட்களுக்குப் பிறகு என் தந்தையார் அபூபக்ர் (ரலி) அவர்கள் எனக்கு ஒரு பணியாளைக் கொடுத்து உதவினார்கள். அதனால் குதிரைக்குப் பணிவிடை செய்து கிடப்பதிலிருந்து எனக்கு விடுதலை கிடைத்தது. மேலும் எனது சிரமம் பெருமளவு குறைந்து விட்டது.''

ஆம்! குதிரையை கவனித்துக் கொள்வதற்காக அபூபக்ர் (ரலி) அவர்கள் ஒரு பணியாளை நியமித்தபோது அஸ்மா (ரலி) அவர்கள் தமக்கு அரியாசனமே கிடைத்துவிட்டது போன்றுதான் உணர்ந்தார்கள்! அப்படியெனில் அவர்கள் அன்றாடம் எந்த அளவுக்கு சிரமப்பட்டு உழைத்து வாழ்நாளைக் கழித்துக் கொண்டிருந்திருப்பார்கள் என்பதைப் பாருங்கள்!

இத்தகைய ஏழ்மையின் காரணத்தால்தான் அஸ்மா (ரலி) அவர்கள் வீட்டின் தேவைகளுக்காக மிகவும் இறுக்கிப் பிடித்துச் சிக்கனமாகச் செலவு செய்து கொண்டிருந்தார்கள். மிதமிஞ்சிய கடும் சிக்கனப் போக்கினை ஒருநாள் நபி (ஸல்) அவர்கள் கண்டித்தார்கள். 'இவ்வாறு ஒவ்வொன்றையும் அளந்து நிறுத்திப் பார்த்து - கஞ்சத்தனம் செய்து கொண்டு இருக்காதீர்கள். அப்படிச் செய்தால் அல்லாஹ்வும் அந்த அளவுக்கே வழங்குவான்'' என்று அறிவுரை பகர்ந்தார்கள்.

வறுமைப்பட்ட கணவருக்கு வாழ்க்கைப்பட்டோமே, இப்போது ஏழ்மையோடு எதிர்நீச்சல் போடவேண்டியதுள்ளதே என்று மனம் வெதும்பி விதியை நொந்து கொண்டிருக்கும் பெண்மணிகளே, கண்மணி அஸ்மா (ரலி) அவர்களின் மீதி வரலாற்றையும் கேளுங்கள்!

அஸ்மா (ரலி) அவர்கள் துன்பங்கள் எதிர்ப்பட்ட அத்தனை சந்தர்ப்பங்களிலும் கொஞ்சமும் பொறுமையை கைவிட்டார்களில்லை! பதறிப் பரிதவிக்கவில்லை! நிராசை அடைந்து விதியை நொந்து கொள்ளவில்லை! விளைவு? அத்தகைய பொறுமைக்கான பலன் கைமேல் கிடைத்தது! ஆம்! அஸ்மா (ரலி) அவர்களை வளமான வாழ்வு தேடி வந்தது! அவர்கள் தனவந்தர் ஆனார்கள்! அவர் மீதும் அவரின் கணவர் மீதும் அல்லாஹ்வின் அருட்கொடைகள் கொட்டின. ஜுபைர் (ரலி) அவர்களுக்கு வியாபாரத்தில் நிறைய இலாபம் கிடைத்தது. இறைவன் அவர்களின் வாழ்கையை வளப்படுத்தினான்!

## அவர்களுடைய வாழ்கையின் இலக்கணம் இதுதான்!

அஸ்மா (ரலி) அவர்களின் குடும்பம் எண்ணற்ற கஷ்ட - நஷ்டங்களையும் துன்ப துயரங்களையும் பொறுமையோடு தாங்கி வந்த பிறகு இப்போது பொருளாதாரத் துறையில் பிரமிக்கத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளதெனில் அது எப்படிச் சாத்தியமாயிற்று? தவறான வழி சம்பாத்தியமா? இல்லை! அவர்களின் கணவர் ஜுபைர் (ரலி) அவர்கள், 'நான் நபி (ஸல்) அவர்களின் உயிர்த் தோழர் மட்டுமல்ல, அவர்களின் நெருங்கிய இரத்த பந்தமுடைய - புனிதமான உறவு முறையுடைய குடும்பத்தைச் சார்ந்தவனும் ஆவேன்'' என்று மக்களிடம் பிரபலப்படுத்திக் கொண்டு, பணம் வசூலித்துப் பணக்காரர் ஆனாரா? இல்லவே இல்லை! நீதி நேர்மையையும் கடினமான உழைப்பையும் அஸ்திவாரமாகக் கொண்ட வாணிபத்தின் வாயிலாக செல்வம் ஈட்டினார்கள்! நபித் தோழர்களில் அப்துல் ரஹ்மான் இப்னு அவ்ஃப் (ரலி) அவர்களைப் போன்றவர்கள் எப்படி வியாபாரம் செய்து இலட்சாதிபதி ஆனார்களோ அப்படித்தான் ஜுபைர் (ரலி) அவர்களும் சம்பாதித்தார்கள்!

முஸ்லிம்கள் வாழ்ந்த வாழ்கையின் இலக்கணம் இதுதான். அவர்களின் வாழ்கையை கடின உழைப்பும் முயற்சியும் அலங்கரித்துக் கொண்டிருக்கும் அதே நேரத்தில் இறையச்சமும் நீதி தவறாத் நெஞ்சுரமும் அதற்குத் தூய்மையையும் புனிதத் தன்மையையும் வழங்கிக் கொண்டிருக்கும்.

இதன் காரணமாகத்தான் ஜூபைர் (ரலி) - அஸ்மா (ரலி) தம்பதிகளிடத்தில் ஆணவமோ அகங்காரமோ பிறரை இழிவாய் கருதும் மனநிலையோ எள்ளவும் காணப்படவில்லை! மரியாதைக்குரிய அஸ்மா (ரலி) அவர்கள் ஏழ்மையின்போது கடைப்பிடித்த பொறுமையையும் எழிமையையும் இப்போதும் கடைப்பிடித்தார்கள்! முரட்டு ஆடைகளை அணிபவராகவும் காய்ந்த ரொட்டிகளை உண்பவராகவும்தான் இருந்தார்கள்!

ஒருபோது அவர்களின் மகன் முன்திர் இப்னு ஜூபைர் (ரலி) அவர்கள் ஈராக்கின் போரிலிருந்து திரும்பி வரும்போது தம் தாயாருக்காக மிகவும் விலை உயர்ந்த மெல்லய - மென்மையான சேலைகளை வாங்கி வந்தார். அவற்றைத் தம் தாயாரிடம் அவர் கொடுத்தபோது, அச்சேலைகளின் பளபளப்பையும் மென்மையையும் பார்த்த அஸ்மா (ரலி) அவர்கள், 'நான் இதுபோன்ற மெல்லிய சேலைகளை அணிவதில்லை'' என்று சொல்லி திருப்பிக் கொடுத்து விட்டார்கள்!

ஆம்! அஸ்மா (ரலி) அவர்கள் வறுமையின் காரணத்தால் பல மைல்களுக்கு அப்பாலிருந்து பேரீச்சங் கொட்டைகளைச் சுமந்து... அன்று பட்ட கஷ்டங்களின் ஷபாடங்களை மனத்தில் பசுமையாக்கிக் கொண்டிருந்ததால் இன்று பெருமைக்கு ஆளாகவில்லை! பகட்டையும் பளபளப்பையும் விரும்பவில்லை!

ஆனால் ஒரு கேள்வி எழலாம். செல்வ நிலை ஏற்பட்ட பிறகும் அஸ்மா (ரலி) அவர்கள் முரட்டு ஆடைகளை உபயோகித்துக் கொண்டு ஏழ்மைக் கோலத்தில் வாழ்ந்தார்களெனில், பழைய ஷகருமித்தனத்தை இன்னும் கைவிட்டார்களில்லை என்றுதானே பொருள்?

இல்லை! அஸ்மா (ரலி) அவர்கள் தயாள குணமும் தாராள மனப்பான்மையும் பெற்றிருந்தார்கள். அல்லாஹ் வழங்கிய செல்வத்திலிருந்து ஏழை எழியவருக்கு ஈந்து மகிழும் நிலையை அடைந்தார்கள். அவர்கள் தம்முடைய பிள்ளைகளுக்கு வழங்கிய அறிவுரையைப் பாருங்கள்.

பிறருக்கு உதவி செய்வதற்காகவும் அவர்களின் தேவைகளை நிறைவு செய்வதற்காகவும்தான் இறைவன் செல்வத்தை வழங்குகிறானே தவிர, சேமித்து வைப்பதற்காக அல்ல! ஆகையால் அல்லாஹ்வின் அடிமைகளுக்கு உதவுங்கள்! உங்கள் செல்வத்திலிருந்து அல்லாஹ்வின் அடிமைகளுக்கு நீங்கள் உதவிடவில்லை யானால் அது கஞ்சத்தனம் ஆகும்! அப்போது அல்லாஹ்வும் தனது அருளையும் கருணையையும் உங்களுக்கு வழங்காது போய்விடுவான். நீங்கள் தான தர்மங்கள் செய்வீர்களாயின் உண்மையில் அதுவே உங்களுக்கான சிறந்ததொரு பொக்கிஷமாகும். அது என்றைக்கும் குறைந்து விடாது. மேலும் அது வீணாகிப் போய்விடும் என்று அச்சப்பட வேண்டியதில்லை.''

இது போன்ற அறிவுரைகளை வழங்கிய அதே நேரத்தில் செயல் ரீதியில் அவற்றை நடைமுறைப்படுத்தியும் காட்டினார்கள் அஸ்மா (ரலி) அவர்கள்! அவர்களின் மகனார் அப்துல்லாஹ் இப்னு ஜூபைர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். 'என் தாயார் மற்றும் சிறிய தாயார் ஆயிஷா (ரலி) அவர்கள் இருவரை விடவும் அதிகமாக கொடை வழங்குபவர் எவரையும் நான் கண்டதில்லை. கொடை வழங்கும் முறை அவ்விருவரிடமும் மாறுபட்டிருந்தது. ஆயிஷா (ரலி) அவர்களின் முறை என்னவெனில், அவர்கள் தமது வருவாயைக் கொஞ்சம் கொஞ்சமாகச் சேர்த்து வைப்பார்கள். கடைசியில் கணிசமான அளவு சேர்ந்ததும் தேவைப்பட்டோருக்கு பங்கிட்டு அளித்து விடுவார்கள். ஆனால் அஸ்மா (ரலி) அவர்களின்

முறை இதற்கு மாற்றமாக இருந்தது. அவர்கள் நாளொன்றுக்கு எதையும் சேமித்து வைப்பதில்லை. எது மிஞ்சினாலும் அதே நேரத்தில் பங்கிட்டு கொடுத்து விடுவார்கள்."

பிற்காலத்தில் - அவர்களின் சகோதரி ஆயிஷா (ரலி) அவர்கள் மரணம் அடைந்தபோது ஒரு நிலத்தைத் தமது சொத்தாக விட்டுச் சென்றார்கள். அதற்கு அஸ்மா (ரலி) அவர்களைத் தவிர வேறு வாரிசுகள் யாரும் இல்லை. ஆகையால் அந்த பூமி அவர்களுக்கே கிடைத்தது! அதனை விற்றுக் கிடைத்த சுமார் ஒரு இலட்சம் திர்ஹம் முழுவதையும் தம்முடைய உறவினர்களில் தேவைப்பட்டோருக்குப் பங்கிட்டு கொடுத்து விட்டார்கள்!

இப்படிக் கணக்கின்றி வழங்கும் கரமுடையவர்களாய் அஸ்மா (ரலி) அவர்கள் திகழ்ந்தார்கள். ஆனால் அவர்களின் கணவர் ஜுபைர் (ரலி) அவர்களின் இயல்பில் கொஞ்சம் கடுமை இருந்தது. ஆகையால், அஸ்மா (ரலி) அவர்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் ஒருமுறை கேட்டார்கள்.

அல்லாஹ்வின் தூதரே! என் கணவரின் சொத்திலிருந்து அவரின் அனுமதி இன்றி - அநாதைகளுக்கும் ஏழைகளுக்கும் கொடுத்து உதவலாமா?"

நபியவர்கள், 'ஆம்! கொடுக்கலாம்" என்றார்கள்.

### சுவரின் நிழலும் சிறு வியாபாரியும்

அஸ்மா (ரலி) அவர்கள் இத்தகைய தாராளத்துடன் நடந்து கொண்டாலும் - வீடு வாசல்களைப் பேணுவதில் கண்ணும் கருத்துமாக இருந்தார்கள். எவ்வளவு சிறிய பிரச்சனையானாலும் அவருடைய அனுமதி பெற்றே செய்யவேண்டும் என்ற பொறுப்புணர்வு கொண்டிருந்தார்கள்!

ஒரு தடவை வீட்டில் ஜுபைர் (ரலி) அவர்கள் இல்லாதபோது ஏழை வியாபாரி ஒருவர் வந்து அஸ்மா (ரலி) அவர்களிடம் உதவி வேண்டி நிற்கின்றார். 'உங்கள் வீட்டுச் சுவரின் நிழலில் பொருட்களை வைத்து விற்பதற்கு அனுமதி தாருங்கள்" என்று கோரினார்.

அஸ்மா (ரலி) அவர்கள் கூறினார்கள்.

நான் அனமதி வழங்கிவிடுவேன் ஆனால் ஜுபைர் (ரலி) அவர்கள் வந்து மறுத்து விடுவார்களாயின் பெரிய சிக்கலாய் போய்விடும். ஆகையால் வீட்டில் அவர்கள் இருக்கும்போது வந்து கேளுங்கள்!"

ஜுபைர் (ரலி) அவர்கள் வீடு திரும்பியபோது மீண்டும் அந்த வியாபாரி வீட்டு வாசலில் வந்து நின்றுகொண்டு தனது கோரிக்கையை வத்தார்.

அப்துல்லாஹ்வின் தாயார் அவர்களே! நான் ஓர் ஏழை. அன்றாடம் சில பொருட்களை விற்றுத்தான் பிழைக்கின்றேன். உங்கள் வீட்டுச் சுவரின் நிழலில் அமர்ந்து வியாபாரம் செய்ய விரும்புகிறேன். தயை கூர்ந்து அனுமதி தாருங்கள்."

அஸ்மா (ரலி) அவர்கள் 'எனது வீட்டை விட்டால் மதீனாவில் உமக்கு வேறு வீடு கிடைக்கவில்லையா?" என்று அதட்டுவது போன்று கேட்டார்கள்.

இந்தப் பதிலைக் கேட்டுக்கொண்டிருந்த ஜுபைர் (ரலி) அவர்கள், 'உனக்கு என்ன நேர்ந்துவிட்டது? ஓர் ஏழை வியாபாரம் செய்வதைத் தடுக்கின்றாயே?" என்று தம் மனைவியைக் கண்டித்தார்கள்!

உடனே அஸ்மா (ரலி) அவர்கள் அனுமதி வழங்கிவிட்டார்கள். அதைத்தானே அவர்கள் எதிர்பார்த்தார்கள்!

## தாயின் பாசமும் இறைவசனமும்.

ஓரிறைக் கொள்கையிலும் அதன் கோட்பாடுகளிலும் அஸ்மா (ரலி) அவர்கள் உறுதியுடன் இருந்தார்கள். இறைவனை நிராகரிக்கும் போக்கும், கண்ட கண்ட பொருள்களையெல்லாம் கடவுளாகக் கருதி அவற்றை வணங்கி வழிபடுவதும் அவர்களுக்கு அறவே பிடிக்காது! எந்த அளவுக்கெனில். அப்படி வாழும் இணைவைப்பவர்களை அவர்கள் மிக நெருங்கிய உறவினர்களாயினும் சரியே, மிகக் கடுமையாக வெறுப்பவர்களாய் இருந்தார்கள்!

அன்றைய சமூகத்தில் பெரும்பாலான முஸ்லிம்களுக்கு ஒரு தர்மசங்கடமான சூழ்நிலை ஏற்பட்டிருந்தது. அவர்களுடைய நெருங்கிய உறவினர்களில் அல்லது தூரத்து உறவுமுறையுடையவர்களில் சிலர் அல்லது பலர் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளாதிருந்தார்கள். அப்படி ஏற்றுக் கொள்ளாதவர்களில் சிலர் கடும் பகைவர்களாகி இஸ்லாத்தை அழிக்கும் கொடூரச் செயல்களிலும் ஈடுபட்டிருந்தனர்! இத்தகைய கடும் பகைவர்களுடன் எவ்விதத் தொடர்பும் நட்பும் வைத்துக் கொள்ளக் கூடாது என்று முஸ்லிம்களுக்குக் கட்டளையிடப்பட்டிருந்தது.

ஒருவர், இறைவன் மீதும் இஸ்லாத்தின் எதிரிகளிடமும் ஒரே நேரத்தில் நேசம் கொள்வது என்பது எப்படி சாத்தியமாகும்? நம்முடைய நெருங்கிய உறவினர்களாயிற்றே என்று அந்த எதிரிகள் மீதான அன்புக்கும் தன் உள்ளத்தில் இடம் அளித்து, அவர்களிடம் நேசம் பாராட்டி நெருங்கிப் பழகும் மனிதரை உண்மையான இறைநம்பிக்கையாளராக எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்?

இந்நிலையில்தான் ஒருமுறை அஸ்மா (ரலி) அவர்களின் தாயார் கதீலா பின்த் அப்துல் உஸ்ஸா என்பவர் தம் மகளைப் பார்ப்பதற்காக மதீனா வருகின்றார். அவர் இணைவைப்புக் கொள்கையிலேயே இருந்தார். இஸ்லாத்தை பிடிவாதமாய் ஏற்றுக் கொள்ள மறுத்தார்.

நீண்ட இடைவெளிக்குப் பிறகு தம் தாயாரைச் சந்திப்பதில் அஸ்மா (ரலி) அவர்களுக்கு அளவிலா மகிழ்ச்சிதான்! ஆர்வமிகுதியால் அவருடைய உள்ளம் துடிக்கின்றது. விழிகளில் பிரகாசம் மின்னிட இதழ்களில் புன்னகை மலர்ந்திட கரங்கள் கட்டித் தழுவத் துடிக்கின்றன.

பிறகு எண்ணிப் பார்க்கின்றார்கள்! அவருடைய தாயார் இணைவைப்புக் கொள்கையில இருக்கின்றார். தீனுடைய - இறைநெறியுடைய பிணைப்பு குடும்பப் பிணைப்பை விட சக்திவாய்ந்ததாகும். திருக்குர்ஆன் இப்படி அறிவுறுத்தியுள்ளது.

(நபியே) அல்லாஹ்வின் மீதும் மறுமைநாளின் மீதும் நம்பிக்கை கொண்ட மக்கள், அல்லாஹ்வையும் அவனுடைய தூதரையும் எவர்கள் விரோதித்துக் கொண்டார்களோ அவர்களை நேசிக்கக் கூடியவர்களாய் இருக்கக் காணமாட்டீர், அப்படிப்பட்டவர்கள் அவர்களின் தந்தையராகவோ மகன்களாகவோ சகோதரர்களாகளோ அவர்களுடைய குடும்பத்தினராகவோ இருந்தாலும் சரியே! (அல்குர்ஆன் 58:22)

அஸ்மா (ரலி) அவர்களின் உள்ளத்தில் இந்தக் கருத்துக்களெல்லாம் நிழலாடுகின்றன. உடனே கட்டித் தழுவத் துடித்த அவர்களின் கரங்கள் சோர்ந்து விடுகின்றன. கண்கள் பார்வையை தாழ்த்தி விடுகின்றன. அன்புடன் வரவேற்பதற்காக எழுந்த நாவு.. ஷவாருங்கள் என்று கூற மறுத்துவிட்டது!

என்னுடைய தாயார் நீண்ட நாட்களுக்கப் பிறகு என்னைக் காண வந்திருக்கின்றார். இறைவனை நிராகரித்துக் கொண்டுதான் இருக்கின்றார். அவரை நான் வரவேற்று உபசரிக்கலாமா? என்பதை இறைத்தூதரிடம் கேட்டுச்சொல்'' என்று தன் சகோதரி ஆயிஷா (ரலி) அவர்களிடம் தூது அனுப்பினார்கள்.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் விளக்கம் அளித்தார்கள். ‘ஆம்! உம்முடைய தாயாருடன் உறவு கொண்டு வாழுங்கள். அவரை வரவேற்று உபசரியுங்கள்’’ என்று கூறிவிட்டு பின் வரும் இறைவசனத்தை ஓதிக் காட்டினார்கள். ‘எவர்கள் உங்களுடன் தீனின் - இறைநெறியின் விஷயத்தில் போரிடவில்லையோ மேலும் உங்களை உங்களின் இல்லங்களிலிருந்து வெளியேற்றவில்லையோ அவர்களுடன் நீங்கள் நல்ல முறையிலும் நீதத்துடனும் நடப்பதை விட்டும் அல்லாஹ் உங்களைத் தடுக்கவில்லை. திண்ணமாக அல்லாஹ் நீதி செலுத்துகின்றவர்களை நேசிக்கின்றான். ஆனால் எவர்கள் தீனின் விஷயத்தில் உங்களுடன் போரிட்டார்களோ - மேலும், உங்களை உங்களின் இல்லங்களிலிருந்து வெளியேற்றினார்களோ, அப்படி வெளியேற்றுவதில் பரஸ்பரம் உதவி செய்தார்களோ அவர்களுடன் நீங்கள் நட்புக் கொள்வதைத்தான் அல்லாஹ் தடுக்கின்றான். அத்தகையவர்களிடம் எவர்கள் நட்புக் கொள்கின்றார்களோ அவர்கள் அநீதியாளர்கள்தான். (அல்குர்ஆன் 60:8)

இத்தகைய நீண்ட வசனத் தொடரை ஓதிக்காட்டி மனிதர்களுக்கிடையிலான நல்ல உணர்வுகளில் இஸ்லாம் என்றைக்கும் குறுக்கீடு செய்யாது. மனத்தில் எழும் உயர்ந்த எண்ணங்களைக் கொன்று விடாது எனும் உண்மையை அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அஸ்மா (ரலி) அவர்களுக்கு உணர்த்திய பிறகு, அவர்கள் தம்முடைய தாயாரை நல்ல முறையில் வரவேற்று அன்பளிப்புகளை ஏற்று உபசரித்தார்கள்!

அஸ்மா (ரலி) அவர்களின் வாழ்க்கையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் நம் அனைவருக்கும் நல்லதொரு படிப்பினை இருக்கின்றது. கொள்கையில் மாறுபட்டிருக்கும் நம்முடைய உறவினர்களை விட்டு, கொள்கை மாறுபாட்டிற்காக மட்டும் நம்முடைய தொடர்பை துண்டித்துக் கொள்ளவேண்டிய அவசியம் இல்லை. அப்படிச் செய்வது தவறாகும். அதுவும் இஸ்லாத்தின் பக்கம் அழைப்பு விடுக்க வேண்டிய பொறுப்புடைய முஸ்லிம்கள் அப்படிச் செய்வது அறவே கூடாது. இரத்த பந்தமுடைய அனைத்து உறவினர்க்கும் அவர்களுக்குரிய உரிமைகளையும் கடமைகளையும் வழங்கத்தான் வேண்டும்.

ஆனால் நம்முடைய கொள்கைக்கு யார் கேடு விளைவிக்க முற்படுகின்றார்களோ, நம்முடைய உயிருக்கும் உடமைக்கும் இழப்பை ஏற்படுத்த முயல்கின்றார்களோ அத்தகையவர்களுடன் மட்டும் அவர்கள் எவ்வளவுதான் நெருக்கமானவர்களாய் இருப்பினும் நட்பு ரீதியிலான தொடர்பை நீடிக்கச் செய்ய நமக்கு உரிமை இல்லை! இந்தத் தெளிவான கோட்பாட்டை அஸ்மா (ரலி)யின் வரலாறு நமக்க வழங்குகின்றது!

## வீரம்

அஸ்மா (ரலி) அவர்கள் இவ்வாறு கொள்கையில் எஃகு போன்ற உறுதியும் பொறுமையும் பெற்றிருந்த அதே நேரத்தில் வீரத்திலும் சிறந்து விளங்கினார்கள். அண்ணல் நபி (ஸல்) அவர்கள் தம்முடைய மரணமடைந்த பிறகு ஒருமுறை அஸ்மா (ரலி) அவர்கள் தம்முடைய கணவர் மற்றும் மகனுடன் ஷாம் தேசத்தின் போர்க்களத்தில் பங்கு பெற்றார்கள் என்று ஓர் அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

மேலும் மிகப் பயங்கரமாக நடைபெற்ற யர்மூக் யுத்தத்தில் பிற பெண்களுடன் சேர்ந்து தங்களுக்கே உரிய முக்கியமான போர்ப்பணிகளை ஆற்றியுள்ளார்கள்.

மதீனாவில் ஸயீத் இப்னு ஆஸ் (ரலி) அவர்கள் ஆளுநராக இருந்தபோது இரவு நேரங்களில் திருட்டும், கொள்ளையும் வழிப்பறியும் பரவலாக நடைபெற்று வந்தன. மக்களை பெரும் பீதியும் அச்சமும் ஆட்கொண்டிருந்தன. அப்போது அஸ்மா (ரலி) அவர்கள் தம்முடைய தலைக்கருகில் பட்டாக்கத்தியை வைத்துக் கொண்டுதான் இரவில் தூங்குவார்களாம். ‘ஏன் இவ்வாறு செய்கின்றீர்கள்?’’ என்று மக்கள்

கேட்டபோது, ‘திருடனோ, கொள்ளைக்காரனோ என்னுடைய வீட்டுக்கு வந்தால் இந்தக் கத்தியினால் அவனுடைய வயிற்றைக் கிழித்து விடுவேன்’’ என்று பதிலளித்தார்கள்.

## தாய், மகனுக்கு ஆற்றிய உரை

அன்னை அஸ்மா (ரலி) அவர்களின் வீர வரலாறு இத்துணை உறுதியான மனநிலையையும் வீர உணர்வையும் ஒரு பெண்மணி பெற்றிட முடியுமா என்ற சிந்தனையிலும் திகைப்பிலும் நம்மை ஆழ்த்திவிடுகின்றது! அவர்களுடைய மகனார் அப்துல்லாஹ் இப்னு ஜுபைர் (ரலி) அவர்களின் வீர மரணத்தின்போது சில நிகழ்ச்சிகள் நடைபெற்றன. அவற்றைக் கேள்விப்படும் ஒவ்வொருவரின் இதயத்திலும் அன்னை அஸ்மா (ரலி) அவர்களைப் பற்றிய மிக உயர்ந்த மரியாதையும் மதிப்பச்சமும் நிறைந்துவிடும் என்பது திண்ணம்! வரலாற்றுத் தொகுப்புகளில் பொன்னெழுத்துக்களால் பாதுகாக்கப்பட்டுவரும் அந்நிகழ்ச்சிகளைச் சுருக்கமாகக் காண்போம்.

வரலாறு சான்று வழங்குகிறது :- ஜுபைர் (ரலி) அவர்களின் குடும்பம் துணிவிலும் வீரத்திலும் தன்னிகரற்றுச் சிறந்து விளங்கும் குடும்பமாகும். புகழுக்குரிய இந்த வீரதீரப் பண்பு அக்குடும்பத்தின் முன்னோர்கள் - உறவினர்களிடமிருந்து பரம்பரை பரம்பரையாக தொடர்ந்து வரும் சிறப்பம்சமாகும்.

ஜுபைர் (ரலி) அவர்களுடைய ஆண் மக்களில் மிகச் சிறந்த வீரராகவும் துணிவுமிக்கவராகவும் விளங்கியவர் அப்துல்லாஹ் (ரலி) அவர்களாவர். அன்று ஹிஜ்ரத் சகாப்தத்தின் தொடக்கத்தில் முஹாஜிர்களுடைய எந்தக் குடும்பத்திலும் குழந்தை பிறக்காதிருந்த நிலையில் ஷமுதல் குழந்தையாக அஸ்மா (ரலி) அவர்கள் வீட்டில் பிறந்து, அண்ணல் நபி (ஸல்) அவர்களின் சிறப்புக்குரிய பிரார்த்தனையைப் பெற்றவர் இவர்தான். எவருடைய பெயரைக் கேட்டதும் பனூஉமையாக்களின் கலீஃபாக்கள் அச்ச மேலீட்டால் இரவு முழுவதும் தூக்கம் வராமல் தவித்தார்களோ அவர் - ஜுபைரின் மகனாராகிய இந்த அப்துல்லாஹ்தான்!

இவருடைய தியாக வரலாறு என்ன?

அமீர் முஆவியா (ரலி) அவர்களுக்குப் பிறகு அவருடைய மகன் யஜீத் ஆட்சிக்கு வந்தார். கிலாஃபத் எனும் இறையாட்சித் தத்துவத்திற்கு எதிராக அவர் கலீஃபாவாக நியமிக்கப்பட்டதை முஸ்லிம் சமுதாயத்தினரில் எந்தத் தலைவரும் ஏற்றுக் கொள்ளவில்லை. யஜீதுக்கு எதிராக எவ்வித நடவடிக்கைகளையும் அவர்களில் எவரும் மேற்கொள்ளத் துணிந்தார்களில்லை. ஆனால் இரு தலைவர்கள் மட்டுமே யஜீதுக்கு எதிராகக் குரல் எழுப்பினார்கள். செயல் ரீதியில் அவனுடன் மோதவும் செய்தார்கள். அவர்களில் ஒருவர் - கலீஃபா அலீ (ரலி) - ஃபாத்திமா (ரலி) தம்பதியினரின் மகனார் ஹுசைன் (ரலி) அவர்கள். மற்றொருவர்தான் ஜுபைர் (ரலி) - அஸ்மா (ரலி) தம்பதியினரின் வீரத்திருமகனாகிய அப்துல்லாஹ் (ரலி) அவர்கள்!

யஜீதின் படையினர் ஹுசைன் (ரலி) அவர்களின் எதிர்ப்பை சிலமணி நேரங்களில் முறியடித்து விட்டார்கள். ஆனால் அப்துல்லாஹ் இப்னு ஜுபைர் (ரலி) அவர்களை எளிதில் முறியடிக்க முடியவில்லை! உண்மை யாதெனில் பனூ உமையாக்கள், அப்துல்லாஹ் இப்னு ஜுபைர் (ரலி) அவர்களின் எதிர்ப்பைச் சமாளித்து - தங்களுடைய ஆட்சியதிகாரத்தை தக்கவைத்துக் கொள்ளப் பெரும் சிரத்தை எடுக்க வேண்டியதாயிருந்தது! ஆகையால் யுத்தங்களின் ஒரு நீண்ட தொடர் ஆரம்பமாகி, அப்துல்லாஹ் (ரலி) அவர்களின் வீரமரணத்துடன் முடிவுற்றது.

அப்துல்லாஹ் இப்னு ஜூ பைர் (ரலி) அவர்களின் வீரமரண நிகழ்ச்சி, பல உன்னதமான படிப்பினைகளை தன்னுள் கொண்டுள்ளதாகும். ஆனால் இங்கே அஸ்மா (ரலி) அவர்களுடன் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளை மட்டும் விவரிக்கின்றோம். ஏனெனில் அவர்களுடைய வீரக்காவியத்தின் சில முன்மாதிரிகளை விளக்குவதுதானே நமது நோக்கம்!

அப்துல்லாஹ் இப்னு ஜூ பைர் (ரலி) அவர்கள் தொடர்ந்து யஜீதை எதிர்த்துப் போராடி வந்தார்கள். யஜீதுக்குப் பிறகு மர்வான் என்பவர் ஷகலீஃபா ஆனார். இவரையும் மிகத்துணிவுடன் வெற்றிகரமாக எதிர்த்து வந்தார்கள். மர்வானுக்குப் பிறகு அப்துல் மலிக் ஆட்சிக்கு வந்தார். இவருக்கு மிகவும் அறிவுத்திறன் கொண்ட, திட்டமிட்டு செயல்படுத் சூட்சுமம் தெறிந்த ஓர் ஆளுநர் கிடைத்தார். ஹஜ்ஜாஜ் இப்னு யுசுஃப் என்று வரலாற்றில் பிரபலமாக அறியப்படும் ஆளுநர்தான். அப்துல்லாஹ் இப்னு ஜூ பைர் (ரலி) அவர்கள் பெற்று வந்து செல்வாக்கையும் ஈட்டிவந்த ஆதரவுகளையும் குலைத்தார்!

அவரால் எவ்வாறு வெற்றியடைய முடிந்தது என்பது நமது தலைப்பை விட்டு தூரமான விஷயமாகும். உண்மையாதெனில், ஹஜ்ஜாஜ் தமது திட்டமிட்ட நடவடிக்கைகளின் மூலம் வெற்றிகளைப் பெற்றார். அப்துல்லாஹ் இப்னு ஜூ பைர் (ரலி) அவர்களை அவர் எந்த அளவுக்கு அடக்கி ஒடுக்கினாரெனில் இறுதியில் அவர்கள் கஅபா ஆலயத்தினுள் அடைக்கலம் புகுந்து ஒளிந்திட நேரிட்டது!

ஹஜ்ஜாஜ் அதுமட்டுமா செய்தார்? அப்துல்லாஹ் இப்னு ஜூ பைர் (ரலி) அவர்களை விட்டு அவர்களின் ஆதரவாளர்கள் கொஞ்சம் கொஞ்சமாக விலகுவதற்கும் பிறகு தன்னிடம் வந்து சேருவதற்கும் உரிய அனைத்து சூழ்ச்சிகளையும் மேற்கொண்டார். இறுதியில் உயிர்த்தியாகிகளாய் விளங்கிய, வாய்மையான வீரர்கள் ஒருசிலரே அவர்களுடன் இருந்தார்கள்.

இந்நிலையில் ஹஜ்ஜாஜை எதிர்த்து மேற்கொள்ளும் போர் எப்படி வந்து முடியும் என்பது அப்துல்லாஹ் இப்னு ஜூ பைர் (ரலி) அவர்களுக்குப் புலப்பட்டது! அவர்கள் போர்க்கவசம் அணிந்து ஆயுதம் ஏந்திய வண்ணம் தம் தாயாரின் சமூகத்திற்கு வந்தார்கள். அவர்களைச் சந்தித்து விடைபெற்றுச் செல்வதற்காக! அது அவர்களது இறுதிச் சந்திப்பாகவும் இருந்தது.

அஸ்மா (ரலி) அவர்களுக்கு அப்போது 100வது வயது நெருங்கிக் கொண்டிருந்தது. அவர்கள் பார்வை மங்கிப்போய் விட்டிருந்தது. அவர்களின் பெருமைக்குரிய மகனார் எதிரே வந்து நின்றார். போரின் போக்கு எவ்வாறு உள்ளது என்பதையும் எதிர்ப்பட்டுள்ள நிலைமைகளையும் விவரித்துவிட்டு, இப்போது என்ன செய்யவேண்டும் என்று ஆலோசனை கோரினார் தாயாரிடம்!

மகனாரின் இந்தக் கேள்விக்கு சித்தீகுல் அக்பரின் மூத்த புதல்வி அளித்த பதில் வார்த்தைகளை வரலாறு பொன் எழுத்துக்களால் பதிவு செய்து வைத்துள்ளது. அவை இதோ :-

அன்பு மகனே! எது உனக்கு நன்மை அளிக்கக் கூடியது என்பதை நீயே நன்கு அறிவாய். நீ சத்தியத்தின் பக்கம்தான் இருக்கின்றாய் என்பதில் உனக்கு உறுதி இருந்தால், நீ நிலைகுலையாதிருக்க வேண்டும். நீ ஆண்மகனைப் போன்று போரிடு! உயிருக்கு அஞ்சி எவ்வித இழிவையும் சுமந்து கொள்ளாதே! வாளேந்திப் போரிட்டு கண்ணியமாக மரணிப்பது, இழிவுடன் இன்பமாய் வாழ்வதை விடச் சிறந்ததாகும். நீ வீரனாக மரணம் அடைந்தால் அப்போது நான் மகிழ்வேன். ஆனால் அழிந்து போகும் இந்த ஷஉலகை வணங்கி வழிபடுவாயானால் உன்னை விடவும் கெட்டவன் வேறு யார் இருக்கமுடியும்? அதாவது, தானும் அழிந்து அல்லாஹ்வின் அடியார்களையும் அழிவில் சேர்க்கக் கூடிய அளவுக்கு கேடுகெட்டவன் அப்போது நீயாகத்தான் இருக்கமுடியும்! எனவே, நாம் மட்டும்தானே தன்னந்தனியாக எதிர்க்கின்றோம், ஆகவே இப்பொழுது கீழ்படிந்து செல்வதைத் தவிர வேறு வழி இல்லை என்று நீ கருதுவாயானால் - இவ்வாறு கருதுவது

உன் சான்றோரின் போக்கு அல்ல! நீ எது வரையில் உயிர் வாழ்ந்திடுவாய்? என்றாவது ஒருநாள் மரணம் அடையத்தானே போகிறோம்! எனவே நற்பெயருடன் மரணமாகு, அப்பொழுதான் பெருமைப்படுவேன்!''

அன்னை அஸ்மா (ரலி) அவர்களின் இந்த வார்த்தைகளை மீண்டும் ஒரு முறை கவனமாய் படித்துப் பாருங்கள். இப்பொழுது போரில் இறங்குவதெனில், அது மரணத்தை வலிந்து அழைப்பதற்கு சமமாகும் என்பதையும் - தம்முடைய அன்பு மகனார் கண்ணெதிரிலேயே மரணப்படுகுழியில் விழப் போகின்றார் என்பதையும் அறிந்த ஒரு தாயார் அளித்த அறிவுரையாகும் இது!

அவருடைய மகனார் எப்படிப்பட்ட புகழுக்குச் சொந்தக்காரர்? அவருடைய கல்வி ஞானத்தையும் சிறப்பையும் அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரலி) மற்றும் இப்னு உமர் (ரலி) போன்றோர்களே புகழ்ந்துள்ளார்கள்! அன்று வீரத்திற்கும் விவேகத்திற்கும் அவருக்கு நிகர் அவராகவே திகழ்ந்தார்! அப்படிப்பட்ட உயர் சிறப்புக்குரிய மகனார்...! ஆகா! தாயார் என்றால் இப்படி அன்றோ திகழ்ந்திட வேண்டும்!

அப்துல்லாஹ் இப்னு ஜுபைர் (ரலி) அவர்கள் தாயாரின் இத்தகைய துணிவான சொற்களைக் கேட்டதும் மனம் நெகிழ்ந்து பணிவுடன் வேண்டினார்கள்.

என் அன்புத் தாயே, ஷாம் தேசத்து மக்கள் என்னைக் கொன்று எனது உடலைப் பலவிதமாகக் கோரப்படுத்தி விடுவார்களோ எனும் அச்சம் எனக்கு உள்ளதே!

மகனே, உன்னுடைய எண்ணம் சரிதான்! ஆனால் ஆட்டை அறுத்த பிறகு அதனுடைய தோலை உரிப்பதனாலோ அதன் சதைகளைக் கைமாவாகக் கொத்துவதனாலோ அதற்கு எந்த வேதனையும் ஏற்படாதே!

உண்மையில் அப்துல்லாஹ் இப்னு ஜுபைர் (ரலி) அவர்கள் எதற்காக இவ்வாறு கேட்டார்களெனில் தம்மைக் கொன்று உடலைச் சிதைத்து விடுவார்களோ எனும் அச்சத்தினால் அல்ல, வயது முதிர்ந்த தமது தாய் எவ்வாறு இந்தத் துக்கத்தை தாங்கிக் கொள்கின்றார்கள் என்பதைப் பார்ப்பதற்காகத்தான்!

அப்துல்லாஹ் இப்னு ஜுபைர் (ரலி) அவர்கள் தம் தாயார் திருப்தியுடன் இருப்பதை அறிந்ததும் உடனே அவரின் கரங்களைப் பிடித்து முத்தமிட்டவாறு —

என் அன்புத் தாயே! நானும் இவ்வாறுதான் சிந்தித்துக் கொண்டிருக்கின்றேன். அதாவது சத்தியத்திற்கு எதிரில் இந்த உலகம் சாதாரணமானதுதான். மேலும் இஸ்லாத்திற்கும் அதன் கொள்கை கோட்பாடுகளுக்கும் உறுதியும் வலிமையும் சேர்ப்பதற்காகத்தான் இப்பணிகளையெல்லாம் நான் ஆற்றியுள்ளேன்!

இதன் பிறகு அப்துல்லாஹ் இப்னு ஜுபைர் (ரலி) அவர்கள் தம் தாயாருக்கு அந்தப் போரின் காரணங்களை விவரித்தார். மேலும் யஜீதுக்கு எதிராக தாம் மேற்கொண்ட போர் சத்தியத்தின் அடிப்படையிலானது என்பதை விளக்கினார். இறுதியில் பொறுமையைக் கடைப்பிடிக்குமாறு தம் அன்னையை வேண்டிக் கொண்டபோது அந்த வீரத்தாய் கூறினார் :-

மகனே, இன்ஷா அல்லாஹ் எனது பொறுமை மக்களுக்கு ஒரு முன் மாதிரியாக அமையும் என்று நான் எண்ணுகிறேன். நீ என் முன்னிலையில் சத்தியத்திற்காக உயிரை விடுகின்றாய் எனில் உனது தியாகம் எனக்கு நன்மை கிடைப்பதற்குக் காரணமாகவும் அமையும்! மேலும் நீ வெற்றி வெற்றி

அடைந்தாலோ நான் பெருமகிழ்ச்சி அடைவேன். இப்போது அல்லாஹ்வின் பெயரை மொழிந்தவாறு புறப்படு, என்ன நடக்கிறது என்று பார்!

இதனைக் கேட்டதும் அப்துல்லாஹ் (ரலி) அவர்கள் தம் தாயை கட்டித் தழுவினார்கள். அஸ்மா (ரலி) அவர்கள் பார்வை இழந்திருந்திருந்தார்கள். தம் அன்பு மகனை ஆரத் தழுவியபோது அவருடைய உடலின் மீது உருக்குக் கவசம் இருப்பதை கரங்கள் உணர்த்தின.

மகனே, யார் சத்தியத்திற்காக உயிரை தியாகம் செய்ய விரும்புகின்றார்களோ அவர்கள் கவசம் அணிந்து கொள்வதில்லை. எனவே அதனைக் கழற்றிவிடு. உடுப்பை வரிந்து கட்டிக்கொண்டு எதிரிகள் மீது தாக்குதல் தொடு! என்று அறிவுறுத்தினார்கள்!

அப்துல்லாஹ் இப்னு ஜுபைர் (ரலி) அவர்கள் அவ்விதமே செய்தார்கள். வீரத்துடன் போரில் குதித்து தியாக மரணத்தை மகிழ்வுடன் ஏற்றுக் கொண்டார்கள்!

பிறகு ஹஜ்ஜாஜ் என்ன செய்தார் தெரியுமா? அண்ணல் நபிகளாரின் அன்புத் தோழர் ஒருவரின் உடலை அவருடைய தாயாரிடம் ஒப்படைக்காமலும் முறையாக அடக்கம் செய்ய விடாமலும் கழுமரத்தில் கட்டித் தொங்கவிட உத்தரவிட்டு தான் புரிந்து வந்த கொடுமைகளின் பட்டியலில் இந்தக் கொடூரச் செயலையும் சேர்த்துக் கொண்டார்!

## ஒரு கொடுங்கோலன் இனங்காட்டப்பட்டான்!

மறுநாள் அன்னை அஸ்மா (ரலி) அவர்கள் வேலைக்காரப் பெண்மணி ஒருவரின் துணையுடன் தம்முடைய அருமை மகனாரின் உடலைத் தேடி வந்தார்கள். உடல் கழுமரத்தில் கட்டித் தொங்கவிடப்பட்டிருந்தது. அபூபக்கர் சித்தீகின் மூத்த மகள் எஃகு போன்ற – ஏன் - அதனையும் விஞ்சும் அளவுக்கு மனத்திண்மை பெற்றிருந்தார். அப்பொழுது அவருடைய நாவு உச்சரித்த வார்த்தைகள் என்ன தெரியுமா?

இஸ்லாத்தின் இந்த மாவீரன் - தியாக மறவன் - இன்னும் குதிரையை விட்டு இறங்கவில்லையே!

ஹஜ்ஜாஜ் இப்னு யுசுஃப் நல்ல பேச்சாற்றல் கொண்டவர். சொல் நயமும் கருத்து வளமும் செறிந்த அவருடைய சொற்பொழிவு மக்களிடம் நல்ல மதிப்பையும் புகழையும் பெற்றிருந்தது! அத்தகைய ஹஜ்ஜாஜிடம் அன்னை அஸ்மா (ரலி) அவர்களுடைய மனவேதனையையும் சோகத்தையும் உள்ளடக்கிய, ஆனால் வீரம் நிறைந்த இந்த வார்த்தைகள் எடுத்துச் சொல்லப்பட்டபோது அவர் கோபத்தால் தன் உதடுகளைக் கடிக்கலானார். நேராக அஸ்மா (ரலி) அவர்களிடம் வந்து ஒரு சொற்போரையே தொடங்கினார்.

உம்முடைய மகன் அப்துல்லாஹ் கஅபா ஆலயத்தினுள் உட்கார்ந்து கொண்டு இறைச் சட்டங்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் இறங்கினாறெனில் அவருக்கு எவ்வளவு துணிச்சல்! ஆகையால்தான் அல்லாஹ் அவர் மீது இந்த வேதனையை இறக்கியுள்ளான்.

நீ பொய் சொல்கின்றாய்! என்னுடைய மகன் இறைச் சட்டங்களுக்கு எதிராக செயல்படுபவன் அல்லன். அவன் நோன்பாளியாகவும், தஹஜ்ஜுத் -இரவுத் தொழுகை- தொழுபவனாகவும், பரிசுத்தவானாகவும், பக்திமானாகவும் திகழ்ந்தான்! தாய் தந்தையரின் சொல்லை மதித்து நடந்தான். ஆனால் கேள்! அண்ணல் நபி (ஸல்) அவர்கள் ஒருபோது இவ்வாறு கூறியதை நான் கேட்டுள்ளேன். அதாவது ஷஷஸகீஃப் கோத்திரத்திலிருந்து இரண்டு மடையர்கள் தோன்றுவார்கள். முதலாமவன் பொய்யனாகவும், இரண்டாமவன் கொடுங்கோலனாகவும் இருப்பார்கள் - அதன்படி ஸகீஃப்

குலத்தைச் சார்ந்த ஷமுக்தார்  எனும் பொய்யனை நான் பார்த்துவிட்டேன். மற்றொருவனாகிய கொடுங்கோலன் இப்பொழுது என் முன்னிலையில் நின்று கொண்டிருக்கிறான்.

பளீரென சாட்டை கொண்டு தாக்கவது போன்று இந்தப் பதிலைக் கேட்டதும் ஹஜ்ஜாஜின் மனம் துடிதுடித்துப் போய்விட்டது. அவருடைய முகத்தில் இழிவும், கேவலமும் கூத்தாட தலையைத் தாழ்த்தியவாறு கொஞ்ச நேரம் மௌனமானார். நிலவிய நிசப்தத்தை சீக்கரமாகக் கலைத்துக் கொண்டு, ஷஷஉம்முடைய மகனுக்கு நான் நல்ல பாடம் புகட்டியிருக்கிறேன்,  என்று பிதற்றினார்!

நீ என்னுடைய மகனின் உலக வாழ்க்கையைத்தான் பாழ்படுத்தினாய், பரவாயில்லை! ஆனால் என் மகனோ உனது மறுமை வாழ்வை பாழ்படுத்திவிட்டானே!

இந்த அழுத்தமான பதிலைக் கேட்டதும் ஹஜ்ஜாஜ் நிதானம் இழந்தார். உணர்ச்சி வசப்பட்ட நிலையில் அவருடைய நா உளறிக்கொட்டியது.

இரண்டு வார்களுடைய இந்தக் கிழவி மதியிழந்து போய்விட்டாள்.

இந்தக் குத்தல் பேச்சைக் கேட்டதும் அஸ்மா (ரலி) அவர்கள் ஹஜ்ஜாஜை அதட்டியவாறு கூறினார்கள்.

அல்லாஹ்வின் நபியவர்கள் உண்மையைத்தான் உரைத்தார்கள். உண்மையில் எந்தக் கொடுங்கோலனைப் பற்றி நபியவர்கள் முன்னறிவிப்புச் செய்தார்களோ அந்தக் கொடுங்கோலன் நீதான். கொடுங்கோலனே, உனது ஆணவப் பேச்சுக்கு இதோ எனது பதில். ஆம், நான் இரண்டு வார்களை உடையவள்தான்! அல்லாஹ்வின் நபிதான் அவ்வாறு பெருமையாகக் கூறி என்னை அழைத்தார்கள். ஆனால் நீயோ நபியவர்கள் சூட்டிய அதே வார்த்தையைக் கூறி என்னை இழிவுபடுத்துகின்றாய்!

ஹஜ்ஜாஜ் இதற்குப் பதில் ஏதும் கூறாமல் முகத்தைத் திருப்பிருக் கொண்டு போய்விட்டார்!

பிறகு கலீஃபா அபதுல் மலிகிடமிருந்து, ஷஅப்துல்லாஹ்வின் உடலை அவருடைய தாயாரிடம் ஒப்படைத்து விடவும்  எனும் கட்டளை வந்தது. அன்னாரது உடலின் ஒவ்வொரு பகுதியும் சிதைத்துக் கோரப்படுத்தப்பட்டிருந்தது!

வாழ்க்கையின் இறுதி நிலையை அடைந்து விட்டிருந்து அஸ்மா (ரலி) அவர்கள், ஷநான் என்னுடைய வீரத்திருமகனின் உடலைப் பெற்று முறையாகக் குளிப்பாட்டி துணிபொதிந்து அடக்கம் செய்யாதவரை எனக்கு மரணம் வரக்கூடாது  என்று பிரார்த்தனை செய்து கொண்டிருந்தார்கள்!

அவ்வாறே அவர்களின் பிரார்த்தனை இறைவனால் ஏற்றுக் கொள்ளப்பட்டது! சிதைக்கப்பட்டும் சிதைந்த நிலையிலும் இருந்த மகனாரின் உடலை – அதன் துயரமான காட்சியைக் கண்டபோதும் அஸ்மா (ரலி) அவர்களின் நாவு அல்லாஹ்வைப் புகழ்ந்து கொண்டிருந்ததெனில்.. அவர்களின் நெஞ்சுரத்தையும் நிதானமிழக்காத பொறுமையையும் வார்த்தைகளால் எப்படி வர்ணிக்க முடியும்!

உடல் மிகவும் கெட்டுப்போய் இருந்தபடியால் மிகவும் பேணுதலுடன் குளிப்பாட்டப்பட்டு நல்லடக்கம் செய்யப்பட்டது!

மகனார் அடக்கப்பட்டு ஒரு வாரத்திற்குள் தாயாரும் ஏறக்குறைய 100வது வயதில் மக்கத்து திருநகரில் மரணமடைந்தார்கள்!

இதுதான் அஸ்மா (ரலி) அவர்களின் வீர வரலாறு! நபித் தோழியர்களுள் மிக நீண்டதோர் ஆயுள் காலத்தைப் பெற்றவர்கள் மிகச் சிலரே. அவர்களில் அன்னை அஸ்மா (ரலி) அவர்கள் மிகவும் முக்கியமானவர்கள். வரலாற்றில் நிகழ்ந்த எத்தனையோ ஏற்றத்தாழ்வுகளை அவர்கள் கண்டுள்ளார்கள். இஸ்லாத்திற்கு முரணான முந்திய அறியாமைக்கால வாழ்கை அமைப்பையும்

கண்டார்கள். பிறகு அண்ணல் நபி (ஸல்) அவர்களின் நபித்துவ வாழ்வு முழுவதையும் - அடுத்து நேர்வழி பெற்ற கலீஃபாக்களின் பொற்கால ஆட்சியையும் காணும் நல்வாய்ப்பைப் பெற்றார்கள்.

மகத்தான சிறப்புடன் திகழ்ந்த தம்முடைய மகனார் அப்துல்லாஹ் (ரலி) அவர்கள் புகழின் சிகரத்தில் இருந்த காலகட்டத்தையும் பார்த்தார்கள். போரில் கொல்லப்பட்டு கொடூரமாக நடத்தப்பட்ட கோரக்காட்சியையும் பார்த்தார்கள். எண்ணற்ற துன்பங்கள் தொடர்ந்து வந்த ஒவ்வொரு காலகட்டத்திலும் இணையிலா உறுதியையும் இறைநம்பிக்கையையும் நிறைந்த பொறுமையையும் துணிவையும்தான் வெளிப்படுத்தினார்கள்.

உயர் பண்புகளையும் உன்னதப் படிப்பினைகளையும் கொண்டு முழு நிலவாய் ஒளிரும் அவர்களின் வாழ்க்கை முஸ்லிம்களுக்கும் பிற மக்களுக்கும் குறிப்பாக தீன் குலப் பெண்மணிகள் அனைவர்க்கும் என்றென்றும் வழிகாட்டும் ஒளி விளக்காய்த் திகழும்!

## உம்மு ஐமன் (ரலி)

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அன்றைய இஸ்லாமியப் பேரரசை வழிநடத்திச் சென்று கொண்டிருந்தார்கள். காருண்ய நபியவர்கள் உலகம் முழுவதற்கும் அருட்கொடையாய் அனுப்பப்பட்டவர்கள் அல்லவா? ஆகையால் அவர்களின் பெருங்கருணை எல்லாப் படைப்பினங்கள் மீதும் அதிகம் அதிகம் பொழிந்து கொண்டிருந்தது!

நபியவர்களின் திருச்சமூகம் நாடி வரும் எந்த மனிதரும் வெறுங்கையோடு திரும்பிச் செல்வதே கிடையாது. வறியவர்கள், வீடு வாசல் இல்லாத ஏழைகள் வள்ளல் நபியவர்களைத் தேடி வருவார்கள். தம் தேவைகளுக்குப் பரிகாரம் பெற்றுத் திரும்பிச் செல்வார்கள்!

ஒருநாள் வெளுத்த நிறமுடைய ஒரு பெண்மணி நபி (ஸல்) அவர்களின் திருச் சமூகம் வந்தார். அவருடைய முகம் மலர்ந்தும் வியக்கத்தக்க முறையில் ஒளிவீசிக் கொண்டும் இருந்தது! வயது முதிர்ந்த அப்பெண்ணைக் கண்டதும் நபி (ஸல்) அவர்கள் 'தாயே, என் அன்புத் தாயே!'' என்று அழைத்து, கண்ணியத்தோடு எழுந்து வரவேற்று - மிக்க மரியாதையோடு அவரை அமரச் செய்தார்கள்.

தாயே, இன்று இவ்வளவு சிரமம் எடுத்து இங்கு வரவேண்டிய காரணம் என்ன? என்று வினவினார்கள்.

இறைத்தூதரே, எனக்கு ஒரு ஒட்டகம் தேவைப்படுகின்றது. அதனைத் தங்களிடம் பெற்றுச் செல்லலாம் என்றுதான் வந்தேன்.'' என்று அப்பெண்மணி பதிலளித்தார்.

நபி (ஸல்):- ஒட்டகத்தை தாங்கள் என்ன செய்யப் போகின்றீர்கள்?

பெண்மணி:- இறைத்தூதரே, பயணம் செய்வதற்கேற்ற கோவேறு கழுதையோ, ஒட்டகமோ எதுவும் இப்போது என்னிடம் இல்லை. என்றைக்கேனும் தொலைதூரப் பயணம் செய்ய வேண்டியதாயின் பெரிதும் சிரமம் ஏற்படுகிறது.

நபி (ஸல்) அவர்கள் புன்னகை புரிந்தவாறு கூறினார்கள். 'அப்படியானால் ஓர் ஒட்டகக் குட்டியை வரவழைத்துத் தருகிறேன்''

ஐய்யய்யோ! என் தாயும் தந்தையும் உங்களுக்கு அர்ப்பணம் ஆகட்டும்! ஒட்டகக் குட்டி எனக்கு எதற்கு? எனக்கு ஒரு ஒட்டகம்தான் தேவைப்படுகிறது.''

நான் ஒட்டகக் குட்டியைத்தான் தருவேன்.

ஒட்டகக் குட்டி என்னுடைய தேவையை நிறைவு செய்யாதே! என்னுடைய சுமைகளை சுமந்து செல்ல அதனால் இயலாதே! எனக்கு ஒட்டகத்தைத் தாருங்கள்.”

தங்களுக்கு ஒட்டகக் குட்டிதான் கிடைக்கும். அதில்தான் உங்களை நான் பயணம் செய்ய வைப்பேன்.

இவ்வாறு கூறியபடி நபி (ஸல்) அவர்கள் ஒரு பணியாளிடம் சாடை செய்தார்கள். அவர் கொஞ்ச நேரத்தில் ஒரு பெரிய ஒட்டகத்தை கொண்டு வந்து அதன் கடிவாளத்தை அந்தப் பெண்ணிடம் கொடுத்தார்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். ‘தாயே. பாருங்கள்! அது ஒட்டகத்தின் குட்டிதானா? அல்லது வேறெதுவுமா?

இப்போது அந்தப் பெண்மணி நபி (ஸல்) அவர்களின் இந்த அருமையான நகைச்சுவையைப் புரிந்து கொண்டு தம்மை அறியாமலேயே சிரிக்கலானார்கள். நபியவர்களுக்காக துஆ செய்தார்கள். அங்கு இதனைப் பார்த்துக் கொண்டிருந்தவர்களும் மகிழ்ச்சி அடைந்தார்கள்.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் இந்த அளவுக்கு கண்ணியம் அளித்து வந்த - இடையிடையே இவ்வாறு நகைச்சுவை செய்யும் அளவு உறவுமுறை கொண்டிருந்த பெண்மணியின் பெயர்தான் உம்மு ஐமன் (ரலி)!

### அண்ணலாருடன் ஏற்பட்ட உறவு

அன்னை உம்மு ஐம்ன் (ரலி) அவர்களின் பெயர் ஷபரகத் ஆகும். மக்கள் அவர்களை ஷஉம்மு லிபா என்று அழைப்பது பழக்கம். இவரின் தந்தை தஃலபா இப்னு அம்ர் என்பவர் அபிஸீனிய நாட்டுக்காரர். இவர் மக்கா நகருக்கு எப்போது, எப்படி வந்தார்? என்பது பற்றி வரலாற்றில் தெளிவு இல்லை.

ஆனால் நம்பகமான தகவல் இதுதான். அண்ணல் நபி (ஸல்) அவர்கள் பிறக்கும் முன்பு இவர் விவரம் அறியும் பருவம் உடைய சிறுவராய் இருந்தார். நபியவர்களின் தந்தை அப்துல்லாஹ் இவரைத் தத்தெடுத்து வளர்த்து வந்தார். அப்துல்லாஹ் மரணம் அடைந்த பிறகு தஃலபா அன்னை ஆமினாவிடம் பணியாளாய் இருந்து வரலானார். அண்ணல் முஹம்மது (ஸல்) அவர்கள் பிறந்தபோது அன்னை ஆமினாவுக்குத் தேவையான பணிகளைச் செய்து வர இவர் நியமிக்கப்பட்டிருந்தார்.

ஹலீமா ஸஃதியா எனும் செவிலித்தாயிடம் ஆறு அல்லது ஏழு ஆண்டுகள் வரை வளர்ந்து வந்த நபியவர்கள் பின்னர் தம் தாயிடம் ஒப்படைக்கப்பட்டார்கள். கொஞ்ச நாட்களுக்குப் பின் அன்னை ஆமினா அவர்கள் குழந்தை முஹம்மதையும் தஃலபாவின் மகள் உம்மு ஐமனையும் அழைத்துக் கொண்டு மதீனாவுக்குச் சென்றார். இதுதான் மதீனாவுக்கு அண்ணல் நபி (ஸல்) அவர்களின் முதல் வருகையாகும்! அப்போது அவர்களின் வயது ஆறு அல்லது ஏழு! மதீனாவில் ஆமினா அம்மா அவர்கள் பனூ நஜ்ஜார் குடும்பத்தில் தங்கியிருந்தார்கள். அது நபியவர்களின் பாட்டனார் அப்துல் முத்தலிப்புக்கு தாய்வழிப் பாட்டனாரின் குடும்பமாகும். மூவரும் ஏறக்குறைய ஒருமாத காலம் தங்கியிருந்து விட்டு மக்காவுக்குத் திரும்பினார்கள்.

வழியில் மக்காவுக்கும் மதீனாவுக்கும் இடையில் உள்ள அபுவா எனும் இடத்தை அடைந்தபோது அன்னை ஆமினா அவர்கள் திடீரென நோய்வாய்ப்பட்டு மரணம் அடைந்தார்கள்.

அன்னை ஆமினாவன் திடீர் மரணம் குழந்தை முஹம்மது (ஸல்), உம்மு ஐமன் (ரலி) ஆகியோருக்கு கடும் துயரத்தை அளித்தது. அப்போது உம்மு ஐமன் (ரலி) விவேகத்துடன் செயல்பட்டார்கள். சிறிதும்

ஊக்கம் இழந்திடாமல் அன்னை ஆமினாவின் உடலை அங்கேயே அடக்கம் செய்தார்கள். பிறகு நபியவர்களை அன்போடு - பேணிக்கையாக அழைத்துக் கொண்டு சோகமே உருவாய் மக்கா நகர் வந்தடைந்தார்கள். அங்கு சிறுவர் முஹம்மதை அப்துல் முத்தலிப் தன் நெஞ்சோடு அணைத்து ஆறுதல் கூறி தன் பொறுப்பில் வளர்க்கலானார். தன் பேரக்குழந்தையைக் கண்காணித்துப் பேணி வரும்படி உம்மு ஐமனைப் பணித்தார்.

பேரறிஞர் இப்னு ஸஃத் (ரஹ்) கூறுகின்றார். நபியவர்கள் ஆமினா அன்னையோடு மதீனாவில் தங்கியிருந்தபோது நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியை உம்மு ஐமன் (ரலி) வாழ்நாள் முழுவதும் மறக்காமல் இருந்தார்கள். அவர்கள் கூறிக் கொண்டிருந்தார்கள். ‘மதீனாவில் தங்கியிருந்தபோது யூதர்களில் சிலர் குழந்தை முஹம்மதைப் பார்த்தார்கள். அவர்களில் ஒருவர், ‘இந்தச் சிறுவர் இறுதி நபியாய் வருவார் போன்று தோன்றுகிறது. இந்த ஊர்தான் இவர் ஹிஜ்ரத் செய்து வரும் நகரமாய் இருக்கும்’’ என்று கூறியதை நான் கேட்டேன். அவருடைய பேச்சு என் உள்ளத்தில் நன்கு பதிந்து விட்டது.’’

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் வளர்ந்து வாலிபம் அடைந்தபோது சொத்துப் பங்கீட்டில் உம்மு ஐமன் (ரலி) அவர்கள் நபியவர்களின் பங்கில் வந்தார்கள். ஆனால் நபி (ஸல்) அவர்கள் உம்மு ஐமனுக்கு உரிமை வழங்கினார்கள்!

உம்மு ஐமன் (ரலி) அவர்கள் முதலில் உபைத் இப்னு ஜைத் என்பாருக்கு வாழ்க்கைப்பட்டிருந்தார்கள். இவர் மதீனா நகரின் கஜ்ரஜ் கோத்திரத்தைச் சேர்ந்தவர்.

முஹம்மத் (ஸல்) அவர்களின் நபித்துவத்திற்கு முன்பு உபைத் மதீனாவிலிருந்து மக்காவுக்கு வந்து குடியேறினார். அங்கு உம்மு ஐமனுக்கும் அவருக்கும் திருமணம் நடைபெற்றது. வரலாற்றுச் சான்றுகளிலிருந்து தெரியவருகிறது. அதாவது நபித்துவம் வழங்கப்பட்ட பிறகு உம்மு ஐமனுடன் உபைதும் இஸ்லாத்தைத் தழுவினார். ஏனெனில் சில அறிவிப்புகளில் அவர் ஓர் அன்ஸாரி நபித்தோழர் என்று காணப்படுகிறது.

திருமணத்திற்குப் பிறகு கொஞ்ச நாட்களில் உபைத் (ரலி) அவர்கள் உம்மு ஐமனை அழைத்துக் கொண்டு மதீனாவுக்குச் சென்று விட்டார். அங்குதான் அவ்விருவருக்கும் ஐமன் (ரலி) எனும் குழந்தை பிறக்கிறது. ஐமன் (ரலி) பிரபலமான நபித்தோழராய்த் திகழ்ந்தார்.

ஐமன் (ரலி) பிறந்த பிறகு உபைத் (ரலி) அதிக காலம் உயிர் வாழவில்லை. ஹிஜ்ரத்துக்கு பல ஆண்டுகள் முன்னரே மதீனாவிலேயே உபைத் (ரலி) மரணம் அடைந்து விடுகின்றார்கள்.

உபைத் (ரலி) அவர்கள் மரணம் அடைந்த பிறகு உம்மு ஐமன் (ரலி) அவர்கள், பால் குடியை மறந்துவிட்டிருந்த தம் மகன் ஐமனைத் தூக்கிக்கொண்டு அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் வந்தார்கள். அண்ணலார், உம்மு ஐமனை அன்புடன் வரவேற்றார்கள்.

நபியவர்கள் ஒருமுறை தம் தோழர்களின் கூட்டத்தில் இவ்வாறு கூறினார்கள். ‘எவரேனும் சுவனத்தப் பெண்ணை திருமணம் செய்ய விரும்பினால் அவர் உம்மு ஐமனை மணந்து கொள்ளட்டும்!’’

இதனைக் கேட்டதும் ஜைத் இப்னு ஹாரிஸா (ரலி) அவர்கள் உம்மு ஐமனை மணந்து கொண்டார்கள். நபித்துவத்தின் ஏழாம் ஆண்டு இத்தம்பதிக்கு உஸாமா (ரலி) அவர்கள் பிறந்தார்கள். தந்தை ஜைத் (ரலி) அவர்களைப் போன்று உஸாமா (ரலி) அவர்களும் நபியவர்களின் அன்பிற்குரித்தானவர்களாய்த் திகழ்ந்தார்கள்.

அண்ணல் நபி (ஸல்) அவர்களுக்கு நபிப்பட்டம் வழங்கப்பட்ட பிறகு முதன் முதலில் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளும் நற்பேற்றை அடைந்த முஸ்லிம்களில் உம்மு ஐமனும் ஒருவர்! அப்படி இஸ்லாத்தை

ஏற்றுக்கொண்ட ஆரம்பகால முஸ்லிம்களுக்கு எதிரிகள் எண்ணற்ற தொல்லைகள் அளித்தார்கள். வரலாற்றில் துன்பம் மிகுந்த இந்த அத்தியாயம், ஓரிறைக் கொள்கையில் இறுதி மூச்சுவரை நிலைத்து நிற்பதற்கான அழகிய முன்மாதிரியாகும். அன்னை உம்மு ஐமன் (ரலி) அவர்கள் இத்தகைய வீர வரலாற்றின் ஓர் அங்கமாய்த் திகழ்ந்தார்கள். ஆம்! கொடுமைபுரியத் துணிந்துவிட்ட எதிரிகள் இந்தப் பெண்மணியைக் கூட விட்டு வைக்கவில்லை!

## இரு ஹிஜ்ரத்களின் சிறப்பு

நிலமை கட்டுக்கடங்காமல் போனபோது அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அபிசீனியாவுக்கு ஹிஜ்ரத் செய்யுமாறு முஸ்லிம்களுக்கு அனுமதி வழங்கினார்கள். நபித்துவ 5 ஆம் ஆண்டில் இது நடந்தது. இந்த ஆண்டு 11 ஆண்களும் 4 பெண்களும் ஹிஜ்ரத் மேற்கொண்டனர். பிறகு நபித்துவத்தின் 6 ஆம் ஆண்டு 83 ஆண்கள், 13 பெண்கள் கொண்ட பெருங்கூட்டம் ஒன்று தாய்நாடு துறந்திட இசைந்து அபிசீனியா சென்றது. அவர்களைத் தவிர இன்னும் அதிகமான முஸ்லிம்கள் தனிப்பட்ட முறையில் அபிசீனியாவுக்கு ஹிஜ்ரத் செய்தார்கள். உம்மு ஐமன் (ரலி) அவர்கள் இத்தகைய மஹாஜிர்களில் ஒருவராய்த் திகழ்ந்தார்கள்!

உம்மு ஐமன் ஹிஜ்ரத் செய்த காலம் எது என்பதை வரலாற்றாசிரியர்கள் தெளிவாகக் குறிப்பிடவில்லை. ஆயினும் பெரும்பாலோரின் கருத்து இதுதான். நபித்துவத்தின் 6 ஆம் ஆண்டுக்குப் பிறகு அபிசீனியாவுக்குச் சென்று அங்கே பல ஆண்டுகள் தங்கியிருந்தார்கள். நபி (ஸல்) அவர்கள் மதீனாவுக்கு ஹிஜ்ரத் செய்து விட்டார்கள் எனும் செய்தி கிடைத்தபோது உம்மு ஐமன் (ரலி) அவர்கள் மதீனாவுக்கு ஹிஜ்ரத் செய்து வந்தார்கள். இவ்வாறு அவர்களுக்கு இரு ஹிஜ்ரத்களின் சிறப்பும் கிட்டியது!

## போரில் பங்கேற்றல்

உம்மு ஐமன் (ரலி) அவர்கள் மதீனாவுக்கு வந்தபோது பத்றுப் போர் நடந்து முடிந்திருந்தது. பிறகு ஹிஜ்ரி 3ஆம் ஆண்டில் உஹதுப் போர் நடந்தபோது உம்மு ஐமன் (ரலி) ஓரளவு முதிய வயதை அடைந்து விட்டிருந்தார்கள். ஆயினும் இறைவழியில் புனிதப் போர் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது வீட்டில் உட்கார்ந்திருக்க அவர்களின் உள்ளம் விரும்பவில்லை. எனவே போர் விரர்களுக்கு தண்ணீர் புகட்டுவதிலும் காயம் அடைந்தவர்களுக்கு சிகிச்சை அளிப்பதிலும் பிற பெண்களோடு சேர்ந்து ஈடுபட்டார்கள்.

உஹதுக்குப் பிறகு ஹிஜ்ரி 7ஆம் ஆண்டு முஹர்ரம் மாதத்தில் நடந்த கைபர் யுத்தத்திலும் உம்மு ஐமன் (ரலி) கலந்து கொண்டு இதே பணிகளை ஆற்றினார்கள்.

அவர்களின் மகன் ஐமனும் கைபர் யுத்தத்தில் கலந்து கொண்டு - வீரத்தோடு போரிட்டு ஷஹீதானார் என்று சில அறிவிப்புகளிலிருந்து தெரியவருகிறது!

ஆயினும் பெரும்பாலான வரலாற்று நூல்களில் கைபர் போரில் ஷஹீதானவர்களின் பட்டியலில் ஐமன் (ரலி) பெயர் இடம்பெறவில்லை.

ஆனால் இப்னு இஸ்ஹாக் (ரஹ்), ஹிஜ்ரி 8 ஆம் ஆண்டு ஷவ்வால் மாதம் நடைபெற்ற ஹு னைன் போரில் கொல்லப்பட்ட வீரர்களில் உம்மு ஐமனைச் சேர்த்துள்ளார். மேலும் எழுதுகின்றார்: ‘ ஹு னைன் போரில், ஆரம்பத்திலிருந்து கடைசி வரை நபியவர்களோடு போர்க்களத்தில் நிலைத்திருந்த நபித் தோழர்கள் எட்டுப் பேரில் ஐமன் (ரலி) அவர்களும் ஒருவர். அந்த எண்மரில் ஐமன் (ரலி) மட்டுமே ஷஹீத் ஆனார்கள்.

தம்முடைய அருமந்தப் புதல்வர் ஐமன் (ரலி) மரணம் அடைந்தது குறித்து உம்மு ஐமன் பெரிதும் பொறுமையைக் கடைப்பிடித்தார்கள். தம்முடைய பேரரும் ஐமனின் மகனுமாகிய ஹஜ்ஜாஜை தம் அரவணைப்பில் எடுத்துக் கொண்டார்கள். இவர் பிற்காலத்தில் சிறப்பிற்குரியவராய் வளர்ந்து மதீனாவின் பெருந்தலைவர்களில் ஒருவராய்த் திகழ்ந்தார். இவரிடமிருந்து சில நபிமொழிகளும் அறிவிக்கப்பட்டுள்ளன.

ஹிஜ்ரி 8 இல் ஜமாதுல் அவ்வல் மாதத்தில் ரோம் நாட்டு கிறிஸ்தவர்களோடு நடைபெற்ற மு.·தா போரில் அன்னை உம்மு ஐமனின் கணவர் ஜைத் இப்னு ஹாரிஸா (ரலி) வீர மரணம் அடைந்தார். அப்போது உம்மு ஐமன் (ரலி) கண்கலங்கினார். ஆயினும் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் அன்பும் ஆதரவும் அவரின் கவலையைப் பெரிதும் குறைத்தது!

மு.·தா போருக்கு பதிலடி கொடுப்பதற்காக ஹிஜ்ரி 11 ஆம் ஆண்டில் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் ஒரு படையை அனுப்பினார்கள். அந்தப் படையில் அபூபக்ககர் (ரலி), உமர் (ரலி) அபூ உபைதா (ரலி), ச.·த் இப்னு அபீவகாஸ் (ரலி) மற்றும் சயீத் இப்னு ஜைத் (ரலி) போன்ற பிரபலமான மூத்த நபித்தோழர்கள் இடம் பெற்றிருந்தார்கள். ஆயினும் நபியவர்கள் இளைஞரான உஸாமாவைத்தான் படைத்தளபதியாக நியமித்தார்கள். இது நபி (ஸல்) அவர்கள் நோய்வாய்ப்பட்ட ஆரம்பக் கட்டத்தில் நிகழ்ந்தது. ஆயினும் நபியவர்கள் படை புறப்படுவதற்குக் கட்டளையிட்டார்கள்.

படை மதீனாவை விட்டுப் புறப்பட்டு ஜு ரி.·ப் எனும் இடத்தில் முகாம் அமைத்திருந்தது. அதற்குள்ளாக மதீனாவில் நோயுற்றிருந்த நபி (ஸல்) அவர்களின் உடல்நிலை மேலும் மோசமானது.

ஹாஷிம் கிளையில் பெரும்பாலானவர்கள் மரணம் அடைந்ததை உம்மு ஐமன் (ரலி) அவர்கள் பார்த்திருந்தார்கள். ஆகையால் மரணப்படுக்கையில் இருந்த அண்ணல் நபி (ஸல்) அவர்களுக்கு மரண நேரம் நெருங்கிவிட்டதற்கான சில அறிகுறிகள் உம்மு ஐமனுக்குத் தெரிந்தது. அவற்றின் மூலம் நபியவர்கள் இவ்வுலகை விட்டுப் பிரியப் போகின்றார்கள் என்பதை உறுதியாய் அறிந்த அவர்கள், உடனே உஸாமாவுக்குத் தூது அனுப்பி மதீனாவுக்கு வாருங்கள் என அறிவித்தார்கள். செய்தி அறிந்ததும் உஸாமா (ரலி) அவர்கள் முக்கியமான நபித் தோழர்கள் சிலரை அழைத்துக் கொண்டு மதீனா திரும்பினார்கள்.

### அண்ணலார் மரணம் அடைந்தபோது...

உம்மு ஐமன் (ரலி) அவர்கள் அண்ணல் நபியின் மரணத்தால் கடும் துயரத்திற்கு ஆளானார்கள். மனம் நொந்து அழுது அழுது கடுமையான பலவீனம் ஏற்பட்ட பிறகும் அவர்களின் அழுகை நிற்கவே இல்லை! இதனைக் கேள்விப்பட்டதும் அபூபக்கர் (ரலி) அவர்களும் உமர் (ரலி) அவர்களும் வந்து உம்மு ஐமனைத் தேற்றினார்கள். அவர்களுக்கு ஆறுதல் அளிக்கும் வண்ணம் இவ்வாறு கூறினார்கள். 'ஏன் இவ்வளவு தூரம் கவலைப்படுகின்றீர்கள்! நபி (ஸல்) அவர்களுக்கு இறைவனிடத்தில் மிகச் சிறந்த சன்மானங்கள் உள்ளன.'' அதற்கு உம்மு ஐமன் (ரலி) அவர்கள் 'இதுதான் எனக்குத் தெரியுமே! நான் அழுது கொண்டிருப்பது இறைச் செய்தியின் வருகை (வஹீ) நின்று விட்டதே என்பதற்காகத்தான்!'' என்று பதில் அளித்தார்கள். இதனைக் கேட்டதும் அவர்கள் இருவரின் நெஞ்சமும் இளகியது. அவர்களும் அழலாயினர். - ஸஹீஹ் முஸ்லிம்.

ஆனால் தபகாத் இப்னு ச.·த் எனும் நூலில் இவ்வாறு உள்ளது:- மக்கள் உம்மு ஐமன் (ரலி) அவர்களுக்கு ஆறுதல் கூறி மரணம் ஏற்படுவது இயற்கையே எனப் புரியவைத்தபோது, 'இறைவனின்

விதிப்படி நபியவர்கள் மரணம் அடைந்தது குறித்து எனக்குத் தெறியும்! இறைச் செய்தியின் வருகை தடைப்பட்டு விட்டதே என்பதற்காகத்தான் நான் அழுகின்றேன்'' என்று பதில் அளித்தார்கள்.

உம்மு ஐமன் (ரலி) அவர்கள், நபியவர்களை குழந்தையாய் இருந்தபோது கண்காணித்து வளர்க்கும் பாக்கியத்தைப் பெற்றார்கள் என்பது மட்டுமல்ல, நபியவர்களின் தாய், தந்தை, பாட்டனார் போன்ற பெரியோர்கள் அனைவர்க்கும் அறிமுகமாகியிருந்தார்கள். ஆகையால் உம்மு ஐமன் (ரலி) அவர்களுக்கு நபியவர்கள் பெரிதும் கண்ணியம் அளித்து வந்தார்கள். அவர்களின் வீட்டுக்கு அடிக்கடி செல்வார்கள். 'என்னுடைய தாய்க்குப் பிறகு உம்மு ஐமன் எனக்குத் தாயாக இருந்தார்கள்'' என்று கூறுவார்கள். அவர்களிடம் பேசும் போது ஷதாயே! என்று அழைத்துப் பேசுவது வழக்கம்!

### அண்ணலாரின் மீது கோபம்

உம்மு ஐமன் (ரலி) நபியவர்கள் மீது அதிகம் உரிமை பாராட்டுபவர்களாய் இருந்தார்கள். ஒருமுறை அண்ணல் நபி (ஸல்) அவர்கள் உம்மு ஐமன் (ரலி) அவர்களின் இல்லத்துக்குச் சென்றிருந்தபோது அவர்கள் நபியவர்களுக்கு குளிர்பானம் கொடுத்தார்கள். நபி (ஸல்) அவர்கள் ஏதோ ஒரு காரணத்தால் அதைக் குடிக்க இயலாது என்று கூறிவிட்டார்கள். (நபியவர்கள் அப்போது நோன்பு வைத்திருக்க வேண்டும், அதனை வெளிப்படுத்தவில்லை) உம்மு ஐமன் (ரலி) அவர்கள் இது குறித்து கோபமாய் நடந்து கொண்டார்கள். கோபத்தில் அவர்கள் கூறியது எதையும் அண்ணலார் கோபமாக எடுத்துக் கொள்ளவில்லை.

அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் அன்சாரித் தோழர்கள் வழங்கிய அதிகமான திராட்ச்சைத் தோட்டங்கள் இருந்தன. அனஸ் இப்னு மாலிக் (ரலி) அவர்களும் சில தோட்டங்களைக் கொடுத்திருந்தார்கள். அவற்றை நபியவர்கள் உம்மு ஐமன் (ரலி) அவர்களிடம் கொடுத்து வைத்தார்கள்.

பனூ குரைலா, பனூ நுலைர் ஆகிய யூதக் கூட்டத்தினரை முஸ்லிம்கள் வென்றபோது நபியவர்கள் அன்சாரிகளின் தோட்டங்களை அவர்களிடமே திருப்பிக் கொடுத்தார்கள். இவ்வாறே அனஸ் (ரலி)யின் தோட்டங்களையும் அவர்களிடமே திருப்பிக் கொடுத்தார்கள். அப்போது அனஸ் (ரலி) அவர்கள் அத்தோட்டங்களைக் கைப்பற்றச் சென்றபோது உம்மு ஐமன் (ரலி) அவர்கள் அவற்றைத் திருப்பிக் கொடுக்கத் தயக்கம் காட்டினார்கள். செய்தி அண்ணல் நபி (ஸல்) அவர்களுக்கு எட்டியபோது அத்தோட்டங்களைவிட 10 மடங்கு அதிகமாகக் கொடுத்து உம்மு ஐமனைத் திருப்திப்படுத்தினார்கள்.

### மரணம்

அல்லாமா இப்னு அஸீர் (ரஹ்) கூறுகின்றார்:- 'உம்மு ஐமன் (ரலி) அவர்கள் நபியவர்கள் இறந்த 5,6 மாதங்கள் கழித்து அபூபக்கர் (ரலி) அவர்களின் ஆட்சிக் காலத்தில் மரணம் அடைந்தார்கள்.'' இந்தக் கருத்துக்கு ஆதாரமாக பிற அறிவிப்புகள் ஏதும் வரவில்லை.

ஹாபிழ் இப்னு ஹஜர் (ரஹ்) கூறுகின்றார்கள்:- 'ஹிஜ்ரி 24 ஆம் ஆண்டில் இரண்டாம் கலீஃபா உமர் (ரலி) ஷஹீதான போது உம்மு ஐமன் (ரலி) அவர்கள் கடும் துயரத்தில் ஆழ்ந்தார்கள். அழுது புலம்பியபடியே கூறினார்கள்:- 'இப்போது இஸ்லாம் பலவீனமாகிவிட்டது.''

அல்லாமா இப்னு சஃத் (ரஹ்) அவர்களின் விளக்கம் வருமாறு:- உஸ்மான் (ரலி) அவர்களின் ஆட்சியின்போது பேரீச்ச மரங்களின் விலை கடுமையாக உயர்ந்திருந்தது. ஒரு மரத்தின் விலை ஆயிரம் திர்ஹத்ற்கும் அதிகம்!

இந்த காலகட்டத்தில் ஒருநாள் உஸாமா இப்னு ஜைத் (ரலி) அவர்கள் ஒரு மரத்தின் அடிப்பகுதியைக் குடைந்து அதன் குருத்தை வெளியே எடுத்தார்கள். இதனைக் கண்ணுற்ற மக்கள் திகைத்துப் போய் வினவினார்கள். ‘தாங்கள் என்ன செய்கின்றீர்கள்? இவ்வளவு மதிப்பு வாய்ந்த மரத்தை வீணாக்குகின்றீர்களே!

அதற்கு உஸாமா (ரலி) பதில் அளித்தார்கள்:- ‘எனது தாயார் பேரீச்ச மரத்தின் குருத்தைக் கேட்டார்கள். எதனை விரும்பி அவர்கள் கட்டளை இடுகின்றார்களோ - அதனை நிறைவேற்றுவது எனது கடமை என நான் கருதுகின்றேன்.

இந்த அறிவிப்பிலிருந்து உம்மு ஐமன் (ரலி) அவர்கள் உஸ்மான் (ரலி) அவர்களின் ஆட்சிக் காலம் வரை உயிரோடு இருந்தார்கள் என்று தெரிகிறது. இதுவே நம்பகமன வரலாறு ஆகும். உம்மு ஐமன் (ரலி) மூலமாக சில நபிமொழிகளும் அறிவிக்கப்படுகின்றன. அவற்றின் அறிவிப்பாளர்களில் அனஸ் இப்னு மாலிக் (ரலி), ஹனஸ் இப்னு அப்துல்லாஹ் (ரஹ்) மற்றும் அபூயஜீத் மதனி (ரஹ்) ஆகியோரின் பெயர்கள் உள்ளன.

## உம்மு ஸுலைம் (ரலி)

ஒருமுறை அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். நான் சுவர்க்கம் சென்றபோது காலடியோசை ஒன்று கேட்டது. ஷஇது யார்? என்று வினவினேன். ஷஇவர்தான் ரமீஸா பின்த் மில்ஹான் என்று பதில் கூறப்பட்டது. -ஸஹீஹ் முஸ்லிம்-

இந்த நபிமொழியின் வாசகங்களைத் திரும்ப ஒருமுறை படியுங்கள்! பாக்கியமுள்ள ஒரு பெண்மணியைக் குறித்து அவர் சுவர்க்கத்திற்குரியவர் என்று எத்துணை அன்பான — சிறப்பான முறையில் நற்செய்தி சொல்லப்படுகிறது!

ரமீஸா எனும் இந்தப் பெண்மணிதான் வரலாற்றில் உம்மு ஸுலைம் (ரலி) என்று கூறப்படுகின்ற பிரபலமான நபித்தோழியர் ஆவார். இவர் மதீனாவின் பனூ நஜ்ஜார் எனும் அன்ஸாரிக் குலத்தைச் சேர்ந்தவர்.

இந்த மதீனத்துப் பெண்மணிக்கு பேரானந்தத்திற்குரிய இந்நற்செய்தி சாதாரணமாகக் கிடைத்து விட்டது என்றா நினைக்கிறீர்கள்? சுவர்க்கத்திற்கு செல்வதென்பது அவ்வளவு எளிதான காரியமா?

இல்லை உம்மு ஸுலைம் (ரலி) அவர்கள் இறைவழியில் பல தியாகங்கள் புரிந்தார்கள். இஸ்லாத்தின் அழைப்புப் பணியை மேற்கொண்டு பல தொல்லைகளுக்கு ஆளானார்கள். அவ்வழியில் பொறுமையைக் கைக்கொண்டு எதிர்ப்பட்ட அனைத்துத் தடைகளையும் அகற்றி வெற்றி கண்டார்கள். இறைவன் மீதும் - அவனுடைய தூதர் மீதும் நீங்கா அன்பு கொண்டு மக்கள் அனைவரையும் பரிவுடன் நடத்தினார்கள். அதன் பிறகுதான் அண்ணல் நபி (ஸல்) அவர்களிடமிருந்து இந் நற்செய்தி பரிசாகக் கிடைத்தது!

ஆம்! உம்மு ஸுலைம் (ரலி) சிறந்த மனைவியாக, தாயாக வாழ்ந்த அதே நேரத்தில் மிகச் சிறந்த இஸ்லாமிய அழைப்பாளராகவும் தியாகப் பெண்மணியாகவும் விளங்கினார். அறிவுத்திறனும்,

பொறுமையும் நன்றியுணர்வும் இன்னும் பல சிறப்பம்சங்களும் அவருடைய வாழ்க்கையில் பிரகாசிக்கின்றன!

நபிமொழித் தொகுப்புகளும் வரலாற்று ஏடுகளும் அவர்களின் வீரதீரச் செயல்களையும் தியாகங்களையும் பாதுகாத்து வைத்துள்ளன. அவற்றில் முக்கியமான படிப்பினை மிக்க நிகழ்ச்சிகளையும் செய்திகளையும் இங்கு காண்போம். அவற்றைப் படிக்கும் மக்கள் குறிப்பாக பெண்கள் பயன்கள் பல பெறுவர். இஸ்லாத்தின் அறிவுரைகளையும் ஒழுக்க மாண்புகளையும் பின்பற்றி வாழவேண்டும் என்ற உணர்வும் கொள்வர் என்பது திண்ணம்!

உம்மு ஸூலைம் (ரலி) அவர்களின் பனூ நஜ்ஜார் கோத்திரத்திற்கும் அண்ணல் நபி (ஸல்) அவர்களுக்கும் இடையே ஓர் உறவு முறை உள்ளது. அது தூரத்து உறவாயினும் அண்ணலாரிடத்தில் அதிக மதிப்பும் முக்கியத்துவமும் பெற்றிருந்தது. அண்ணல் நபி (ஸல்) அவர்கள் உம்மு ஸூலைமின் இல்லத்தை தம் வருகையால் அடிக்கடி சிறப்பித்துக் கொண்டிருந்தார்கள்!

அந்த உறவு எப்படி மலர்ந்தது? அது தொடர்பாக வரலாற்றில் ஒரு சுவையான நிகழ்ச்சியே உள்ளது!

குறைஷிக் குலத்தில் பனூ ஹாஷிம் கிளையின் மூலவராகிய ஹாஷிம் என்பவர் ஒரு முறை வியாபாரத்திற்காக ஷாம் தேசம் புறப்பட்டுச் சென்றார். வழியில் மதீனாவில் தங்கினார். அங்கு பலநாள் சந்தைக் கூட்டம் ஒன்று கூடியிருந்தது.

ஹாஷிம் சந்தைக்குப் போனார். அங்கு பேரழகு வாய்ந்த ஒரு பெண்ணைப் பார்த்தார். அப்பெண்ணின் தோற்றமும் நடையுடை பாவனையும் அவர் ஒரு சிறந்த பெண்மணி, உயர் குலத்தைச் சேர்ந்தவர், விவேகமிக்கவர் என்பதை உணர்த்தியது.

ஹாஷிம் அப்பெண்ணைக் குறித்து மக்களிடம் விசாரித்தார். அப்பெண் பனூ நஜ்ஜார் குடும்பத்தைச் சார்ந்தவர், பெயர் ஷஸல்மா  என்பது தெரியவந்தது.

ஹாஷிம், அப்பெண்ணைத் திருமணம் செய்து கொள்ள விரும்புவதாகத் தூது அனுப்பினார். அப்பெண்ணும் சம்மதிக்கவே இருவருக்கும் திருமணம் நடைபெற்றது!

ஹாஷிம் கொஞ்ச காலம் மதீனாவில் தங்கியிருந்து விட்டு பிறகு ஷாம் தேசம் புறப்பட்டுச் சென்றுவிட்டார். அங்கேயே அவர் மரணமாக நேரிட்டது. இங்கு... மதீனாவில் ஸல்மாவுக்கு ஒரு மகன் பிறந்தார். பிள்ளைக்கு ஷைஷபா  என்று பெயர் சூட்டப்பட்டது.

குழந்தை ஷைபா எட்டு வயதை அடைந்தபோது இறந்துபோன ஹாஷிமின் குடும்பம் மதீனாவில் இருப்பது மக்காவில் ஹாஷிமின் சகோதரர் முத்தலிப்புக்குத் தெறியவந்தது. உடனே அவர் மதீனாவுக்கு வந்தார். தம் சகோதரர் மகனைத் தேடி அலைந்தார். மக்களிடம் விசாரித்தர்.

முத்தலிப் வந்த செய்தி ஸல்மாவுக்குத் தெரிய வந்தபோது அவரை அழைத்து வர ஆள் அனுப்பினாா. முத்தலிபை மூன்று தினங்கள் விருந்தாளியாகத் தங்கச் செய்து, நான்காவது தினம் தம் மகன் ஷைபாவை முத்தலிபிடம் ஒப்படைத்தார்.

முத்தலிப் ஷைபாவை அழைத்துக் கொண்டு மக்கா திரும்பினார். அங்கு மக்கள் முத்தலிபுடன் ஷைபாவைக் கண்டதும் அவரை அப்துல் முத்தலிப் (முத்தலிபின் அடிமை) என்று செல்லமாக அழைக்கத் தொடங்கினர். அதே பெயர்தான் அவருக்கும் பிரபலமாயிற்று! இந்த அப்துல் முத்தலிப்தான் நபி (ஸல்) அவர்களின் பாட்டனார்!

அப்துல் முத்தலிபின் (கைஃபாவின்) தாயார் ஸல்மா, மதீனத்துத் தலைவர்களுள் ஒருவராகிய ஜைத் என்பவரை மறுமணம் புரிந்த கொண்டார். இந்த ஜைத் என்பவர் உம்மு ஸூலைம் (ரலி) அவர்களின் முப்பாட்டனார் ஆவார். இந்தச் சுவையான உறவு முறையின் மூலம் உம்மு ஸூலைமும் அவரின் சகோதரி உம்மு ஹறாமும் அண்ணலாரின் ஷசிறிய தாயார்கள் எனும் சிறப்பைப் பெற்றார்கள்!

## இஸ்லாத்தைத் தழுவுதல்

மதீனத்து முஸ்லிம்களில் முதன் முதலாக இஸ்லாத்தைத் தழுவியவர்களில் உம்மு ஸூலைம் (ரலி) அவர்களும் குறிப்பிடத்தக்கவர்கள். அவர்கள் இஸ்லாத்தில் இணைந்தது குறித்து அவருடைய கணவர் மாலிக் இப்னு நள்ர் என்பவருக்கு பெரிதும் கவலை ஏற்பட்டது. அவர் சிலை வழிபாடு செய்பவராக இருந்தார். அவர்களுக்கு ஒரு மகனும் பிறந்தான்.

உம்மு ஸூலைம் (ரலி) அவர்கள் குழந்தைக்குத் தினமும் இஸ்லாத்தின் ஏகத்துவக் கலிமாவை அல்லாஹ் ஒருவனைத் தவிர வேறு கடவுள் இல்லை, முஹம்மத் (ஸல்) அவர்கள் அவனுடைய தூதர் ஆவார்கள் என்பதை – கற்றுக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். இதனைக் கண்ணுற்ற மாலிக் கோபத்துடன் கூறினார்: ஷஷநீ என்னுடைய மகனையும் ஷகெடுப்பதற்காகவா இதையெல்லாம் அவனுக்குக் கற்றுக் கொடுக்கின்றாய்?

இவ்வாறு அவர் கோபித்துக் கொண்டு ஷாம் தேசத்திற்குச் சென்றார். அங்கு அவருடைய பரமவிரோதி ஒருவனால் கொல்லப்பட்டார்.

உம்மு ஸூலைம் (ரலி) அவர்கள் அழகிலும் குணத்திலும் அறிவுத் திறனிலும் மதீனா முழுவதும் புகழ் பெற்றிருந்தார்கள். அவர்கள் ஷவிதவை ஆனதும் மறுமணம் தொடர்பாக பலரிடமிருந்தும் தூது வந்தது. அதற்கு அவர்கள் அளித்த பதில் இதுதான்.:

என்னுடைய மகன் சான்றோர்களின் அவைகளில் உட்காருவதற்கும் பேசுவதற்கும் தகுதி பெற்று வளரும் வரை நான் மறுமணம் செய்ய மாட்டேன். அவன் பெரியவனாகி சம்மதம் தெரிவித்தால்தான் நான் மறுமணம் செய்து கொள்வேன்.

தம்முடைய மகனை நல்ல முறையில் பயிற்றுவித்து ஒழுக்கத்துடன் வளர்க்க வேண்டும் என்பதில்தான் உம்மு ஸூலைம் (ரலி) அவர்கள் அதிகமாக அக்கறை கொண்டிருந்தார்கள். நடமாடும் இஸ்லாமிய முன்மாதிரியாய் அவன் ஆகவேண்டும் என்பது அவர்களின் நோக்கம். நன்மைகளை மேற்கொள்ளுமாறு அனுதினமும் தன் மகனுக்கு ஊக்கமளித்துக் கொண்டிருந்ததும் இஸ்லாத்தின் அடிப்படைகளைப் போதித்ததும் இந்நோக்கம் நிறைவேறுவதற்காகத்தான்!

தன் மகன் எப்போது பெரியவனாய் வளர்ந்து இஸ்லாத்தின் கடமைகளையும் பணிகளையும் முழு விருப்பத்துடன் நிறைவேற்றப் போகிறான், அதனைத் தாம் எப்போது கண்டு மகிழ்ந்திடப் போகிறோம் என்று தாயின் ஆவல் அதிகமாகிக் கொண்டிருந்தது.

அல்லாஹ்வின் அருளைப் பாருங்கள்! அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மக்காவிலிருந்து ஹிஜ்ரத் செய்து மதீனாவுக்கு வருகை தந்திருந்தார்கள். விவேகத்தின் சிகரமான உம்மு ஸூலைம் (ரலி) இந்த நல்ல சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு ஷதம் மகன் அனஸைப் பணிவிடைக்காக வைத்துக் கொள்ளுமாறு நபியவர்களிடம் கோரிக்கை சமர்ப்பித்தார்கள்.

அண்ணல் நபி (ஸல்) அவர்களும் பெரும் மகிழ்ச்சியுடன் அனஸை தங்களிடம் வைத்துக் கொண்டார்கள்.

அன்ஸாரிக் குடும்பத்துப் பெண்மணியிடம் வளர்ந்து வந்த சிறுவன் இப்போது அல்லாஹ்வின் இறுதித் தூதரின் சமூகத்தில் பணிவிடை செய்து பயிற்சி பெறலானார். அனஸு க்கு அப்போது வயது எட்டு.

இந்த அனஸ்தான், ஏராளமான நபிமொழியின் பிரபலமான அறிவிப்பாளராகத் திகழ்பவரும் - இம்மை-மறுமை வெற்றிக்காக அண்ணலாரின் துஆவைப் பெற்றவருமான பிரபல நபித்தோழர் அனஸ் (ரலி) ஆவார்.

அனஸ் (ரலி) அவர்கள் பிற்காலத்தில் ஒரு முறை கூறினார்கள், ஷஷஅல்லாஹ் என்னுடைய தாயாருக்கு நற்கூலி வழங்குவானாக! என்னை அவர்கள் நல்ல முறையில் வளர்த்தார்கள்.

இவ்வாறு தம் தாயார். அண்ணலாரின் திருச்சமூகத்தில் தன்னை ஒப்படைத்து உபகாரம் செய்ததை அனஸ் (ரலி) என்றென்றும் நினைத்து – தாயாருக்கு நன்றி செலுத்திக் கொண்டிருந்தார்கள். ஆம்! அல்லாஹ்வின் தூதருக்கு சேவகனாக இருப்பதைக் காட்டிலும் வேறு உயர்வு என்ன இருக்கிறது?

இதன் பிறகும் - தன் மகனின் நடைமுறைப் பழக்கங்களைக் கண்காணிப்பதில் உம்மு ஸு லைம் (ரலி) அவர்கள் ஒரு குறையும் வைக்கவில்லை.

ஒருமுறை அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அனஸ் (ரலி) அவர்களை ஒரு பணிக்காக எங்கோ அனுப்பியபோது ஷஷஇதைக் குறித்து யாரிடமும் தெரிவிக்கக் கூடாது என்று அறிவுறுத்தினார்கள். பணியை முடிப்பதில் கொஞ்சம் நேரம் அதிகமாகி விட்டது. முடித்துக் கொண்டு திரும்பியபோது, தாயார் உம்மு ஸு லைம் (ரலி) அவர்கள் எதிர்ப்பட்டு ஷஷஎங்கே போய்விட்டு வருகின்றாய்? என்று வினவினார்கள்.

நபி (ஸல்) அவர்களின் பணிக்காகச் சென்று விட்டு வருகின்றேன். அது இரகசியமான ஒன்று! அதை வெளியில் சொல்லமாட்டேன் என்று அனஸ் (ரலி) அவர்கள் பதில் கூறினார்கள்.

மகனின் இந்தப் பதிலைக் கேட்டதும் தாயாருக்குப் பேரானந்தம் ஏற்பட்டது. ஷஷஒருபோதும் வெளியிடக் கூடாது. யார் கேட்டாலும் சொல்லக் கூடாது. இது நபி (ஸல்) அவர்களின் இரகசியமாகும் என்று மேலும் அறிவுறுத்தினார்கள்.!

அழைப்புப் பணி

அறிவுக் கூர்மையும் உத்வேகமும் கொண்ட உம்மு ஸு லைம் (ரலி) அவர்கள் இஸ்லாமிய அழைப்புப் பணியில் அதிக ஆர்வம் கொண்டிருந்தார்கள். சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம் சத்திய இஸ்லாத்தின் அடிப்படைகளை எல்லோரிடமும் தெளிவாக எடுத்துக் கூறி வந்தார்கள்.

தம்முடைய கோத்திரத்தைச் சேர்ந்த ஆண்கள், பெண்கள் மற்றும் சிறார்கள் அனைவரிடேயேயும் பிரச்சாரம் செய்து வந்தார்கள். அதிலும் இப்போது தம் மகன் அண்ணலாரிடம் பணிவிடையாகச் சேர்ந்தபிறகு அழைப்புப் பணிக்காக அதிக நேரம் அவர்களுக்குக் கிடைத்தது. அத்துடன் அனஸ் (ரலி) அவர்கள் அண்ணலாரிடம் அறிவு பெற்று வளர்ந்த வருவதால் உம்மு ஸு லைம் (ரலி) அவர்களுக்கு பெரிதும் மன நிம்மதி ஏற்பட்டிருந்தது.

இந்த நிலையில், அதே பனூ நஜ்ஜார் கோத்திரத்தைச் சேர்ந்த அபூ தல்ஹா என்பவர் உம்மு ஸு லைம் (ரலி) அவர்களைத் திருமணம் செய்திடத் தூது அனுப்பினார். அவரோ இணைவைப்பாளராய் இருந்தார். அவருடைய கோரிக்கையை மறுத்த உம்மு ஸு லைம் (ரலி) அவர்கள் அறிவார்ந்த முறையில் இப்படிக் கூறினார்கள்.

அபூ தல்ஹாவே, நான் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீது நம்பிக்கை கொண்டுள்ளேன். அவர்கள் அல்லாஹ்வின் திருத்தூதர் ஆவார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளேன். ஆனால் அறிவுத் தெளிவுடைய மனிதராகிய நீங்கள் இன்னும் முஸ்லிம் ஆகவில்லை என்பது ஆச்சரியமாக உள்ளது. இதில் மிகவும் வேதனைக்குரிய விஷயம் என்னவெனில், நீங்கள் மரத்தையும் கற்களையும் சிலையாக வடித்து வணங்கிக் கொண்டிருப்பதுதான்! உயிரற்ற இந்தச் சிலைகளால் உங்களுக்கு லாபமோ நட்டமோ அளித்திட இயலாது. நீங்கள் சிந்திக்க வேண்டும்! ஆழமாக ஆராய்ந்திட வேண்டும்! முஸ்லிமாகிய நான் சிலைவணக்கம் செய்யும் உங்களை எப்படி மணந்து கொள்ள முடியும்?

அபூ தல்ஹா நற்பேறுடைவர் போலும்! உம்மு ஸுலைம் (ரலி) அவர்களின் இந்த அறிவுரை அவரின் மனத்தைத் தொட்டது! அவர்கள் கூறியவை பற்றிப் பரிசீலனை செய்தார். உம்மு ஸுலைமின் கொள்கைதான் சத்தியம் என்பதை உணர்ந்தார். நேரிய மார்க்கம் அவருக்குப் புலப்பட்டு விட்டது!

மூன்று நான்கு நாட்களுக்குப் பிறகு உம்மு ஸுலைம் (ரலி) அவர்களிடம் வந்து இஸ்லாத்தில் இணைந்தார். அவர் இஸ்லாத்தைத் தழுவியது குறித்து உம்மு ஸுலைம் (ரலி) அவர்களுக்கு அளவலா மகிழ்ச்சி! வறியவரான அபூ தல்ஹா (ரலி) அவர்களின் வறுமை நிலையையும் பொருட்படுத்தாமல் அவரை மணந்து கொள்ள மனம் ஒப்பினார்கள்!

திருமணத்தில் மஹ்ராய் அளிப்பதற்குக் கூட அபூ தல்ஹாவிடம் எதுவும் இல்லை! அதற்கு உம்மு ஸுலைம் (ரலி) அவர்கள் கூறினார்கள்.: ஷஷிசிரமம் ஏதுமில்லை. நான் உங்களை மணந்து கொள்கிறேன். நீங்கள் இஸ்லாத்தைத் தழுவியதையே ஷமஹ்ராய் ஏற்றுக் கொள்கிறேன்.

தம் மகனார் அனஸ் (ரலி) அவர்களின் மீது உம்மு ஸுலைம் (ரலி) அவர்கள் எவ்வளவு அன்பும் பாசமும் கொண்டிருந்தார்கள் என்பது தெரிந்ததே! இப்போது அபூ தல்ஹா உம்மு ஸுலைம் தம்பதிக்கு மற்றொரு மகன் பிறந்தார். அவருக்கு அபூ உமைர் என்று பெயர்! இவரும் அன்புக்குரிய குழந்தையாய் இருந்தார்.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் உம்மு ஸுலைமின் இல்லத்திற்கு வருகை தந்தால் அபூ உமைர் மீது அன்பு மழை பொழிவார்கள்! அவருடன் கொஞ்சி மகிழ்ந்து விளையாடுவார்கள்.

ஒருமுறை அண்ணலார் வருகை தந்தபோது அபூ உமைரின் முகம் வாடியிருந்தது. ஷஎன்ன விஷயம்? இன்று அபூ உமைர் சோர்ந்திருக்கிறார் என்று உம்மு ஸுலைமிடம் கேட்டார்கள்!

அல்லாஹ்வின் தூதரே, அபூ உமைருக்கு நுகைர் என்று ஒரு குருவி இருந்தது. அதனுடன் விளையாடிக் கொண்டிருப்பார். இன்று திடீரென அது இறந்துவிட்டது.

அண்ணல் நபியவர்கள் அபூ உமரை அருகில் அழைத்துத் தமது அன்புக் கரத்தை அவருடைய தலை மீது வைத்துத் தடவிக் கொடுத்தார்கள்.

பிறகு மாஃப அலந் நுகைர் யா அபா உமைர்? (என்னுடைய உமைர், என்னவாயிற்று நுகைர்?) என்று சொல் நயத்துடன் அண்ணலார் கேட்டதும் சிறுவர் அபூ உமைர் தம் கவலையை மறந்து சிரித்தபடி மீண்டும் விளையாடுவதில் ஈடுபட்டார்.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மொழிந்த அந்த வாசகம் இன்று வரைக்கும் பழமொழியாய்ப் புகழ் பெற்றுள்ளது.

கொஞ்ச நாட்களில் சிறுவர் அபூ உமைர் மரணம் அடைந்து விட்டார். அபூ தல்ஹா (ரலி) வெளியில் சென்றிருந்தார். உம்மு ஸுலைம் (ரலி) அவர்கள் அசாதரணமான பொறுமையை

மேற்கொண்டார்கள். பொறுமையிலும் மன உறுதியிலும் வியக்கத்தக்கதொரு முன்மாதிரியை அந்தப் பெண்மணியிடம் மக்கள் கண்டார்கள்!

பாசத்திற்குரிய தனது அன்பு மகன் திடீரென இறந்து விட்டது குறித்து அழுது ஓலமிட்டுக் கதறவில்லை. பரிதவிப்பிற்கோ பதற்றத்திற்கோ ஆளாகவில்லை. தம் அருமந்த மகனின் உடலைக் குளிப்பாட்டி, கஃபன் - துணியால் பொதிந்து வீட்டில் ஒரு மூலையில் வைத்து விட்டார்கள்! பிறகு தம் கணவர் வந்து செய்தியைக் கேட்டதுமே அதிர்ச்சி அடைந்துவிடக் கூடாது என்பதற்காக வீட்டில் உள்ளவர்களிடமும் வெளியே மக்களிடமும் பின்வருமாறு சொன்னார்கள்.

அபூ தல்ஹா வந்ததும் அபூ உமைரின் மரணச் செய்தியை நீங்கள் யாரும் தெரிவிக்க வேண்டாம்.

அபூ தல்ஹா (ரலி) அவர்கள் இரவில் வீட்டுக்கு வந்தார். அவருக்கு உம்மு ஸு லைம் (ரலி) அவர்கள் உணவு பரிமாறினார்கள். பிறகு அவர் நிம்மதியுடன் படுக்கச் சென்றபோது அவரிடம் கேட்டார்கள்.

யாராவது ஒரு பொருளை உங்களுக்கு இரவலாகக் கொடுத்து, பிறகு திரும்பப் பெற்றுக் கொண்டால் அந்த மனிதரை நீங்கள் வெறுக்க மாட்டீர்கள்தானே?

இதென்ன கேள்வி! அவர் கொடுத்த பொருளை மகிழ்ச்சியுடன் அவரிடம் திருப்பிக் கொடுக்க வேண்டியதுதான்.

உங்களுடைய குழந்தையும் அல்லாஹ் வழங்கிய ஓர் அடைக்கலப் பொருளாய் இருந்தது. இப்போது அவன் அதனைத் திரும்பப் பெற்றுக் கொண்டான். எனவே நீங்கள் பொறுமையை மேற்கொள்ளுங்கள்!

இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன் (திண்ணமாக நாம் அல்லாஹ்வுக்கு உரியவர்கள், அவனிடமே திரும்பிச் செல்லவேண்டியவர்களாய் இருக்கின்றோம்) என்ன? நீ இதனை முதலிலேயே கூற வேண்டியதுதானே!

நீங்கள் நிம்மதியுடன் உணவு உட்கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான்.

மறுநாள் அதிகாலையில் அபூ தல்ஹா (ரலி) அவர்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் சமூகத்திற்கு வந்து நடந்த நிகழ்ச்சி முழுவதையும் எடுத்துச் சொன்னார்கள்.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் உம்மு ஸு லைம் (ரலி) அவர்களின் பொறுமையையும் உளத்திண்மையையும் சிறப்பித்துக் கூறினார்கள். பிறகு ஷஷஅல்லாஹ் உங்கள் இருவருக்கும் அபூ உமைருக்குப் பகரமாக ஒரு நல்ல குழந்தையை வழங்குவானாக! என்று துஆ செய்தார்கள்.

இதன்பிறகு அவ்விருவருக்கும் அப்துல்லாஹ் என்றொரு மகன் பிறந்தார். அனஸ் (ரலி) அவர்களைப் போன்று அப்துல்லாஹ்வும் அண்ணல் நபியவர்களின் கண்காணிப்பில் வளரும் பாக்கியம் பெற்றார். அவர்களின் நற்பிரார்த்தனைகளும் அவருக்குக் கிடைத்தன!

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் செய்த பிரார்த்தனைகளினால் பெரும் பலன்கள் விளைந்தன. அனஸ் (ரலி) அவர்களைப் பொறுத்தமட்டில், ஒருபுறத்தில் உலகின் அனைத்து அருட்கொடைகளும் அவர்களுக்குக் கிடைத்தன. மறுபுறத்தில் பிள்ளைச் செல்வங்கள் அதிகமாயின!

அப்துல்லாஹ் (ரலி) அவர்களைப் பொறுத்தமட்டில், அவருடைய சந்ததிகளில் ஷகாரிகள் மற்றும் இஸ்லாமியக் கலை வல்லுனர்கள் பத்துப்பேர் தோன்றினார்கள்!

## விருந்தோம்பல்

பசித்தோர்க்கு உணவளிப்பதற்கும் விருந்தினரைக் கௌரவிப்பதற்கும் இஸ்லாம் அதிகம் சிறப்பளித்துள்ளது. விருந்தளித்து மகிழ்விப்பது தொன்றுதொட்டு அரபிகளின் பழக்கமாக இருந்து வருகிறது.

அண்ணல் நபி (ஸல்) கூறியுள்ளார்கள்: ஷஷயார் அல்லாஹ்வின் மீதும் மறுமை நாளின் மீதும் நம்பிக்கை கொண்டுள்ளார்களோ அவர்கள் தம்முடைய விருந்தினரைக் கௌரவிக்கட்டும். - புகாரி, முஸலிம் -

இதுபோன்ற அழுத்தமான அறிவுரைகளுக்கேற்ப நபித்தோழர்கள் அனைவரும் எளியோர்க்கும் வரியோர்க்கும் விருந்திட்டு உபசரிப்பதற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தார்கள். ஆயினும் அபூ தல்ஹா உம்மு ஸு லைம் (ரலி) இருவரின் வாழ்வு இப்பண்பாட்டில் சிறந்த வியக்கத்தக்கதொரு முன்மாதிரியாய் திகழ்கின்றது! மனித வரலாற்றில் இதற்கு மற்றோர் உதாரணத்தைக் காண்பது அரிது!

ஒருமுறை ஒரு மனிதர் கடும் பசியுடன் அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் வந்து உணவு அளிக்கும்படி வேண்டி நின்றார். நபி (ஸல்) அவர்கள் தம் மனைவியரிடம் ஆள் அனுப்பி, வீட்டில் உண்பதற்கு ஏதேனும் உண்டா? எனக் கேட்டார்கள். ஷஷஇன்று எதுவும் இல்லை என்றே பதில் வந்தது.

நபியவர்கள் தம் அன்புத் தோழர்களின் பக்கம் பார்வையைத் திருப்பி, ஷஷஅல்லாஹ்வின் இந்த அடிமையை அழைத்துச் சென்று விருந்தளிப்பவர் உங்களில் யாரேனும் உண்டா? என வினவினார்கள்!

இதனைக் கேட்டதும் அபூ தல்ஹா (ரலி) எழுந்து ஷஇறைத்தூதரே! இவரை, எனது வீட்டிற்கு விருந்தாளியாய் அழைத்துச் செல்கிறேன் என ஏற்றார்கள்.

வீட்டிற்குச் சென்று ஷஷஏதேனும் உணவு உள்ளதா? என்று தம் அருமை மனைவியார் உம்மு ஸு லைம் (ரலி) அவர்களை நோக்கிக் கேட்டார்கள்!

பிள்ளைகளுக்காக உணவு சமைத்துள்ளேன். அதைத் தவிர அல்லாஹ்வின் மீது ஆணையாக வேறு உணவு எதுவும் இல்லை.

பரவாயில்லை குழந்தைகளைத் தாலாட்டித் தூங்கச் செய்துவிடுங்கள். அவர்கள் தூங்கி விடுவார்கள்! அப்போது நாம் இந்த உணவை விருந்தாளிக்கு முன்னால் வைத்துவிடுவோம், பிறகு நீங்கள் எழுந்து விளக்கைச் சரி செய்வது போன்று பாவனை செய்து அணைத்துவிட வேண்டும்! இருளில் விருந்தாளியே உணவு முழுவதையும் திருப்தியாக உண்ணும் வகையில் நாம் வெறுமனே வாயை அசைத்து உண்பதாகக் காட்டிக்கொண்டிருக்க வேண்டும்.

இவ்வாறே, இருந்த கொஞ்ச உணவையும் அந்தப் பசியாளி வயிறாற உண்பதற்கு அளித்துவிட்டு – குழந்தைகளை பசியோடு தூங்கச் செய்துவிட்டு ஒருவாறு விருந்தாளியை மகிழ்வித்தோம் என்ற திருப்தியுடன் கணவனும் மனைவியும் இரவைக் கழித்தார்கள்.

காலையில் அபூ தல்ஹா (ரலி) அண்ணல் நபி (ஸல்) அவர்கள் சமூகம் வந்தபோது நபியவர்களின் புனித நாவில் இந்தத் திருவசனம் ஒலித்தது:

மேலும், அவர்கள் தங்களைவிட பிறருக்கே முன்னுரிமை அளிப்பார்கள், தமக்குத் தேவை இருப்பினும் சரியே! (59 : 9)

பிறகு அபூ தல்ஹா (ரலி) அவர்களை நோக்கி நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள், ஷஷஇரவில் நீங்கள் இருவரும் விருந்தாளியை உபசரித்த விதம் அல்லாஹ்வுக்கு மிகவும் விருப்பமானதாகி விட்டது. அதன் பிறகு அபூ தல்ஹா (ரலி) அவர்களின் குடும்பச் சேமத்திற்காக நபியவர்கள் இறைவனை இறைஞ்சினார்கள்!

மற்றொரு தடவை,

அபூ தல்ஹா (ரலி) அவர்கள் வீட்டுக்கு வந்து உம்மு ஸுலைம் (ரலி) அவர்களிடம் கூறினார்கள், ஷஷநபி (ஸல்) அவர்கள் பசியுடன் இருக்கின்றார்கள். ஏதேனும் உண்பதற்குக் கொடுத்து அனுப்புங்கள்!

இதனைக் கேட்டதும் உம்மு ஸுலைம் (ரலி) அவர்கள் மிகவும் பதறிப்போய் விட்டார்கள். உடனே, கொஞ்சம் ரொட்டிகளை ஒரு துணியில் வைத்துச் சுருட்டி அனஸ் (ரலி) அவர்களிடம் கொடுத்து அனுப்பினார்கள். அனஸ் (ரலி) அவர்கள் அவற்றை வாங்கிக் கொண்டு மஸ்ஜிதுந் நபவியை அடைந்தபோது அங்கு... அண்ணலாரைச் சுற்றி நிறையத் தோழர்கள் அமர்ந்திருந்தார்கள். அனஸ் (ரலி) அவர்களைக் கண்டதும் அண்ணலார் புரிந்து கொண்டார்கள்.

அபூ தல்ஹாதானே உம்மை அனுப்பினார்கள்?

ஆமாம், இறைத்தூதரே!

உணவு உண்பதற்காகத்தானே!

...ஆமாம்

உடனே அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அனைத்துத் தோழர்களையும் அழைத்துக் கொண்டு உம்மு ஸுலைம் (ரலி) இல்லம் நோக்கிப் புறப்பட்டார்கள்!

இத்தனை பேருக்கும் எங்கே உணவு இருக்கிறது எனும் கவலை அபூ தல்ஹாவை ஆட்கொண்டது! உம்மு ஸுலைமிடம் கேட்டார்கள்:

இப்போது என்ன செய்வது? எல்லாத் தோழர்களுக்கும் உணவு அளிக்க முடியவா செய்யும்?

அப்போது நிதானமாக – ஆனால் முழு நம்பிக்கையுடன் உம்மு ஸுலைம் (ரலி) அளித்த பதில் இதோ:

இதனை அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் நன்கு அறிவார்கள்!

பிறகு சொர்ப்ப அளவே இருந்த அந்த உணவு அனைவர் முன்னிலையிலும் வைக்கப்பட்டது. அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அனைத்துத் தோழர்களுடன் உண்டு மகிழ்ந்தார்கள். உணவு எல்லோருக்கும் போதுமானதாய் இருந்தது! இது முஃஜிஸா எனும் அற்புதம் அல்லவா?

ஓர் உண்மையான இறைநம்பிக்கையாளன் இறைவனின் திருப்தியையும் அவனுடைய தூதரின் திருப்தியையும் அடிப்படையாகக் கொண்டு விருந்தாளியைக் கௌரவிப்பதில் எப்படியெல்லாம் நடக்க வேண்டும் என்பது இதிலிருந்து பெறப்படுகிறது!

## ஜிஹாதில் - இறைவழிப்போரில் பங்கேற்றல்

இறைவழியில் ஜிஹாது செய்வதற்கு – அதாவது இறைவன் வழங்கிய வாழ்க்கை நெறி மேலோங்கி, உலகில் உண்மையும் நீதியும் நிலைபெறுவதற்காகப் புனிதப்போர் மேற்கொள்வதற்கும் இஸ்லாம் அதிக அளவு சிறப்பும் புனிதமும் அளித்துள்ளது. அப்படிப் போராடி, தம் இன்னுயிரையும்

தியாகம் செய்பவர்களுக்கு மறுமை வாழ்வில் பல உயர்ந்த அந்தஸ்துகள் உண்டு என அண்ணல் நபி (ஸல்) அவர்கள் நற்செய்தி அறிவித்துள்ளார்கள். இறைவழியில் புனிதப்போர் புரிவதை விடவும் பெரியதொரு வணக்கமோ நன்மையோ இல்லை என்பதை இதிலிருந்து புரிந்து கொள்ளலாம்.

ஜிஹாதுக்கு அளிக்கப்பட்ட இத்துணை உயர் சிறப்புதான் புனிதப் போரில் கலந்துகொள்ள வேண்டுமெனும் பேரார்வத்தை நபித் தோழர்களின் உள்ளத்தில் உந்தியெழச் செய்தது. ஆண்கள் மட்டுமல்ல, பெண்களும் எவ்வித அச்சமுமின்றி போர்க்களம் நோக்கி விரைந்தார்கள். தம்மால் இயன்ற ஏதேனும் பணியை நிறைவேற்றிட இஸ்லாத்திற்காக உழைத்திடத் துடித்தார்கள்!

சில பெண்கள் வீரர்களுக்குத் தண்ணீர் புகட்டினார்கள். வேறுசிலர் காயமுற்றோருக்கு சிகிச்சை அளித்தார்கள். இத்தகைய அனைத்துப் பணிகளிலும் ஈடுபட்ட நபித் தோழியர்களில் உம்மு ஸுலைம் (ரலி) அவர்கள் குறிப்பிடத்தக்கவர் ஆவார்கள்!

ஹிஜ்ரி 3ம் ஆண்டு நடந்த உஹதுப் போரில் அபூ தல்ஹா (ரலி) அவர்களுடன் உம்மு ஸுலைமும் கலந்து கொண்டார்கள். பெரிய முன்னேற்பாட்டுடன் தண்ணீர் கொண்டு சென்று காயம் அடைந்த வீரர்களுக்குப் புகட்டினார்கள். மிகக் கடுமையான அபாயம் நிறைந்த சூழ்நிலைகளிலும் மிகுந்த எச்சரிக்கையுடன் களத்தினுள் ஊடுருவிச் சென்று காயம் அடைந்தவர்களைக் கணடுபிடித்து தண்ணீர் புகட்டிக் கொண்டிருந்தார்கள்!

அவர்களின் மகனார் அனஸ் (ரலி) கூறுகின்றார்கள், ஷஷஉஹதுக் களத்தில் நான் ஆயிஷா (ரலி) அவர்களையும் உம்மு ஸுலைம் (ரலி) அவர்களையும் பார்த்தேன். இருவரும் தோல்ப் பைகளைத் தண்ணீரால் நிரப்பிக் கொண்டு வந்து காயமுற்றவர்களுக்குத் தண்ணீர் புகட்டினார்கள். தண்ணீர் தீர்ந்து விட்டால் வேகமாகச் சென்று மீண்டும் நிரப்பிக் கொண்டு வருவார்கள்.

ஹிஜ்ரி 6ம் ஆண்டு இறுதியில் நபி (ஸல்) அவர்கள் கைபர் யுத்தத்திற்காகப் புறப்பட்டார்கள். அப்போது உம்மு ஸுலைம் (ரலி) அவர்கள் பிற தோழியருடன் சேர்ந்து கொண்டு படை வீரர்களைப் பின் தொடர்ந்து சென்றார்கள். அது நபியவர்களுக்குத் தெரியவந்தபோது அதிருப்தி கொண்ட தோரணையில் கேட்டார்கள்.

நீங்கள் யாருடன் யாருடைய அனுமதியின் பேரில் போர் நோக்கிப் புறப்பட்டுள்ளீர்கள்?

அல்லாஹ்வின் தூதரே, எங்கள் தாய் தந்தையர் உங்களுக்காக அர்ப்பணம் ஆகட்டும்! நாங்கள் கம்பளி உடைகள் செய்கின்றோம். அதன் மூலம் அல்லாஹ்வின் பாதையில் உதவி புரிகின்றோம். காயம் அடைந்த வீரர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கான மருந்துகள் எங்களிடம் உள்ளன. மேலும் அம்பெறியும் வீரர்களுக்கு அம்புகளை எடுத்து எடுத்துக் கொடுப்போம். உணவும் தயாரித்துக் கொடுப்போம்.

இந்தப் பதிலைக் கேட்டதும் அப்பெண்களுக்கு அண்ணலார் (ஸல்) அனுமதி அளித்தார்கள்.

ஹிஜ்ரி 8ம் ஆண்டு மக்கா நகரத்தின் வெற்றிக்குச் சில தினங்களுக்குப் பிறகு ஹுனைன் போர் நடைபெற்றது. உம்மு ஸுலைம் (ரலி) அவர்கள் தம் கணவர் அபூ தல்ஹா (ரலி) அவர்களுடன் மிகுந்த உற்சாகத்துடன் இந்தப் போரில் கலந்து கொண்டார்கள்! இந்தப் போர் பனூ ஹவாஸின் கோத்திரத்தாருடன் நடைபெற்றது.

போரின் ஆரம்பத்தில் எதிர் அணியைச் சேர்ந்த அம்பெறியும் வீரர்கள் மறைவிடங்களில் இருந்து முஸ்லிம்களின் மீது அம்புமாரி பொழிந்தார்கள். எந்த அளவுக்கெனில் அம்புத் தாக்குதலை சமாளிக்க முடியாமல் முஸ்லிம்களின் அணி சிதறுண்டது!

அந்நேரத்தில் தம் இன்னுயிரையும் தியாகம் செய்யத் துணிந்துவிட்ட சில தோழர்கள்தான் அண்ணலாரின் அருகில் குன்றெென உறுதி குலைந்திடாமல் நின்றிருந்தார்கள்! அப்போது நபி (ஸல்) அவர்கள் உணர்ச்சி ததும்ப இவ்வாறு முழங்கினார்கள்:

நான் நபிதான், இது பொய்யல்ல! நான் அப்துல் முத்தலிப்பின் மகனாவேன்.

அண்ணலாரின் இந்தக் குரல் யார் யாரின் காதுகளில் விழுந்ததோ அவர்கள் அனைவரும் உடனே களத்திற்குத் திரும்பினார்கள். பிறகு நபியவர்களின் சைக்கினைப்படி அப்பாஸ் (ரலி) அவர்கள் உரத்த குரலில் முஸ்லிம்களை நோக்கிக் கூறினார்கள்: ஷஷஅன்ஸாரிகளே! முஹாஜிர்களே! நீங்கள் அனைவரும் நபியவர்களின் இடத்திற்கு முழு உற்சாகத்துடனும் உத்வேகத்துடனும் ஒன்று திரண்டு வாருங்கள். மேலும், இறைமறுப்பாளர்கள் தோல்வியுற்று ஓட அவர்கள் மீது முழு வலிமையுடன் தாக்குதல் நடத்துங்கள்!

இப்படியாக போர் மீண்டும் உக்கிரமாக நடந்து கொண்டிருந்தபோது அபூ தல்ஹா (ரலி) அவர்கள் அண்ணலாரின் வலப்பக்கமும் இடப்பக்கமும் நின்று பேராண்மையுடன் போரிட்டுக் கொண்டிருந்தார்கள். உம்மு ஸூலைம் (ரலி) அவர்கள் கையில் பட்டாக்கத்தியை வைத்துக் கொண்டு அண்ணலாரின் பாதுகாப்புக்காக நின்று கொண்டிருந்தார்கள்.

ஜிஹாத் பெண்களின் மீது கடமையா?

அன்னை உம்மு ஸூலைம் (ரலி) அவர்கள் இந்தப் போரில் ஆயுதம் ஏந்திய இந்நிகழ்ச்சியை அனஸ் (ரலி) அவர்கள் ஓர் அறிவிப்பில் விளக்கியுள்ளார்கள்!

ஹூனைன் யுத்தத்தின் போது உம்மு ஸூலைம் (ரலி) அவர்கள் பட்டாக்கத்தி ஒன்றை தம்முடன் வைத்திருந்தார்கள். அதனை அப்துல்லாஹ் (ரலி) அவர்கள் பார்த்துவிடவே, உடனே நபி (ஸல்) அவர்களிடம் வந்து, ஷஷஅல்லாஹ்வின் தூதரே, இதோ! உம்மு ஸூலைம் பட்டாக்கத்தியுடன்! என்று முறையிட்டார்கள்.

உம்மு ஸூலைமிடம் நபியவர்கள் கேட்டார்கள். ஷஷஇதென்ன பட்டாக்கத்தி?

அல்லாஹ்வின் தூதரே! இணைவைப்பவர்களில் எவனாவது என்னை நெருங்கி வந்தால் இதனைக் கொண்டு அவனது வயிற்றைக் கிழிப்பதற்காகத்தான் இதனைக் கொண்டு அவனது வயிற்றைக் கிழிப்பதற்காகத்தான் இதை எடுத்துள்ளேன், வேறொன்றும் இல்லை! என்று விளக்கினார்கள் உம்மு ஸூலைம் (ரலி) அவர்கள்.

இதனைக் கேட்டதும் நபி (ஸல்) அவர்கள் புன்னகை வெளிப்படுத்தினார்கள்.

உம்மு ஸூலைம் (ரலி) அவர்கள் தொடர்ந்து சொன்னார்கள். ஷஷஅல்லாஹ்வின் தூதரே, நாம் திரும்பிச் சென்றதும், (மக்கா வெற்றியின்போது) விடுதலை அளிக்கப்பட்ட இவர்களைக் கொன்று விடுங்கள்! ஏனெனில், உங்களை விட்டுவிட்டு தோற்றுப்போய் புறமுதுகிட்டு ஓடிவிட்டார்கள்.

உம்மு ஸூலைமே! இணைவைப்பாளர்களின் சூழ்ச்சியை அல்லாஹ் முறியடித்து விட்டான். விடுதலை செய்யப்பட்டவர்களான இவர்களின் உதவியை நமக்குத் தேவை இல்லாமலாக்கிவிட்டான் என்று நபியவர்கள் பதில் அளித்தார்கள். -முஸ்லிம்-

இந்த நிகழ்ச்சி, பல விஷயங்களை நமக்கு உணர்த்துகின்றது.

ஆண்களைப் போன்று ஆயுதமேந்தி, போரில் நேரடியாகக் குதிப்பதை இஸ்லாம் பெண்களின் மீது கடமையாக்கவில்லை. இருப்பினும் அதிலிருந்து அவர்களுக்கு விதிவிலக்கு அளித்து அவர்களின் கௌரவத்தைக் காத்தது!

ஏனெனில், போர் ஒரு கொடூரமான சூழ்நிலை. அதன் கேடுபாடுகளிலும் அபாயங்களிலும் பெண்கள் ஈடுபடாமல் இருப்பதே நல்லது. மேலும் பெண்கள் கள்த்தில் குதித்தால் எதிரிகளின் தாக்குதலுக்கு ஏற்ப, ஆயுதங்களைச் சுழற்றி ஓடியாடி இயங்க நேரிடலாம். சிலபோது மானபங்கத்துக்கும் ஆளாக வேண்டியதுவரும்.

ஆயினும் இஸ்லாத்தின் ஆரம்ப காலத்தில் இறைவழிப் போரில் நேரடியாகக் கலந்து கொண்டு அதன் அபரிமிதமான நன்மையைப் பெறுவதற்கு பெண்கள் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார்கள்.

ஒரு கட்டத்தில் நபி (ஸல்) அவர்களிடத்தில் வினவப்பட்டது. ஷஷஜிஹாத் - போர் புரிவது பெண்களின் மீது கடமையாக்கப்பட்டுள்ளதா?

அதற்கு நபி (ஸல்) அவர்கள், ஷஷஆம்! சண்டையில்லாத போர். ஹஜ்ஜூ ம் உம்ராவும் என்று பதிலளித்தார்கள்.

ஒரு சந்தர்பத்தில் வில்லையும் அம்பையும் ஏந்திக் கொண்டிருந்த ஒரு பெண்மணியைக் கண்ட நபி (ஸல்) அவர்கள், ஷஷஆண்களைப் போல் பாவித்து நடக்கும் பெண்களையும் பெண்களைப் போல் பாவித்த நடக்கும் ஆண்களையும் அல்லாஹ் சபித்துள்ளான் என்று கண்டித்துக் கூறினார்கள்.

இதன் அடிப்படையில்தான் உம்மு ஸூ லைம் (ரலி) அவர்கள் பட்டாக்கத்தியுடன் இருப்பதைக் கண்டதும் அவர்களின் அவர்களின் கணவர் அபூ தல்ஹா (ரலி) அவர்கள் அண்ணலாரிடம் சென்று முறையிட்டார்கள்.

இங்கு உம்மு ஸூ லைம் (ரலி) அவர்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் கட்டளைக்கு மாறு செய்துவிட்டார்களோ என்று யாரும் கருதிவிடக்கூடாது. ஆயுதம் எடுக்க வேண்டிய நிர்ப்பந்தமான சூழ்நிலை அவர்களுக்கு ஏற்பட்டிருந்தது. அதனை அவர்களே நபியவர்களிடம் விளக்கியுள்ளார்கள்.

அண்ணல் நபி (ஸல்) அவர்களைத் தனியே விட்டுவிட்டு முஸ்லிம் விரர்கள் தோற்றோடிய நேரத்தில் உம்மு ஸூ லைம் (ரலி) அவர்கள் நபியவர்களின் அருகிலேயே நின்று பாதுகாப்பு அளித்திட்ட சூழ்நிலையில் தற்காப்புக்கு என்ன செய்வது? ஆயுதம் ஏந்தத்தானே வேண்டும்?

இது நியாயமான காரணமாக இருந்ததால்தான் இதனைக் கேட்டதும் நபியவர்கள் புன்னகை புரியலானார்கள்!

இவ்வாறு உம்மு ஸூ லைம் (ரலி) அவர்கள் இறைத்தூதரின் மீதும் இஸ்லாத்தின் மீதும் வைத்திருந்த அளவிலா அன்பினாலும் அனல் தெறிக்கும் ஈமான் - இறைநம்பிக்கை, வீராவேசம், விழிப்புணர்வு ஆகியவற்றினாலும்தான் நபி (ஸல்) அவர்களிடத்தில் இப்படியொரு துணிச்சலான கோரிக்கையை வைத்தார்கள். அதாவது போரின் தொடக்கத்தில் எதிரிகளின் முன்னிலையில் புறங்காட்டி ஓடியவர்களை ஏன் கொல்லக் கூடாது? அவ்வாறு ஓடியதன் மூலம் நமது பேராண்மையைக் கேவலப்படுத்தி விட்டார்கள்! நமது அணியின் வலிமையை பலவீனப்படுத்தி விட்டார்கள்! என்று முறையிட்டார்கள்!

இறைவன் திருக்குர்ஆனில் கூறுகின்றான்: ஷஷஈமான் - நம்பிக்கை கொண்டவர்களே, நீங்கள் படையாகத் திரண்டு சென்று இறை நிராகரிப்பாளர்களுடன் போரிட நேர்ந்தால் அவர்களுக்கு புறமுதுகு காட்டி ஓடாதீர்கள்! அந்நாளில் யாரேனும் புரமுதுகு காட்டி ஓடினால் போர் தந்திரத்திற்காகவோ வேறொரு படையுடன் சேர்ந்து கொள்வதற்காகவோ செல்பவரைத் தவிர மற்றவர்கள் திண்ணமாக அல்லாஹ்வின் கோபத்திற்கு ஆளாகி விடுவர். மேலும் அவர்களுடைய புகலிடம் நரகமாகும். அது மோசமான இருப்பிடமாகும். (8:15,16)

மேலும் போரில் புறமுதுகு காட்டி ஓடுவதை அழிவில் ஆழ்த்தும் ஏழு பாவங்களில் ஒன்றாகக் குறிப்பிட்டு அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

போரில் புறமுதுகு காட்டி ஓடுவதைக் குறித்து அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் விடுத்துள்ள கடுமையான எச்சரிக்கைகளை முன்னிட்டுத்தான் அன்று களத்திலிருந்து ஓடியவர்களை நபியவர்களை எதிரிகளிடம் விட்டுவிட்டு தாங்கள் மட்டும் பிழைத்தால் போதும் என்று கருதிய வீரர்களை சும்மா விட்டு வைப்பதா என்று இந்த வீரத்திருமகளின் உள்ளம் குமுறியது!

## அண்ணலாரின் மீது அன்பு

இப்படி எல்லா வகையிலும் இஸ்லாத்திற்காகவும் இறைத்தூதருக்காகவும் தியாகங்கள் பல புரிந்து வந்த அன்னை உம்மு ஸுலைம (ரலி) மீது அண்ணலார் அவர்கள் அளவிலா மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தார்கள்!

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் ஹஜ்ஜு க் கடமையை நிறைவேற்றப் புறப்பட்டபோது உம்மு ஸுலைமிடம் கேட்டார்கள். ஷஷநீங்கள் ஹஜ்ஜு க்குப் புறப்படவில்லையா?

இறைத்தூதரே, என்னுடைய கணவரிடம் இரு வாகனங்கள் மட்டுமே உள்ளன. அவற்றின் மீது அவரும் அவருடைய மகனாரும் புறப்பட்டு விட்டார்கள். நானும் வருவதாயின் எனக்கு வாகனம் இல்லையே?

இதனைக் கேட்டதும் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் தம் மனைவியருடன் உம்மு ஸுலைம் (ரலி) அவர்களையும் ஒட்டகையில் ஏறச் செய்து தம்முடன் ஹஜ்ஜு க்கு அழைத்துச் சென்றார்கள்.

வழியில், நபியவர்களின் பணியாள் அன்ஜஷா (ரலி) அவர்கள் ஒட்டகங்களிகளை வேகமாக ஓட்டிச் செல்ல ஆரம்பித்தார்கள். ஒட்டகங்கள் தலைதெறிக்க ஓடலாயின. உடனே நபியவர்கள், ஷஅன்ஜாவே, ஒட்டகங்களின் மேலே கண்ணாடிகள் (பெண்கள்) இருக்கின்றன! மெதுவாக ஓட்டிச் செல் என்று கட்டளையிட்டார்கள்.

உம்மு ஸுலைம் (ரலி) அவர்கள் அண்ணலார் மீது எத்துணை உயர்வான, புனிதமான அன்பு வைத்திருந்தார்கள் தெரியுமா?

மினாவில்....

நபி (ஸல்) அவர்கள் ஹஜ்ஜை நிறைவேற்றி முடித்து தங்களின் தலைமுடியை மழித்தபோது உம்மு ஸுலைம் (ரலி) தம் கணவரிடம் கூறினார்கள்: ஷஷநாவிதனிடமிருந்து அந்த முடிகளை வாங்குங்கள். அபூ தல்ஹா (ரலி) அவ்வாறு செய்யவே, அண்ணலாரின் திருமுடிகளை ஒரு கண்ணாடிக் குப்பியில் அடைத்துப் பாதுகாப்பாய் வைத்துக் கொண்டார்கள் உம்மு ஸுலைம் (ரலி) அவர்கள்!

மற்றொரு நிகழ்ச்சி....

நபி (ஸல்) அவர்கள் உம்மு ஸுலைம் (ரலி) அவர்களின் வீட்டில் இருக்கும்போது தொழுகை நேரம் வந்து விட்டால் அங்கேயே கட்டிலின் மீது தொழுகையை நிறைவேற்றுவார்கள். ஒருமுறை உம்மு ஸுலைமின் வீட்டுக்குச் சென்றிருந்தபோது நபியவர்களுக்குத் தாகம் ஏற்பட்டது. அங்கிருந்த தண்ணீர்ப் பையில் அப்படியே தம் திருவாயினை வைத்துத் தண்ணீர் அருந்தினார்கள்! இதனைக் கண்ணுற்ற உம்மு ஸுலைம் (ரலி) உடனே எழுந்து சென்று தோல்பையின் வாய்ப் பகுதியை வெட்டி வைத்துக் கொண்டார்கள். நபியவர்களின் புனித உதடுகள் அதனை முத்திமிட்டன என்பதற்காக!

இவ்வாறு அண்ணல் நபியவர்களின் அதிக அன்பையும் நெருக்கத்தையும் பெற்ற – அவர்களின் தூரத்து உறவு சிற்றன்னையான உம்மு ஸூலைம் (ரலி) அவர்கள் அண்ணலாரிடமிருந்து தீன் சம்பந்தமான நுணுக்கங்களையும் ஏராளம் கற்றுக் கொண்டார்கள்! பிற்காலத்தில்.... நபித் தோழர்கள் இருவரிடையே ஏதேனும் கருத்து வேறுபாடு ஏற்பட்டால், உம்மு ஸூலைம் (ரலி) அவர்களிடம் வந்து அதுபற்றி விளக்கம் பெறுவது வழக்கமாய் இருந்தது! இத்தகைய அறிவுக்கூர்மையான தீனைக் கற்றுணர்ந்த பெண்மணியாகத் திகழ்ந்தார்கள் என்பது இதிலிருந்து புலனாகிறது!

அனஸ் (ரலி), அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரலி), ஜைத் இப்னு ஸாபித் (ரலி) மற்றும் அமர் இப்னு ஆஸிம் (ரலி) ஆகியோர் அன்னை உம்மு ஸூலைம் (ரலி) அவர்களிடமிருந்து சில நபிமொழிகளை அறிவித்துள்ளார்கள். அன்னை உம்மு ஸூலைம் மீது அல்லாஹ் தன் பேரருளைப் பொழிவானாக! அவர்களைப் போல் அல்லாஹ் மீதும் அவனுடைய திருத்தூதர் மீதும் இஸ்லாத்தின் மீதும் பற்றுக் கொண்டு உண்மை முஸ்லிம்களாய் வாழும் பாக்கியத்தை அல்லாஹ் நம் அனைவருக்கும் வழங்குவானாக!

## அஸ்மா பின்த் உமைஸ் (ரலி)

அஸ்மா பின்த் உமைஸ் (ரலி) அவர்கள் மக்கமா நகரின் கஸ்அம் கோத்திரத்தைச் சார்ந்த கண்ணியமிக்க பெண்மணியாவார். நபித்துவத்தின் மிக ஆரம்ப காலத்திலேயே இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ளும் பாக்கியத்தைப் பெற்ற பெண்மணிகளில் குறிப்பிடத்தக்க ஒருவராய் விளங்குகின்றார். அன்று அஸ்மா (ரலி) அவர்களைத் தவிர மொத்தம் 30 பேர் மட்டுமே இஸ்லாத்தில் இணைந்திருந்தார்கள். இந்த வகையில் 'அஸ்ஸாபிகூனல் அவ்வலூன்' சத்திய அழைப்பிற்கு முதன் முதலில் பதிலளித்தவர்கள் எனும் குழுவில் அஸ்மா (ரலி) அவர்களுக்குத் தனிச் சிறப்பு உண்டு.

இதுதவிர இஸ்லாமிய வரலாற்றில் இன்னொரு புகழையும் அவர்கள் பெற்றுள்ளார்கள். அதாவது இஸ்லாத்திற்கு முக்கியத் தூண்களாக விளங்கிய நபியவர்களின் பிரத்தியேக அன்பிற்கும் பாசத்திற்கும் உரிய நபித்தோழர்கள் மூவருக்கு – ஒருவர் இறந்தபின் மற்றொருவருக்கு எனும் முறையில் - அஸ்மா (ரலி) அவர்கள் வாழ்க்கைத் துணைவியாய் இருந்தார்கள். முதலில் நபியவர்களின் பெரிய தந்தையாகிய அபூ தாலிபின் மகனார் ஜஅஃபர் (ரலி) அவர்களைக் கணவராகப் பெற்றார்கள். அவர் மரணமான பிறகு அபூபக்கர் ஸித்தீக் (ரலி) அவர்களுக்கும். அவர்களும் மரணம் அடைந்த பிறகு மூன்றாவதாக அலீ (ரலி) அவர்களுக்கும் மணமுடிக்கப்பட்டார்கள்.

### எந்த ஹிஜ்ரத் சிறந்தது?

இஸ்லாமிய வரலாற்றில் இரண்டு ஹிஜ்ரத்கள் நடைபெற்றுள்ளன. ஒன்று அபிசீனியா (எதியோப்பியா) ஹிஜ்ரத்! இரண்டு மதீனா ஹிஜ்ரத்.

இவற்றில் இரண்டாவது ஹிஜ்ரத்தான் உலகில் புகழ்பெற்றுத் திகழ்கின்றது. ஆயினும் சத்திய அழைப்பின் வரலாற்றில் இரண்டும் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளன. இரண்டில் எதுவும் தியாகத்தில் சளைத்ததல்ல. இந்த இரு ஹிஜ்ரத்களின் மூலமும் வரலாற்றில் தனியொரு இடத்தைத் தமதாக்கிக் கொண்டார்கள் அஸ்மா பின்த் உமைஸ் (ரலி) அவர்கள்!

தாருல் அர்க்கம் என்று பிரபலமடைந்துள்ள அர்க்கம் (ரலி) வீட்டில் இரகசியமாய்ப் பிரச்சாரம் செய்து வந்த அண்ணல் நபி (ஸல்) அவர்கள் நபித்துவத்தின் நான்காம் ஆண்டில் தம் அழைப்புப் பணியை பகிரங்கப்படுத்தினார்கள். அதனைக் கண்ட எதிரிகள் வெறி பிடித்தவர்களாய் வெகுண்டெழுந்தார்கள். அவர்கள் கோபாவேசத்தில் வரம்பு மீறி இழைத்த கொடுமைகளுக்கு இலக்காகிய சாமானிய, ஏழை முஸ்லிம்கள் பொறுமை இழந்தனர். அப்போதுதான் அபிசீனியாவுக்கு ஹிஜ்ரத் செய்ய அந்த முஸ்லிம்களுக்கு அண்ணலாரின் அனுமதி கிடைத்தது.

நபித்துவத்தின் ஐந்தாம் ஆண்டிலும் ஆறாம் ஆண்டின் தொடக்கத்திலும் மொத்தம் நூற்றுக்கும் அதிகமான முஸ்லிம்கள் அபிசீனியா நாட்டில் தஞ்சம் புகுந்தார்கள். அதில் அஸ்மா பின்த் உமைஸூ ம் அவரின் கணவர் ஜஅஃபர் (ரலி) அவர்களும் இருந்தனர்.

இப்படி அபிசீனியாவுக்குச் சென்ற முஸ்லிம்கள் ஏறத்தாழ 14 ஆண்டுகள் வரை ‘அந்நியர்களாய்’ அங்கு வாழ்ந்து வந்தார்கள். இந்தக் காலகட்டத்தில் அண்ணல் நபி (ஸல்) அவர்களும் பிற முஸ்லிம்களும் மதீனா நோக்கி ஹிஜ்ரத் மேற்கொண்டார்கள். அங்கு சென்ற முஸ்லிம்கள் பல யுத்தங்களைச் சந்தித்தார்கள். பத்று, உஹது மற்றும் அகழ்போர்கள் நடைபெற்றன. ஹிஜ்ரி 7ம் ஆண்டு முஹர்ரம் மாதத்தில் கைபர் யுத்தமும் நடந்து முடிந்தது.

இந்த நேரத்தில் அபிசீனியாவில் இருந்த முஸ்லிம்கள் அனைவரும் மதீனா திரும்பினார்கள். கைபர் போரில் வெற்றியடைந்ததால் ஏற்கனவே மகிழ்ச்சியுடன் இருந்த முஸ்லிம்களுக்கு தங்கள் சகோதரர்கள் அபிசீனியாவிலிருந்து மதீனா வந்து சேர்ந்ததால் மேலும் அளவிலா ஆனந்தம் அடைந்தார்கள். அண்ணல் நபி (ஸல்) அவர்கள் ஜஅஃபர் (ரலி) அவர்களை ஆரத்தழுவி உச்சி முகர்ந்து கூறினார்கள்: கைபர் வெற்றியை எண்ணி நான் மகிழ்ச்சி அடைவதா அல்லது ஜஅஃபரின் வருகையை எண்ணி மகிழ்ச்சி அடைவதா என்று தெரியவில்லை!

இந்தச் சந்தர்ப்பத்தில்தான் இரு ஹிஜ்ரத்களில் எது உயர்ந்தது? எதனை மேற்கொண்டவர்கள் சிறப்பிற்குரியவர்கள் என்ற பிரச்சனை எழுந்தது. தாங்கள் மேற்கொண்ட ஹிஜ்ரத்தான் சிறந்தது, தாங்கள்தான் அண்ணல் நபியின் அதிக அன்பிற்கு உரித்தானவர்கள் என்று இருசாராரும் கருதினார்கள்!

அப்போது ஒருநாள்!

உமர் (ரலி) அவர்கள் தம்முடைய மகள் ஹஃப்ஸாவைச் சந்திப்பதற்காக அவர்களின் வீட்டுக்கு வந்திருந்தார்கள். அங்கே ஒரு அந்நியப்பெண்மணி ஹஃப்ஸா (ரலி) அவர்களுடன் பேசிக்கொண்டிருந்தார்.

உமர் (ரலி): இந்தப் பெண்மணி யார்?

ஹஃப்ஸா (ரலி): இவர் ஜஅஃபர் இப்னு அபூ தாலிப் (ரலி) அவர்களின் மனைவி அஸ்மா பின்த் உமைஸ் ஆவார்.”

உமர் (ரலி): ஓ! கடல் மார்க்கமாக அபிசீனியாவுக்கு ஹிஜ்ரத் சென்றிருந்தார்களே அவர்களா?

அஸ்மா (ரலி): ஆம்! அவரேதான்!

உமர் (ரலி): (மகிழ்ச்சித் தோரணையில்) நாங்கள்தான் ஹிஜ்ரத்தில் உங்களைவிட முதன்மை அந்தஸ்தில் உள்ளவர்கள்! எனவே உங்களை விட நாங்களே இறைத்தூதரின் அன்புக்கு உரித்தானவர்களாவோம்.

இதனைக் கேட்டதும் அஸ்மா (ரலி) அவர்களுக்குக் கோபம் வந்து விட்டது. உடனே சொன்னார்கள்:- நீங்கள் சொல்வது சரிதான்! ஆனால் உண்மை நிலை என்னவெனில் நீங்களெல்லாம்

நபியவர்களுடன் இருந்தீர்கள். நபியவர்கள் பசித்தவர்களுக்கு உணவு அளித்துக் கொண்டும் அறியாதவர்களுக்குக் கற்றுக் கொடுத்துக் கொண்டும் இருந்தார்கள். ஆனால் எங்களின் நிலை என்ன தெரியுமா? மிகவும் தொலைவான நாட்டில் தஞ்சம் புகுந்து, மக்கள் எல்லாம் எங்களை வெறுப்புடனும் கோபத்துடனும் பார்த்துக் கொண்டிருந்த சூழ்நிலையில், அங்கே 'அந்நியர்களாய்' நாங்கள் வாழ்ந்து கொண்டிருந்தோம்! அங்கும்கூட எங்களுக்குத் துன்பம் இழைக்கப்பட்டு, அஞ்சி அஞ்சியே நாட்களைக் கழித்துக் கொண்டிருந்தோம்! இவை அனைத்தையும் அல்லாஹ் மற்றும் அவனுடைய தூதரின் திருப்திக்காவே தாங்கினோம். இறைவன் மீது சத்தியமாக! தாங்கள் கூறியதை நபியவர்களிடம் சொல்லாதவரை நான் உணவு உண்ணமாட்டேன், தண்ணீர் அருந்தவும் மாட்டேன். இறைவன் மீது சத்தியமாக! எந்தப் பொய்யும் சொல்லி தவறான போக்கை மேற்கொள்ள மாட்டேன். இங்கு நடைபெற்றதில் எதையும் கூட்டி சொல்ல மாட்டேன்.

இவ்வாறு வாக்குவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போதே நபி (ஸல்) அவர்களும் அங்கு வந்துவிட்டார்கள். அவர்களிடம் அஸ்மா (ரலி) அவர்கள் முறையிட்டார்கள். இறைத்தூதரே, என் தாயும் தந்தையும் உங்களுக்கு அர்பணமாகட்டும்! உமர் (ரலி) இவ்வாறு கூறுகின்றார்கள்...

நபியவர்கள்: அதற்கு நீங்கள் என்ன பதில் சொன்னீர்கள்?'' என்று கேட்டார்கள். அஸ்மா (ரலி) அவர்கள் நான் இன்னின்னவாறு கூறினேன்...'' என்றார்கள்.

நபியவர்கள் கூறினார்கள்: அவர்கள் உங்களைவிட அதிகமாக என் அன்பிற்குரியவர்கள் அல்லர்! உமரும் அவரைச் சார்ந்தவர்களும் ஒரு ஹிஜ்ரத்தான் செய்தார்கள். நீங்கள் இரண்டு ஹிஜ்ரத் செய்துள்ளீர்கள். (ஒன்று மக்காவிலிருந்து எதியோப்பியாவிற்கு, மற்றொன்று அங்கிருந்து மதீனாவுக்கு)

நபியவர்கள் இவ்வாறு கூறியதும் அஸ்மா (ரலி) அவர்கள் மகிழ்ச்சியில் மெய்மறந்து அல்லாஹு அக்பர்'' என்றும் லாஇலாஹா இல்லல்லாஹு '' என்றும் முழங்கினார்கள்.

நடந்த விவாதம் பற்றிய செய்தி நகருக்குள் பரவியபோது எத்தியோப்பியாவுக்கு ஹிஜ்ரத் சென்றவர்கள் கூட்டம் கூட்டமாக அஸ்மா (ரலி) அவர்களிடம் வந்து நடந்த நிகழ்ச்சியின் விவரத்தைக் கேட்டு மகிழ்ச்சிக் கடலில் மூழ்கினார்கள்.

அதுபற்றி அஸ்மா (ரலி) கூறுகின்றார்கள்: அபிசீனிய முஹாஜிர்களுக்கு நபியவர்கள் கூறியதைவிடவும் மகிழ்ச்சி நிறைந்த திருப்திகரமான ஒன்று உலகில் வேறெதுவும் இருக்க முடியாது!

### கணவரின் மரணச்செய்தி கேட்டு...

அஸ்மா (ரலி) அவர்களும் ஜஅஃபர் (ரலி) அவர்களும் மதீனா வந்து ஒரு வருடம் கூட கழிந்திடவில்லை. அதற்குள் வேறொரு சோதனை வந்துவிட்டது! ஹிஜ்ரி 8 ஆம் ஆண்டு அண்ணல் நபி (ஸல்) அவர்கள் புஸ்ராவின் மன்னருக்கு ஒரு கடிதம் எழுதி அதனை ஹாரிஸ் இப்னு உமைருல் அஸ்தி (ரலி) எனும் தோழர் மூலம் கொடுத்தனுப்பினார்கள். அண்ணலாரின் தூதராகப் புறப்பட்ட ஹாரிஸ் இப்னு உமைர் (ரலி) அவர்கள் வழியில் முஃதா எனுமிடத்தில் தங்கினார்கள். அப்பொழுது முஃதாவின் கவர்னர் ஷுர்ஹபில் என்பவன், ஹாரிஸ் இப்னு உமைர் (ரலி) அவர்களைக் கொலை செய்துவிட்டான்.

இச்செய்தி நபி (ஸல்) அவர்களுக்குக் கிடைத்ததும் பெரிதும் வேதனையும் துக்கமும் அடைந்தார்கள். முஃதா ஆளுநருக்கு தக்க பதிலடி தருவதற்காக நபியவர்கள் மூவாயிரம் போர் வீரர்கள் கொண்ட ஒரு படையை முஃதா நோக்கி அனுப்பி வைத்தார்கள். அப்படையில் ஜஅஃபர் (ரலி) அவர்களும் இருந்தர்கள். ஜைத் பின் ஹாரிஸ் (ரலி) அவர்கள் இப்படைக்குத் தலைவராக நியமிக்கப்பட்டார்கள். படையை அனுப்பும்போது நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இப்போரில் ஜைத்

ஷஹீதாகி விட்டால் இரண்டாவது தளபதியாக ஜஅஃபர் வரவேண்டும். ஜஅஃபரும் ஷஹீதானால் அந்த இடத்தில் அப்துல்லாஹ் இப்னு ரவாஹா இருப்பார்!

முஃதா போரில் முதலில ஜைத் (ரலி) தீரத்தோடு போரிட்டு ஷஹீதானபோது இஸ்லாமியக் கொடியை ஜஅஃபர் (ரலி) அவர்கள் தாங்கினார்கள். அவர்கள் காட்டிய வீரசாகசங்களைப் பார்த்து 'வீரமே' பெருமிதமுற்றது! அந்த சத்திய வீரர் ஏறத்தாழ ஒன்பது வெட்டுக்களை தன் உடம்பில் தாங்கிக் கொண்டார்கள். அவற்றில் எதுவும் அவர்களின் முதுகில் விழவில்லை! ஒரு கை துண்டிக்கப்பட்டபோது மற்றொரு கரத்தால் இஸ்லாமியக் கொடியைத் தாங்கினார்கள். அந்தக் கரமும் வெட்டப்பட்டபோது தம் பற்களால் கொடியைக் கவ்விப் பிடித்தார்கள்! எதிரிகள் எல்லாத் திசைகளிலும் அந்த வீரரைச் சூழ்ந்து விட்டிருந்தார்கள். வாட்களும், அம்புகளும் மழையாய்ப் பொழிந்து கொண்டிருந்தன. இறுதியில் நபியவர்களுக்கு வலக்கரமாய் விளங்கிய, சத்திய மார்க்கத்தின் உண்மை வீரர் ஷஹீதாகி விட்டார்!....

போர் நடந்து முடிந்த பிறகு நபி (ஸல்) அவர்கள் அஸ்மா (ரலி) அவர்களின் இல்லத்திற்குச் சென்றார்கள். அப்போது அஸ்மா (ரலி) அவர்கள் மாவு அரைத்து முடித்து விட்டு பிள்ளைகளைக் குளிப்பாட்டி ஆடை அணிவித்துக் கொண்டிருந்தார்கள். காருண்ய நபி (ஸல்) அவர்கள் கண்களில் நீர்மல்க, ஜஅஃபரின் குழந்தைகளை என்னிடம் அழைத்து வாருங்கள்'' என்று கூறினார்கள்.

அஸ்மா (ரலி) குழந்தைகளை நபியவர்களிடம் அழைத்து வந்தார்கள். நபியவர்கள் மிகவும் கவலையுடனும், துக்கத்துடனும் குழந்தைகளை நெஞ்சோடு அணைத்துக் கொண்டு நெற்றியை முகர்ந்தார்கள். நபி (ஸல்) அவர்களின் கண்கலங்கிய நிலையைக் கண்டு அஸ்மா (ரலி), இறைத்தூதரே, என் தாயும் தந்தையும் தங்களுக்கு அர்ப்பணமாகட்டும்! தாங்கள் ஏன் கவலையடைந்துள்ளீர்கள்? ஜஅஃபர் அவர்களைப் பற்றி ஏதேனும் செய்தி வந்ததா?'' என்று கேட்டார்கள்.

நபியவர்கள், ஆம்! அவர் ஷஹீதாகி விட்டார்'' என்றார்கள். ஜஅஃபர் (ரலி) கொல்லப்பட்டார்கள் என்ற செய்தியைக் கேட்டதுமே அஸ்மா (ரலி)க்குத் துக்கம் தொண்டையை அடைத்தது. அய்யகோ!'' என்று கதறி அழ ஆரம்பித்துவிட்டார்கள். அவர்கள் அழுது புலம்பவதைக் கேட்டு அக்கம் பக்கத்திலுள்ள பெண்கள் எல்லாம் கூடிவிட்டார்கள். நபியவர்கள் திரும்பிச் சென்று தம் மனைவியர்களுக்குக் கட்டளையிட்டார்கள்: ஜஅஃபரின் மனைவியை கவனித்துக் கொள்ளுங்கள். அவர்கள் தன்னுணர்வு இழந்திருக்கின்றார்கள். அவர்கள் நெஞ்சில் அடிக்காமல் கூச்சலிடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.''

ஜஅஃபர் (ரலி) அவர்களின் பிரிவினால் அண்ணலாரின் மகளார் ஃபாத்திமா (ரலி) அவர்களும் கடும் துக்கத்திற்காளாகி, என் சிறிய தந்தையே! சிறிய தந்தையே!'' என்று அழுது புலம்பிக் கொண்டு நபியவர்களின் சமூகம் வந்தார்கள். அதைக் கண்டு கண்கலங்கியவாறு நபியவர்கள் கூறினார்கள்: அழுபவர்கள், ஜஅஃபர் போன்றவர்களுக்காக அழத்தான் வேண்டும்!

இதன் பிறகு நபி (ஸல்) அவர்கள் தம் மகளாரிடம் கூறினார்கள். ஃபாத்திமாவே! ஜஅஃபரின் குழந்தைகளுக்காக உணவு தயார் செய். ஏனெனில், அஸ்மா அவர்கள் இன்று கடுமையான கவலையில் இருக்கின்றார்கள்.''

மூன்றாம் நாள் அன்றும் நபி (ஸல்) அவர்கள் அஸ்மா (ரலி) அவர்களின் வீடு சென்று ஆறுதல் கூறினார்கள்.

## அபூபக்கர் (ரலி) அவர்களுடன் மறுமணம்

ஜஅ∴பர் (ரலி) அவர்கள் ஷஹீதாகி ஆறு மாதங்களுக்குப் பிறகு அண்ணல் நபி (ஸல்) அவர்கள், தம்முடைய அன்பிற்குரிய தோழர் அபூபக்கர் (ரலி) அவர்களுக்கும் அஸ்மா பின்த் உமைஸ் அவர்களுக்கும் மணம் முடித்து வைத்தார்கள். இரண்டு வருடங்களுக்குப் பிறகு அத்தம்பதிகளுக்கு முஹம்மத் இப்னு அபூபக்கர் பிறந்தார்கள். இந்தப் பேறுகாலம் ஹஜ்ஜதுல் விதாவில் நபியவர்களுடனும் அன்புத் தோழர்களுடனும் அஸ்மா (ரலி) ஹஜ் செய்வதற்காக மக்கா சென்றிருந்தபோது 'துல் ஹூ லை∴பா' எனும் இடத்தில் ஏற்பட்டது. அப்போது அஸ்மா (ரலி) அவர்கள் நபியவர்களிடம் இறைத்தூதரே! இப்போது நான் என்ன செய்வது?'' என்று கேட்டார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள் குளித்துவிட்டு இஹ்ராம் கட்டிக் கொள்ளுங்கள்'' என்றார்கள்.

## நபியவர்கள் மரணம் அடைந்தபோது...!

ஹிஜ்ரி 11 ஆம் ஆண்டு நபி (ஸல்) அவர்கள் மரணம் அடைந்தார்கள். அப்போது அஸ்மா (ரலி) அவர்கள் அளவுகடந்த வேதனையில் ஆழ்ந்தார்கள். அவர்களை விடவும் அதிகமான துக்கத்தில் ∴பாத்திமா (ரலி) மூழ்கினார்கள். அஸ்மா (ரலி) அவர்கள் மனத்தைத் தேற்றிக் கொண்டு ∴பாத்திமா (ரலி) அவர்களுக்கு ஆறுதல் கூறி அவர்களின் மனத்தைத் தேற்றுவதில் அதிக நேரங்களைக் கழித்தார்கள்.

பிறகு சிறிது காலம்கூட கழியவில்லை. கண்மணி ∴பாத்திமா (ரலி) அவர்களுக்கும் மரணவேளை வந்துவிட்டது. 'உஸ்துல் காபா' எனும் நூலில் அல்லாமா இப்னு அஸீர் (ரஹ்) எழுதுகின்றார்கள். ∴பாத்திமா (ரலி) அவர்கள் தாம் மரணம் அடைவதற்கு கொஞ்சம் முன்னால் அஸ்மாவை அழைத்துக் கூறினார்கள்: நான் மரணம் அடைந்த பின் என் உடலை எடுத்துச் செல்லும் போதும், அடக்கம் செய்யும் போதும் என் உடலை மூடிக் காப்பதில் கவனமாக இருக்க வேண்டும். தாங்களும் என் கணவரும் தவிர வேறு யாரும் என்னைக் குளிப்பாட்டுவதில் ஈடுபட வேண்டும்.''

அஸ்மா (ரலி) கூறினார்கள்: இறைத் தூதரின் மகளே! நான் அபிசீனியாவில் பார்த்துள்ளேன். மரக்கிளைகளை இணைத்து ஒரு பெட்டி மாதிரி செய்து இறந்தவரின் உடலை அதில் வைத்து மேலே துணி போட்டு மறைத்து எடுத்துச் செல்கின்றார்கள்'' இவ்வாறு கூறியதோடு பேரீச்ச மரத்தின் கிளைகள் சிலவற்றைக் கொண்டுவரச் செய்து அவற்றை இணைத்து கட்டி அதன் மீது துணிபோட்டு மறைத்து ∴பாத்திமா (ரலி) அவர்களுக்கு விளக்கிக் காட்டினார்கள். அந்த முறை அவர்களுக்கு மிகவும் பிடித்துவிட்டது. அவர்கள் இறந்த பிறகு அவர்களின் உடல் அதே முறையிலேயே எடுத்துச் செல்லப்பட்டு நல்லடக்கம் செய்யப்பட்டது.

ஹிஜ்ரி 13-ம் ஆண்டு அபூபக்கர் ஸித்தீக் (ரலி) அவர்கள் மரணப்படுக்கையில் இருந்தபோது, நான் இறந்ததும் அஸ்மாதான் என் உடலைக் குளிப்பாட்ட வேண்டும்'' என்று ஆணையிட்டடார்கள். அவ்விதமே இறந்துவிட்ட தம் கணவரின் உடலை அஸ்மா (ரலி)தான் குளிப்பாட்டினார்கள்.

## அலீ (ரலி) அவர்களின் மனைவியாக...

அபூபக்கர் (ரலி) அவர்கள் இறந்த பிறகு அஸ்மா (ரலி) அவர்கள் அலீ (ரலி) அவர்களுக்கு மணமுடிக்கப்பட்டார்கள். அப்போது முஹம்மத் இப்னு அபூபக்கருக்கு கிட்டத்தட்ட மூன்று வயது குழந்தை முஹம்மதும் தன் தாயுடன் இருந்தார்கள். அலீ (ரலி) அவர்களின் கண்காணிப்பிலேயே வளர்ந்தர்கள்.

ஒருநாள் ஒரு சுவையான நிகழ்ச்சி நடந்தது. ஜஅஃபர் (ரலி) அவர்களின் மகனார் முஹம்மதும், அபூபக்கர் (ரலி) அவர்களின் சிறப்பிற்கும் கண்ணியத்திற்கும் உரியவர் என்பதில் சண்டையிட்டுக் கொண்டனர்.

இரு மகன்களின் சுவாரசியமான விவாதத்தைக் கேட்ட அலீ (ரலி) அவர்கள் அஸ்மாவிடம் இந்த விவகாரத்திற்கு நீங்கள் தீர்ப்பளியுங்கள்'' என்று கூறினார்கள்.

அஸ்மா (ரலி) கூறினார்கள்: இளைஞரான ஜஅஃபர் (ரலி) அவர்களை நான் அரபு தேசத்திலேயே மிகச்சிறந்த ஒழுக்கமுடையவராய்க் கண்டேன். வயதானவர்களில் அபூபக்கரை விட நல்லவரை நான் கண்டதில்லை.''

உடனே, அலீ (ரலி) அவர்கள் புன்முறுவலுடன் நீங்கள் எனக்கென்று எதையும் விட்டு வைக்கவில்லையே?'' என்று கூறினார்கள்.

அஸ்மா (ரலி) அவர்களுக்கு அலீயின் மூலம் யஹ்யா என்று ஒரு மகன் பிறந்தார்...!

ஹிஜ்ரி 38 ஆம் ஆண்டில் அஸ்மா (ரலி) அவர்களின் அன்பு மகனார் முஹம்மத் இப்னு அபூபக்கர் (ரலி) எகிப்தில் எதிரிகளால் கொல்லப்பட்டார்கள். எதிரிகள் அவர்களை கழுதைத் தோலில் பொதிந்து எரித்து விட்டார்கள் எனும் செய்தியை அஸ்மா (ரலி) கேள்விப்பட்டபோது பதறியே போய்விட்டார்கள்! எனினும் பொறுமையை மேற்கொண்டு மனத்தைத் தேற்றினார்கள். பிறகு தொழுகை விரிப்பை விரித்து வணக்கத்தில் ஈடுபட்டார்கள்.

ஹிஜ்ரி 40-ல் அலீ (ரலி) அவர்கள் ஒரு கயவனால் கொலையுண்டு ஷஹீதானார்கள். பிறகு கொஞ்ச நாட்களிலேயே அஸ்மா (ரலி) அவர்களும் இறைவனின் அழைப்பை ஏற்று இவ்வுலகைத் துறந்தார்கள். அவர்கள் மரணமாகும்போது ஜஅஃபர் (ரலி) மூலம் பிறந்த அப்துல்லாஹ், முஹம்மத மற்றும் அவ்ன் ஆகிய மூவரையும், அலீ (ரலி) மூலம் பிறந்த யஹ்யாவையும் விட்டுச் சென்றார்கள். பிற்காலத்தில் அப்துல்லாஹ் இப்னு ஜஅஃபர் (ரலி) கொடைத் தன்மையாலும் தயாள குண்த்தாலும் வரலாற்றில் பெரும் புகழை ஈட்டினார்கள்.

## அண்ணலாரின் மீது பாசம்

அஸ்மா பின்த் உமைஸ் (ரலி) அவர்கள் கண்ணியத்திற்குரிய பெரும் நபித் தோழியருள் ஒருவராய் மதிக்கப் படுகின்றார்கள். அவர்கள் குணத்தின் குன்றாகவும், அறிவுச் சிகரமாகவும் விளங்கினார்கள். அவர்களிடம் அமையப் பெற்ற இத்தகைய சிறப்புகளைக் கண்டு தான் பனூ ஹாஷிம் குலத்தின் தலைவர் அபூதாலிப், அஸ்மாவைத் தம் மருமகளாய்த் தேர்வு செய்து தம் மகன் ஜாபர் (ரலி) அவர்களுக்கு மணமுடித்து வைத்தார்.

அஸ்மாவுக்கு அண்ணல் நபி ( ஸல் ) அவர்கள் மீது அளவு கடந்த பற்றுதல் இருந்தது. அஸ்மா (ரலி) மீதும் அவரின் குழந்தைகள் மீதும் நபியவர்களும் அதிக அன்பைப் பொழிந்து கொண்டிருந்தார்கள்.

ஷஅல் முஸ்தக் ரக் நூலில் இமாம் ஹாகிம் (ரஹ்) கூறியுள்ளார்கள்: ஒரு முறை அஸ்மாவின் மகன் அப்துல்லாஹ் இப்னு ஜஅஃபர் (ரலி) வீதியில் குழந்தைகளுடன் விளையாடிக் கொண்டிருந்த போது அந்த வழியாக நபியவர்கள் வந்தார்கள். சிறுவர் அப்துல்லாவைக் கண்டதும் அவரைத் தூக்கி நபியவர்கள் தம் வாகனத்தில் அமர்த்திக் கொண்டார்கள்.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மரணப் படுக்கையில் இருந்த போது நடந்த நிகழ்ச்சியை இமாம் புகாரியும், இப்னு ஸஃதும் எழுதியுள்ளார்கள்: ஷநபி (ஸல்) அவர்கள் மரணமாவதற்கு ஒரு தினம் முன்னர் அவர்களுக்கு மார்பில் ஒரு வித வலி ஏற்பட்டது. உம்மு சல்மா (ரலி) அவர்களும் அஸ்மா (ரலி) அவர்களும் இன்ன காரணத்தால் தான் அந்த வலி ஏற்பட்டிருக்க வேண்டும் என்று அறிந்து கொண்டு அதற்கான மருந்தை நபியவர்களுக்கு ஊட்ட விரும்பினார்கள். ஆனால் நபியவர்கள் மறுத்து விட்டார்கள். அதற்குள் நபியவர்களுக்கு மயக்கம் வந்து விட்டது. உடனே அவ்விருவரும் நபியவர்களின் புனித வாயைத் திறந்து அம்மருந்தைப் புகட்டினார்கள். கொஞ்ச நேரத்தில் அவர்களுக்கு மயக்கம் தெளிந்தது. அப்போது நபியவர்கள், இந்த மருந்தை அஸ்மா தான் தயார் செய்திருப்பார்கள். அவர்கள் அபிசீனியாவிலிருந்து இதனை அறிந்திருக்க வேண்டும், என்று கூறினார்கள்.

அன்னை அஸ்மா மூலம் 60 நபிமொழிகள் அறிவிக்கப் பட்டுள்ளன. அவற்றின் அறிவிப்பாளர்களில் உமர், அப்துல்லாஹ், இப்னு அப்பாஸ், அபூ மூஸா (ரலி அன்ஹு ம்) போன்ற கண்ணியமிகு நபித் தோழர்களும் புகழ் பெற்ற தாபிஈன்களும் உள்ளனர்.

## உம்முல் ஃபஜ்ல் (ரலி)

ஹிஜ்ரி 2 ஆவது ஆண்டு ரமலான் மாதம், நீதிக்கும் அநீதிக்கும் இடையே நடைபெற்ற பத்றுப் போரில் குறைஷிகள் கொல்லப்பட்டும் - சிறைபிடிக்கப் பட்டும் மிகவும் கேவலமான முறையில் தோல்வியைத் தழுவியிருந்த நேரம், தோல்விச் செய்தி மக்காவுக்குக் கிடைத்தபோது மக்கா நகரமே கடும் துக்கத்தில் மூழ்கியது.

முஸ்லிம்களின் கடும் பகைவனாகிய அபூலஹபின் நிலை பார்க்கவே மிகவும் பரிதாபமாக இருந்தது. அவன் போரில் கலந்து கொள்ளாமல் தனக்குப் பதிலாக ஆஸ் இப்னு ஹிஷாம் என்பவனைப் போருக்கு அனுப்பி விட்டு வெற்றிச் செய்தியை எதிர் பார்த்துக் கொண்டிருந்தான். அன்று போரில் கலந்து கொள்ள விரும்பாதவர் அனைவரும் தமக்குப் பதிலாக ஒருவரை அனுப்பி விட்டு மக்காவில் தங்கியிருந்தனர்.

அபூலஹப் குறைஷிகளின் தோல்விச் செய்தி கேட்டு வேதனைப் பட்டான். நடக்கவே முடியாமல் அவனுடைய கால்கள் தடுமாறின. ஆயினும் சமாளித்துக் கொண்டு போரின் நிலைகளைத் தீர விசாரித்துத் தெரிந்து கொள்வதற்காக தன் சகோதரர் அப்பாஸ் இப்னு அப்துல் முத்தலிப் வீடு நோக்கி மெல்ல மெல்ல நடந்து வந்தான்.

அப்பாஸ் (ரலி)யின் வீடு ஜம்ஜம் கிணற்றுக்கு அருகில் இருந்தது. அங்கே அப்பாஸின் அடிமை அபூராஃபிஃ (ரலி) என்பவர் அம்புகள் செதுக்கிக் கொண்டிருந்தார். அப்பாஸ் வீட்டில் இல்லை, அவரும் குறைஷிகளுடன் சேர்ந்து முஸ்லிம்களை எதிர்த்துப் போரிடுவதற்காகச் சென்றிருந்தார். அங்கு வந்த அபூலஹப் வீட்டின் ஓரத்தில் அபூராஃபிஃ அவர்களுக்கு அருகில் அமர்ந்தான்.

இதற்குள்ளாக யாரோ ஒருவர் கூறினார்: ‘அதோ, அபூசுஃப்யான் இப்னு ஹாரிஸ் (அப்துல் முத்தலிபின் பேரர், அபூலஹபின் சகோதரர் மகன் ) பத்றிலிருந்து திரும்பி வந்து கொண்டிருக்கின்றார். போரின் நிலைமைகளை அவரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

உடனே அபூலஹப், 'சகோதரர் மகனே, இங்கே என்னிடம் கொஞ்சம் வாருங்கள்'' என்று அழைத்தான். அவர் வந்ததும் 'மகனே பத்றில் என்ன நடந்தது?'' என்று வினவினான்.

அதற்கு அபூசுஃப்யான், 'அல்லாஹ்வின் மீது சத்தியமாக, முஸ்லிம்களுக்கு முன்னிலையில் நாம் மிகவும் பலமிழந்து போயுள்ளோம். எந்த அளவுக்கெனில், குளிப்பாட்டுபவரின் கையில் உள்ள பிரேதத்தின் நிலை எப்படியோ அப்படித்தான் முஸ்லிம்களுக்கு முன்னிலையில் நமது நிலை. அவர்கள் நாடியவர்களைக் கொன்றார்கள்: நாடியவர்களைக் கைது செய்தார்கள். நாங்கள் ஓர் ஆச்சர்யமான காட்சியைப் பார்த்தோம். வெள்ளைக் கோடுகளைக் கொண்ட நிறமுடைய குதிரைகள் மீது வெள்ளை வெளேறென்றிருந்த மனிதர்கள் சிலரைக் கண்டோம். அவர்கள் நம் அணிகளினூாடே புகுந்து வெட்டி வீழ்த்தினார்க்ள். ஆனால் அவர்கள் யார் என்றுதான் தெரியவில்லை'' என்றார்.

உடனே அபூராஃபிஃ (ரலி) கூறினார்: 'அல்லாஹ்வின் மீது சத்தியமாக அவர்கள்தாம் மலக்குகள் (வானவர்கள்)''

அபூராஃபிஃ இவ்வாறு கூறியதைக் கேட்டதும் அபூலஹப் கொதித்தெழுந்தான். அவருடைய முகத்தில் ஓங்கிக் குத்தினான். இதனைச் சற்றும் எதிர்பாராக அபூராஃபிஃ அவனுடைய தாக்குதலைத் தாங்கிக் கொண்டு அவனுடன் சண்டையிடலானார். ஆயினும் அவர் பலவீனமாய் இருந்ததால் அபூலஹப் அவரைக் கீழே வீழ்த்தி மிக இலாவகமாக அவர் மேலே ஏறி உட்கார்ந்து தாக்கினான்.

அங்கே ஒரு பெண்மணி இருந்தார். அபூலஹபின் இந்த அடாவடித்தனத்தைக் கண்டு அவரால் பொறுமையாய் இருக்க முடியவில்லை. உடனே எழுந்து வீட்டிலிருந்த ஒரு முரட்டுப் பிரம்மை எடுத்து அபூலஹபின் தலையில் ஓங்கி அடித்தார். அவனது தலையிலிருந்து இரத்தம் பீரிட்டு வந்தது. அவனை அதட்டியவாறு கூறினார்:

இவருடைய எஜமானர் இங்கு இல்லையே என்று உனக்குக் கொஞ்சமும் வெட்கம் இல்லையா? இவர் பலவீனமானவர் என்று கருதிக் கொண்டு தானே இப்படி அடிக்கின்றீர்?

அபூலஹப் அப்பெண்மணியை எதிர்க்கத் திராணியில்லாமல் அவருடைய அதட்டலைக் கேட்க விரும்பாதது போல் காதைப் பொத்திக் கொண்டு அங்கிருந்து கிளம்பினான்.

இவ்வாறு அபூலஹப் போன்ற இஸ்லாத்தின் கொடிய பகைவனை இழிவுக்கும் கேவலத்துக்கும் ஆளாக்கிய ரோஷமிக்க பெண்மணிதான் அன்னை உம்முல் ஃபஜ்ல் (ரலி) ஆவார். இவர் அண்ணல் நபி ( ஸல் ) அவர்களின் பெரிய தந்தை அப்பாஸ் (ரலி) அவர்களின் மனைவி ஆவார்.

## இஸ்லாத்தைத் தழுவுதல்

உம்முல் ஃபஜ்ல் எனப்படும் இவர்களின் இயற்பெயர் லுபாபா பின்த் ஹாரிஸ் என்பதாகும். ஷலுபா பதுல் குப்றா என்றும் இவர்கள் அழைக்கப்படுவதுண்டு. இவர்கள் மக்காவின் பனூாஹிலால் கோத்திரத்தைச் சேர்ந்த சிறப்பு மிக்க பெண்மணி.

பெண்களில் முதன் முதலில் அண்ணல் நபி ( ஸல் ) அவர்கள் மீது ஈமான் கொண்டவர் அன்னை கதீஜா நாயகி (ரலி) அவர்கள். அதற்கு அடுத்து அந்தப் பெரும் பேற்றைப் பெரும் பாக்கியம் - நம்பகமான அறிவிப்புகளின் படி- அன்னை உம்முல் ஃபஜ்ல் (ரலி) அவர்களுக்குத் தான் கிடைத்தது. அவ்வளவு ஆரம்ப காலத்தில் இஸ்லாத்தை ஏற்று ஷஅஸ்ஸாபிகூனல் அவ்வலூான் எனும் சத்திய அழைப்பை முதன் முதலில் ஏற்றோரின் குழுவில் உம்முல் ஃபஜ்ல் அவர்களும் தனியோர் இடத்தைப் பெற்றார்கள்.

ஆயினும் அவர்களின் கணவர் அப்பாஸ் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதாக பகிரங்கமாக அறிவித்த பிறகு தான் உம்முல் ஃபஜ்ல் (ரலி) ஹிஜ்ரத் செய்து மதீனா வந்தார்கள். இது மக்கா வெற்றிக்குக் கொஞ்ச நாட்களுக்கு முன்பு நடந்தது.

## அண்ணலாரின் மீது அன்பு

அன்னை உம்முல் ஃபஜ்ல் (ரலி) அவர்களின் சகோதரிகள் அனைவரும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு அல்லாஹ் - ரஸூலின் மீது அதிக அன்பு கொண்டவர்களாய்த் திகழ்ந்தார்கள் என்பது மட்டுமல்ல, அண்ணலாரின் குடும்பத்தினருடன் சம்பந்தம் செய்து கொண்டதால் இவர்கள் அனைவரும் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு நெருக்கமானவர்களாய் இருந்தார்கள்.

அன்னை உம்முல் ஃபஜ்ல் அவர்களின் உடன் பிறந்த சகோதரிகளுள் ஒருவரான மைமூனா பின்த் ஹாரிஸ் (ரலி) அவர்கள், நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கைத் துணைவி ஆவார். மற்றொரு சகோதரி ஸல்மா (ரலி) அண்ணலாரின் மற்றொரு பெரிய தந்தை ஹம்ஸா (ரலி) யின் மனைவியாவார். அவர்களின் மாற்றான்தாய் சகோதரியாகிய அஸ்மா பின்த் உமைஸ் (ரலி), அண்ணலாரின் பெரிய தந்தை மகன் ஜஅஃபர் (ரலி) அவர்களுக்கு மணம் முடிக்கப்பட்டார்கள்.

இந்த வகையில், உம்முல் ஃபஜ்ல் (ரலி) அவர்களின் தாயார் ஹிந்த் பின்த் அவ்ஃப் பற்றி - அண்ணலாரின் குடும்பத்தினருடன் - சம்பந்தம் செய்து கொள்வதில் இவருக்கு நிகராக பாக்கியம் பெற்ற வேறு எந்தப் பெண்ணும் இல்லை'' என்று மக்கள் பெருமிதத்துடன் கூறுவதுண்டு.

ஒரு போது நபி ( ஸல் ) அவர்கள் இந்நான்கு சகோதரிகளையும் குறித்து 'உம்முல் ஃபஜ்ல், மைமூனா, ஸல்மா, அஸ்மா ஆகிய நால்வரும் வாய்மையுடன் இறைநம்பிக்கை கொண்ட பெண்மணிகளாவர்'' என்று சிறப்பித்துக் கூறியதாக அல்லாமா இப்னு அப்துல் பர்(ரஹ்) அவர்கள் தமது ஷஇஸ்தீஆப் எனும் நூலில் அறிவித்துள்ளார்கள்.

அன்னை உம்முல் ஃபஜ்ல் (ரலி) அவர்கள் அண்ணல் நபி (ஸல்) மீது அதிக அன்பும், அவர்கள் காட்டிய சத்திய நெறியின் மீது பெரும் மதிப்பும் மரியாதையும் கொண்டிருந்தார்கள். அண்ணலாரும் அன்னை அவர்கள் மீது அளவிலா நேசம் வைத்திருந்தார்கள். அடிக்கடி அவர்களின் இல்லத்திற்குச் செல்வார்கள். இடையிடையே நண்பகல் நேரத்தில் நபியவர்கள் அன்னையின் வீட்டில் ஓய்வெடுப்பது வழக்கம். அப்போது அன்னையவர்கள் அண்ணலாரின் தலையைத் தம் மடியில் வைத்து தலையில் புழுதி, தூசி ஏதேனும் இருந்தால் அவற்றை அப்புறப்படுத்தி தலைமுடியை சீவி விடுவார்கள்.

## ஒரு கனவின் விளக்கம்

ஒரு முறை உம்முல் ஃபஜ்ல் (ரலி) அவர்கள், நபியவர்களின் புனித உடம்பின் ஒரு பகுதி தம்முடைய மடியில் இருப்பதாகக் கனவு கண்டார்கள். அதனை நபியவர்களிடம் சென்று கூறிய போது, ஷஎன் அருமந்தப் புதல்வி ஃபாத்திமாவுக்கு அல்லாஹ் ஒரு ஆண் குழந்தையை வழங்குவான்: அதனை உங்கள் மடியில் அமர்த்திப் பாலூட்டுவீர்கள், இது தான் இந்தக் கனவின் விளக்கமாகும் எனத் தெரிகிறது'' என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

கொஞ்ச நாட்களுக்குப் பிறகு கண்மணி ஃபாத்திமா (ரலி) அவர்களுக்கு ஹுஸைன் (ரலி) பிறந்தார்கள். குழைந்தைக்குப் பாலூட்டி வளர்க்கும் பொறுப்பை உம்முல் ஃபஜ்ல் அவர்கள் ஏற்றார்கள். இதனால் நபியவர்களின் குடும்பத்தைச் சார்ந்த அனைவரும் அன்னை அவர்களுக்கு அதிக அளவு கண்ணியமும் மரியாதையும் அளித்து வந்தார்கள்.

ஒரு நாள் உம்முல் ஃபஜ்ல் (ரலி) அவர்கள் குழந்தை ஹுஸைனைத் தூக்கிக் கொண்டு நபியவர்களிடம் வந்தார்கள். அண்ணல் நபி (ஸல்) அவர்கள் தம் பாசத்திற்குரிய பேரக் குழந்தையை உம்முல் ஃபஜ்லிடமிருந்து வாங்கி அன்பு முத்தம் பொழிந்தார்கள்... செல்லக் குழந்தை அப்போது அண்ணலாரின் மீது சிறுநீர் பெய்து விட்டது. உம்முல் ஃபஜ்ல் அவர்கள் அண்ணலாரிடமிருந்து குழந்தையைப் பெற்றுக் கொண்டு 'அட சுட்டிப்பயலே என்ன வேலை செய்து விட்டாய் நீ! இறைத் தூதரின் மீது சிறு நீர் பெய்து விட்டாயே!'' என்று குழந்தையைக் கொஞ்சம் கடுமையாக அதட்டினார்கள். அப்படி அதட்டியதைக் கூட நபியவர்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. 'அன்னையே, நீங்கள் என் அன்புச் செல்வத்தை அதட்டி என் மனத்தை நோகச் செய்து விட்டீர்கள்'' என்று கூறினார்கள். பிறகு ஆடையில் சிறுநீர் பட்ட இடத்தை தண்ணீரால் கழுவினார்கள்.

### அரஃபாவில் நோன்பு?

ஷஹஜ்ஜத்துல் விதா வில் நபி (ஸல்) அவர்களுடன் ஹஜ் செய்வதற்கான பாக்கியம் அன்னை உம்முல் ஃபஜ்ல் (ரலி) அவர்களுக்குக் கிடைத்தது. அப்போது நடந்த ஒரு நிகழ்ச்சி புகாரியில் இடம் பெற்றுள்ளது.

ஹஜ்ஜில் அரஃபா மைதானத்தில் நபி (ஸல்) அவர்கள் தங்கியிருந்த போது மக்களில் சிலர் ஷஅரஃபா தினத்தில் நபியவர்கள் நோன்பு வைத்திருக்கின்றார்கள் என்று கருதிக் கொண்டிருந்தார்கள். இவ்வாறு சிலர் எண்ணிக் கொண்டிருப்பது உம்முல் ஃபஜ்ல் (ரலி) அவர்களுக்குத் தெரிய வந்த போது ஒரு குவளைப் பாலை நபியவர்களுக்கு அனுப்பினார்கள். அதனை நபி (ஸல்) அருந்தினார்கள். அதன் மூலம் மக்களின் சந்தேகம் அகன்றது!

அன்னை உம்முல் ஃபஜ்ல் (ரலி) அவர்கள் நற்குணங்களின் உறைவிடமாய்த் திகழ்ந்தார்கள். வீரமும் ஈமானிய ரோஷமும் மார்க்கப் பற்றும் அவர்களின் விஷேசப் பண்புகளாய் விளங்கின. இறை வணக்கத்தில் அதிகம் அதிகம் ஈடுபடுவது அவர்களுக்கு ஆனந்தம் அளித்தது. அதற்கேற்ப அவர்களின் வாழ்க்கையில் வாய்மையும் பேணுதலும் நிறைந்திருந்தது. சில அறிவிப்புகளின்படி திங்கள் மற்றும் வியாழக்கிழமைகளில் நோன்பு நோற்பது அவர்களின் வழமையாய் இருந்தது!

அன்னை உம்முல் ஃபஜ்ல் (ரலி) அவர்கள் உஸ்மான் (ரலி) அவர்களின் ஆட்சிக் காலத்தில் மரணம் அடைந்தார்கள். அப்பொழுது அவருடைய கணவர் அப்பாஸ் (ரலி) அவர்களும் அருகில் இருந்தார். அவர்களின் ஜனாஸாவுக்கு கலீஃபா உஸ்மான் (ரலி) அவர்கள் தொழுகை நடத்தினார்கள்.

### குழந்தைச் செல்வங்கள்

உம்முல் ஃபஜ்ல் - அப்பாஸ் இருவருக்கும் ஏழு குழந்தைகள் பிறந்தன. அவர்களில் அப்துல்லாஹ், உபைதுல்லாஹ் (ரலி அன்ஹும்) ஆகிய இருவரும் மார்க்கக் கலையில் மிகவும் சிறப்புற்று விளங்கினார்கள். இந்தச் சமுதாயத்தின் தூண்களாய்த் திகழ்ந்த மார்க்க வல்லுனர்களின் குழுவில் இவ்விருவரும் இடம் பெற்றுள்ளார்கள்.

உம்முல் ஃபஜ்ல் (ரலி) அவர்கள் மூலமாக 30 நபிமொழிகள் அறிவிக்கப்பட்டுள்ளன. அவற்றின் அறிவிப்பாளர்களில்-அவர்களின் மகனார் அப்துல்லா இப்னு அப்பாஸ்(ரலி) போன்றோரும் மற்றும் அனஸ் இப்னு மாலிக் (ரலி) போன்ற கண்ணியத்திற்குரிய நபித் தோழர்களும் உள்ளனர்.

## ஸஃபியா பின்த் அப்துல் முத்தலிப் (ரலி)

உலகில் எண்ணற்ற சான்றோர்கள், பெரியோர்கள் வாழ்ந்து சென்றுள்ளார்கள், இனறைக்கும் வாழ்கின்றார்கள்! அவர்களின் உயர்வும் மேன்மையும் சந்தேகத்திற்கு அப்பாற்ப்பட்டவை!

எத்தனையோ வீரர்கள், அஞ்சா நெஞ்சம் கொண்டவர்கள், வானவர்களையே விஞ்சும் அளவு வாய்மையும் தூய்மையும் கொண்ட புனிதர்கள், பொறுமையின் சிகரங்கள் என்று போற்றப்படுகின்ற எத்தனையோ நல்லடியார்கள் வாழ்ந்து சென்றுள்ளார்கள், வாழ்ந்து கொண்டும் இருக்கின்றார்கள்!

ஆனால்,

இத்தனை சிறப்புக்கள் இருந்தாலும் அனேகப் பெரியார்களின் வரலாறு இப்படித்தான் உள்ளது: அதாவது, அவர்கள் தம் அளவில் மிகவும் நல்லவர்கள், பெரும் வீரர்கள், புனிதமிக்கவர்கள், பொறுமை மிகுந்தவர்கள், இறைவனுக்கு நன்றி செலுத்தி வாழும் நல்லடியார்கள் என்று புகழ் பெற்றுள்ளார்கள்!

ஆயினும் அப்படிப்பட்ட பெரியார்களில் சிலர் தங்களின் சகோதரர்களின் குறிக்கோளற்ற - தகுதியற்ற வாழ்வைக் கண்டு கண்ணீர் விடுபவராய் இருப்பர்!

வேறு சிலர் தம்முடைய குழந்தைகள் தவறான வழியில் வாழ்வது குறித்து கவலை கொள்பவராய், கதறுபவராய் இருப்பர்! அவர்களைச் சீர்படுத்த அவரால் எதுவும் செய்ய முடியாத் நிலை!

இன்னும் சிலர் தம்முடைய பேரர்களின் தவறான, இழிந்த செயல்பாடுகள் குறித்து மனம் நொந்து மடிவர்! அவற்றை மாற்றும் வழி காணார்!

இதற்கு மாறாக அந்தப் பெரியவர்களைப் போன்று அவர்களுடன் உறவுமுறை கொண்ட அனைவரும் நேர்வழி வந்தவர்களாய், வரலாற்றில் இடம்பெறும் நற்ச்சேவை ஆற்றியவர்களாய் காணக்கிடைப்பது அரிதினும் அரிது!

அத்தகைய நற்பாக்கியம் பெற்ற ஒரு பெண்மணி வரலாற்றில் இடம்பெற்றுள்ளார், அவருடைய அருள்நிறை வாழ்க்கையைத்தான் இங்கு காணப்போகின்றோம். அவர் யார் தெரியுமா?

அண்ணல் நபி (ஸல்) அவர்களின் அன்புக்குரிய அத்தை - மரியாதைக்குரிய ஸஃபிய்யா (ரலி) அவர்கள்! அவர்கள் வீரமும் துணிவும் மிக்கவர்களாக - பொறுமையும் இறைவனுக்கு நன்றி செலுத்தும் நற்பண்பும் உடையவர்களாகத் திகழ்ந்தார்கள்! அவர்களின் சகோதரர் யார் தெரியுமா?

அண்ணல் நபி (ஸல்) அவர்களின் பாசமிகு பெரிய தந்தை - இஸ்லாத்திற்காக உயிர் நீத்த முன்னணித் தலைவர் ஹம்ஸா (ரலி) அவர்கள்தாம்! அவர்களின் பிரமிக்கத்தக்க வீரம் குறித்து மாநபி (ஸல்) அவர்களே பெருமைப்பட்டதுண்டு! அவர்களுடைய வீரவாள் புரிந்த துணிவுமிக்க செயல்களுக்கு பத்று, உஹதுப் போர்கள் சாட்சி பகர்ந்து கொண்டிருக்கின்றன!

ஸஃபிய்யா (ரலி) அவர்களின் மகனாரைத் தெரியுமா உங்களுக்கு? இறைத் தூதரின் உயிர்த் தோழர் என்று புகழப்பெற்ற ஜுபைர் (ரலி) அவர்கள்தாம்! அவருடைய முழு வாழ்வும் வீரத்திற்கும் தியாகத்திற்கும் முன்மாதிரியாகத் திகழ்ந்தது!

ஸஃபிய்யா (ரலி) அவர்களுக்கு மருமகளாய் வந்தவரைத் தெரியுமா? வீரத்திருமகள் என்று வரலாற்று ஏடுகளில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்டவரும் அண்ணல் நபி (ஸல்) அவர்களுடன் தௌர் மலையில் குகைத் தோழராய் இருந்த அபூபக்கர் (ரலி) அவர்களின் மூத்த மகளுமான அஸ்மா (ரலி) அவர்கள்தாம்!

அவர்களின் பேரர் யார்? போர்க்களத்தில் 'ஜின்' என்று பெயர் பெற்ற அப்துல்லாஹ் இப்னு ஜுபைர் (ரலி) அவர்கள்தான்! மற்றும் இரு பேரர்கள் முஸ்அபும், உர்வாவும் எல்லாவிதச் சிறப்புகளும் பெற்றவர்களாவர்!

கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள்! ஒருபுறத்தில் தம் சகோதரர் ஹம்ஸா (ரலி) அவர்களையும் மற்றொரு புறம் தம் வீரமகன் ஜுபைர் (ரலி) அவர்களையும் வேறொரு புறம் தம் மரியாதைக்குரிய மருமகள் அஸ்மா (ரலி) அவர்களையும், இன்னொரு புறம் புகழுக்குரிய தம் பேரப்பிள்ளைகளாம் அப்துல்லாஹ், முஸ்அப், உர்வா (ரலி) ஆகியோரையும் - இப்படித் தம்மைச் சுற்றிலும் இஸ்லாத்திற்காக இன்னுயிரையும் அர்ப்பணிக்கும் செயல்வீரர்களைக் காணும் பாக்கியத்தைப் பெற்ற அன்னை ஸஃபிய்யா (ரலி) அவர்களின் கண்கள் எவ்வளவு குளிர்ச்சி அடைந்திருக்கும்! வரலாற்றில் இப்படிப்பட்டதொரு நற்பேற்றைப் பெற்றவராய் மரியாதைக்குரிய ஸஃபிய்யா (ரலி) அவர்கள் மட்டுமே திகழ்கின்றார்கள்! இது அல்லாஹ்வின் அருளாகும். அதை யாருக்கு வழங்க வேண்டுமென அவன் நாடுகிறானோ அவருக்கு வழங்குகின்றான்.

## தனிச்சிறப்புகள்

ஸஃபிய்யா (ரலி) அவர்கள் மக்கமா நகரத்தின் புகழ் பெற்ற கோத்திரமாகிய குறைஷிக் குலத்தில் பிறந்தார்கள். அண்ணல் நபி (ஸல்) அவர்களின் பாட்டனாரும் அனைத்துச் சிறப்புகளும் மாண்புகளும் கொண்ட மக்கத்து விவேகியும் குறைஷித் தலைவருமான அப்துல் முத்தலிப்தான் அவர்களின் தந்தை! உயர் தகுதிகளும் ஆற்றல்களும் ஸஃபிய்யா (ரலி) அவர்களிடம் குழந்தைப் பருவத்திலேயே பல்கிப் பெருகி வரத் தொடங்கிவிட்டன! அவர்களின் ஆளுமை தனித்துவமும் நிறைவும் பெற்றுத் திகழலானது!

குதிரைச் சவாரியிலும் வாள் வீச்சிலும் ஈட்டி எறிவதிலும் நல்ல பயிற்சி பெற்ற ஸஃபிய்யா (ரலி) அவர்கள் போர்க் களத்தில் புகுந்து — மிகுதிறன் பெற்ற வீரனைப் போன்று தாக்குதல் தொடுப்பார்கள்!

அரபிகளில் பெரும்பாலோர் எழுத்தறிவுகூட இல்லாதவர்களாக (உம்மிகளாக) இருந்த அந்தக் காலத்தில் ஸஃபிய்யா (ரலி) அவர்கள் பெற்ற எழுத்தறிவும் சொல்லாற்றலும் பிரமிக்கத்தக்க அளவில் இருந்தன! கவிதைகள் இயற்றுவதிலும் புகழ் பெற்று விளங்கினார்கள்!

ஸஃபிய்யா (ரலி) அவர்களுக்குத் தம்முடைய தந்தை அப்துல் முத்தலிப் மீது மிகுந்த அன்பும் பற்றும் இருந்தன. அவர் மரணம் அடைந்தபோது பெரிதும் அதிர்ச்சியும் கவலையும் அடைந்தார்கள்! அழுது புலம்பினார்கள்! மக்கத்துப் பெருந்தலைவர்களுள் ஒருவரும் தம் தந்தையுமான அப்துல் முத்தலிபுக்கு ஓர் இறங்கற்பா இயற்றினார்கள். அதில் அவருடைய மாண்புகளையும், சிறப்புகளையும் நயம்பட நினைவு கூர்ந்தார்கள்! சொல் நயமும் கருத்தாழமும் கொண்ட அந்தக் கவிதைகள் ஸஃபிய்யா (ரலி) அவர்களுடைய கவிப்புலமைக்கு ஒரு சான்று!

## இஸ்லாத்தைத் தழுவுதல்

அப்துல் முத்தலிப்பின் மரணத்திற்குப் பிறகு மக்கமா நகரின் பிரமுகர்களில் ஒருவரான ஹாரிஸ் இப்னு ஹர்ப் என்பவருக்கு ஸஃபிய்யா (ரலி) அவர்கள் மணம் முடித்துக் கொடுக்கப்பட்டார்கள்! சிறிது நாட்களில் அவர் மரணம் அடையவே அவ்வாம் இப்னு குவைலித் என்பவரை மணந்தார்கள். இவர், அண்ணல் நபி (ஸல்) அவர்களின் மனைவி கதீஜா (ரலி) அவர்களின் சகோதரர் ஆவார். இவருக்கும், ஸஃபிய்யா அவர்களுக்கும்தான் ஜுபைர் (ரலி) அவர்கள் பிறந்தார்கள்.

தம் அன்பு மகன் ஜுபைர் சிறுவராய் - சுமார் 16 வயது பாலகராய் இருக்கும்போதே அவ்வாம் மரணம் அடைந்தார்! அப்பொழுது ஸஃபிய்யா (ரலி) அவர்களுக்கு இளமை மாறாப் பருவம்! இருப்பினும்

அதன் பிறகு திருமணம் செய்து கொள்ளாமலேயே — தம் பிள்ளைகளைப் பராமரித்துக் கொண்டு காலத்தைக் கழிக்கலானார்கள்!

மக்கமா நகரில் இஸ்லாத்தின் பேரொளி இலங்கத் தொடங்கியபோது அன்னை ஸஃபிய்யா (ரலி) அவர்களுடைய சகோதரரின் புதல்வர் முஹம்மத் (ஸல்) அவர்கள் இறைவனின் இறுதித்தூதராய் ஏற்றம் பெற்று மக்களை சத்திய நெறியின் பக்கம் அழைக்கத் தொடங்கிய காலத்தில், ஸஃபிய்யா (ரலி) அவர்கள் எவ்வித தயக்கமும் இன்றி இஸ்லாத்தில் இணைந்து கொண்டார்கள். அதற்கு முன்பே அவருடைய மகனார் ஜூ பைர் (ரலி) அவர்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் வழிகாட்டுதலின்படி தம் வாழ்க்கையை அமைத்துக் கொள்ள முன் வந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்!

### மகனை வீர உணர்வுடன் வளர்த்தல்

ஸஃபிய்யா (ரலி) அவர்கள் தம் பாசத்திற்குரிய மகன் ஜூ பைர் (ரலி) அவர்களை அதிகக் கண்காணிப்புடன் வளர்த்து வந்தார்கள். அவர் போர்த் திறமை பெற்ற மாவீரராக வளர்ந்து வரவேண்டும், அச்சத்திற்கும் கோழைத்தனத்திற்கும் அவர் ஆளாகக் கூடாது என்பது அவர்களின் இலட்சியம்! ஆகையால் அவர் சிரமமான — அதிகக் கடுமையான வேலைகளைக் கொடுத்து ஜூ பைர் (ரலி) அவர்களை அடிக்கடி சோதித்துப் பார்ப்பது வழக்கம்! அதன்பேரில் அடிக்கடி அச்சுறுத்தவும் கண்டிக்கவும் செய்தார்கள்! அடிப்பதற்குக்கூட தயங்குவதில்லை!

ஒருமுறை ஜூ பைர் (ரலி) அவர்கள் தம் தாயாரிடம் வசமாய் மாட்டிக் கொள்ள, தாயார் அவர் மீது கடும் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருந்ததை ஜூ பைரின் சிறிய தந்தை நவ்ஃபல் இப்னு குவைலித் என்பவர் பார்த்துவிட்டார். கடும் பதற்றத்திற்கு ஆளான அவர், பையனை இப்படியா அடிக்கின்றீர்கள்? என்று ஸஃபிய்யா (ரலி) அவர்களைக் கண்டித்தர்.

அவர், இதனை பனூ ஹாஷிம் குலத்தாரிடமும் தம் குடும்பத்தைச் சார்ந்த பெரியவர்களிடமும் தெரிவித்து, ஜூ பைரிடம் ஸஃபிய்யா (ரலி) அவர்கள் கடுமையாக நடந்து கொள்வதைத் தடுக்குமாறு கேட்டுக் கொண்டார்.

இவ்வாறு - ஸஃபிய்யா (ரலி) அவர்கள், தம் மகனை அளவுக்கு அதிகமாகக் கண்டிக்கிறார்கள் என்பது பற்றிப் பரவலாகப் பேசப்பட்டபோது மக்கள் முன்னிலையில், நான் ஜூ பைரின் மீது கோபமாக உள்ளேன் என்று அவர் தவறான தகவல் தந்துள்ளார்! நான் எதற்காக அவரை அடித்து வளர்கிறேன் என்றால், அவர் பேரறிஞராய்த் திகழவேண்டும்! பெரிய படையையும் தோற்கடித்து, பரிசுப் பொருட்கள் பெறவேண்டும் என்பதற்காகத்தான்!”

என்று கவிதை பாடி தன் மீதுள்ள குற்றச்சாட்டை மறுத்தார்கள், ஜூ பைர் (ரலி) அவர்களிடம் தாம் எதிர்பார்க்கும் இலட்சியத்தை விளக்கினார்கள்! அன்னை ஸஃபிய்யா (ரலி) அவர்கள் தம் மகனாருக்கு வீரத்தையும், விவேகத்தையும் ஊட்டி வளர்த்த அதே நேரத்தில் இஸ்லாத்தின் மீது பற்றுதலையும் பெருமானார் (ஸல்) அவர்கள் மீதான அன்பையும் அவருடைய உள்ளத்தில் நிரப்பினார்கள்!

அதன் விளைவாக — ஜூ பைர் (ரலி) அவர்கள் அண்ணலாரின் மீது ஆழமான — அழுத்தமான அன்பையும் அவர்களுக்காக தம் இன்னுயிரை எந்நேரத்திலும் அர்ப்பணிக்கும் தியாக உணர்வையும் பெற்றார்கள்!

ஒரு நிகழ்ச்சி!

நபித்துவம் எய்திய ஆரம்ப காலத்தில் ஒரு நாள் - 'அண்ணல் நபி (ஸல்) அவர்களை மக்கத்து இணைவைப்பாளர்கள் கைது செய்துவிட்டார்கள் அல்லது கொலை செய்துவிட்டார்கள்' என்ற வதந்தியை ஜுபைர் (ரலி) அவர்கள் கேள்விப்பட்ட போது மிகுந்த பதற்றத்திற்குள்ளாகி, வாருங்கள்! என்ன நடந்தது என்று பார்த்து வரலாம்'' என்று முழுங்கியவாறு உருவிய வாளுடன் புறப்பட்டு மின்னல் வேகத்தில் நபியவர்களின் இல்லம் அடைந்தார்கள்! அங்கு நபி (ஸல்) அவர்கள் நலமாக இருப்பதைக் கண்டதும்தான் அவர்களுக்கு உயிரே வந்தது. அகமும் முகமும் மகிழ்ச்சியால் மலர்ந்தன!

பெருமானார் (ஸல்) அவர்கள் ஜுபைர் (ரலி) அவர்களின் உருவிய வாளின் பக்கம் சுட்டிக்காட்டி, இது என்ன?'' என்று கேட்டார்கள்.

அல்லாஹ்வின் தூதரே, என் தாயும் தந்தையும் தங்களுக்கு அர்ப்பணம் ஆகட்டும்! எதிரிகள் உங்களைக் கைது செய்துவிட்டார்கள் அல்லது கொலை செய்து விட்டார்கள் என்று நான் கேள்விப்பட்டேன். அதற்காகத்தான்....''

நபியவர்கள் புன்னகை புரிந்தவாறு உண்மையில் அப்படி நடந்துவிட்டால் நீர் என்ன செய்வீர்?'' என்று கேட்டார்கள்.

அல்லாஹ்வின் தூதரே, இறைவன் மீது சத்தியமாக! நான் இந்த மக்காவாசிகளுடன் போரிட்டு மடிவேன்'' என்று சிறுவர் ஜுபைர் (ரலி) அவர்கள் உறுதிபடக் கூறினார்கள்!

### வீரமும் பொறுமையும்

அன்னை ஸஃபிய்யா (ரலி) அவர்கள் மக்காவைத் துறந்து மதீனாவுக்கு ஹிஜ்ரத் செய்தார்கள். தம் அன்பு மகனார் ஜுபைர் (ரலி) அவர்களுடன் அங்கே தங்கினார்கள்!

மதீனா வாழ்க்கையின்போது இஸ்லாமிய வரலாற்றின் மிக முக்கியமான காலகட்டங்களை அவர்கள் சந்திக்க நேர்ந்தது. முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட அபாயமிகு சூழ்நிலைகளில், மிகத் துணிவான உதவிகளைச் செய்த பெருமை அவர்களுக்கு உண்டு.

உஹது போரின் ஒரு நிகழ்ச்சி ஸஃபிய்யா (ரலி) அவர்களின் துணிவுக்கும் வீரத்திற்கும் ஒரு சான்றாகத் திகழ்கின்றது.

வெற்றிக்கனி திட்டமிட்டபடி முஸ்லிம்களின் கையில் விழ இருந்த வேளையில்.. இறைத்தூதர் இட்ட ஒரு கட்டளை மீறப்பட்டதன் விளைவால் போரின் நிலைமை தலைகீழாக மாறியது. முஸ்லிம்களின் அணி சிதறுண்டு, வீரத்தில் பெயர் பெற்ற நபித்தோழர்கள் உள்பட பலரும் களத்தை விட்டு ஓடய மோசமான நிலை ஏற்பட்டிருந்தது.

அப்பொழுது அன்னை ஸஃபிய்யா (ரலி) அவர்கள் கையிலே ஈட்டியை ஏந்தியவாறு போர்க்களம் நோக்கிக் கிளம்பினார்கள். களத்திலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்தவர்களை வழியிலேயே தடுத்து நிறுத்தி, அவர்களின் இதயங்களில் இஸ்லாத்தின் பற்றையும் இறைத்தூதரின் மீதான அன்பையும் மீண்டும் ஏற்படுத்தி அவர்களின் வீரத்தை தட்டியெழுப்பினார்கள். அவர்களை நோக்கி, இறைவனின் தூதரை விட்டுவிட்டா நீங்கள் திரும்பி வந்தீர்கள்?'' என்று கோபமாகக் கேட்டார்கள். அப்படியே எதிரிகளையும் ஈட்டி கொண்டு தாக்கியவாறு போர்க்களத்தின் அருகில் வந்துவிட்டார்கள்.

ஸஃபிய்யா (ரலி) அவர்களைக் களத்தருகே கண்டுவிட்ட காருண்ய நபி (ஸல்) அவர்கள் அவசர அவசரமாக அவர்களின் மகனார் ஜுபைர் (ரலி) அவர்களை அழைத்து, உம்முடைய தாயார் ஸஃபிய்யா (ரலி) அவர்களைச் சந்தித்து திரும்பிப் போகச் சொல்லுங்கள்! அவர்களின் சகோதரர்

ஹம்ஸா (ரலி) அவர்களுடைய உடலை – அக்கிரமமாகச் சிதைக்கப்பட்ட உடலை அவர்கள் பார்த்துவிடக் கூடாது'' என்று அவசர ஆணை பிறப்பித்தார்கள்!

ஜுபைர் (ரலி) அவர்கள் தம் அன்னையைத் தேடி ஓடிவந்து, அன்புள்ள அன்னையே, நீங்கள் போர்க்களத்தைவிட்டு திரும்பிச் செல்லுமாறு அல்லாஹ்வின் தூதர் ஆணை பிறப்பித்துள்ளார்கள்'' என்று கூறினார்கள்.

நான் ஏன் திரும்பிச் செல்லவேண்டும்? என் சகோதரர் கொல்லப்பட்டு அவருடைய உடல் சின்னா பின்னப்படுத்தப்பட்ட செய்தி என் காதுக்கு எட்டத்தான் செய்தது. இறைவழியில் இந்தத் தியாகம் மிகவும் குறைவுதான்! அவருக்கு நேர்ந்த கதியைக் கண்டு நான் பதறவில்லை, அமைதியாகத்தான் இருக்கிறேன். அதற்கான கூலியை அல்லாஹ்விடம் எதிர்பார்த்து பொறுமையுடன் இருப்பேன் - இன்ஷா அல்லாஹ்!'' என்று ஸஃபிய்யா (ரலி) கூறினார்கள்.

உஹது களத்தில் பேராண்மையுடன் போரிட்டுக் கொண்டிருந்த ஹம்ஸா (ரலி) அவர்களை வஹ்ஷி இப்னு ஹர்ப் எனும் அடிமை ஒளிந்திருந்தது அம்பெய்து கொல்ல, அவர்களின் உடலை ஹிந்து என்பவள் - பத்றுப் போரில் அவளுடைய தந்தை உத்பாவை ஹம்ஸா (ரலி) அவர்கள் கொன்றதற்குப் பழிவாங்கும் வெறியில் சிதைத்து, மூக்கையும் காதையும் வெட்டியெறிந்திருந்தாள். அது மட்டுமல்ல வயிற்றையும் கிழித்து ஈரலை வெளியே எடுத்து மென்று துப்பித் தனது வெறியை தீர்த்துவிட்டிருந்தாள்!

ஹம்ஸா (ரலி) அவர்களின் புனித உடலை, இப்படிக் குரூரமாகச் சிதைக்கபட்ட நிலையில் ஸஃபிய்யா (ரலி) அவர்கள் காணக்கூடாது என்றுதான் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் விரும்பினார்கள். ஆனாலும் பொறுமையுடன் இருப்பதாக ஸஃபிய்யா (ரலி) அவர்கள் உறுதி அளித்தபோது காண்பதற்கு அனுமதி வழங்கினார்கள்!

ஸஃபிய்யா (ரலி) அவர்கள், ஷஹீதான வீரர்களின் உடல்களுக்கு அருகில் வந்தார்கள். அவற்றிற்கிடையே கொடுமையன முறையில் சிதைக்கப்பட்டுக் கிடந்த தம் பாசத்திற்குரிய சகோதரர் ஹம்ஸா (ரலி) அவர்களின் உடலைக் கண்டதும் தம்மையும் அறியாமல் ஐய்யோ'' என்று அலறிவிட்டார்கள். எனினும் பொறுமையை மேற்கொண்டு இன்னா லில்லாஹிவ இன்னா இலைஹி ராஜிஊன் (திண்ணமாக நாம் அல்லாஹ்வுக்கு உரியவர்கள், அவன் பக்கம் திரும்பிச் செல்பவர்களாய் உள்ளோம்) என்று கூறிவிட்டு தம் சகோரருக்கு இறைவனிடம் பாவமன்னிப்புக் கோரினார்கள்.

### கவி நயம்

பிறகு தம் சகோதரரைப் பொதிந்து அடக்கம் செய்வதற்காக நீளமான இரு வெள்ளைத் துணிகளைக் கொண்டு வந்தார்கள். அங்கே அன்ஸாரித் தோழர் ஒருவரை அடக்கம் செய்ய அறவே துணி இல்லாமல் இருந்தது. ஸஃபிய்யா (ரலி) அவர்கள் தம் மகனார் ஜுபைர் (ரலி) அவர்களை நோக்கி, இந்தப் பெரிய துணியை அந்த அன்ஸாரித் தோழருக்காக் கொடுத்துவிடும். சிறிய துணியை உம் மாமாவுக்கு வைத்துக் கொள்ளலாம்'' என்று கூறினார்கள்!

அந்தத் துணியைக் கொண்டு ஹம்ஸா (ரலி) அவர்களின் தலையை மறைத்தால் கால் மறைக்கப்படாமல் இருந்தது. காலை மறைத்தால் தலை திறந்து கிடக்கிறது. எனவே தலையைத் துணியால் பொதிந்து மறைத்துவிட்டு, கால்களில் இலைதலைகளைப் போட்டு அடக்கம் செய்யப்பட்டது.

சிறந்த கவிஞராகவும் திகழ்ந்த ஸஃபிய்யா (ரலி) அவர்கள் தம் அன்புக்குரிய சகோதரர் ஹம்ஸா (ரலி) அவர்களின் பெயரில் ஓர் உருக்கமான இரங்கற்பா இயற்றினார்கள். அதில் ஓரிடத்தில், தம்

சகோதரரை அடக்கம் செய்யும்போது ஏற்பட்ட துணிப் பற்றாக்குறையையும் மிக நயமாகக் குறிப்பிட்டுள்ளார்கள்!

பிறர் நலம் பேணும் பணியிலும் கொடையிலும் அவர் எந்த அளவுக்குச் சிறந்தவரெனில் இறந்த பிறகும்கூட தம் அருகில் இருந்தவரை அவர் மறந்தாரில்லை."

அந்த அன்ஸாரித் தோழரின் உடலுக்கு பொதிதுணி வழங்கப்பட்டதைத்தான் இப்படி சோகம் கலந்த நயத்துடன் பாடுகின்றார்கள் ஸஃபிய்யா (ரலி) அவர்கள்.

அதில் இன்னோர் இடத்தில் தம் சகோதரர் பெற்ற மறுமைப் பேறு குறித்தும் - தம் மனத்தில் பதிந்துவிட்ட அவரது நினைவு குறித்தும் இப்படி அழகாகப் பாடுகின்றார்கள்:

அர்ஷின் அதிபதியாகிய சத்திய இறைவன்
சுவனத்தின் பக்கம் அவரை அழைத்துள்ளான்.
அங்கே அவர் உயிர் வாழ்கிறார்,
அது குறித்து எனக்கு மகிழ்ச்சிதான்!
அல்லாஹ்வின் மீது ஆணையாக!
கிழக்கு நோக்கித் தென்றல் காற்று வீசும் காலமெல்லாம்
நான் உம்மை மறக்க மாட்டேன்!
ஊரில் இருந்தாலும் பயணமானாலும் இதோ
கவலையால் அழுது புலம்பிக் கொண்டிருக்கின்றேன்!"

அதில் மற்றோர் இடத்தில் அண்ணல் நபி (ஸல்) அவர்களை நோக்கி இவ்வாறு உருகி நின்றார்கள், ஸஃபிய்யா (ரலி) அவர்கள்.

இன்று உங்கள் வாழ்வில் வந்திருப்பது ஒரு துயரமிகு நாள்!
ஆம்! இன்றைய சூரியனே கறுத்துப் போய்விட்டது!
முன்போ அது பிரகாசமாய் இருந்தது!"

## சமயோசிதமான செயல்!

ஹிஜ்ரி ஐந்தாம் ஆண்டு நடைபெற்ற அகழ் யுத்தத்தில் அரபு நாடு முழுவதின் இணைவைப்பாளர்களும் யூதர்களும் முஸ்லிம்களை அழித்துவிட வேண்டுமென ஒன்று திரண்டிருந்தார்கள். குறிப்பாக மதீனாவுக்குள் வாழ்ந்த — நேற்று வரை நேசமாகப் பழகிவந்த பனூ குறைளா யூதர்கள் திடீரென்று இஸ்லாத்திற்கு எதிரான நடவடிக்கையில் இறங்கினார்கள். அவர்களின் திடீர் துரோகம் முஸ்லிம்களுக்குப் பெரும் ஆபத்தாக வந்து விடிந்தது!

இத்தகைய சோதனை மிக்க காலகட்டத்தில் - இஸ்லாத்தைக் காப்பதற்காக தங்களின் இன்னுயிரையும் அர்ப்பணித்த நபித்தோழர்கள் புரிந்த சாதனை மகத்தானது, அத்துடன் அன்னை ஸஃபிய்யா (ரலி) அவர்கள் காட்டிய வீரமும் சமயோசிதமான உதவியும் குறிப்பிடத்தக்கவையாகும்! அண்ணல் நபி (ஸல்) அவர்களே கூட அதனைப் பாராட்டி, போரில் கிடைத்த பரிசில் - பொருள்களில் ஒரு பங்கை ஸஃபிய்யா (ரலி) அவர்களுக்கு வழங்கி கௌரவித்தார்கள்!

அன்னை ஸஃபிய்யா (ரலி) அவர்களின் அத்தகைய வீரச் செயல் என்ன?

அகழ் யுத்தத்தின்போது அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மேற்கொண்ட முதல் நடவடிக்கை — உள்ளூர் எதிரிகளான பனூகுறைளா எனும் யூத கோத்திரத்தார்களிடமிருந்து பெண்களையும் குழந்தைகளையும் காப்பாற்றுவதுதான்! அவர்கள் அத்தனை பேரையும் ஹஸ்ஸான் இப்னு ஸாபித் (ரலி) அவர்களுக்குச் சொந்தமான ஒரு கோட்டைக்கு அழைத்துச் சென்று பாதுகாப்பாக இருக்க ஏற்பாடு செய்தார்கள்!

கோட்டை மிகவும் உறுதியானதுதான். ஆயினும் இந்த ஏற்பாடு முற்றிலும் அபாயம் நீங்கியதாக இல்லை!

அண்ணல் நபி (ஸல்) அவர்களுடன் அனைத்து வீரர்களும் போரில் ஈடுபட்டிருந்ததால், இங்கே பனூ குறைளா யூதர்கள் வசித்த பகுதிக்கும் கோட்டைக்கும் இடையே எந்தப் படையும் பாதுகாவலுக்கு இல்லை. கோட்டையினுள் இருப்பது முழுக்க முழுக்க பெண்களும் குழந்தைகளும்தான். தாக்குதல் கொடுத்தால் அதைச் சமாளிப்பதற்கு அங்கு வீரர்கள் யாரும் இல்லை. எனும் விஷயம் யூதர்களுக்குத் தெரிந்தால் ஆபத்துதான்!

இந்த சூழ்நிலையில் ஒருநாள் யூதன் ஒருவன் அந்தப் பக்கமாகச் சென்று கோட்டையின் நிலவரம் என்ன என்று ஒட்டுக் கேட்க முயன்றான்!

அன்னை ஸஃபிய்யா (ரலி) அவர்கள் தற்செயலாக அவனை நோட்டமிட்டபோது அவன் எதிரிகளால் அனுப்பப்பட்ட உளவாளி என்பதைத் துல்லியமாகக் கவனித்து விட்டார்கள்.

உடனே கோட்டையின் சொந்தக்காரரான ஹஸ்ஸான் இப்னு ஸாபித் (ரலி) அவர்களிடம் கூறினார்கள்: (அவர்கள் போரில் கலந்து கொள்ளச் செல்லாதிருந்தார்கள்)

ஹஸ்ஸான் அவர்களே, இந்த யூதன் கோட்டையைச் சுற்றி சுற்றி வருவதைப் பாருங்கள்! அல்லாஹ்வின் மீது சத்தியமாக! நமக்குப் பின்னால் இருக்கின்ற யூதர்களிடம் சென்று நம்முடைய நிலைமையை இவன் அறிவித்துக் கொடுக்காமல் இருக்கமாட்டான்! இறைத்தூதரும் அவர்தம் தோழர்களும் நம்மை இங்கே விட்டுவிட்டுப் போருக்கான ஏற்பாடுகளில் ஈடுபட்டுள்ளார்கள்! எனவே கீழே இறங்கிச் சென்று இந்த யூதனைக் கொன்றுவிட்டு வாரும்!''

அப்துல் முத்தலிப்பின் மகளே, அல்லாஹ் உங்களை மன்னிப்பானாக! அல்லாஹ்வின் மீது சத்தியமாக, இந்த வேலையை நிறைவேற்றிட நான் தகுதி பெற்றிருக்கவில்லை என்பதைத் திண்ணமாக நீங்கள் அறிவீர்கள்தானே!''

-ஹஸ்ஸான் (ரலி) அவர்கள் இவ்வாறு தட்டிக் கழித்தது கோழைத்தனத்தினால் அல்லா: மாறாக அவர்கள் அதிக அளவு முதுமை அடைந்திருந்தார்கள் என்பது ஒருபுறம் இருக்க, அவர்களின் முழங்கையின் நடுவில் ஒரு நரம்பு வெட்டப்பட்டு அதனால் போரில் கலந்துகொள்ள இயலாமல் இருந்தார்கள்! இவ்வாறு வரலாற்றாசிரியர்கள் சிலர் கருத்துக் கொண்டுள்ளார்கள்!

ஹஸ்ஸான் (ரலி) அவர்கள் இவ்வாறு பதிலளித்ததைப் பார்த்த ஸஃபிய்யா (ரலி) அவர்களின் உள்ளத்தில் வீரம் பொங்கியெழுந்தது!

உடனே எழுந்து, கூடாரத்திற்கு அடிக்கப்பட்டிருந்த வலுவான முளையைப் பிடுங்கி எடுத்துக்கொண்டு, கோட்டையிலிருந்து இறங்கி மெதுவாக வாயிலைத் திறந்து வெளியே வந்தார்கள் ஸஃபிய்யா (ரலி) அவர்கள்! அந்த யூதன் கவனமின்றி இருக்கும் நேரத்தை எதிர்பார்த்து அவனது தலையில் பலமாக அடித்தார்கள்! அதே இடத்தில் அவன் பிணமானான்!

பிறகு ஸஃபிய்யா (ரலி) அவர்கள் நேராக ஹஸ்ஸான் (ரலி) அவர்களிடம் வந்து ‘அவனது தலையைத் துண்டித்து வாருங்கள்’ என்று வேண்டினார்கள். அதற்கும் அவர் இயலாது என்று கூறவே தாமே சென்று அவனது தலையைத் துண்டித்துக் கொண்டு வந்து கோட்டையின் உச்சியிலிருந்து தொலைவில் வீசி எறிந்தார்கள்.

துண்டிக்கப்பட்ட தலையைப் பனூ குறைளா யூதர்கள் கண்டபோது கோட்டைக்கு உள்ளேயும் முஸ்லிம்களின் படை ஒன்று இருக்கிறது எனக் கருதி கோட்டையைத் தாக்கும் எண்ணத்தைக் கைவிட்டார்கள்.

இவ்வாறு — அஞ்சா நெஞ்சம் கொண்ட ஸஃபிய்யா (ரலி) அவர்கள் துணிச்சலான நடவடிக்கையில் இறங்கி, யூதர்களால் நேரவிருந்த பேராபத்தைத் தடுத்து முஸ்லிம் பெண்களையும் குழந்தைகளையும் காப்பாற்றினார்கள்!

### போரில் மருத்துவ சேவை

அகழ் யுத்தத்திற்குப் பிறகு — கைபர் பள்ளத்தாக்கில் வசித்து வந்த பனூ நுளைர் கோத்திரத்தைச் சேர்ந்த யூதர்கள் இஸ்லாத்திற்கு எதிரான நீண்ட சதித் திட்டங்களை உருவாக்கி வந்தார்கள். அதனைக் கேள்விப்பட்டதும் முற்றவிடாமல் முன்கூட்டியே அதனைத் தகர்த்துவிடுவதற்காக அந்த யூதர்களுடன் ஒரு போரை மேற்கொண்டார்கள் நபி (ஸல்) அவர்கள்! அதுதான் கைபர் போர்!

இந்தப் போரிலும் ஸஃபிய்யா (ரலி) அவர்கள் கலந்து கொண்டு போர்க்கால சேவைகளை ஆற்றியுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும். முஸ்லிம் பெண்கள் சிலருடன் - குறிப்பாக அஸ்லம் கோத்திரத்தைச் சேர்ந்த குஅய்பா பின்த் ஸஃத் (ரலி) எனும் நபித் தோழியருடன் சேர்ந்து போர்க்களத்திற்கு அருகில் ஒரு கூடாரம் அடித்துக் கொண்டு போரில் காயம்பட்ட வீரர்களுக்கு மருத்துவ உதவி அளித்தார்கள்.

போர் முடிந்த பிறகு போரில் கைப்பற்றப்பட்ட பொருள்களை முஸ்லிம் வீரர்களுக்குப் பகிர்ந்தளித்த அண்ணல் நபி (ஸல்) அவர்கள், மருத்துவ சேவை ஆற்றிய பெண்களுக்கும் அவற்றை வழங்கினார்கள். அதில் அன்னை ஸஃபிய்யா (ரலி) அவர்களுக்கும் அதிகப் பங்கை அளித்துக் கௌரவித்தார்கள்!

### அண்ணலார் மீது இரங்கற்பா

அன்னை ஸஃபிய்யா (ரலி) அவர்கள் தம் சொந்த சகோதரரின் புதல்வரான அண்ணல் நபி (ஸல்) அவர்களை விட இரண்டு மூன்று வயதுதான் மூத்தவர்களாய் இருந்தார்கள். குழந்தைப் பருவத்தில் இருவரும் ஒரே வீட்டில்தான் வளர்ந்து வந்தார்கள். ஆகையால் உளப்பூர்வமான பாசமும் நேசமும் இருவரின் இதயத்திலும் குடிகொண்டிருந்தது. எந்த அளவுக்கெனில், ஸஃபிய்யா (ரலி) அவர்களின் மகனார் ஜுபைர் (ரலி) அவர்களை பெரும்பாலும் ‘இப்னு ஸஃபிய்யா (ஸஃபியயாவின் மகன்) என்றுதான் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அன்போடு குறிப்பிடுவது வழக்கம்!

இப்படி — உயிருக்கு உயிரான அன்புடனும் உயர்ந்த மரியாதையுடனும் பேசிப் பழகி வந்த அண்ணல் நபி (ஸல்) அவர்கள் இவ்வுலகை விட்டுப் பிரிந்து சென்றபோது பெண்களிலேயே — குறிப்பாக நபியவர்களின் குடும்பத்துப் பெண்களிலேயே அதிகமான அதிர்ச்சிக்கு ஆளாகிப் பெரிதும் கவலை கொண்டவர் அன்னை ஸஃபிய்யா (ரலி) அவர்கள்தாம்! தாங்க முடியாத மனவேதனையையும் ஆதங்கத்தையும் கவிதைகளாக வடித்து நபியவர்களின் பெயரில் அவர்கள் இரங்கற்பா இயற்றினார்கள்!

நெஞ்சை நெகிழச் செய்யும் அக்கவிதைத் தொகுப்பிலிருந்து இதோ சில வரிகள் -

அல்லாஹ்வின் தூதரே, நீங்கள்

எங்களின் நம்பிக்கையாய்த் திகழ்ந்தீர்கள்!

நீங்கள்

எப்போதும்

எங்களுக்குப் பேருபகாரம் புரிபவராய் இருந்தீர்களே-

அன்றி

என்றுமே அநீதி இழைத்ததில்லை!

நீங்கள்

எங்களுக்கு

பெரும் கிருபை புரிபவராய் -

நேர்வழி காட்டுபவராய் -

கல்வி புகட்டுபவராய் திகழ்ந்தீர்கள்!

இன்று

அழக்கூடிய அனைவரும் உங்களுக்காக

அழத்தான் வேண்டும்!

அல்லாஹ்வின் தூதரே!

என்னுடைய

தாயாரும்

சிற்றன்னையும்

மாமாவும்

உங்கள் மீது அர்ப்பணமாகட்டும்!

ஏன்

நானும் எனது சொத்து முழுவதும்

உங்களுக்கே அர்ப்பணம்!

அந்தோ!

நம்முடைய தலைவரை

நமக்கிடையே வாழ்ந்து கொண்டிருக்குமாறு

அல்லாஹ் விட்டு வைத்திருந்தால்,

நாம் எவ்வளவு நற்பாக்கியம் உடையவர்களாக

இருந்திருப்போம்!

ஆயினும்,

இறைவனின் தீர்ப்பு மிகவும்

உறுதியானதன்றோ!

அல்லாஹ்வின் தூதரே!

உங்கள் மீது சாந்தி உண்டாகட்டும்!

நீங்கள் நிலையான சுவனபதிகளில் பிரவேசிப்பீர்களாக!”

அன்னை ஸஃபிய்யா (ரலி) அவர்கள் தமது 73-வது வயதில் உமர் (ரலி) அவர்களின் ஆட்சிக் காலத்தில் மரணம் அடைந்தார்கள். மதீனாவில் ஜன்னதுல் பகீஃ எனும் அடக்கத் தலப்பகுதியில் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள்.

அல்லாஹ் அவர்களைத் திருப்தி கொண்டு, அவர்கள் புரிந்த தியாகங்களுக்கும் சேவைகளுக்கும் நற்கூலி வழங்குவானாக, ஆமீன்!

## பின்பற்றத்தக்க பெண்மணிகள் - வீரத்தாய் - உம்மு அம்மாரா (ரலி)

சத்திய இஸ்லாத்தின் சன்மார்க்க ஒளியை உலகெல்லாம் பரப்பிட உவகை கொண்டு உயிரையும் உடலையும் அர்ப்பணித்த அண்ணலாரின் ஆரயிர்த் தோழிகளில் அன்னை உம்மு அம்மாரா (ரலி) அவர்களும் ஒருவராவார். வீரத் தாய் உம்மு அம்மாரா (ரழி) அவர்களும் ஒருவராவார். வீரத்தாய் உம்மு அம்மாரா (ரழி) அவர்களின் வீரமும், துணிவும் தியாக மனப்பாங்கும் எம்மனைவருக்கும் சிறந்ததொரு முன்னுதாரணமாகும்.

### அறிமுகம்

இவர் மதீனாவிலுள்ள கஸ்ரஜ் கோத்திரத்தைச் சேர்ந்தவர். தந்தை பெயர் கஃப் இப்னு அம்ர் என்பதாகும். நசீயா என்பது இவரது இயற்பெயராகும். உம்மு அம்மாரா என்ற சிறப்புப் பெயராலேயே இவர் பிரபல்யமானார்.

### உறுதிமொழியில் பங்கேற்றல்

ஏந்தல் நபி (ஸல்) அவர்கள் ஏகத்துவ தீபத்தை மக்கமா நகரில் ஏந்தி வந்த போது அதை அணைத்து விட ஆயிரம் கரங்கள் துடித்தன. எட்டுத் திசைகளிலிருந்தும் ஏச்சும் பேச்சுக்கள், எதிர்ப்புகள், எச்சரிக்கைகள் எண்ணிக்கையின்றி வந்து குவிந்தன. மக்கா பூமியே ஒரு சித்திரவதைக் கூடமாகக மாறியது.

இஸ்லாமிய நெறியை ஏற்ற ஆரம்ப முஸ்லிம்கள் அடித்து நொறுக்கப்பட்டனர். துவைத்து எடுக்கப்பட்டனர். எனினும் உள்ளத்தைக் கல்லாக்கிக் கொண்டு, கொண்ட கொள்கையில் கொஞ்சம் உறுதி தளராது உருக்குப் போல் இருந்தனர் உத்தமத் தோழர்கள்.

துன்ப துயரங்கள் துரத்த, தொல்லைகள் நிழலாய்த் தொடர ஒவ்வொரு விடியலிலும் ஒரு பூகம்பத்தைச் சந்தித்து, ஒவ்வொரு நாளையும் எரிமலையை, நெருப்பாற்றைக் கடப்பது போல் கடந்தனர்.

வேதனையில் விளிம்பைத் தாண்டிய நிலையில் இஸ்லாமிய ஜோதியை ஏற்றி வைக்க நல்லதொரு களத்தை உருவாக்கும் முயற்சியில் நபி (ஸல்) அவர்கள் இறங்கினார்கள். அதில் முதல் கட்டமாக

மக்காவுக்கு ஹஜ் செய்ய வந்தவர்களிடம் பிரச்சாரம் செய்யலானார்கள். இதிலொரு கட்டமாக அகபா உடன்படிக்கை நடந்து. இதில் 12 யத்ரிப் (மதீனா) வாசிகள் பங்கு கொண்டு இஸ்லாத்தை ஏற்றனர்.

அடுத்த ஆண்டு அதே இடத்தில் மற்றுமொரு ரகசியக் கூட்டம் நடந்தது. அதில் 73 ஆண்களும், இரு பெண்களும் பங்கு கொண்டனர். அதில் 11 நபர்கள் அவ்ஸ் கோத்திரத்தினர். மற்றைய அனைவரும் கஸ்ரஜ் கோத்திரத்தினர்.

இந்த 75 பேரும் ஹஜ் கிரியைகளை முடித்து விட்டு நடுநிசி வரை காத்திருந்தனர். குறித்த நேரம் வந்ததும் ரகசியமாக எழுந்து அகபா பள்ளத்தாக்கு நோக்கி நகர்ந்தனர். அங்கே நபி (ஸல்) அவர்களுடன் இஸ்லாத்தை அதுவரை தழுவிடாத அவரது பெரிய தந்தை அப்பாஸு ம் இருந்தார்.

அங்கே நபி (ஸல்) அவர்களது கையைப் பிடித்து நீங்கள் எங்களது பிரதேசத்துக்கு வந்தால் எமது மனைவி மக்களை எவற்றிலிருந்தெல்லாம் பாதுகாக்கிறோமோ அவற்றிலிருந்தெல்லாம் நாம் உங்களைப் பாதுகாப்போம் என்று சத்தியம் பிரமாணம் செய்யப்பட்டது.

ஆண்களெல்லாம் சத்தியம் செய்து முடிந்த பின் இரண்டு பெண்கள் மட்டும் எஞ்சியிருந்தனர். அதில் ஒருவர் உம்மு அம்மாரா (ரழி) ஆவார். அப்பொழுது உம்மு அம்மாரா (ரழி) அவர்களின் கணவர் கஸஜயதிப்னு அம்ர் (ரழி) அவர்கள், அல்லாஹ்வின் தூதரே! இதோ எம்முடன் இரு பெண்களும் பைஅத் செய்ய வந்துள்ளனர் என்றார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள் நீங்கள் செய்த பைஅத்தை அவ்விருவரிடமும் நான் பெற்று விட்டேன். நான் பெண்களின் கரத்தைத் தீண்ட மாட்டேன் என்றார்கள்.

மிகப் பெரும் வரலாற்றுத் திருப்பத்திற்கும் புரட்சிக்கும் வழியமைத்த வரலாற்று முக்கியத்துவமிக்க இந்த இரண்டாவது அகபா உடன்படிக்கையில் பங்கு கொண்டதன் மூலம் உம்மு அம்மாரா (ரழி) அவர்கள் உயரிய அந்தஸ்தையடைந்து கொண்டார்கள் என்பதைச் சொல்லித்தான் தெரிய வேண்டுமா?

ஏகத்துவ ஒளியை இதயத்தில் ஏந்திய இக்கூட்டம் மதீனா நகர் சென்றது. ஏகத்துவம் பற்றியும் தூதுத்துவம் பற்றியும் மதீனத்து மக்களுக்குப் போதித்தது. ஆண்களுக்கு எடுத்துச் சொல்ல எழுபத்து மூன்று நபர்கள் இருந்தனர். பெண்களுக்கு இஸ்லாம் பற்றிய அறிமுகத்தைக் கொடுக்கும் பணியில் இவ்விரு பெண்களும் ஈடுபட்டனர். இதன் மூலம் மதீனா நகருக்கான நபி (ஸல்) அவர்களின் வருகைக்கு முன்னரே மதீனா பட்டணம் இஸ்லாத்திற்கு ஏற்ற சூழலாகச் சிறிது சிறிதாக மாற்றம் காணவராம்பித்தது.

### உஹது போர்க்களத்தில் - உடன்படிக்கை காத்தல்

உங்களைக் காப்போம் என அன்னையவர்கள் செய்த உடன்படிக்கையை நிறைவேற்ற உற்றதொரு தருணம் உஹதுக் களத்தில் அன்னையவர்களுக்குக் கிடைத்தது.

உஹதுப் போர் வீரர்களுக்கு உதவுவதற்காக அன்னையவர்களும் களம் சென்றார்கள். காயப்பட்டோருக்கு முதலுதவி அளித்தல், நீர் புகட்டுதல், உணவு தயாரித்தல் போன்ற பணிகளில் அன்னையவர்கள் ஈடுபட்டார்கள்.

அன்னையவர்கள் இயற்கையிலேயே துணிவு கொண்டவர்களாக இருந்தார்கள். இங்கு அவர் பற்றி நாம் எழுதுவதும் போர்க்களங்களில் பங்கு கொள்வதில் அ வர்கள் பெண்களில் முதல் நிலைவகித்ததனாலேயாகும். யுத்த ஈடுபாட்டில் தான் அன்னையவர்கள் ஏனைய பெண்களிலிருந்து மாறுபடுகின்றார்கள்.

அன்னையவர்கள் காட்டிய வியக்க வைக்கும் வீரம் தளராத உறுதி, தியாகம் அனைத்தையும் அறியும் போது அவர் மீதுள்ள அபிமானம் மேலும் அதிகரிக்கின்றது.

உஹதுப் போர் நடக்கின்றது. அன்னையவர்கள் தனது பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள். ஆரம்பத்தில் வெற்றிக் காற்று முஸ்லிம்கள் பக்கம் வீசுகிறது. எதிரிகள் பின்னங்கால் பிடரியில் பட ஓடவாரம்பிக்கின்றார்கள். இச்சந்தர்ப்பத்தில் குன்றொன்றில் நபி (ஸல்) அவர்கள் நிறுத்தி வைத்திருந்த வில் வீரர்கள் வெற்றி நம் பக்கம் வந்து விட்டதே, இதற்குப் பின் நமக்கென்ன வேலை என்று எண்ணி நபி (ஸல்) அவர்களின் கட்டளையையும் மீறிக் குன்றை விட்டுக் கீழே இறங்கி கனீமத் (எதிரிகள் விட்டுச் சென்ற) பொருட்களைப் பொறுக்கவாரம்பித்தார்கள்.

இதனை எதிரிப் படையொன்றை வழி நடாத்தி வந்த காலித் பின் வலீத் (இவர் பிற்காலத்தில் இஸ்லாத்தில் இணைந்து கொண்டார்) அவர்கள் கண்டு தன் படையைக் குன்றின் வழியாகக் கொண்டு வந்து முஸ்லிம்கதைத் தாக்கவாரம்பித்தார். போர் நிலவரம் தலைகீழாக மாறுகின்றது.

இத்தருணத்தில் முஹம்மத் கொல்லப்பட்டு விட்டார் என்ற வதந்தியை எதிரிகள் பரப்பி விடுகின்றனர். பின்னர் போரிட்டு என்ன பயன் என்ற எண்ணத் தலைப்பட்டனர். மற்றும் பலர் என்ன செய்வது ஏது செய்வதென்றறியாது களத்தை விட்டு வெருண்டோட ஆரம்பிக்கின்றனர்.

அப்பொழுது நபி (ஸல்) அவர்களைச் சூழ பத்து, பதின் மூன்று பேரே நிற்கின்றனர். அவர்களில் அபூதுஜானா போன்ற மாவீரர்கள் நபி (ஸல்) அவர்களை நோக்கி வந்த வில்லையும் அம்பையும் தன் மார்பைக் கொண்டு தடுத்து நபியைக் காத்தனர். அப்போது நபியவர்களைச் சூழ இருந்தவர்களில் உம்மு அம்மாரா (ரழி) அவர்களும் அவர்களது இரு புதல்வர்களான அப்துல்லாஹ் இப்னு செய்த் (ரழி) மற்றும் ஹபீப் இப்னு செய்த் (ரழி) மற்றும் அன்னையின் கணவர் என முழுக் குடும்பமும் உள்ளடக்கமாகும்.

இதே உஹதுக் கள நிலவரம் பற்றி அன்னையவர்களே கூறுவதைக் கேளுங்கள் :

உம்மு ஸஅத் என்ற பெண்மணி உம்மு அம்மாராவின் இல்லம் வந்து உஹதுக் களத்தில் நடந்தது என்ன என்று விவரித்துக் கூறுங்களேன்? என்று கேட்ட போது உம்மு அம்மாரா (ரழி) அவர்கள் பின்வருமாறு கூறினார்கள் : நான் உஹதுக் களத்துக்குப் படை வீரர்களுக்கு நீர் புகட்டுவதற்காகவும், உதவுவதற்காகவும் சென்றேன். ஆரம்பத்தில் வெற்றி முஸ்லிம்கள் பக்கமிருந்தாலும் இறுதியாக முஸ்லிம்கள் சோதிக்கப்பட்டனர். பலர் என்ன செய்தவதென்றேயறியாது போர்க்களம் விட்டுப் புறமுதுகு காட்டி ஓடவாரம்பித்தனர். நபி (ஸல்) அவர்களைச் சூழ சில நபித்தோழர்கள் நின்று கொண்டு அவர்களைக் காக்கும் பணியில் ஈடுபட்டனர். நானும் வாள் சுற்றி, அம்பெறிந்து நபி (ஸல்) அவர்களை நோக்கி வரும் எதிர்ப்புகளை எதிர்கொண்டேன். என் புஜத்தில் இந்தக் காணம் ஏற்படும் வரை மூர்க்கமாகப் போராடினேன் என்று கூறி தன் தோள்பட்டையில் இருந்த காயத்தைக் காட்டினார்கள்.

உம்மு ஸஅத் அக்காயத்தைப் பார்த்தார்கள். அதில் பள்ளம் விழுந்து போயிருந்தது. தொடர்ந்து உம்மு அம்மாராவே! இது யாரால் ஏற்பட்ட காணம் என உம்மு ஸஅத் கேட்க, அன்னையவர்கள் நடந்ததைக் கூறலானார்கள். மக்கள் நபி (ஸல்) அவர்களை விட்டும் விலகியிருந்த போது இப்னு கும்ஆ என்பவன் முஹம்மதைத் காட்டுங்கள்! அவரை இன்றுடன் தீர்த்துக் கட்டாவிட்டால் எம்மால் வெற்றி பெற முடியாது என்று முழங்கிக் கொண்டு நபி (ஸல்) அவர்களை நோக்கி வந்தான். அவனை முஸ்அப் இப்னு உமைரும் நானும் இன்னும் சிலரும் எதிர் கொண்டோம். அப்போது தான் இந்த வெட்டு விழுந்தது. பதிலுக்கு நானும் அவனை வெட்டினேன். அவன் இரண்டு கவசங்கள் அணிந்திருந்தான். அதனால் தப்பித்துக் கொண்டான் எனக் கூறினார்கள்.

இந்த யுத்தத்தில் கையில் கிடைத்த அனைத்தையும் வைத்துப் போராடிக் கொண்டிருந்த அன்னையவர்கள் களத்தில் மற்றுமொரு காட்சியை இப்படி விவரிக்கின்றார்கள்.

நானும் என் இரு ஆண்மக்களும் நபி (ஸல்) அவர்களுக்கு வரும் எதிர்ப்புக்களை எதிர் கொண்டு போரடிக் கொண்டிருந்தோம். அப்போது என் கையில் கேடயமிருக்கவில்லை. அந்நேரத்தில் ஒருவர் கையில் கேடயத்துடன் களத்தை விட்டும் ஓடிக் கொண்டிருந்தார். நபி (ஸல்) அவர்கள் அவரை நோக்கி, ஓடுபவனே! கேடயத்தைப் போராடுபவர்களுக்காகப் போட்டு விட்டுப் போ என்றார்கள். அவர் அதனைப் போட்டு விட்டு ஓட, அதை நான் எடுத்துக் கொண்டேன். அதன் மூலம் நபி (ஸல்) அவர்களை நோக்கி வரும் ஆபத்துக்களைத் தடுத்துக் கொண்டிருந்தேன். அன்றைய களத்தில் நிராகரிப்பாளர்களின் குதிரை வீரர்களால் தான் எமக்கு பெரிய பாதிப்பு ஏற்பட்டது. எம்மைப் போல் அவர்களும் கால் நடையாக வந்திருந்தால் ஒரு கை பார்த்திருப்போம் என்று கூறினார்கள்.

என் கையில் கேடயம் கிடைத்த பின் குதிரையில் வரும் எதிரிகள் வெட்டும் போது கேடயத்தின் மூலம் தடுத்துக் கொண்டே குதிரையின் காலை வெட்டி எதிரியைக் கீழே வீழ்த்துவேன். எனக்கு இதில் சங்கடங்கள் வரும் போதெல்லாம் நபி (ஸல்) அவர்கள் என் புதல்வர்களை அழைத்து, உன் தாயைக் கவனி! உன் தாயைக் கவனி! எனச் சத்தமிட்டுக் கூறுவார்கள்.

அப்துல்லாஹ் என்ற அன்னையின் வீர மைந்தன் கூறுகிறார் : நானும் என் தாயும் நபி (ஸல்) அவர்களைக் காக்கும் பணியில் ஈடுபட்டிருந்தோம். அப்போது என் தாய்க்குக் கடினமான வெட்டு விழுந்தது. நபி (ஸல்) அவர்கள் என்னைப் பார்த்து தாயின் காயத்திற்குக் கட்டிடச் சொன்னார்கள். பின்னர் உங்கள் குடும்பத்திற்கு அல்லாஹ் பரக்கத் செய்வானாக! உன் தாய் இங்கிருந்து போராடுவது (சில பெயர்களைக் கூறி) இன்னின்ன யுத்த வீரர்கள் இங்கிருந்து போராடுவதை விடச் சிறந்தது. அவர்களின் கணவர் இங்கிருந்து போராடுவது இன்னின்ன நபர்கள் போராடுவதை விடச் சிறந்தது. உங்கள் குடும்பத்திற்கு அல்லாஹ் கருணை காட்டுவானாக! என்று பிரார்த்தித்தார்கள்.

அப்போது என் தாய் அல்லாஹ்வின் தூதரே! சுவனத்திலும் நான் உங்களுக்கு அருகிலிருக்கப் பிரார்த்தியுங்கள் என்று கேட்டார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள் அல்லாஹு ம்ம இஜ்அல்ஹு ம் ருபகாயீ பில் ஜன்னா - யா அல்லாஹ் இவர்களை சுவனத்திலும் என் நண்பர்களாக ஆக்கி விடுவாயாக! என்று பிரார்த்தித்தார்கள். இதைக் கேட்ட என் தாய் இந்தப் பாக்கியம் கிடைத்த பின் அழிந்து போகும் இந்தத் துன்யாவில் எமக்கு என்ன இழப்பு ஏற்பட்டால் தான் என்ன? என்று கூறி மீண்டும் போராடத் தொடங்கி விட்டார்கள் என்கிறார்கள்.

களத்தில் மற்றுமொரு காட்சியை அவரது மகன் இப்படிக் கூறுகிறார் : உஹதுக் களத்தில் நான் காயப்பட்டேன். நபி (ஸல்) அவர்கள் நீயே உன் காயத்தைக் கட்டிக் கொள் என்றார்கள். அப்போது என் தாய் வந்து என் காயத்துக்குக் கட்டுப் போட்டார்கள். பின்னர் மகனே எழுந்து போராடு என்றார்கள்.

சற்று நேரத்தின் பின் என்னை வெட்டியவன் நபி (ஸல்) அவர்களை நோக்கி வந்தான். நபி (ஸல்) அவர்கள் என் தாயை நோக்கி உம்மு அம்மாராவே! அதோ உன் மகனை வெட்டியவன் வருகிறான் என்று கூறினார்கள். இது கேட்ட என் தாய் அவன் முன் போய் அவனது காலை வெட்டி அவனைக் கீழே வீழ்த்தினார்கள். தொடர்ந்து நாம் அவனைத் தாக்கினோம். நபி (ஸல்) அவர்கள் சிரித்தவர்களாக, உம்மு அம்மாராவே பழி தீர்த்து விட்டீரெ! எனக் கூறி துஆவும் செய்தார்கள்.

இந்நிகழ்ச்சிகள் யாவும் அன்னை உம்மு அம்மாரா அவர்கள் நபி (ஸல்) அவர்கள் மீது கொண்டிருந்த பாசத்தையும், அவர்களைக் காப்பதில் கொண்டிருந்த கரிசனையையம், ஆண்களையும் மிஞ்சும் அவர்களின் வீரத்தையும், துணிவையும் எடுத்துக் காட்டுகின்றன. ஒரு பெண் புலியாக நின்று போராடியுள்ளார்கள். இவர்களது ஈமானிய உணர்விலும் உறுதியிலும் ஒரு துளியாவது எம்மிடமிருந்தால் எம் வாழ்வில் எத்தகைய மாற்றம் ஏற்படும் என்று எண்ணிப்பாருங்கள்.

பிள்ளைகள் பொது வேலையில் ஈடுபடும் போது தடுக்கும் தாய்மார்களையே நாம் காண்கின்றோம். ஆனால் இந்தத் தாய் தன் இரு குழந்தைகளையும் பொது வேலையில் ஈடுபடுத்தியது மட்டுமல்ல மகன் காயப்பட்ட பின்னர் கூட சற்றும் சலனமில்லாமல் மீண்டும் மகனைப் போராட்டத்தில் ஈடுபடுத்துகின்றார்கள். தாய்மை உணர்வை மிஞ்சிய இச்செயலைக் கண்ட நபி (ஸல்) அவர்கள் உம் அம்மாரே! உன்னைத் தவிர வேறு யாரால் தான் இது சாத்தியப்படும் என்று புகழ்ந்தார்கள்.

இது மட்டுமல்ல, யுத்தம் முடிந்த பின்னர்.. ..

என் வலப்புறம் இடப்புறம் ஏன் எத்திசையை நோக்கினாலும் அங்கு உம்மு அம்மாரா என்னைக் காப்பாற்றுவதற்காகப் போராடிக் கொண்டிருப்பதைக் கண்டேன் என்றும் நபி (ஸல்) அவர்கள் புகழ்ந்தார்கள்.

### தளராத உறுதி

போர் என்பது அபாயகரமானது. அதிலும் போரில் பாதிப்பு ஏற்பட்டால் கேட்கவும் வேண்டுமா? உஹது யுத்தத்தில் அன்னையவர்களின் உடலில் பத்திற்கும் மேற்பட்ட காயங்கள் இருந்தன. யுத்த முடிவின் பின் மீண்டும் குறைஷிகள் யுத்தத்திற்குத் தயாராகுவதாகச் செய்தி கிடைத்த போது நபி (ஸல்) அவர்கள் உஹது வீரர்கள் அனைவரும் அடுத்த யுத்தத்திற்குத் தயாராக வேண்டும் எனக் கூறி ஹம்ராஉல் அஸத் எனும் மதீனாவிலிருந்து மக்காவை நோக்கி எட்டு மைல் தொலைவிலுள்ள இடத்திற்குச் சென்று மூன்று தினங்கள் எதிரிகளின் வருகையை எதிர்பார்த்துக் காத்திருந்தார்கள். எதிரிகள் வராததால் பின்னர் மதீனா திரும்பினர்.

இந்நிகழ்ச்சியிலும் உடலில் பல காயங்கள் ஏற்பட்டு சோர்ந்து போயிருந்த நிலையிலும் அன்னையவர்கள் தளராக உறுதியுடன் பங்கேற்றார்கள். பெண்கள் யுத்தத்தில் பங்கேற்க வேண்டும் என்ற கட்டாயமில்லாத போதும் கூட ஈமானிய உணர்வு காரணமாக இத்தகைய தியாகங்களுக்கு அன்னையவர்கள் முன் வந்தார்கள். இவ்வாறு நபி (ஸல்) அவர்கள் காலத்தில் நடந்த யுத்தங்களில் மட்டுமின்றி அதன் பின் நடந்த பல யுத்தங்களிலும் அன்னையவர்கள் பங்கு கொண்டு தனது வீரத்தைக் காட்டியுள்ளார்கள்.

### பைஅதுர் ரிழ்வான்

ஹுதைபிய்யாவின் உடன்படிக்கைக்குச் சற்று முன்னர் மக்கா நகருக்குள் தூதுவராகச் சென்ற உஸ்மான் (ரலி) அவர்கள் கொலை செய்யப்பட்டு விட்டார் என்ற வதந்ததியின் பின் ஒரு மரத்தடியில் அங்கிருந்த அனைத்து முஸ்லிம்களும் உயிருள்ளவரை போராடுவோம் என்று செய்த பைஅத் இஸ்லாமிய வரலாற்றில் முக்கியமானதாகும். இந்த பைஅத்தில் பங்கேற்றோர் பற்றி அருள் மறை அல்குர்ஆனில் முஃமின்கள் மரத்தடியில் உம்மிடம் பைஅத் செய்ததை அல்லாஹ் பொருந்திக் கொண்டான். அவர்களது உள்ளத்தில் இருப்பதை அறிந்து அவர்கள் மீது அமைதியையும் இறக்கி வைத்தான்.. .. .. (48:18) என்று கூறுகின்றான்.

நபி (ஸல்) அவர்களும் இந்த பைஅத்தில் பங்கேற்ற எவரும் நரகம் நுழைய மாட்டார்கள் என்று புகழ்ந்துரைத்துள்ளார்கள். சிறப்பு மிக்க இந்நிகழ்ச்சியிலும் இவர் பங்கேற்றுள்ளார். இது அன்னையவர்களுக்கு மேலும் சிறப்பை ஈட்டிக் கொடுத்த நிகழ்ச்சியாகும்.

### தியாகம்

பெண்கள் இயல்பிலேயே நாமுண்டு நம் வேலையுண்டு என்ற குணம் கொண்டவர்கள். தம் உறவுக்காரர்கள் கூட பொதுப் பிரச்னைகளில் தலையிடுவதை அவர்கள் விரும்ப மாட்டார்கள். இவ்வாறே தம் கணவர், புதல்வர்கள் சிரமப்படுவதை அவர்களால் சகித்துக் கொள்ள முடியாது. அதுவும்

பொது வேலைகளுக்காகச் சிரமப்படுவதென்றால் நச்சரித்துக் கொண்டேயிருப்பர். ஆனால் உம்மு அம்மாரா (ரலி) அவர்கள் அப்படியிருக்கவில்லை. தன்னிருமகன்களையும் இறைவழியில் இழந்தார்கள். அதில் இன்பமும் கண்டார்கள்.

நபி (ஸல்) அவர்களது காலத்திலேயே பொய்யன் முஸைலமா தன்னை நபியெனக் கூறிக் கொண்டிருந்தான். இவனிடத்தில் உம்மு அம்மாராவின் மகன் ஹபீப் பின் செய்தை நபி (ஸல்) அவர்கள் தூதுவராக அனுப்பினார்கள். அவன் ஹபீப் (ரலி) அவர்களைப் பிடித்து சித்திரவதை செய்தான். முஹம்மத் இறைத்தூதர் என்கிறாயா? எனக் கேட்க ஆம் என்றார். என்னையும் இறைத்தூதர் என நீ சாட்சி சொல்வாயா? எனக் கேட்ட போது இல்லை என மறுத்தார். இதனால் அவர் அணுஅணுவாக வதை செய்ப்பட்டார். இறுதியில் ஷஹீதானார். இந்தத் துயரச் செய்தியைக் கேள்விப்பட்டு உம்மு அம்மாரா (ரழி) தாய்ப் பாசத்தால் கலங்கினாலும் தன் மகன் இறுதி வரை உறுதி தளராது போராடி உயிர் நீத்துள்ளார் என்பதையறிந்து ஆனந்தம் கொண்டார்கள்.

### யமாமாப் போர்

நபி (ஸல்) அவர்கள் மரணிக்க அபூபக்கர் (ரலி) அவர்கள் கிலாபத்தை ஏற்ற போது முஸைலமாவின் கெடுபிடிகள் அதிகரித்தன. இதனால் முஸைலமாவுக்கெதிராக அபூபக்கர் (ரலி) யுத்தப் பிரகடனம் செய்தார்கள். அந்நேரத்தில் சற்று வயது சென்றிருந்த அன்னையவர்கள் தானும் இந்த யுத்தத்தில் பங்கேற்க அனுமதி கோரிய போது அன்னையின் வீரத்தையறிந்திருந்த அபூபக்கர் (ரலி) அவர்கள் அங்கீகரித்தார்கள். எனவே, தனது அடுத்த மகன் அப்துல்லாஹ்வுடன் பொய்யன் முஸைலமாவின் படையை எதிர்கொள்ள காலித் பின் வலீத் (ரலி) அவர்களின் தலைமையில் நீண்ட தூரப் பயணம் மேற் கொண்டார்கள்.

இந்த யுத்தத்தில் பலர் முஸைலமாவை என் கையாலேயே கொல்ல வேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொண்டு களத்தில் இ றங்கியிருந்தனர். உம்மு அம்மாரா இந்த யுத்தத்தில் நான் ஷஹீதாக வேண்டும், அல்லது முஸைலமாவை கொல்ல வேண்டும் என்ற சபதம் செய்திருந்தார்கள். தாயைப் போன்றே தனையன் அப்துல்லாஹ்வும் தன் உடன் பிறந்த சகோதரனின் உடலைச் சிதைத்து உயிரைக் குடித்த முஸைலமாவைப் பழிதீர்க்க வேண்டுமெனக் கங்கணம் கட்டியிருந்தார்.

உஹது யுத்தத்தில் காபிர்கள் அணியிலிருந்து ஹம்ஸா (ரலி) அவர்களை அம்பெறிந்து வீழ்த்திய வஹ்ஷி என்பவரும் இஸ்லாத்தை ஏற்றிருந்தார். தான் ஏற்கனவே சிறந்த மனிதரான ஹம்ஸாவைக் கொன்றதற்கு ஈடாக மனிதர்களில் மோசமானவனான முஸைலமாவைக் கொல்ல வேண்டுமென அவர் எண்ணி யுத்தத்திற்கு வந்திருந்தார்.

இதன்படி வஹ்ஷி (ரலி) அம்பெறிய, உம்மு அம்மாராவின் மகன் அப்துல்லாஹ் (ரலி) அவர்கள் வாளாள் வெட்ட முஸைலமா என்ற பொய்யனின் அட்டகாசம் அடங்கியது.

இந்த யுத்தத்தில் உம்மு அம்மாரா (ரலி) அவர்கள் தனது புதல்வர் அப்துல்லாஹ்வையும் இழந்தார்கள். உடம்பெங்கும் பன்னிரெண்டு வெட்டுக் குத்துக் காயங்களுக்கு அன்னையவர்கள் ஆளானார்கள். இது மட்டுமின்றி அன்னையவர்களின் ஒரு கரம் முற்றாகவே இந்த யுத்தத்தில் துண்டாடப்பட்டது.

இறை பாதையில் இரு மைந்தர்களை இழந்தார்கள். உடம்பெல்லாம் தழும்புகளைத் தாங்கினார்கள். ஒரு கையையும் இழந்தார்கள். இத்தனை தியாகங்களையும் அல்லாஹ்வுக்காக இஸ்லாத்தின் வளர்ச்சியில் கொண்ட பற்றால் செய்தார்கள்.

இந்த வீரப் பெண்மணியுடன் ஒப்பிடும் போது நாமெல்லாம் அவரின் கால் தூசிக்கும் சமமாகுவோமா என்பது ஐயமே! ஒரு பெண்ணாக இருந்த சமூகப் போராட்டத்தில் இவர்கள் பங்கேற்றுள்ளார்கள். நாமோ ஒதுங்கிப் பதுங்கிச் செல்லும் போக்கைக் கைக் கொள்கிறோம்.

வன்முறையும் இன, மத வெறியும் தூண்டப்படும் பெண்கள் பகிரங்கமாக பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்படும் இந்த அநாகரீக காலத்தில் வாழும் பெண்களிடம் அன்னை உம்மு அம்மாராவின் வீரமும் துணிவும் மிக மிக அவசியமாகும்.

உம்மு அம்மாரா (ரலி) அவர்களின் வீரத்தையும், தியாகத்தையும் படிப்பினையாகக் கொண்டு எம் வாழ்வைச் செப்பனிட நாம் கடமைப்பட்டுள்ளோம். எல்லாம் வல்ல அல்லாஹ் இப்பெண்மணிக்கு வழங்கிய சிறந்த குணங்களை எமக்குத் தந்தருள்வானாக! ஆமீன்.

## உம்மு ரூமான் (ரலி)

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

**"உங்களில் எவராவது சுவனத்தின் அழகிய கன்னிப் பெண்ணொருத்தியைக் காண விரும்புவீர்களென்றால், (அவர்கள்) உம்மு ரூமான் (ரலி) அவர்களைக் காணட்டும்".**

உம்மு ரூமான் (ரலி) அவர்கள் அபுபக்கர் சித்தீக் (ரலி) அவர்களின் மனைவியும், ஆயிஷா (ரலி) அவர்களின் தாயாருமாவார்கள். ஆக, அந்த வகையில் இறைத்தூதர் (ஸல்) அவர்களுக்கு மாமியாராவார்கள். இன்னும் இவரது மகன் அப்துர்ரஹ்மான் பின் அபுபக்கர் (ரலி) அவர்கள் சிறந்த குதிரை வீரரும், போர்க்கலைகளில் வல்லவருமாவார். இவர் தனது தாயிடமிருந்து தான் தைரியத்தையும், சிறந்த நற்பண்புகளையும் பெற்றுக் கொண்டார்கள். இவரது இயற்பெயர் ஸைனப் என்பதாகும், இருப்பினும் இவரது குடும்பப் பெயர் கொண்டே அறியப்படுகின்றார். இவர் பொறுமையும், சகிப்புத்தன்மை மிக்கவருமாக இருந்ததோடு, பிரச்னைகளின் பொழுது ஊகத்திற்கு இடம் கொடாமல், அதனைத் தீர ஆய்வு செய்து தெளிவு பெற்றுக்கொள்வதனைப் பண்பாகக் கொண்டவர். ஒருசமயம், ஆயிஷா (ரலி) அவர்களின் மீது களங்கம் சுமத்தப்பட்ட பொழுது, மற்ற பெண்களைப் போல வாய்கூசாமல் ஏச்சிலும், பேச்சிலும் ஈடுபடாமல் அமைதி காத்தார்கள். இவரது கணவர் அபுபக்கர் சித்தீக் (ரலி) அவர்கள் இஸ்லாத்தின் மேன்மைகளைப் பற்றி எடுத்துச் சொன்ன பொழுது, அதனை ஏற்றுக் கொண்டதோடு, காலம் காலமாக ஏற்றுப் பின்பற்றி வந்த மார்க்கத்தை துறந்து இஸ்லாத்தினை வாழ்வியல் நெறியாக ஏற்றுக் கொண்டார்கள். இறைத்தூதர் (ஸல்) அவர்களின் ஆன்மீக ரீதியான மற்றும் ஒழுக்க ரீதியான போதனைகளையும் ஏற்றுக் கொண்டதோடு, மறுமையில் கிடைக்கவிருக்கின்ற சுவனத்தின் மீது ஆசை கொண்டவர்களாக அவர்கள் திகழ்ந்தார்கள்.

ஃபாத்திமா பின் அஸத் (ரலி) அவர்கள் அரேபிய தீபகற்பத்தில் உள்ள சராத் என்ற இடத்தில் தங்களது இளமை வாழ்வை வாழ்ந்தார்கள். அவர்கள் வயதுக்கு வந்த பொழுது, அவர்களது சொந்த குலத்தைச் சேர்ந்த இளைஞரான அப்துல்லா பின் ஹாரித் ஸக்பரா அஸ்தி என்பவருக்கு மணமுடித்துக் கொடுக்கப்பட்டார்கள். இவர்களுக்கு ஒரு மகன் பிறந்தார், அவரது பெயர் துஃபைல் பின் அப்துல்லா என்பதாகும். அதன்பின் இவர்கள் மக்காவிற்கு இடம் பெயர்ந்தார்கள், இவர் அபூபக்கர் சித்தீக் (ரலி) அவர்களின் நெருங்கிய தோழராக ஆனார்கள். மிகக் குறுகிய காலத்திலேயே அப்துல்லா இறந்து போனதுடன், அவர்களது மனைவியும், பிள்ளையும் ஆதரவற்ற அநாதைகளானார்கள். இந்த நிலையைக் கண்ட அபுபக்கர் (ரலி) அவர்கள், அப்துல்லா வின் விதவை மனைவியை தானே முன்வந்து மணந்து

கொண்டார்கள். இந்தத் திருமணத்தில் உம்மு ரூமான் (ரலி) அவர்கள் மிகவும் சந்தோஷமடைந்ததோடு, அதன் பின் இவருக்கு அப்துர்ரஹ்மான் என்ற ஆண் மகவும், ஆயிஷா என்ற பெண் மகவும் பிறந்தார்கள். அபுபக்கர் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதற்கு முன்பதாக கதீலா பின்த் அப்துல் உஸ்ஸா என்பவரை மணந்திருந்தார்கள். இவர்களுக்கு அஸ்மா என்ற பெண் மகவும், அப்துல்லா என்ற ஆண் மகவும், மதீனா ஹிஜ்ரத்திற்கு சற்று முந்தைய நாட்களில் பிறந்திருந்தது. அதன் பின் அபுபக்கர் (ரலி) அவர்கள் அஸ்மா பின்த் உமைஸ் என்பவரை மணந்து கொண்டார்கள். இவர்களுக்கு முஹம்மது பின் அபுபக்கர் என்ற ஆண்மகவு பிறந்தது. அதன் பின் ஹபீபா பின்த் காரிஜிய்யா என்ற பெண்ணை மணந்தார்கள், இவர்களுக்கு உம்மு குல்தூம் என்ற பெண் மகவு பிறந்தது.

உம்மு ரூமான் (ரலி) அவர்கள் இஸ்லாத்தின் ஆரம்ப நாட்களிலேயே இஸ்லாத்தினை ஏற்றுக் கொண்டார்கள். தபகத் இப்னு ஸஅத் என்ற நூலில் உம்மு ரூமான் (ரலி) அவர்கள் இஸ்லாத்தின் ஆரம்ப நாட்களிலேயே இஸ்லாத்தினை ஏற்றுக் கொண்டவர்கள் என்று பதிவு செய்யப்பட்டிருக்கின்றது. இறைத்தூதர் (ஸல்) அவர்களின் முன்னிலையிலேயே இஸ்லாத்தினை ஏற்றுக் கொண்ட உம்மு ரூமான் (ரலி) அவர்கள், மதீனாவிற்கு ஹிஜ்ரத் சென்றவர்களின் பட்டியலிலும் இடம் பெற்றிருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இஸ்லாத்தினை ஏற்றுக் கொண்ட மக்களை குறைஷிகளின் நிராகரிப்பாளர்கள் படுத்திய பாட்டையும், முஸ்லிம்களின் மீது அவர்கள் கட்டவிழ்த்து விட்ட கொடூரங்களையும் கண்ணால் கண்ட உம்மு ரூமான் (ரலி) அவர்கள், முஸ்லிம்களின் நிலையை எண்ணி எண்ணி கண்ணீர் வடிக்கக் கூடியவர்களாக இருந்தார்கள். இருப்பினும், தைரியத்தை வரவழைத்துக் கொண்டவர்களாகவும், முஸ்லிம்களின் துன்பங்களைப் போக்க தனது கணவர் செய்து வரும் அற்பணிப்புகளுக்கு உறுதுணையாக இருப்பதிலும் அவர்கள் இன்பங் காணக் கூடியவர்களாக இருந்தார்கள். தனது கணவர் மூலியமாக இஸ்லாத்தின் உன்னதமான தாக்கத்தைப் பெற்றுக் கொண்ட இவர்கள், அதில் நிம்மதியும் கண்டார்கள்.

இறைத்தூதர் (ஸல்) அவர்களும், தனது தோழர்களை நோக்கி மன தைரியத்தை இழந்து விட வேண்டாம், அமைதியாகவும், பொறுமையாகவும், இறைநம்பிக்கையில் உறுதியாகவும் இருங்கள் என்று ஆறுதல் கூறக் கூடியவர்களாக இருந்தார்கள். நிச்சயமாக உங்களுக்கு சுவனம் வாக்களிக்கப்பட்டிருக்கின்றது என்று உற்சாகமூட்டக் கூடியவர்களாகவும் இருந்தார்கள். இவ்வாறு குறைஷிகளின் அதிகமான துன்பங்களுக்கு இரையானவர்களில் ஒருவர் தான், இஸ்லாத்தின் முதல் முஅத்தினாகப் பொறுப்பேற்றுக் கொண்ட பிலால் (ரலி) அவர்கள். பிலால் (ரலி) அவர்களும், அவர்களுக்கு இணையாக துன்பங்களை அனுபவித்தவறுமான கப்பாப் பின் அரத் (ரலி) அவர்களை நோக்கி, 'இஸ்லாத்தின் ஆரம்ப நாட்களில் ஒவ்வொரு முஸ்லிமும் எவ்வாறெல்லாம் துன்பங்களை அனுபவித்தார்கள் என்று சுட்டிக்காட்டி, அவர்களை உற்சாகப்படுத்தக் கூடியவர்களாக இறைத்தூதர் (ஸல்) அவர்கள் திகழ்ந்தார்கள். இஸ்லாம் ஒவ்வொரு காலங்களிலும் மக்கள் முன் கொண்டு வரப்பட்ட பொழுது, அதனை ஏற்றுக்கொண்ட மக்கள் துன்புறுத்தப்பட்டார்கள், இன்னல்களுக்கு ஆளாக்கப்பட்டார்கள். அவர்கள் இறைநம்பிக்கை கொண்டவர்கள் என்பதற்காக, அவர்களது உடல்கள் இரு கூறாகப் பிளக்கப்பட்டன, ரம்பம் கொண்டு அறுக்கப்பட்ட போதிலும் அவர்கள் தாங்கள் ஏற்றுக் கொண்ட இறைநம்பிக்கையை விட்டு விடவில்லை. அதிலிருந்து சற்றும் விலகிச் செல்லவில்லை என்று கூறி, இறைநம்பிக்கைக்கு உரம் சேர்க்கக் கூடியவர்களாக இறைத்தூதர் (ஸல்) அவர்கள் திகழ்ந்தார்கள்.

“ஓ..! யாஸரின் குடும்பத்தவர்களே..! பொறுமையுடன் இருங்கள், (இறுதி நாளில்) உங்களுக்கு சுவனம் சித்தப்படுத்தி வைக்கப்பட்டுள்ளது”.

சொல்லொண்ணாக் கொடுமைகள் கட்டவிழ்த்து விடப்பட்ட அந்தநீண்ட நெடிய நாட்களில், உம்மு ரூமான் (ரலி) அவர்கள் தன் கண் முன் கொடுமையான காட்சிகளைக் கண்ட பொழுதிலும் இறைநம்பிக்கை இழக்காமல் உறுதியாக இருந்தார்கள். அவர்களின் அதிகமான நேரங்கள் இறைவனிடம் தியானிப்பதிலும், தொழுகையைக் கடைபிடிப்பதிலும் கழிந்து கொண்டிருந்தது. தனது கணவர் அபுபக்கர் (ரலி) அவர்கள் சத்திய மார்க்கமாம் இஸ்லாத்தினை மேலோங்கச் செய்வதற்காக அழைப்புப் பணி செய்து கொண்டிருந்த பொழுது, அதனால் கவரப்பட்ட உம்மு ரூமான் (ரலி) அவர்கள் தனது கணவருக்கு ஆத்மீக ரீதியாக ஒத்துழைப்பு வழங்கினார்கள், உறுதுணையாக இருந்தார்கள். இன்னும் இறைத்தூதர் (ஸல்) அவர்களும் தனது ஆருயிர்த் தோழரான அபுபக்கர் (ரலி) அவர்களின் வீட்டிற்கு அடிக்கடி வந்து போகக் கூடியவர்களாக இருந்தார்கள். அவ்வாறு வருகை தரும் பொழுதெல்லாம் ஆயிஷா (ரலி) அவர்களை நற்பண்புகளோடு வளர்ப்பதற்கான அறிவுரைகளை வழங்கிச் செல்லக் கூடியவர்களாக இருந்தார்கள். கதீஜா (ரலி) அவர்கள் ஹிஜ்ரத்திற்கு மூன்று வருடங்களுக்கு முன்னர், மரணமடைந்து விட்டதன் பின்னர் இறைத்தூதர் (ஸல்) அவர்கள், ஒரு வருடமாக எந்தப் பெண்ணையும் மணமுடிக்காமலேயே வாழ்ந்து வந்தார்கள். அதன்பின்னர் தான் ஜிப்ரீல் (அலை( அவர்களின் அறிவுறுத்தலுக்குப் பின்னர், இறைத்தூதர் (ஸல்) அவர்கள் ஆயிஷா (ரலி) அவர்களை மணந்து கொண்டார்கள்.

ஒருமுறை இறைத்தூதர் (ஸல்) அவர்கள் ஆயிஷா (ரலி) அவர்களிடம், “உங்களை நான் தொடர்ந்து மூன்று நாட்களாக கனவில் கண்டு வந்தேன்” என்றார்கள். வானவ தூதர் ஜிப்ரீல் (அலை) அவர்கள் உங்களது உருவத்தை பட்டுத் துணியில் சுற்றி எடுத்து வந்து, என்னிடம் காண்பித்து, இது தான் உங்களது மணமகளது தோற்றமாகும் என்றார்கள். நான் அந்தத் துணியை விலக்கிப் பார்த்த பொழுது உங்களது உருவம் அதில் இருக்கக் கண்டேன். அல்லாஹ் தனது தூதர் (ஸல்) அவர்களின் துணைவியாக ஆயிஷா (ரலி) அவர்களையே தேர்ந்தெடுத்துக் கொண்டான் என்றார்கள். கவ்லா பின்த் ஹகிம் (ரலி) அவர்கள் இறைத்தூதர் (ஸல்) அவர்களிடம், உங்கள் முன் இரண்டு தேர்வு இருக்கின்றது, இவர்களில் யாரை நீங்கள் மணக்க விரும்புகின்றீர்கள் என்று கேட்ட பொழுது, இரண்டு பேரையும் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தேர்ந்தெடுத்து மணந்து கொண்டார்கள். இதன் மூலம் உம்மு ரூமான் (ரலி) அவர்கள் இறைத்தூதர் (ஸல்) அவர்களுக்கு மாமியார் என்ற சிறப்புத் தகுதியையும் பெற்றுக் கொண்டார்கள்.

இறைவன் தன்னுடைய அடியாரும், தூதருமான முஹம்மது (ஸல்) அவர்களை மக்காவை விட்டு மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்து கிளம்புமாறு உத்தரவிட்டதும், இறைத்தூதர் (ஸல்) அவர்கள் முதன்முதலில் தனது ஆத்மார்த்த நண்பரான அபுபக்கர் (ரலி) அவர்களது வீட்டிற்குத் தான் முதலில் விரைந்தார்கள். இறைத்தூதர் (ஸல்) அவர்களின் விருப்பத்தினை அறிந்து கொண்ட அபுபக்கர் (ரலி) அவர்கள் ஏன் எதற்கு என்ற எந்தக் கேள்வியையும் கேட்காமல் உடன் கிளம்ப சித்தமானார்கள். பயணத்திற்குத் தேவையான சில பொருட்களை எடுத்துக் கொண்டு, அத்துடன் வீட்டில் இருந்த அத்தனை செல்வங்களையும் தன்னுடன் எடுத்துக் கொண்டார். தன்னுடைய தந்தையையும், பிள்ளைகளையும் இறைவனது பாதுகாப்பின் கீழ் விட்டு விட்டு, இதுவரை கண்டறியாத ஒரு இடத்திற்கு இருவரும் பயணமானார்கள்.

உம்மு ரூமான் (ரலி) அவர்களுக்கு இது மிகவும் கடுமையான நேரமாக இருந்தது. இறைத்தூதர் (ஸல்) அவர்களுடன் ஹிஜ்ரத் செய்து சென்று விட்ட அபுபக்கர் (ரலி) அவகள் வீட்டில் இருந்த அத்தனை செல்வத்தையும் தன்னுடன் எடுத்துச் சென்று விட்டதன் காரணத்தால், வீட்டின் அன்றாடச்

செலவுகளுக்கே அவர் சிரமப்பட வேண்டியதாயிருந்தது. இந்த சிரமங்களுக்கு இடையிலும், அவரது உள்ளம் யா அல்லாஹ் அந்த இருவரையும் மிகவும் பாதுகாப்பாக மதீனாவிற்குக் கொண்டு சேர்த்து விடு என்று படைத்த வல்லோனை நோக்கி பிரார்த்தனை நீண்டு கொண்டே இருந்தது. இறைத்தூதர் (ஸல்) அவர்களும், அபுபக்கர் (ரலி) அவர்களும் மதீனாவை மிகவும் பாதுகாப்பாக அடைந்து விட்டதன் பின்னர், ஸைத் பின் ஹாரித் (ரலி) மற்றும் அபூ ராஃபிஃ (ரலி) என்ற இரு தோழர்களையும் தன்னுடைய குடும்பத்தவர்களை அழைத்து வருவதற்காக இறைத்தூதர் (ஸல்) அவர்கள் மக்காவிற்கு அனுப்பி வைத்தார்கள். அதேபோல அப்துல்லா பின் அரீகத் (ரலி) என்ற தோழரிடம் தனது மகன் அப்துல்லாவுக்கு ஒரு கடிதமும் அனுப்பி வைத்த அபுபக்கர் சித்தீக் (ரலி) அவர்கள், இருவரும் சேர்ந்து தனது குடும்பத்தவர்களை அழைத்து வர மக்காவிற்கு அனுப்பி வைத்தார்கள். ஆயிஷா (ரலி) அவர்களும், அவரது தாயாருமான உம்மு ரூமான் (ரலி) அவர்களும் ஒட்டகத்தில் மதீனாவை நோக்கிப் பயணமானார்கள். பயணம் செய்து போய்க் கொண்டிருக்கும் வழியில், எதிர்பாராத விதமாக அவர்கள் பயணம் செய்த ஒட்டகம் திமிர ஆரம்பித்தது, கட்டுப்பாட்டை இழந்து அவர்கள் இருவரையும் தூக்கி எறிந்தது. உம்மு ரூமான் (ரலி) அவர்கள் தனது பிரியத்திற்குரிய மகள் கீழே விழுந்தது குறித்து மிகவும் கவலையடைந்தவர்களாக, "என்னுடைய இளம் மணப்பெண்ணே" என்று அழைத்து சோகத்தை வெளிப்படுத்தினார்கள். பின் ஒருவர் அந்த ஒட்டகத்தின் கடிவாளத்தைப் பிடித்து அடக்குமாறு கூறவும், அதன்படி செய்த பின் அந்த ஒட்டகம் அமைதியானது. அதன் மூலம் தாயும், மகளும் மிகப் பெரிய ஆபத்திலிருந்து பாதுகாக்கப்பட்டார்கள்.

இவர்கள் மதீனாவை அடைந்ததும், அபுபக்கர் (ரலி) அவர்கள் தங்கியிருந்த வீட்டில் குடியேறினார்கள், வீட்டினை ஒழுங்கு செய்ய ஆரம்பித்தார்கள். இந்த வீட்டிலிருந்து தான் ஆயிஷா (ரலி) அவர்கள் மணப் பெண்ணாக இறைத்தூதர் (ஸல்) அவர்களது வீட்டிற்குச் சென்றார்கள். எனவே, இந்த இல்லம் இறைச் செய்தி வெளிப்பாட்டினைச் சுமந்த இல்லமாக பரிணமித்திருந்ததோடு, இன்னும் இறைநம்பிக்கையாளர்களின் தாய்மார்கள் வரிசையில், தனது மகளும் இணைந்தது குறித்து உம்மு ரூமான் (ரலி) அவர்கள் மிகவும் சந்தோசமடைந்தார்கள். இதனை விட வேறென்ன பெருமைகள் என்னுடைய குடும்பத்திற்கு வேண்டும்?! என்றும் அவர்கள் தனது சந்தோசத்திற்கான காரணத்தையும் தனக்குள் கூறிக் கொண்டார்கள்.

நயவஞ்சகர்கள் ஆயிஷா (ரலி) அவர்கள் மீது அபாண்டமான குற்றச்சாட்டைக் கூறிய பொழுது, முழு மதீனா நகரமே ஒருவித இறுக்கமான சூழலில் சிக்கித் தவித்தது, எங்கும் குழப்பம் நிறைந்து முஸ்லிம்களை அலைக்கழித்துக் கொண்டிருந்தது. இறைத்தூதர் (ஸல்) அவர்களின் மனைவியாக இருக்கக் கூடியவர் எவ்வாறு மிகப் பெரிய பாவம் ஒன்றைச் செய்திருக்க முடியும், அவ்வாறு செய்திருக்கும்பட்சத்தில் அதனை எவ்வாறு ஒப்புக் கொள்ள முடியும்? என்று மக்கள் தங்களைத் தாங்களே கேட்டுக் கொள்ள ஆரம்பித்திருந்தார்கள்.

முழு மதீனா நகரமே இப்பொழுது ஆயிஷா (ரலி) அவர்களைப் பற்றி, அவர்கள் நல்லொழுக்கமுடையவர் அல்லர் என்று எள்ளி நகையாட ஆரம்பித்திருந்தது. தன்னைப் பற்றி மதீனா மக்கள் என்ன பேசிக் கொண்டிருக்கின்றார்கள் என்பதை உம்மு மஸ்தா என்ற பெண்மணி மூலம் அறிந்து கொண்ட அன்னை ஆயிஷா (ரலி) அவர்கள், இன்னும் இவை அனைத்திற்கும் மூல காரணம் அந்த பெண்மணியின் மகன் தான் என்பதையும் அறிந்து மிகவும் கவலை அடைந்தார்கள். இறைத்தூதர் (ஸல்) அவர்களிடம் அனுமதி பெற்று தனது தாய் வீட்டிற்குச் சென்று விட்டார்கள். தனது பெற்றோர்களிடம் நடந்த விபரங்களை கண்ணீர் மல்க ஆயிஷா (ரலி) அவர்கள் கூறிய பொழுது, அவர்களது குடும்பமே இப்பொழுது இறுக்கமான சோகத்தின் பிடியில் வாழ ஆரம்பித்தது. இறைத்தூதர் (ஸல்) அவர்களும் மிகவும் கவலை அடைந்தார்கள், இன்னும் ஆயிஷா (ரலி) அவர்களை அவர்களது வீட்டிற்கு வந்து

பார்க்க வந்தார்கள். அப்பொழுது, ஆயிஷாவே.., உண்மையிலேயே நீங்கள் பாவம் செய்திருக்கும்பட்சத்தில் இறைவனிடம் மன்னிப்புக் கோரிக் கொள்ளுங்கள், அவன் மிகவும் கருணையாளனாக இருக்கின்றான், உண்மையில் நீங்கள் அந்த பாவததைச் செய்யவில்லை என்றால், அதன் உண்மையை அவன் விரைவில் வெளிப்படுத்துவான், கவலைப்படாதீர்கள், அவன் உங்களை மன்னிப்பான் என்றும் கூறினார்கள். தனது தாயாரைப் பார்த்த ஆயிஷா (ரலி) அவர்கள், இதற்கு நீங்களே பதில் கூறுங்கள் என்ற பொழுது, உம்மு ரூமான் (ரலி) அவர்கள் எதனையும் பேசாது அமைதியாக இருந்து விட்டார்கள். பின்னர் தனது தந்தையான அபுபக்கர் (ரலி) அவர்களைப் பார்த்து, இறைத்தூதர் (ஸல்) அவர்களுக்கு பதில் கூறுமாறு கேட்டுக் கொண்டார்கள், அவரும் எந்த பதிலையும் பேசாது அமைதியாக இருந்து விட்டார்கள். இறுதியாக, தானே அதற்கான பதிலை அளிக்க முன் வந்த ஆயிஷா (ரலி) அவர்கள், 'நான் என்னுடைய தவறை மறுத்தேன் என்றால் - நான் குற்றமற்றவள் என்பதை அல்லாஹ் அறிவான் - முஹம்மது (ஸல்) அவர்கள் அதனை நம்பவில்லையெனில், அந்தத் தவறை நான் ஒப்புக் கொள்ளும்பட்சத்தில், அவர் திருப்தி அடையக் கூடும், ஆனால் நான் செய்யாத தவறை ஒப்புக் கொள்வது உண்மைக்குப் புறம்பானதாகி விடும். இதற்குச் சரியான பதில் என்னவென்றால், தனது மகன்களுக்கு முன்னால் எந்தவித உதவியுமற்ற நிலையில் இருந்த யூசுப் (அலை) அவர்களின் தந்தையவர்களின் பதிலே மிகச் சிறந்ததாக இருக்குமென்று நினைக்கின்றேன் என்று கூறி முடித்த ஆயிஷா (ரலி) அவர்கள் கூறினார்கள் :

"எனவே (எனக்கு இந்நிலையில் அழகிய) பொறுமையை மேற்கொள்வதே நலமாக இருக்கும் மேலும், நீங்கள் கூறும் விஷயத்தில் அல்லாஹ்வே உதவி தேடப்படுபவன்" என்று கூறினார். (12:18)

என்ன தான் தன்னைத் தேற்றிக் கொண்ட போதிலும், அந்த தினங்கள் மிகவும் கொடுமையாக இருந்தன, ஏனெனில் யூசுப் (அலை) அவர்களின் தந்தையான யாக்கூப் (அலை) அவர்களின் பெயரைக் கூட அவர்களால் தனது ஞாபகப் பரப்பிற்குக் கொண்டு வர இயலவில்லை. அந்த அளவுக்கு மன அமைதியின்றி தவித்தார்கள். இந்த சம்பாஷனைகள் நடந்து கொண்டிருக்கும் பொழுதே, இந்தச் சம்பவம் குறித்த விளக்கம் இறைச் செய்தியாக வெளியாகிக் கொண்டிருந்தது, இறைச் செய்தி நிறைவடைந்தவுடன் இறைத்தூதர் (ஸல்) அவர்களை வியர்வை முத்துக்களாகச் சூழ்ந்திருந்தன, ஆயிஷா (ரலி) அவர்களின் பக்கம் புன்னகையுடன் திரும்பினார்கள் இறைத்தூதர் (ஸல்) அவர்கள்.

இது சம்பந்தமாக இறைவனே தனது இறைச் செய்தியின் மூலம் தெளிவை வழங்கியது குறித்து, ஆயிஷா (ரலி) அவர்களின் பெற்றோர் மிகவும் சந்தோசமடைந்தார்கள். ஆயிஷா (ரலி) அவர்களைப் பார்த்து.., உங்களது கணவருக்கு நன்றி கூறுங்கள் என்றார்கள். ஆனால் ஆயிஷா (ரலி) அவர்களோ எனது நன்றிக்குரியவன் அல்லாஹ் தான், அவனே என்மீதுள்ள களங்கத்தைத் துடைத்தெறிந்தான் என்றார்கள். மேற்கண்ட சம்பவம் குறித்த வசனம் இறங்கியதன் பின்னர், ஆயிஷா (ரலி) அவர்கள் மீதிருந்த பாசமும், இன்னும் மதிப்பும் இறைத்தூதர் (ஸல்) அவர்களிடம் முன்னைக் காட்டிலும் அதிரிகத்தது.

உம்மு ரூமான் (ரலி) அவர்கள் இரவும் பகலும் இறைவணக்கத்தில் கழித்து இன்பமடையக் கூடியவர்களாக இருந்தார்கள். அவர்களின் முழு நோக்கமே அல்லாஹ்வினதும் இன்னும் அவனது தூதர் (ஸல்) அவர்களினது முழு திருப்தியையும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதாகவே இருந்தது. அவர் தனது கணவருக்கு எல்லா நேரத்தில் கடமையாற்றக் கூடிய மனைவியாக இருந்தார்கள். தொழுகையைப் பற்றி தனது கூறுகின்றவைகளைக் குறித்து வைத்துக் கொள்ளக் கூடியவர்களாக இருந்தார்கள். ஒருசமயம் அபுபக்கர் (ரலி) அவர்கள் தனது வீட்டில் நுழைந்த பொழுது உம்மு ரூமான் (ரலி) அவர்கள் தொழுது கொண்டிருந்ததைப் பார்த்து விட்டு, தொழுகையின் பொழுது அமைதியையும், கலங்கமில்லாத நிலையையும் உடல் எய்தி அதனை அது வெளிப்படுத்தக் கூடியதாக இருக்க வேண்டும்

என்று கூறினார்கள். அமைதியும் இன்னும் கவனமும் தொழுகையை முழுமையடையச் செய்ய உதவும் என்றார்கள், அபுபக்கர் (ரலி) அவர்கள்.

ஒருநாள் அபுபக்கர் சித்தீக் (ரலி) அவர்களும் அவர்களது மனைவி உம்மு ரூமான் (ரலி) அவர்களும் இறைத்தூதர் (ஸல்) அவர்களைக் காணச் சென்றார்கள். இருவரிடமும் நீங்கள் வந்த நோக்கமென்ன என்பதைத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொண்டார்கள் இறைத்தூதர் (ஸல்) அவர்கள். அதற்கு அவர்கள், "ஆயிஷா (ரலி) அவர்களுக்காக இறைவனிடம் பிரார்த்திக்குமாறு இருவரும் ஒரு சேர பதில் கூறினார்கள்." இந்தச் சம்பவத்தை இமாம் அத்தகபி அவர்கள் தனது சியார் அல் ஆலம் அந் நுப்லா என்ற நூலில் குறிப்பிட்டிருக்கின்றார்கள்.

ஆயிஷா (ரலி) அவர்களுக்காக இறைத்தூதர் (ஸல்) அவர்கள் பிரார்த்தனை புரிந்தார்கள், அந்தப் பிரார்த்தனை மூலமாக ஆயிஷா (ரலி) அவர்களின் வெளிப்படையான மற்றும் அந்தரங்கமான அனைத்துப் பாவங்களையும், அதில் எந்தத் தடயத்தையும் விட்டு வைக்காது அல்லாஹ் அனைத்தையும் மன்னித்தான். ஆயிஷா (ரலி) அவர்களின் பெற்றோர்கள் இருவரும் இது குறித்து மிகவும் சந்தோசமடைந்தார்கள்.

பின்னர் அவர்களிடம், இந்தப் பிரார்த்தனையானது யார் யாரெல்லாம் என்னை அல்லாஹ் இறைத்தூதராக அறிவித்த பின்னர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு, தீனில் உறுதியாகவும் இருந்தார்களோ அத்தனை பேருக்கும் என்னுடைய இந்தப் பிரார்த்தனை பொருந்தும் என்று கூறினார்கள்.

உம்மு ரூமான் (ரலி) அவர்கள் மீது இறைத்தூதர் (ஸல்) அவர்கள் அதிக மரியாதை வைத்திருந்தார்கள், அதற்குப் பிரதியீடாக இறைத்தூதர் (ஸல்) அவர்கள் பொருந்தக் கூடிய செயல்களுக்கு முன்னுரிமை கொடுத்துச் செய்பவர்களாக உம்மு ரூமான் (ரலி) அவர்கள் இருந்தார்கள். மனிதர்களுக்கும் இன்னும் படைத்தவனுக்கும் நிறைவேற்ற வேண்டிய கடமைகளை ஒவ்வொருவரும் சரிவர நிறைவேற்றும் பொழுது, உண்மையிலேயே மனித வாழ்வு அமைதியாகக் கழியக் கூடியதாக ஆகி விடும். ஒருநாள் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கதீஜா (ரலி) அவர்களைப் பற்றியும், அவர்களது பண்பு நலன்கள் பற்றியும் அதிகமாகவே பேசி விட்டார்கள். இதனைக் கேட்டுக் கொண்டிருந்த ஆயிஷா (ரலி) அவர்களுக்கு, பெண்களுக்கே உரிய அந்த பொறாமை எண்ணம் கொழுந்து விட்டு எரிய ஆரம்பிக்க, உணர்ச்சி வேகத்தில் தன்னையுமறியாமல், இந்த உலகத்திலே கதீஜா (ரலி) அவர்களை விட்டால் வேறு பெண்ணே கிடையாதா' என்று கேட்டு விட்டார்கள். இதனை எதிர்பார்க்காத இறைத்தூதர் (ஸல்) அவர்களுடைய முகம் கோபத்தால் சிவக்க ஆரம்பித்தது. இதனை அறிந்து கொண்ட உம்மு ரூமான் (ரலி) அவர்கள், 'ஆயிஷா (ரலி) அவர்கள் இன்னும் சிறுபிள்ளையாகவே இருக்கின்றார்கள், அவளை நீங்கள் ஒரு பொருட்டாகவே எடுத்துக் கொள்ள வேண்டாம் என்று இறைத்தூதர் (ஸல்) அவர்களிடம் கூறி, அவர்களைச் சாந்தப்படுத்தினார்கள். தனது மகளுக்காக தானே மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்கள்.

அப்பொழுது மிகவும் காயப்பட்ட மனதுடன் ஆயிஷா (ரலி) அவர்களைப் பார்த்து இறைத்தூதர் (ஸல்) அவர்கள் இவ்வாறு பதில் கொடுத்தார்கள், இந்த உலகததில் கதீஜா (ரலி) அவர்களை விட்டால் வேறு பெண்ணே இல்லையா என்று தானே கேட்டீர்கள்? இறைவன் மீத சத்தியமாக, ஆயிஷாவே.., உங்களது குலத்தவர்கள் என்னை இறைவனது தூதரென்று ஏற்றுக் கொள்ள மறுத்த பொழுது, அவள் என்னை தூதரென்று ஏற்றுக் கொண்டாள், இறைநம்பிக்கை கொண்டாள். இன்னும் உங்களிடம் நான் பெறாததை.., அதாவது, அவள் எனக்கு மழலைச் செல்வங்களை மிகப் பெரும் பொக்கிஷமாகத் தந்தாள், என்று கூறி முடித்தார்கள்.

உம்மு ரூமான் (ரலி) அவர்கள் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறிய அனைத்தையும் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தார்களே ஒழிய எந்த வார்த்தையும் பேசவில்லை, ஏனெனில் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் எப்பொழுதும் படைத்த வல்லோனின் உத்தரவுப்படியே பேசக் கூடியவர்களாக இருந்தார்கள் என்பதும் அவர்களது மௌனத்திற்குக் காரணமாகும். அவர்கள் எப்பொழுதும் தானே சுயமாகப் பேசக் கூடியவர்களல்லர், அவர்களது பேச்சுக்கள் அனைத்தும் வல்ல அல்லாஹ்வின் உத்தரவுப்படியே, வஹீயின் அடிப்படையைக் கொண்டதாக இருக்கும்.

ஹிஜ்ரி 6ம் ஆண்டுக்குப் பிறகு உம்மு ரூமான் (ரலி) அவர்களது இறந்ததாக வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன. அவர்களது அடக்க நேரத்தின் பொழுது, அவர்களுக்காக இறைத்தூதர் (ஸல்) அவர்கள் பாவ மன்னிப்பிற்காக பிரார்த்தித்தார்கள். சந்தேகமில்லாமல், இதுவே அவர்களுக்கு மிகப் பெரிய கௌரவமாகும். உம்மு ரூமான் (ரலி) அவர்கள் குறித்து இறைத்தூதர் (ஸல்) அவர்கள் ஒருசமயம் கூறும் பொழுது, சொர்க்கத்துக் கன்னிப் பெண்ணைப் பார்க்க விரும்புகின்றவர்கள், உம்மு ரூமான் (ரலி) அவர்களைப் பார்க்கட்டும் என்று கூறி இருக்கின்றார்கள். இதன் மூலம், உம்மு ரூமான் (ரலி) அவர்கள் அல்லாஹ் நாடினால் சுவனத்தில் நுழையக் கூடிய பெண்மணி என்று இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தனது குறிப்பால் நமக்கு உணர்த்தி இருக்கின்றார்கள். இன்னுமொரு அறிவிப்பின்படி, இறைத்தூதர் (ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பின்பு தான் உம்மு ரூமான் (ரலி) அவர்கள் மரணமடைந்தார்கள் என்றும் உள்ளது.

நிச்சயமாக அல்லாஹ்வின் வசனங்கள் சத்தியமானவை, அல்லாஹ் தனது திருமறையில் இவ்வாறு கூறுகின்றான் :

நிச்சயமாக எவர்கள் நம்பிக்கைக் கொண்டு நற்கருமங்கள் செய்து இன்னும் தங்கள் இறைவனுக்கு முற்றிலும் அடிபணிகின்றார்களோ அவர்களே சுவனபதிக்குரியவர்கள் அங்கு அவர்கள் என்றென்றும் நிலைத்திருப்பார்கள். (11:23)

## அர்ரபீ பின்த் மாஊத் (ரலி)

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

“யார் யாரெல்லாம் பைஅத் ரிழ்வானில் கலந்து கொண்டார்களோ, அவர்களுக்கு சுவனம் சித்தப்படுத்தி வைக்கப்பட்டுள்ளது.”

“அர்ரபீ பின்த் மாஊத் (ரலி) அவர்கள் பைஅத் ரிழ்வானில் கலந்து கொண்ட காரணத்தால், சுவனத்தைப் பெற்றுக் கொண்ட பெண்மணிகளில் ஒருவராக ஆனார்.”

அர்ரபீ பின்த் மாஊத் (ரலி) அவர்கள் மாஊத் பின் அஃப்ரா என்பவரது மகளாவார், இன்னும் அவரது சிறிய தந்தையார்களான முஆத் பின் அஃப்ரா மற்றும் அவ்ஃப் பின் அஃப்ரா (ரலி) ஆகியோர்களாவார்கள். மேற்ண்ட அஃப்ராவின் மகன்கள் யாவரும் இறைத்தூதர் (ஸல்) அவர்களுடன் பத்ருப் போரில் கலந்து கொண்டவர்களாவார்கள். அல்லாஹ் இவர்களைப் பற்றித் தான் தன்னுடைய திருமறைக் குர்ஆனில் கூறுகின்றான் :

“பத்ருப் போரில் கலந்து கொண்டவர்கள் இறைவனின் மன்னிப்பைப் பெற்றுக் கொண்டார்கள்.”

பத்ருப் போர்.., உத்பா பின் ரபீஆ, ஷைபா பின் ரபீஆ மற்றும் வலீத் பின் உத்பா ஆகியோர் முன்னணிக்கு வந்து, இறைநிராகரிப்பாளர்கள் சார்பில் முஸ்லிம்களை எதிர்த்துச் சவால் விட்டனர்.

இந்த சவாலை ஏற்றுக் கொண்டு, அஃப்ரா அவர்களின் புதல்வர்களான மேலே நாம் பார்த்த மூன்று நபித்தோழர்களும் முன் வந்தனர். ஆனால், இவர்களைப் பார்த்த அந்த மக்காவின் இறைநிராகரிப்பாளர்கள் கூறினார்கள், "எங்களுக்கு இணையாக உள்ள கோத்திரத்தார் மற்றும் தலைவர்களை அனுப்பி வையுங்கள்" என்று கூறினார்கள். அதன்பின், அந்த மூவரையும் திரும்ப அழைத்துக் கொண்ட இறைத்தூதர் (ஸல்) அவர்கள், தனது சிறிய தந்தையாரான ஹம்ஸா பின் அப்துல் முத்தலிப் (ரலி) அவர்களையும், அலி பின் அபீதாலிப் (ரலி) அவர்களையும், உபைதா பின் ஹாரிதா (ரலி) அவர்களையும் நேருக்கு நேரான மோதலுக்கு அனுப்பி வைத்தார்கள். இந்த மூன்று முஸ்லிம் மாவீரர்களின் தாக்குதலைச் சமாளிக்க இயலாமல், மக்காவின் மூன்று இணைவைப்பாளர்களும் மண்ணில் மடிந்தார்கள். மண்ணோடு மண்ணானார்கள். தங்களது காயங்களை நக்கிக் கொண்டே, நரகத்தின் அடித்தட்டில் தங்களது இருப்பிடத்தை ஆக்கிக் கொண்டார்கள்.

அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ஃப் (ரலி) அறிவிக்கின்றார்கள், பத்ரு யுத்தம் நடந்து கொண்டிருக்கின்றது, அப்பொழுது அஃப்ராவின் சகோதரர்கள் என்னிடம் வந்து, காதுக்கு மிக அருகில் வந்து மெல்லிய குரலில், யார் அந்த அபூ ஜஹல், அவன் எங்கே இருக்கின்றான் என்று கேட்டார்கள். தயக்கத்துடன் பதில் கூறினேன், பின்னர் அவரது சகோதரர் ஓடி வந்து, மீண்டும் என்னிடமே முன்னவர் கேட்ட அதே கேள்வியையே கேட்டார்.

அப்பொழுது, "நீங்கள் இருவரும் அபூஜஹலைப் பற்றிக் கேட்கின்றீர்களே, எதற்காக? என்றேன். அவன் இறைத்தூதர் (ஸல்) அவர்களை அதிகமாகத் திட்டுவதாக நாங்கள் அறிய வருகின்றோம். இன்று ஒன்று அவனது தலையை வெட்டுவது, அல்லது அந்த முயற்சியில் எங்களை நாங்கள் அழித்துக் கொள்வது என்ற முடிவோடு இருக்கின்றோம் என்று பதில் கூறினார்கள். இதனைக் கேட்ட நான் மிகவும் மகிழ்ந்து போனேன். அவர்களும்,நானும் பேசிக் கொண்டிருந்த அந்த நேரத்தில் அபூ ஜஹ்ல் பெருமையும், பகட்டுமாக அந்த வழியாகப் போனான். அவனை நோக்கிக் கையைக் காட்டி, நீங்கள் தேடிக் கொண்டிருக்கும் இரை அதே போகின்றது என்று தான் கூறினேன். பாய்ந்து சென்ற இருவரும் அபூ ஜஹலைக் கடுமையாகத் தாக்கினார்கள், விளைவு ஒடிந்த மரக்கிளை போல குதிரையிலிருந்து விழுந்தான். அதன் பின் அவனால் எழுந்திருக்கவே முடியவில்லை. இந்தக் காட்சியைக் கண்ட அப்துல்லா பின் மஸ்ஊத் (ரலி) அவர்கள் விரைந்து சென்று அவனது தலையைக் கொய்தார்கள். அப்பொழுதும் கூட தனது தற்பெருமையின் காரணமாக, நான் ஒரு கோத்திரத்தின் தலைவனல்லவா, எனவே எனது கழுத்துக்குக் கீழ் பகுதியில் வெட்டும்படிக் கேட்டுக் கொண்டான் அபூஜஹ்ல். தன்னை ஒரு பலம் பொருந்திய வீரனொருவன் வெட்டியதாக சரித்திரம் இருக்க வேண்டுமே ஒழிய, அந்தஸ்தில் குறைந்த ஒருவன் வெட்டினான் என்று இருக்கக் கூடாது என்றே அவன் கருதினான். இறைத்தூதர் (ஸல்) அந்த இரண்டு சகோதரர்களுக்காகவும் பிரார்த்தனை செய்தார்கள். மேலும், இந்த மூன்று சகோதரர்களும் இரண்டாவது அகபா உடன்படிக்கையின் பொழுது வந்திருந்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அஃப்ராவின் மகளான அர்ரபீ (ரலி) அவர்கள் மிகவும் பிரசித்தி பெற்ற வியாபாரியான அயாஸ் பின் பகீர் அவர்களுக்கு மணமுடித்துக் கொடுக்கப்பட்டார்கள். இவர்களுக்கு முஹம்மது பின் அயாஸ் என்ற மகனும் பிறந்தான்.

அர்ரபீ (ரலி) அவர்கள் மிகவும் பிரசித்தி பெற்றதொரு குடும்பப் பின்னணியைக் கொண்டவர்களாக இருந்தார்கள். இறைத்தூதர் (ஸல்) அவர்கள் எப்பொழுதாவது இவர்களது வீட்டிற்கு வந்து விட்டுப் போவதும் உண்டு, இன்னும் இவர்கள் கொடுத்தனுப்புகின்ற பரிசுப் பொருட்களை அன்னாரவர்கள்

பிரியமுடன் ஏற்றுக் கொள்வதுமுண்டு. இதன் காரணமாக, அர்ரபீ (ரலி) அவர்கள் தான் ஒரு பாக்கியம் பெற்றதொரு பெண்மணி என்று தன்னைக் கருதினார்கள்.

தனக்குத் திருமணமான அன்று இறைத்தூதர் (ஸல்) அவர்கள் எங்களது வீட்டிற்கு வந்தார்கள். அப்பொழுது சிறுமிகள் அங்கே த..ப் என்ற சிறு கொட்டை அடித்து பாடிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது, வருங்காலத்தைப் பற்றி அறிந்திருக்கின்றவராக எங்களது தூதர் எங்களுக்கு மத்தியில் இருக்கின்றார் என்று அந்த சிறுமிகள் பாடியதைக் கேட்டு இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள், ‘அந்தப் பாட்டை நிறுத்துங்கள்’, அல்லாஹ்வைத்தவிர, வேறு யாருக்கும் தெரியாத ஒன்றைப் பற்றிய அறிவு இல்லை என்று சாந்தமாகக் கூறினார்கள். அந்த வரியை விட்டு விட்டு மற்ற அடிகளைத் தொடர்ந்து பாடிக் கொண்டிருக்க அனுமதி அளித்தார்கள்.

இதன் மூலம் குடும்ப சந்திப்புகள் மற்றும் சந்தோஷமான நேரங்களில் உற்சாகத்தை வெளிப்படுத்துவதற்காக சிறுமிகள் பாடிக் கொள்ளலாம் என்பதைப் புரிந்து கொள்ள முடிகின்றது.

தன்னுடைய வீட்டிற்கு இறைத்தூதர்(ஸல்) அவர்கள் வருகை தரும் பொழுதெல்லாம், அன்னாருக்குப் பிடித்தமான உணவுகளைச் செய்து கொடுக்கக் கூடியவர்களாக அர்ரபீஆ (ரலி) அவர்கள் திகழ்ந்தார்கள். ஒருமுறை இறைத்தூதர் (ஸல்) அவர்கள் இவர்களது வீட்டிற்கு வந்த பொழுது, பழுத்த பேரித்தம் பழங்களை உண்ணக் கொடுத்தார்கள். அதேநாளில், தனக்குக் கிடைத்த தங்கம், மற்றும் வெள்ளியிலான ஆபரணங்களை அர்ரபீஆ (ரலி) அவர்களுக்கு இறைத்தூதர் (ஸல்) அவர்கள் பரிசாகக் கொடுத்தார்கள். பரிசுப் பொருட்களை பெற்றுக் கொள்வதும், அன்பளிப்புச் செய்வதும் பிரியத்திற்கு அடையாளங்களாகும், இன்னும் அவை மனிதர்களுக்குள் உறவை வலுப்படுத்தக் கூடியதாகவும் இருக்கும் என்பதால், இதனை இறைத்தூதர் (ஸல்) அவர்கள் ஊக்குவித்திருக்கின்றார்கள்.

இன்னும் தொழுகைக்கான உளுச் செய்வதற்கும், தொழுவதற்கும், சில நேரங்களில் ஓய்வெடுப்பதற்காகவும் அர்ரபீ (ரலி) அவர்களது இல்லத்திற்கு இறைத்தூதர் (ஸல்) அவர்கள் வருவதுண்டு. அப்பொழுது, மார்க்க விஷயங்களைப் பற்றிய பல்வேறு தகவல்களை இறைத்தூதர் (ஸல்) அவர்களிடமிருந்து அவர்கள் கற்றக் கொண்டார்கள். எனவே, ஏனைய தோழர்கள் இவரிடம் வந்து இறைத்தூதர் (ஸல்) அவர்களின் நபிமொழிகளை தங்களுக்கு அறிவித்துத் தருமாறு கேட்கக் கூடிய அளவுக்கு இவர்களை மதிப்பிட்டு வைத்திருந்தார்கள். இறைத்தூதர் (ஸல்) அவர்கள்தனது வீட்டிற்கு வரும் பொழுதெல்லாம், சிறிது தண்ணீர் கேட்பார்கள். நானும் அவர்கள் உளுச் செய்வதற்கு ஏற்றவாறு தண்ணீரைக் கொண்டு வந்து தந்து, அவர்கள் உளுச் செய்வதற்கு உதவியாக இருப்பேன். அதன்மூலம் உளுச் செய்வது எப்படி என்பதை அவர்களிடமிருந்து நான் மிகச் சரியாகக் கற்றுக் கொண்டேன். அவர்கள் தனதுகரங்களை மூன்று முறை கழுவக் கூடியவர்களாக இருந்தார்கள், பின்னர் முகத்தை மூன்று முறை கழுவக் கூடியவர்களாகவும் இருந்தார்கள். வாயை ஒரு முறை கொப்பளித்தார்கள், மூக்கினுள் தண்ணீரைச் செலுத்தி அதனைச் சிந்தினார்கள். பின்னர் மணிக்கட்டு வரை தனது கரங்களைக் கழுவினார்கள். பின்னர், தனது கைகளின் உள்ளங்கையைக் கொண்டு தலையின் முன்பிருந்து பின்னுக்காக தலையைத் தடவி, பின்னர் அப்படியே கையே முன்னந்தலைக்குக் கொண்டு வந்து மஸஹு ச் செய்தார்கள். பின்னர் தனது விரல்களை காதுக்கு உள்ளேயும், வெளியேயும் நுழைத்துத் தடவினார்கள். பின்னர்தனது பாதங்கள் ஒவ்வொன்றையும் மூன்று முறை கழுவினார்கள்.

அபூ உபைதா பின் ஹமத் பின் அம்மார் பின் யாஸர் (ரலி) அவர்கள் ஒருமுறை இவர்களைச் சந்தித்து, இறைத்தூதர் (ஸல்) அவர்களின் தோற்றம் எவ்வாறு இருக்கும் என்று கேட்டார்கள்.

அதற்கு, இறைத்தூதர் (ஸல்) அவர்கள் சூரியனின் பிரகாசத்தை ஒத்தவர்களாக இருந்தார்கள் என்று கூறினார்கள். அவர்கள் சூரியனோடு ஏன் இறைத்தூதர் (ஸல்) அவர்களை ஒப்பிட்டுக் கூறினார்கள் என்றால், சூரியனின் கதிர்கள் எல்லா இடங்களிலும் வியாபித்துப் பரவுவதைப் போல, அவர்கள் கொண்டு வந்த தூதும் பரவியதைக் குறிக்கவே அவ்வாறு உவமையாகக் கூறினார்கள்.

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் வாழ்ந்த காலத்தில், ஆண்களைப் போலவே பெண்களும் போரில் கலந்த கொள்ள அனுமதிக்கப்பட்டிருந்தார்கள். போர்க்களத்தில் தண்ணீர் தாகத்தால் தவிப்பவர்களுக்கு தண்ணீர் கொடுப்பதற்காகவும், இன்னும் காயமடைந்தவர்களுக்குச் சிகிச்சை அளிப்பதற்காகவுமே பெண்கள் போர்க்களத்திற்குச் சென்றார்கள்.

ரபீஇ (ரலி) அவர்களிடமிருந்து தான் கேள்விப்பட்டதாக காலித் பின் தக்வான் என்பவர் ஸஹீஹ் புகாரியில் கூறுகின்றார்கள், ரபீஇ (ரலி) அவர்கள் போரில் கலந்திருக்கின்றார்கள், இன்னும் காயங்களுக்கு மருந்து கட்டி, தாதிப் பெண்ணாகவும், இன்னும் தண்ணீர் ஊற்றிக் கொடுப்பவளாகவும் பணியாற்றி இருக்கின்றார்கள். இன்னும் காயமடைந்தவர்களையும், இறந்தவர்களையும் தூக்கிச் செல்வது, இன்னும் அவர்களை மதினாவுக்கு அனுப்பி வைப்பது போன்ற பணிகளையும் செய்திருக்கின்றார்கள். இன்னும் ஹிஜ்ரி 6 ம் ஆண்டு, இஸ்லாமிய வரலாற்றில் பைஅத்துர் ரிழ்வான் என்றழைக்கக் கூடிய சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பேரும் பெற்றிருக்கின்றார்கள். அதன்மூலம் இறைத்தூதர் (ஸல்) அவர்களின் திருவதனங்களின் மூலமாக, சுவனத்திற்கான நன்மாராயத்தையும் பெற்றுக் கொண்டார்கள். இந்த உலகத்தில் இதை விடக் கண்ணியம் வேறு என்னவாக இருக்க முடியும்..!

அர்ரபீ (ரலி) அவர்கள் சிறந்த புரிந்துணர்வு மற்றும் தொலை நோக்குச் சிந்தனை கொண்டவர்களாகவும் இருந்தார்கள். ஒருமுறை அபூ ரபீஆ (ரலி) அவர்களின் மனைவி உம்மு அயாஸ் (ரலி) அவர்கள் இவரது வீட்டிற்கு வாசனைத் திரவியத்தை வைத்துக் கொண்டு அதனை விற்பதற்காக வந்தார். அப்பொழுது, எங்களது கோத்திரத்து தலைவரைக் கொன்றவரது மகளாக நீங்கள் இருக்கின்ற காரணத்தினால், உனக்கு நான் எந்த வாசனைப் பொருளையும் விற்க மாட்டேன் என்று கூறினார். கோபத்தால் முகம் சிவந்த அவர்கள், அப்படியென்றால் எனது வீட்டை விட்டும் இப்பொழுதே வெளியே சென்று விடுங்கள் என்று கூறி விட்டார்கள். உங்களது வாசனைத் திரவியம் மிகவும் கெட்டது என்று கூறி விட்டு, எனது கண்களை விட்டும் இப்பொழுது ஓடிப் போய் விடுங்கள் என்று கூறி விட்டார்.

உதுமான் (ரலி) அவர்களின் ஆட்சிக் காலத்தின் பொழுது இவருக்கும் இவரது கணவருக்கும் சிறு மன வருத்தம் ஏற்பட்டு விட்டது. இதன் காரணமாக, தனது கணவனைப் பார்த்து.., என்னிடம் உள்ள அனைத்தையும் எடுத்துக் கொள்ளுங்கள், நான் உங்களிடம் இனி எனது வாழ்க்கையைத் தொடர முடியாது, உங்களை நான் 'குலா' ச் சொல்லி, உங்களிடமிருந்து விவாகரத்துப் பெற்றுக் கொள்கின்றேன் என்று கூறி விட்டார்கள். அவ்வாறே அவரது கணவர், இவரிடமிருந்த அனைத்தையும், ஏன் போர்வையை முதற்கொண்டு விட்டு வைக்காமல் அனைத்தையும் எடுத்துச் சென்று விட்டார். இந்தச் செய்தி உதுமான் (ரலி) அவர்களின் காதுகளுக்கு எட்டியது. இஸ்லாமியச் சட்டப்படி, அவரிடமிருந்து அவர் கணவர் எடுத்துக் கொண்ட எதனையும் திரும்பப் பெற்றுக் கொள்ள முடியாது. சமூகத்தில் உயர்மட்டத்தில் இருக்கின்றவர்களுக்கு இது போன்ற நிலைமைகள் தோன்றுவது சகஜம் தான் என்று கூறினார்கள்.

இன்றைய நவீன காலத்தில் பெண்ணுரிமை என்றும், பெண்களின் விடுதலை என்றும் பேசிக் கொண்டு கூப்பாடு போட்டுக் கொண்டிருப்பவர்கள், இஸ்லாமியச் சட்டங்கள் பெண்களுக்கு எந்தளவு

உரிமைகளை வழங்கியுள்ளது என்பதையும், அவர்கள் தங்களது உரிமைகளைச் சுதந்திரமான முறையில் அனுபவித்துக் கொண்டிருக்கின்றார்கள் என்பதையும் அறிந்து கொள்ள முன்வர வேண்டும்.

தம்பதியினருக்கிடையே இனி இணைந்து வாழ முடியாது என்ற நிலைமை உருவாகி விட்டபின், அனைத்து சமாதான நடவடிக்கைகளும் பயனற்றுப் போன பின்பும், 'கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன்' என்ற புளித்துப் போன கொள்கையின் கீழ் வாழ வேண்டியதில்லை. மாறாக, சுதந்திரமான முறையில் கணவனிடமிருந்து மணவிலக்குப் பெற்றுக் கொண்டு விட முடியும். அதனை இருவரும் பரஸ்பர புரிந்துணர்வின் அடிப்படையிலோ அல்லது அதற்கென அமைக்கப்பட்டுள்ள நீதி மன்றத்தின் மூலமாகவோ அவர்கள் தங்களுக்கிடையே மணவிலக்குப்பெற்றுக் கொள்ள முடியும். இன்னும், பெண்களாக முன் வந்து மணவிலக்குக் கோருவதற்கு 'குலா' என்று பெயரிட்டு அழைக்கப்படுகின்றது. தம்பதிகளுக்கிடையே பிரச்னை அதிகரித்து விட்டால், அமைதியாகவும், சந்தோஷமாகவும் கழிய வேண்டிய இல்லற வாழ்வு போர்க்களமாகக் காட்சி அளிக்க ஆரம்பித்து விடும். இஸ்லாம்.., மணவிலக்கை வேண்டா வெறுப்பாகவே அங்கீகரித்துள்ளது என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். இத்தகைய எளிய நடைமுறை இல்லாததன் காரணமாகவே, இன்றைய உலகில் விரிசல்கள் விழுந்த பின், கணவன் மனைவியைக் கொல்வதும், மனைவி கணவனைக் கொல்வதும் வாடிக்கையாகி விட்டது. இன்னும் கற்புள்ள மனைவி மீது களங்கம் சுமத்துவதும் கணவர்களுக்கு எளிதாகி விட்டது.

அர்ரபீஆ பின்த் மாஊத் (ரலி) அவர்களின் மூலமாக 21 ஹதீஸ்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவர்களின் ஹதீஸ்களை இஸ்லாத்தின் தலைசிறந்த நல்லறிஞர்களான ஆயிஷா பின்த் அனஸ் பின் மாலிக், சுலைமான் பின் யாஸர், காலித் பின் தக்வான், அப்துல்லா பின் முஹம்மது பின் அகீல், அபூ உபைதா முஹம்மது பின் அம்மார் பின் யாஸர் போன்ற நபித்தோழர்கள் அறிவிப்புச் செய்துள்ளார்கள்.

ஹிஜ்ரி 45 ம் வருடம், முஆவியா பின் சுஃப்யான் (ரலி) அவர்களது காலத்தில் மிக நீண்ட நெடிய நாட்கள் வாழ்ந்து மறைந்தார்கள்.

அவர்களும் அல்லாஹ்வைப் பொருந்திக் கொண்டார்கள், அல்லாஹ்வும் அவர்களைப் பொருந்திக் கொண்டான்.

## உம்மு உமாரா (ரலி)

இதோ! பனுநஜ்ஜார் என்னும் அன்சாரிக் குடும்பத்தைச் சார்ந்த நுஸைபா பின்த் கஅப் (ரலி) எனும் பெண்மணி வரலாற்றில் பிரவேசிக்கின்றார். அவருடைய குடும்பத்தினருக்கு மட்டுமே அவரைப் பற்றி தெரியும் எனும் நிலைமாறி அவருடைய வீரமும், தியாகமும் எழுச்சி மிக்க வரலாறும் அங்கிங்கெனாதபடி எங்கும் பேசப்படலாகின்றன.

ஆம்! அண்ணல் நபி (ஸல்) அவர்களுடன் நடைபெற்ற இரண்டாவது கணவாய் உடன்படிக்கையில் அப்பெண்மணி தம் குலத்தாருடன் கலந்து கொண்ட நிகழ்ச்சியை வரலாறு பொன் எழுத்துகளால் பதிவு செய்துள்ளது.

ஹஜ் செய்வதற்காக மக்கா நகர் வந்திருந்த அவ்ஸ் மற்றும் கஸ்ரஜ் மதீனத்து கோத்திரத்தார்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் அழைப்புப் பணியால் ஈர்க்கப் பெற்றார்கள். அவர்களின் அறிவுரை கேட்டு - உண்மை உணர்ந்து இறைநெறியைத் தழுவினார்கள். இந்த முதல் சந்திப்பில் இறைச்

செய்தியைச் செவியேற்பதற்கும் கீழ்படிவதற்கும் அண்ணலாரிடம் உறுதிமொழி அளித்தார்கள். அடுத்து வரும் ஹஜ்ஜு க் காலத்தில் மீண்டும் சந்திப்போம் என்று வாக்குறுதியும் கொடுத்தார்கள்.

வாக்குறுதி அளித்தபடி மறு ஆண்டு ஹஜ்ஜின்போது அந்த மதீனாவாழ் மக்கள் மாநபி (ஸல்) அவர்களைச் சந்தித்தார்கள். இப்பொழுது அவர்களின் எண்ணிக்கை பன்மடங்காகப் பெருகியிருந்தது. அவர்களிடையே சகோதரத்துவ வாஞ்சையும் வாய்மையும் வலுவடைந்திருந்தன. இந்தச் சந்திப்புதான் பைஅத்துல் அகபதிஸ்ஸானியா - இரண்டாவது கணவாய் உடன்படிக்கை என்னு வரலாற்றில் பிரபலமடைந்துள்ளது. இந்தச் சந்திப்பில் இரண்டு பெண்மணிகளும் கலந்து கொண்டார்கள். ஒருவர், உம்மு அம்ர் இப்னு அதீ. இரண்டாமவர் நுஸைபா பின்த் கஅப். இவர்தான் இஸ்லாமிய எழுச்சிமிக்க வரலாற்றில் பெண்ணினத்திற்கு அழியாப் புகழை ஏற்றிவிட்டுச் சென்றிருக்கும் உம்மு உமாரா (ரலி) ஆவார்.

இந்த இரண்டாவது உடன்படிக்கையில்தான் உம்மு உமாரா (ரலி) அவர்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்களை முதன் முறையாக சந்தித்தார்கள். அதுதான் அவருடைய புகழ்மிக்க வரலாற்றுக்குத் தோற்றுவாயாக அமைந்தது!

## உடன்படிக்கையைத் தொடர்ந்து..

இந்த உடன்படிக்கையில்தான் இறைச்செய்தியை செவியேற்பதற்கும் கீழ்படிவதற்கும் - அவ்வழியில் போராடுவதற்கும் தம் குலத்தாருடன் உம்மு உமராவும் அண்ணலாரிடம் உறுதிமொழி அளித்தார்கள். அண்ணலாருக்கு எதிரிகள் எவ்விதக் கேடும் அளித்திடாமல் பாதுகாப்போம் என்றும், அண்ணலாரின் அழைப்புப்பணி வெற்றிபெறப் போராடுவோம் என்றும், அவர்களுடன் போர் புரிய வருபவர்கள் யாராக இருந்தாலும் தம் உயிரையும் உடமையையும் தியாகம் செய்தேனும் அவர்களை எதிர்த்து போர் புரிவோம் என்றும் சபதம் ஏற்றார்கள்.

இந்த உடன்படிக்கை இஸ்லாமிய அழைப்புக்கு ஒரு மகத்தான வெற்றியாக அமைந்தது. காரணம் அவ்வழைப்பைப் பரப்புவதற்கு சிறிய - ஆனால் உறுதிமிக்க முன்னணிப்படை ஒன்று அதன் மூலம்தான் உருவானது. சுதந்திரமான பூமியொன்றும் கிடைத்தது என்பது மட்டுமல்ல - அவ்வழைப்புப் பணியில் ஈடுபடப் பெண்களும் முன்வந்திருந்தார்கள்! அதற்கான போராட்டத்தில் பங்கேற்க,போராட்டக் களத்தில் ஆண்களோடு ஓரணியில் நிற்கவும் - கொண்ட கொள்கைக்காக தியாகம் செய்யவும் உறுதிமொழி அளித்திருந்தார்கள்.

தியாகங்கள் என்றால் சாமானியப்பட்டவையா? இல்லை! இவ்வுலகில் இறைவனின் மார்க்கம் மேலோங்கும்வரை தம் குடும்பத்தாரையும் சமுதாயத்தையும் எதிர்த்து நின்று, வாழ்வின் அனைத்து இன்பங்களையும் துறந்துவிட்டு தொடர் போராட்டதில் குதித்திட வேண்டும்.

உம்மு உமாரா (ரலி) அவர்களின் உள்ளத்தில் வாய்மையான ஈமானும் கொள்கைப்பிடிப்பும் இடம்பிடித்துக் கொண்டன. தமது உள்ளம் ஏற்றிருந்த இறைநம்பிக்கையை அவர்கள் மிகச் சரியாக மதிப்பிட்டிருந்தார்கள். இஸ்லாம் என்னென்ன கடமைகளை - கீழ்படிதல்களை - தியாகங்களை நாடுகின்றது என்பதை சரியாகப் புரிந்திருந்தார்கள். அதனால்தான் உம்மு உமாரா (ரலி) அவர்கள், இறைவன் அவர்கள் மீது சுமத்தியிருந்த பொறுப்பை உறுதியோடும் திடத்துடனும் ஏற்றிட அவர்களால் முடிந்தது. தனது ஈமானியக் கொள்கையை காப்பாற்றுவதற்காக தொய்வில்லாத உறுதியான போராட்டத்தை மேற்கொள்ளும் வகையில் தம்மைப் பக்குவப்படுத்திக் கொண்டார்கள்.

மதீனாவுக்குத் திரும்பிச் சென்று தமது குடும்பத்தார்களையும் மதீனத்துப் பெண்களையும் சந்தித்து அவர்களை ஏகத்துவக் கொள்கையின் பக்கம் அழைக்கவும், அதுபற்றி நற்செய்தி அறிவிக்கவும் ஆயத்தமானார்கள்!

உம்மு உமாரா (ரலி) அவர்கள் இஸ்லாத்தைப் பற்றிக் கேள்விப்பட்டபோது அதனை ஏற்றுக்கொள்வதால் அபாயமிக்க சோதனைகள் எதிர்ப்படும். தாம் இஸ்லாத்தில் இணைந்தது தெறியவந்தால் தம் சமுதாயத்தினர் அனைவரும் கொதித்தெழுவர் என்பதையெல்லாம் நன்கு அறிந்திருந்தார்கள். தம் குடும்பத்தினர் காலங்காலமாக மேற்கொண்டு வரும் வணக்க முறைகளையும் அரபிகளின் கொள்கை கோட்பாடுகளையும் மறுப்பதால் தம்மைத்தாமே பயங்கர அபாயத்திற்கு ஆளாக்கிக் கொள்ள நேரிடும். வழக்கமாக பெண்கள் தலையிடாத, அவர்களுக்கு எந்த தொடர்பும் இல்லாத பிரச்சனைகளில் நாம் வலிந்து தலையிடுகின்றோம் என்றாகிவிடும் என்பதைத் தெளிவுபடப் புரிந்திருந்தார்கள்.

ஆயினும் அவர்கள் விளைவுகளைப் பற்றி கவலைப்படாமல் பெருமானாரைச் சந்திக்கச் சென்ற மதீனத்துக் குழுவினரைப் பின்தொடர்ந்தார்கள். இறைத்தூதரைச் சந்திக்க வேண்டும், அவர்களின் அறிவுரைகளைக் கவனமாக செவிமடுக்க வேண்டுமென்ற உறுதியுடன் தம் கூடாரத்திலிருந்து வெளிக் கிளம்பினார்கள். அவருடைய குழுவினர் தங்களைக் குறித்து இறைத்தூதரிடம் இவ்வாறு உறுதிமெழி அளிப்பதைக் கேட்கின்றார்கள்.

நாங்கள் உங்களைப் பாதுகாத்து உதவி புரிபவர்கள். நீங்கள் விரும்பும் பணிகளில் எங்களை ஈடுபடுத்தலாம். உங்களின் கட்டளைகளைத்தான் நாங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றோம். அல்லாஹ்வின் தூதர் ஒரு சைக்கினை செய்தாலே போதும், அதற்கு எங்களை நாங்களே அற்பணிக்கத் தயாராய் இருக்கின்றோம். உங்களுடைய தீனை எதிர்த்துக் கொண்டும் உங்களுக்கு துன்பம் இழைத்துக் கொண்டும் உங்களைப் பின்பற்றும் மக்களை உதாசீனப் படுத்திக் கொண்டும் இருக்கின்ற இந்தக் குறைஷிகளை எதிர்த்துப் போர் புரிய நாங்கள் தயார்!

இதைக் கேட்ட உம்மு உமாரா (ரலி) அவர்கள் தம்முடைய அணியினர் தம் வாக்குறுதிகளை நிறைவேற்ற முன்வந்தால் எத்தகைய விழைவுகள் ஏற்படும் என்பதையும், தவிர தாங்கள் ஹஜ் செய்வதற்காக அந்நிய நாடு வந்துள்ளோம் என்பதையும் புரிந்திருந்தார்கள். ஆயினும் சோர்ந்திடவில்லை. துவண்டிடவில்லை! மாறாக கொள்கைக்காக போராட வேண்டும் எனும் ஊக்கமும் உறுதியும்தான் அவர்களின் உள்ளத்தில் பொங்கியெழுந்தன!

உம்மு உமரா (ரலி) அவர்கள் புதிய உள்ளத்தோடும் உணர்வோடும் தம் குழுவினரிடம் மதீனாவுக்குத் திரும்பினார்கள். அவருடைய உள்ளத்தில் இறைமார்க்கத்தின் பற்றும் ஆழமான ஈமானும் நிறைந்திருந்தன. இரண்டாவது உடன்படிக்கைக்குப் பிறகு அவரும் அவருடைய குழுவினரும் ஆற்றவேண்டிய பணிகளோ அதிகப்பளு கொண்டவை! இறைமார்க்கத்தை நன்கு ஆழமாக அறிவது, அதனைப் பரப்புவதற்கும் அதன் பக்கம் பிற மக்களை அழைப்பதற்கும் அரங்கத்திலும், அந்தரங்கத்திலும் வாய்மையுடன் உழைப்பது ஆகியவைதான் அப்பணிகள்!

இறைவழியில் உடன்பாடான நடவடிக்கைகளை **(Positive Activites)** நிறைவேற்ற ஆயத்தமானது, மதீனா நகரம்! இஸ்லாத்தை விரைந்து ஏற்றுக்கொண்டு வருகின்ற மதீனா நகரையே அழைப்புப் பணியின் கேந்திரமாக அமைக்க துணிச்சலான முயற்ச்சிகளை மதீனத்து மக்கள் மேற்க்கொள்ளத் தொடங்கினர்.

## மதீனாவின் எல்லையில் ஒரு காட்சி.

நபியவர்கள் மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்வது குறித்தும் அழைப்புப்பணி மற்றும் இறைவழிப் போராட்டத்தின் புதிய சகாப்தத்தை மதீனாவிலிருந்து தொடங்குவது குறித்தும் அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் மதீனத்து முஸ்லிம்கள் பேச்சுவார்த்தை நடத்தினர்! யத்ரிப் எனும் மதீனாவுக்கு ஹிஜ்ரத் செய்யுமாறு இறை சமிக்ஞையும் வந்தது!

ஆணவமும் பொறாமையும் கொண்ட குறைஷிகள் பல திக்குகளிலும் அண்ணலாரை பின் தொடர்ந்தார்கள். எப்படியும் அவர்களை கைது செய்து இஸ்லாமிய அழைப்பின் குரல்வளையை நெரித்திட வேண்டும் என்று கருதினார்கள். ஆயினும் அல்லாஹ்வின் நாட்டம் உறுதியானது. இந்த அழைப்புப் பணிக்கு அவனுடைய உறுதுணை உண்டு. அல்லாஹ்வின் அருளினால் முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் மதீனா நகர் வந்து சேர்ந்தார்கள்.

அங்கே...! அன்ஸாரிகள் வரவேற்க வந்திருந்தார்கள். நேரிய மார்க்கம், சத்திய அழைப்புப் பணி மற்றும் வழிகெட்ட, கண்மூடித்தனமான கொள்கைகளிலிருந்தும் நடைமுறைகளிலி ருந்தும் சுதந்திரம் ஆகிய அருட்கொடைகளுடன் மக்காவிலிருந்து ஹிஜ்ரத் செய்து தம்மிடம் வருகை தரும் அல்லாஹ்வின் திருத்தூதரைத்தான் வரவேற்கக் காத்திருந்தார்கள்!

மதீனத்துப் பெண்களிலேயே உம்மு உமாராவுக்குத்தான் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் வருகையை முன்னிட்டு அளவிலா மகிழ்ச்சி! அண்ணலாரை வரவேற்பதற்காக அவருடன் அவருடைய தேழியர்களும் அவரின் மூலம் இஸ்லாத்தை தழுவிய அண்டை வீட்டுப் பெண்களும் பெருந்திரளாய் வந்திருந்தார்கள். அனைவரின் உள்ளங்களிலும் முகங்களிலும் பேரானந்தம் தவழ்ந்து கொண்டிருந்தது!

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மதீனமா நகரில் தம் பொற்பாதம் எடுத்துவைத்து நுழைந்தபோது - பெறற்கரிய பேற்றைப் பெற்று விட்டோம் எனும் உளமகிழ்வுடனும் பூரிப்புடனும் கண்களில் நீர் மல்க காட்சியளித்தார்கள் உம்மு உமாரா (ரலி) அவர்கள்! இறைத்தூதரும் அவர்களின் தோழர் அபூபக்கரும் புதியதோர் பூமிக்கு வந்து கொண்டிருப்பதைப் பார்க்கின்றார்கள்! அவ்விருரைச் சுற்றியும் ஏராளமான முஹாஜிர்களும் அன்ஸாரிகளும் புடை சூழ்ந்து வருகின்றார்கள்! இஸ்லாமிய அழைப்பிற்கு ஓர் பாதுகாப்பு அரணாகவும் இறைவழிப் போராட்டத்தின் பாசறையாகவும் திகழவிருக்கும் மதீனத்துப் பூமியில் உம்மு உமாராவின் சிந்தனைகள் சிறகடித்து பறக்கின்றது!

உயர்ந்த குறிக்கோள்களும் இலட்சியங்களும் கொண்ட ஒளிமயமான எதிர்காலத்தைப் பற்றி அவர்கள் கற்பனை செய்து பார்க்கின்றார்கள்.

இஸ்லாமிய நெறி, இதோ புதிய சகாப்தத்தைத் தொடங்கிவிட்டது. இறைவன் முஸ்லிம்கள் மீது கடமையாக்கிய, போராட்டப்பணி செயல்படுத்தப் படலாகிறது. எனும் உண்மை உறுதியானது.!

## மகளிர் உரிமைகள்...

அண்ணல் நபி (ஸல்) அவர்களின் அவையில் ஆஜராகி அவர்களின் அருள்மொழிகளைக் கேட்டு அறிவுரை பெறுவதில் உம்மு உமாரா (ரலி) அவர்கள் அதிக ஆர்வம் கொண்டிருந்தார்கள். அப்பெண்மணியிடம் மார்க்க அறிவும், பண்பாடும் அதிகரித்து வந்தன. தினம் தினம் ஒரு புதிய கட்டளை அல்லது கடமையைக் கேள்விப்படுகின்றார். புதியவை ஒவ்வொன்றிலும் மனித சுதந்திரத்திற்கு முதலிடம் கொடுக்கப் பட்டிருப்பதையும் இறைவனால் வழங்கப்பட்ட மனித உரிமைகளுக்கு அவற்றில் உத்திரவாதம் அளிக்கப்பட்டிருப் பதையும் காண்கின்றார். இறைநெறியில் மகளிர் உரிமைகள் முழுமையாக வழங்கப்பட்டிருந்தன. வாரிசு, சொத்து, திருமணம், விவகாரத்து போன்றவற்றில் அன்றைய அறியாமைக்கால சமூகம் மறுத்து வந்த உரிமைகளை இறைவனும் அவனுடைய வேதமும் பெண்ணினத்திற்கு மீட்டுக் கொடுத்தன.

இஸ்லாமிய மார்க்கத்தில் பெண்களுக்கு நீதியும் நேர்மையும் சமத்துவமும் இருப்பதைக் காண்கிறார். அதனை உறுதிப்படுத்திக் கொள்ளும் முறையில் ஒருமுறை அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் இவ்வாறு கேட்டார்.

அனைத்திலும் ஆண்களுக்குத்தானே உரிமையுள்ளது. பெண்களுக்கு எந்த உரிமையும் இருப்பதாகத் தெரியவில்லையே!

பெண்கண் ஆண்களுக்குச் சமமானவர்கள் எனும் உண்மை இறைவாக்கிலும் கட்டளையிலும் அதிகாரப்பூர்வமாக இடம்பெற வேண்டும் என்பது உம்மு உமாரா (ரலி) அவர்களின் விருப்பம்.

அவருடைய விருப்பத்திற்கு பதிலளிக்கும் வகையில் இறைவசனம் இறங்கியது. நிச்சயமாக முஸ்லிம்களான ஆண்களும் பெண்களும், நம்பிக்கை கொண்ட ஆண்களும் பெண்களும், உண்மையே பேசும் ஆண்களும் பெண்களும், பொறுமையுள்ள ஆண்களும் பெண்களும், உள்ளச்சமுள்ள ஆண்களும் பெண்களும், தர்மம் செய்யும் ஆண்களும் பெண்களும், நோன்பு நோர்க்கும் ஆண்களும் பெண்களும், தங்கள் வெட்கத்தலங்களை (கற்பை) காத்துக் கொள்ளும் ஆண்களும் பெண்களும் அல்லாஹ்வை நினைவு கூறும் ஆகிய இவர்களுக்கு அல்லாஹ் மன்னிப்பையும் மகத்தான நற்கூலியையும் தயார் செய்து வைத்துள்ளான். (33: 35)

அறியாமைக்கால சமூகம், ஆண் மகன் அனுபவிக்கும் ஒரு பொருளாக மட்டுமே பெண்களைக் கருதியது! நீதி நெறி தவறிய இத்தகைய நியதிகளையும் பழக்கவழக்கங்களையும் கொண்ட சமூக அமைப்பை மாற்றிட வேண்டும் என்று கோரும் உரிமை கூட அன்று பெண்களுக்கு இருக்கவில்லை! ஆனால் இஸ்லாம் அதனை மாற்றி அமைத்தது! இஸ்லாம் கொணர்ந்த புதிய வாழ்க்கை முறையில் பெண் குலத்திற்குப் போற்றத்தக்க அந்தஸ்து இருந்தது.

இவ்வாறு இஸ்லாத்தில் பெண்ணினத்திற்கு முழு மரியாதையும் உரிமையும் வழங்கப்பட்டதால் அன்றைய பெண்களிடம் தீனின் பற்று அதிகமாகியது. அதிகமான பெண்களை ஈமான் கொள்ளத் தூண்டியது. இறைநெறியைத் தழுவுவதன் மூலம் இழிவு மற்றும் கேவலத்திலிருந்து மீண்டு சுதந்திரத்தையும் கண்ணியத்தையும் பெற முடியும் என்று பெண்குலம் கருதியது!

### இறைவழிப் போரில் பங்கேற்பு..

இஸ்லாத்தில் உம்மு உமாராவைக் கவர்ந்த சிறப்பு அம்சம் மகளிர்க்கு உரிமையும் மரியாதையும் கிடைத்தது என்பது மட்டும் அல்ல.

உம்மு உமாரா (ரலி) அவர்களுக்கு முழு மகிழ்வும் மனதிருப்தியும் எப்போது கிடைத்தது? ஜிஹாத் - இறைவழியில் போர் புரியுமாறு இறைக்கட்டளை பிறப்பிக்கப்பட்டு, அந்தப் போரில் தாமும் கலந்துகொள்ள முடியும் என்பதை உம்மு உமாரா (ரலி) அறிந்தபோதுதான் அவரின் உள்ளத்தில் பேரானந்தம் பொங்கியது எனலாம்! ஆம்! அறப்போரில் பெண்களும் கலந்த கொள்ள வேண்டும் என்றும் அவ்வாறு கலந்து கொள்வது மூலம் போரில் ஆண்களுக்கு ஏற்படுகின்ற சிரமத்தையும் பளுவையும் குறைக்க முடியும், குறைக்க வேண்டும் என்றும் உறுதியாக உணர்ந்தார்.

அந்தக் கணத்திலிருந்தே உம்மு உமாரா (ரலி) அவர்கள் தன்னுடைய ஈடு இணையற்ற வீரத்தாலும் ஆற்றலாலும் இஸ்லாமியப் போரின் மாபெறும் வரலாற்றில் பிரகாசிக்கலானார்! வரலாறு உம்மு உமாரா (ரலி) அவர்களின் வீரத்தை ஒளிவீசும் பொன் எழுத்துக்களால் பதிவு செய்யலானது. இறைவழியில் நடைபெற்ற போரில் பெண்களுக்கே உரிய சில பணிகளில் உம்மு உமாராவும் பங்கேற்பதற்கான சூழ்நிலைகள் கனிந்து வந்தன!

## கேடயத்தைப் போட்டுவிட்டுச் செல்!

பத்ருப் போரில் குறைஷிகள் படுமோசமான தோல்வியைத் தழுவிய நேரம். அவர்கள் தங்களுக்கு ஏற்பட்ட இழிவினைத் துடைத்துவிட்டு இழந்த மதிப்பை மீண்டும் பெற வேண்டிய கட்டாயத்தில் இருந்தார்கள். முஹம்மத் (ஸல்) அவர்களையும் அவர்களின் தோழர்களையும் பழிவாங்குவதற்காக எல்லாவிதமான சக்திகளையும் ஒன்றுதிரட்டி பெரும் படைகளை தயார் செய்தார்கள்.

இறைமறுப்பாளர்களின் இந்தப் பெரும் படையைக் கண்டு முஸ்லிம்கள் பலவீனப்படவுமில்லை. முன்பு இதனை விடவும் கடுமையான சூழ்நிலையில் - பத்ருப் போரில் அல்லாஹ் தங்களுக்கு உதவி செய்தது போன்று இப்போதும் உதவி செய்வான் என்ற உறுதியான நம்பிக்கையுடன் அவனையே முழுவதும் சார்ந்திருந்தார்கள். இத்தகைய அனைத்து நிகழ்ச்சிகளிலும் அளவிலா மகிழ்வுடனும் மன நிறைவுடனும் உம்மு உமாரா (ரலி) அவர்கள் இருந்தார்கள்.

குரோதமும் வெறியும் கொண்ட குறைஷகளின் படை முஸ்லிம்களை பழிவாங்கப் புறப்பட்டது. இரு படைகளும் உஹது மலை அடிவாரத்தில் மோதலாயின. குறைஷிகளின் படைக்கு அபூசு∴ப்யான் தலைமையேற்றிருந்தார்.

உம்மு உமாரா (ரலி) தம் வாழ்நாளில் கிடைத்த அரியதொரு சந்தர்ப்பமாக இதனைக் கருதி, தண்ணீர் நிரப்பிய தோல்பையைச் சுமந்துகொண்டு போரில் கலந்திடப் புறப்பட்டார்கள்.

உம்மு உமாரா (ரலி) அவர்கள் தொடக்கத்தில் எதிரிகளுடன் மோதி, வெற்றியை உறுதிப்படுத்திய முன்னணிப்படையில் இருந்தார்கள். அவர்களுக்கு உதவியாகச் சென்றார்கள். முஸ்லிம் வீரர்களின் திகிலூட்டும் தாக்குதல்களைச் சமாளிக்க முடியாமல் குறைஷிகள் ஆயுதங்கள், பொருள்களையெல்லாம் அப்படி அப்படியே போட்டுவிட்டு ஓடலாயினர்.

உஹது மலையின் பின்புறத்து கணவாயில் அம்பெறியும் வீரர்கள் சிலரை அண்ணலார் நிறுத்தியிருந்தார்கள். எதிரிகள் விட்டுச் சென்ற பொருள்களைப் பார்த்ததும் அவர்களின் மனம் சலனமடைந்தது. எத்தகைய சூழ்நிலையிலும் அவ்விடத்தைவிட்டு அகலக்கூடாது என்று நபி (ஸல்) அவர்கள் பிறப்பித்திருந்த ஆணையை மறந்த அவ்வீரர்களில் பெரும்பாலோர், எதிரிகள் விட்டுச் சென்ற பொருள்களைக் கைப்பற்றச் சென்றனர். உடனே அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு அபாயகரமான அக்கணவாயைக் குறைஷிக் குதிரைப் படையினர் கைப்பற்றி உள்ளே புகுந்து முஸ்லிம்களைத் தாக்கினர். எதிரிகளின் இருமுனைத் தாக்குதலினால் முஸ்லிம்கள் சிதறலாயினர். போரின் நிலை தலைகீழானது. வெற்றிக்காற்று இணைவைப்பாளர்களின் பக்கம் வீசலானது.

புறமுதுகிட்டு ஓடிக்கொண்டிருந்த குறைஷிகளும் களத்திற்கு திரும்பினார்கள். புதிய தாக்குதலை தொடங்கியுள்ள குதிரைப்படையினருக்கு உதவிடத் திரண்டு வந்து தாக்குதல் தொடுத்தார்கள். கட்டுக்கோப்பு இழந்து சிதறிவிட்ட முஸ்லிம்களால் ஒன்றும் செய்ய இயலவில்லை. தலைகீழாக மாறிய சூழ்நிலையில் தப்பித்தால் போதும் என்ற நிலைக்கு ஆளாயினர்! முக்கிய தலைவர்கள் எல்லாம் வெருண்டோடலாயினர்.

இத்தகைய அபாயகரமான கட்டத்தில் - துன்பமிகு சூழ்நிலையில் இஸ்லாத்தையும் இறைத்:தூதரையும் பாதுகாப்பதற்காக நிலைகுலையாமல் இருந்தவர்கள் யார்? சுமார் 10, 13 பேர்தான் உறுதி குலையாமல் அண்ணல் நபி (ஸல்) அவர்களைச் சூழ்ந்து நின்று போரிட்டார்கள்! அவர்களின் முன்னணியில் இருவர் இருந்தனர். ஒருவர், அபூ துஜானா (ரலி) எனும் மாவீரர்! அவர் குறைஷிகள் வீசும் அம்புகள் கோமான் நபி (ஸல்) அவர்களின் பூமேனியைத் துளைத்திடாதவாறு தனது திருமேனியைக் கேடயமாகக் காட்டிக் கொண்டு பாதுகாத்து நின்றார்கள்! மற்றொருவர்தான் வரலாற்றுப் புகழ்பெற்ற - மாவீரம் கொண்ட

பெண்மணி உம்மு உமாரா (ரலி) அவர்கள்! அந்தச் சந்தர்ப்பத்தில் அந்தப் பெண்மணியும் எதிரிகளின் அம்புகளை எதிர்நோக்கி நின்றுகொண்டு முடிந்தவரையில் அண்ணலாருக்குப் பாதுகாப்பு அரணாய் விளங்கினார்கள். வாளை எடுத்துச் சுற்றியும் நபியவர்களைக் காப்பாற்றினார்கள்!

ஒருகட்டத்தில் நிராகரிப்பாளர்கள் 'முஹம்மத் (ஸல்) கொல்லப்பட்டார்' எனும் வதந்தியைப் பரப்பிவிட்டார்கள்.

அந்த வதந்தியைக் கேட்டதும் உம்மு உமாரா (ரலி)யோ கத்தலானார். 'இறைத் தூதருக்குப் பிறகு வாழ்வதில் என்ன பயன்? அப்படி வாழவும் வேண்டுமா? என்று கூப்பாடு போட்டவாறு அப்பெண்மணியும் அவருடைய கணவரும், இரு புதல்வர்களும் அண்ணலாருக்கு அருகே வந்தார்கள். மற்றவர்கள் ஓடிக் கொண்டிருந்தார்கள்.

அண்ணல் நபி (ஸல்) உம்மு உமாராவைப் பார்க்கின்றார்கள்! எந்த உம்மு உமாராவை? இறைக்கட்டளையைச் செவியேற்று கீழ்படிவேன். தியாகம் செய்வேன் என்று அன்று ஒரு நாள் தம்மிடம் வாக்குறுதி அளித்த உம்மு உமாராவைப் பார்க்கின்றார்கள். இதோ! அவ் வாக்குறுதியை அப்பெண்மணி நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றார். ஆண்கள் எல்லாம் விட்டுவிட்டு ஓடுகின்ற சந்தர்ப்பத்தில் அண்ணலாரைப் பாதுகாத்திட அப்பெண்மணி உறுதி குலையாதிருக்கின்றார்.

தமக்கு முன்னால் உம்மு உமாரா (ரலி) கேடயமாக நின்று கொண்டிருப்பதை நபியவர்கள் பார்க்கின்றார்கள்! அப்போது வாட்கள் மற்றும் ஈட்டிகளின் தாக்குதலிலிருந்து அப்பெண்ணைக் காப்பாற்ற அருகில் யாரும் இல்லை!

அதே இடத்தில்...!

ஒருவர் களத்திலிருந்து திரும்பி ஓடுகின்றார். அவருடைய கையில் கேடயம் இருந்தது. அதனைக் கண்ட நபியவர்கள் உடனே, ' உனது கேடயத்தை போர் செய்பவருக்காகப் போட்டு விட்டுச் செல்' என்று சப்தமிட்டுச் சொன்னார்கள். அப்போது அவர் தன் கேடயத்தை வீசியெறிந்தார். உம்மு உமாரா (ரலி) அவர்கள் விரைந்து சென்று - அதனை எடுத்து வந்து அன்று மாலை வரை அண்ணலாரின் அருகில் நின்று போர் முடியும் வரை அவர்களுக்குப் பாதுகாப்பு நல்கிக் கொண்டிருந்தார்கள்!

## உஹதின் வீராங்கனை?

உஹதுப் போரில் தாம் கலந்து கொண்டது பற்றி உம்மு உமாரா (ரலி) அளித்த விவரத்தை இப்னு ஹிஷாம் அவர்கள் தமது ஸீறாவில் எழுதியுள்ளார்கள். அதில் உம்மு உமாரா (ரலி) கூறுகின்றார்.

எதிரிகள் குதிரைப் படையினர்தான் எங்களை அதிகமாகத் தாக்கினார்கள். எங்களைப் போன்று அவர்களும் வாகனமின்றி வந்திருந்தால் - இன்ஷா அல்லாஹ் அவர்களை ஒரு கை பார்த்திருப்போம்! ஒருவன் குதிரை மீது வந்து என்னைத் தாக்கினான். நான் கேடயத்தின் மூலம் அவனது தாக்குதலிலிருந்து என்னைத் தற்காத்தேன். அவனது வாளால் எதையும் சாதிக்க முடியாமல் திரும்பினான். அப்போது அவனது குதிரையின் குதிங்காலை வெட்டினேன். குதிரை கீழே விழுந்தது. உடனே நபி (ஸல்) அவர்கள் என்னுடைய மகனை அழைத்து அப்துல்லாஹ்வே, உன்னுடைய தாயைப் பார் உனது தாயைப் பார் என்று சப்தமிட்டார்கள். என்னுடைய மகன் வந்து எனக்கு உதவினான்."

உம்மு உமாரா (ரலி) அவர்களைப் பற்றி இப்னு ஹிஷாம் (ரஹ்) கூறுகின்றார்கள். உம்மு உமாரா (ரலி) அவர்கள் போரிட்டுக் கொண்டும் காயமடைந்தவர்களுக்கு சிகிச்சை அளித்துக் கொண்டும், தண்ணீர் புகட்டிக் கொண்டும் இருந்தார்கள். ஒரு கட்டத்தில் அவருடைய மகனார் அப்துல்லாஹ் இப்னு ஜைத் (ரலி) தாக்குதலுக்குள்ளாகி காயம் அடைந்தார். ஆனால் உம்மு உமாராவோ தன்

மகனைக் கண்டுகொள்ளாமல் எதிரிகளுடன் போரிடுவதில் ஈடுபட்டிருந்தார்கள். இறுதியில் நபி (ஸல்) அவர்கள் அப்துல்லாஹ்வை அழைத்து உமது காயத்திற்கு நீரே மருந்து கட்டிக் கொள்வீராக'' என்று கூறியபோதுதான் தன்னுடைய மகன் காயமடைந்திருப் பதை உம்மு உமாரா (ரலி) உணர்ந்தார்கள். உடனே அருகில் சென்று, அவருடைய காலில் மருந்து வைத்துக் கட்டினார். பிறகு தனது மகனை நோக்கிக் கூறினார். மகனே, சென்று இறுதிவரை போராடு!''

உம்மு உமாரா (ரலி) அவர்களின் தியாகச் செயலைப் பார்த்துக் கொண்டிருந்து நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். உம்மு உமாராவே! உமக்குள்ள ஆற்றல் யாருக்குத்தான் வரும்?''

சிறிது நேரத்தில் அவருடைய மகன் அப்துல்லாஹ்வைக் காயப்படுத்தியவன் மீண்டும் தாக்குதல் தொடுக்க வந்துகொண்டிருந்தான். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். உம்மு உமாராவே, இவன்தான் உன்னுடைய மகனைக் காயப்படுத்தியவன் சுதாரித்துக் கொள்.''

உடனே உம்மு உமாரா (ரலி) அவர்கள் கோபாவேசத்துடன் அவன் பக்கம் பாய்ந்து சென்று வாள் கொண்டு அவனது முழங்காலைத் தாக்கினார்கள். அவன் இருதுண்டாகிக் கீழே சாய்ந்தான். இதனைப் பார்த்துக் கொண்டிருந்த நபியவர்கள் உம்மு உமாராவே, உன்னுடைய மகன் தாக்கப்பட்டதற்கு பழிவாங்கி விட்டீர்'' என்று புன்முறுவலுடன் கூறினார்கள்.

போர் நடந்து கொண்டிருந்தபோது ஒரு அயோக்கியன் தூரத்திலிருந்து பொருமானார் (ஸல்) அவர்களை நோக்கி கல்லெறிந்தான். அக்கல் நபியவர்களின் இரு பற்களை உடைத்து விட்டது. இறைத்தூதர் பதற்றத்துடன் அந்தப் பக்கமாக திரும்பினார்கள். அப்போது இப்னு கமிஆ என்பவன் நபியவர்களை நோக்கி விரைந்து வந்து வாள் கொண்டு தாக்கினான். நபியவர்கள் இரும்புத் தொப்பி அணிந்திருந்தார்கள். அதனுடைய இரு வளையங்கள் தெறித்து வந்து அவர்களின் புனித முகத்தில் குத்தி நிற்க இரத்தம் பீரிட்டு ஓடியது! ஒரு கணப்பொழுதில் இப்படியெல்லாம் நடந்துவிட்டன!

உம்மு உமாரா (ரலி) அவர்கள் பதறிப் போய்விட்டார்கள். முன்னேறிச் சென்று இப்னு கமிஆவைத் தடுத்தார்கள். குறைஷி குலத்தைச் சார்ந்த அவன் குதிரை சவாரியில் திறமையானவன்! உம்மு உமாரா (ரலி) அவர்களும் சளைத்தவர்கள் அல்லவே! சிம்ம இதயம் கொண்ட அவர்கள் மிகவும் துணிச்சலுடன் அவனைத் தாக்கினார்கள். அவன் இரண்டு கவசங்கள் அணிந்திருந்தான். ஆதலால் உம்மு உமாராவின் வாள் ஒடிந்துவிட்டது. அதனால் பதில் தாக்குதல் தொடுக்க இப்னு கமிஆவுக்கு சந்தர்ப்பம் கிடைத்துவிட்டது. அவனது தாக்குதலால் உம்மு உமாராவின் தோளில் கடுமையான வெட்டுக் காயம் ஏற்பட்டது. இப்னு கஆமியாவும் அங்கு நிற்கத் துணிவில்லாமல் வேகமாகக் குதிரையை முடுக்கிக் கொண்டு ஓடிவிட்டான்.

தோளில் பட்ட காயத்திலிருந்து இரத்தம் பெருக்கெடுத்துக் கொண்டிருந்தது! இந்த நிலையில் உம்மு உமாரா (ரலி) அவர்கள் தம் பாதங்களை மெதுவாக எடுத்து வைத்து மெல்ல மெல்ல சென்று கொண்டிந்தார்கள். இந்தப் பாதங்கள் எங்கே செல்கின்றன?

ஒரு பயணி பல நாட்களாக அலைந்து திரிந்து தம் இல்லத்தை அடைந்து கொள்வது போன்று - அந்தப் பாதங்கள் அன்பிற்குரிய அண்ணல் நபி (ஸல்) அவர்களின் பாதங்கள் அருகே சென்று நின்றன!

இஸ்லாத்தின் மீதுள்ள எல்லையற்ற அன்பு கண்ணீர் வடிவத்தில் வெளிப்பட்டுக் கொண்டிருந்தது! ஓர் உணர்ச்சிமிகுந்த குரல் உம்மு உமாராவின் இதய ஆழத்திலிருந்து எழுந்தது.

அல்லாஹ்வின் தூதரே, எனக்காகத் துஆ செய்யுங்கள்! நான் மரணமான பிறகு மறுமையில் எழுப்பப்படும்போது என்னுடைய இந்த உடல், அருள்மிகு இப்பாதங்களின் அருகிலேதான் எழுப்பப்பட வேண்டும்.

இது ஒரு பெண்மணியின் உள்ளத்தில் தகித்துக் கொண்டிருந்த உறுதியான மறுமை நம்பிக்கையின் அடிப்படையில் எழுந்த இஸ்லாமிய எழுச்சி, ஈமானிய ஆர்வம்!

உடனே கருணை நபி (ஸல்) அவர்கள் உம்மு உமாராவுக்காக இறைவனிடம் பிரார்த்தனை செய்தார்கள். இறைவா, இவர்கள் அனைவரையும் சுவனத்தில் என்னுடன் இருப்பவர்களாக ஆக்கி அருள்புரிவாயாக!"

இதனைக் கேட்ட உம்மு உமாரா (ரலி) அவர்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்தார்கள். அவர்கள் அறியாமலேயே அவர்களின் நாவு இப்போது இந்த உலகில் என்ன துன்பம் நேர்ந்தாலும் பராவாயில்லை என்று உச்சரித்தது!

நபி (ஸல்) அவர்களே உம்மு உமாரா (ரலி) அவர்களின் காயத்தில் மருந்து வைத்து கட்டிய வண்ணம் வீரமிக்க நபித்தோழர்கள் பலரை வரிசையாகச் சொல்லி, 'இன்று இவர்கள் அனைவரை விடவும் உம்மு உமாரா அதிக வீரத்தைக் காட்டினார்கள்" என்று கூறினார்கள். உஹதின் வீராங்கனை என்று வரலாறு இன்றும் அவரைப் புகழ்ந்து கொண்டிருக்கின்றது!

இவ்வாறு உயிர்கள், உடமைகளின் இழப்புடனும் கடுமையான காயங்களுடனும் உஹதுப் போர் முடிந்த மறுநாள் மற்றொரு பெரும் சோதனை காத்திருந்தது. குறைஷிகள் தொடர்ந்து தாக்குதல் தொடுக்க வருகின்றார்கள் எனும் செய்தியை அடுத்து நபி (ஸல்) அவர்கள் மீண்டும் போருக்கு ஆயத்தமானார்கள். உஹதுப் போரில் கலந்துகொண்ட அதே தோழர்கள்தான் இப்போது மீண்டும் புறப்பட வேண்டுமென அறிவிப்புச் செய்தார்கள். உம்மு உமாரா (ரலி) அவர்களும் உடனே கச்சையைக் கட்டிக்கொண்டு புறப்பட ஆயத்தமானார்கள். ஆயினும் வெட்டுக் காயங்களிலிருந்து இரத்தம் தொடர்ந்து ஓடிக்கொண்டிருந்ததால் அவர்களால் புறப்பட இயலவில்லை.

நபியவர்கள் ஷஹம்ராவுல் அஸத் எனும் இடம் வரை சென்றுவிட்டு எதிரிகள் யாரும் வராததால் மதீனா திரும்பினார்கள். வீட்டிற்கு செல்வதற்கு முன் அப்துல்லாஹ் இப்னு கஃப் - அல்மாஜினி (ரலி) எனும் தோழரை அனுப்பி உம்மு உமாராவின் நலம் பற்றி விசாரித்தார்கள். அவர்கள் சுகத்துடன் இருப்பதாக செய்தி வந்ததும் நபி (ஸல்) அவர்கள் பெரிதும் சந்தோஷம் அடைந்தார்கள்.

அண்ணல் நபி (ஸல்) அவர்களின் வாழ்நாள் முழுவதும் இறைவழிப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த உம்மு உமாரா (ரலி) அவர்கள், பெருமானார் (ஸல்) அவர்களின் வாழ்நாளுக்குப் பிறகாவது ஓய்வு எடுத்துக் கொண்டு அமைதியான - மகிழ்வான வாழ்வை நாடிச் சென்றார்களா? இல்லை!

## விழுப்புண் தாங்கிய வீரப்பெண்மணி!

இறைவழில் போர் செய்யும் இஸ்லாமியப் படையில் சேராமல் இருப்பதை உம்மு உமாரா (ரலி) எப்போதும் விரும்பிதில்லை. ஜிஹாதுக்கான எந்தச் சந்தர்ப்பத்தையும் அவர் நழுவ விட்டது கிடையாது.

ஹிஜ்ரி 11-ம் ஆண்டு அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மரணம் அடைந்து அபூபக்ர் (ரலி) அவர்கள் ஆட்சிப் பொருப்புக்கு வந்தபோது அரபு நாட்டின் ஒரு பகுதியில் சிலர் இஸ்லாத்தின் இனிய நெறியிலிருந்து மாறிச் செல்லும் குழப்பம் தலைதூக்கியது! இத்தகையவர்களைக் களையெடுப்பதற்காக நடைபெற்ற போர்களில் மிகவும் பிரபலமானது, பொய்யன் முஸைலமாவுடன் நடைபெற்ற போராகும்.

இந்த முஸைலமா, நஜ்த் தேசத்தில் யமாமா என்ற பகுதியில் வாழ்ந்த பனூஹனீஃபா என்னும் கோத்திரத்தின் தலைவன் ஆவான். இவன் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் கடைசிக் காலத்தில் மதம் மாறியதோடு மட்டுமல்லாமல் தான் ஒரு நபி எனவும் வாதிட்டான்.

கொஞ்ச நாட்களில் நபியவர்கள் காலமான பிறகு முஸைலமாவின் வழிகேடு அதிகமானது. தன்னைச் சுற்றி ஒரு கும்பலை உருவாக்கிக் கொண்டு அவர்களின் மூலம் தன்னை நபியென ஏற்றுக் கொள்ளுமாறு மக்களை நிர்ப்பந்தித்தான்.

இதே காலகட்டத்தில் ஒரு நாள் உம்மு உமாரா (ரலி) அவர்களின் மகன் ஹபீப் (ரலி) என்பார் உம்மானிலிருந்து மதீனா திரும்பிக் கொண்டிருந்தார். வழியில் பொய்யன் முஸைலமாவிடம் மாட்டிக் கொண்டார். கொடியோன் முஸைலமா, ஹபீப் (ரலி) அவர்களைக் கைது செய்து முஹம்மத் (ஸல்) அவர்களை நிராகரித்து விட்டுத் தன்னை நபியென ஏற்றுக் கொள்ளுமாறு நிர்ப்பந்தித்தான். அதனை மறுக்கவே அவர்களை சித்திரவதை செய்து கொன்றான்.

தம்முடைய வீரமிக்க மகன் அநியாயமாக கொல்லப்பட்ட செய்தி கேட்டு உம்மு உமாரா (ரலி) முதலில் இறைவனுக்கு நன்றி செலுத்தினார்கள். ஆம்! தம் மகன் உயிருக்கு ஆபத்தான நிலை ஏற்பட்ட போதிலும் இறைநம்பிக்கையை இழக்காதிருந்தார். இறைவன் அவருக்கு கொள்கைப் பிடிப்பை வழங்கினான என்பதற்காக! அன்னையின் உள்ளம் முதலில் இறைவனை நினைவு கூர்ந்தது. அதன் பிறகு முஸைலமாவிற்கு நல்ல பாடம் புகட்ட வேண்டும் என்று உறுதிமொழி ஏற்றது!

இந்த நிகழ்ச்சிக்குக் கொஞ்ச காலத்திற்குப் பிறகு கலீஃபா அபூபக்கர் (ரலி) அவர்கள் முஸைலமாவை எதிர்த்து போரிடுவதற்காக காலித் இப்னு வலீத் (ரலி) அவர்களைப் பணித்தார்கள்.

முஸைலமா கொல்லப்பட வேண்டும், சத்திய மார்க்கம் வெற்றி வாகை சூடுவதைக் கண்ணால் கண்டு மகிழ வேண்டும் எனும் நோக்கத்துடன் காலித்தின் தலைமையின் கீழ் உம்மு உமாரா (ரலி) போர்க்களம் நோக்கிப் புறப்பட்டார்கள். அவர்களின் அருகே இரண்டாவது மகன் அப்துல்லாஹ்வும் போரில் கலந்து கொண்டார். இறுதியில் உண்மை வென்றது. பொய்யன் முஸைலமா இழிவுடனும், கேவலத்துடனும் கொல்லப்பட்டான்.

உஹதுப் போரில் தமது தோளில் ஏற்பட்ட ஆழமான வெட்டுக் காயத்தைவிட கடுமையான மற்றொரு தாக்குதலை தாங்கியவண்ணம் உம்மு உமாரா (ரலி) அவர்கள் இந்தப் போரிலிருந்து திரும்பினார்கள். அது மட்டுமல்ல, இந்தப் போரில் அவர்களின் ஒரு கரம் முழுமையாக துண்டிக்கப்பட்டது! தவிர வாள் மற்றும் பட்டாக்கத்தியினால் ஏற்படுத்தப்பட்ட சிறிய, பெரிய 12 காயங்களையும் அவர்கள் வீர உடல் ஏற்றிருந்தது! இத்தனைக்கும் மேலாக அவர்களின் இரண்டாவது மகன் அப்துல்லாஹ்வையும் இந்தப் போர் பலி கொண்டது!

போர் முடிந்த பிறகு முஸ்லிம் படையினர் தத்தம் இருப்பிடங்களுக்க திரும்பினார்கள். படைத்தளபதி காலித் இப்னு வலீத் (ரலி) உம்மு உமாராவைச் சந்தித்தார்கள். அவர்களின் துண்டிக்கப்பட்ட கரத்தையும் எண்ணற்ற காயங்களையும் பார்த்து கண் கலங்கினார்கள்! பிறகு ஒலிவ எண்ணையின் மூலம் அவர்களின் காயங்களுக்கு சிகிச்சை அளிக்கமாறு ஏவினார்கள். கை துண்டிக்கப்பட்டபோது இருந்த வேதனையை விட இப்பொழுது சிகிச்சையினால் அதிக வேதனை ஏற்பட்டது. ஆயினும் இந்தச் சிகிச்சை நல்ல பலன் அளித்தது என்றே சொல்லலாம்.

உம்மு உமாரா (ரலி) இந்த நிகழ்ச்சியை நினைவு கூறும் போதெல்லாம் காலித் இப்னு வலீத் (ரலி) அவர்களை வெகுவாகப் புகழ்ந்து இப்படிக் கூறுவார்கள். ‘காலித் அவர்கள் மிகுந்த அக்கரையுடன்

எனது சிகிச்சைக்கு ஏற்பாடு செய்தார்கள். அவர் மிகுந்த இரக்கமுடையவர், நல்ல இயல்புடையவருமாவார்.''

உம்மு உமாரா (ரலி) அவர்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மீது அளவுகடந்த மரியாதையும் பாசமும் கொண்டிருந்தார்கள். நபியவர்களுக்காக தம் உயிரையும் தியாகம் செய்ய எப்பொழுதும் தயாராய் இருந்தார்கள். நபியவர்களும் உம்மு உமாரா (ரலி) மீது அதிகப் பரிவு கொண்டிருந்தார்கள். இடையிடையே அவர்களின் இல்லம் சென்று நலம் விசாரிப்பார்கள்!

முஸ்னத் அஹ்மத், இஸாபா இவ்விரு நூல்களில் ஓர் அறிவிப்பு உள்ளது.

ஒரு முறை அண்ணல் நபி (ஸல்) அவர்கள் உம்மு உமாரா (ரலி) அவர்களின் இல்லத்திற்கு வருகை தந்தார்கள். அப்போது அவர்களுக்கு முன்னால் உணவு கொண்டுவந்து வைத்தார்கள். உம்மு உமாரா (ரலி)! நபி (ஸல்) 'நீங்களும் உண்ணுங்கள்'' என்றார்கள்.

இறைத்தூதரே! நான் நோன்பு வைத்திருக்கின்றேன்'' என்று உம்மு உமாரா (ரலி) பதிலளித்தார்கள்.

நோன்பாளிக்கு முன்னால் உணவு உண்ணப்பட்டால் உண்டு முடிக்கும் வரை வானவர்கள் நோன்பாளிக்காக துஆ செய்கின்றார்கள்'' என்று கூறிய நபியவர்கள் உம்மு உமாரா (ரலி) அவர்களின் முன்னிலையில் உணவு உண்டார்கள்.

நபியவர்களுக்குப் பிறகு கலீஃபா அபூபக்ர் (ரலி) அவர்களும் இடையிடையே உம்மு உமாரா (ரலி) அவர்களின் இல்லம் சென்று அவர்களின் நலம் விசாரித்து வருவது உண்டு.

உமர் (ரலி) அவர்களின் ஆட்சிக் காலத்திலும் உம்மு உமாரா (ரலி) உயிருடன் இருந்தார்கள். என்று நம்பகமான அறிவிப்பு கூறுகின்றது. முழுமையை அடைந்து விட்டிருந்த அவர்களுக்கு உமர் (ரலி) அவர்கள் அதிக அளவு மரியாதை செலுத்தி வந்தார்கள்.

## இந்தப் பரிசுக்குரியவர் யார்?

ஒரு முறை!

போரில் கைப்பற்ற பொருள்கள் மதீனாவுக்குக் கொண்டு வரப்பட்டன. விலை உயர்ந்த சேலைகள் இருந்தன. அவற்றில் பொன்னிழை கலந்து நெய்யப்பட்ட மிகமிக விலை உயர்ந்த இரு பட்டுப் புடவைகளும் அடங்கும்!

வந்த பொருள்களைப் பங்கிடும்போது கலீஃபா உமர் (ரலி) அவர்கள் அவையோரை நோக்கிக் கேட்டார்கள். இந்த இரண்டு பட்டுச் சேலைகளுக்கு மிகவும் அருகதையுடையவர் யார:?''

சிலர் சொன்னார்கள். 'உங்களின் மகனார் அப்துல்லாஹ்வின் மனைவிக்கு கொடுங்கள்'' (அப்துல்லாஹ் (ரலி) கலீஃபாவின் மகன் என்பதற்காக இவ்வாறு கூறப்படவில்லை. அவர் பல போர்களில் பங்கு பெற்ற முக்கியமான நபித்தோழர். இறையச்சம் உடையவர் என்பதால்தான் இவ்வாறு கூறப்பட்டது என்பதைக் கவனத்தில் கொள்ளவும்).

உமர் (ரலி) கூறினார்கள். இல்லை இல்லை! இவற்றை உம்மு உமாராவுக்குத்தான் கொடுப்பேன். அவர்தான் இவற்றிற்கு அதிகத் தகுதியானவர். ஏனெனில் உஹதுப் போருக்குப் கிறகு நபி (ஸல்) அவர்கள் உம்மு உமாராவின் வீரம் குறித்து இவ்வாறு கூறக் கேட்டுள்ளேன். 'உஹதுப் போரில் வலது பக்கம் இடது பக்கம் எஹ்கு நோக்கினும் உம்மு உமாராவே போரிட்டுக் கொண்டிருப்பதை நான் கண்டேன்.''

அன்றைய கலீஃபா உமர் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறி விட்டு - அண்ணல் நபி (ஸல்) அவர்களின் நினைவுகளை தம் உள்ளத்தில் பசுமையாக்கிய வண்ணம் மதீனமா நகரத்தின் ஓர் இல்லத்தில் வசித்து வந்த உம்மு உமாரா (ரலி) அவர்களுக்கு அச்சேலைகளை அனுப்பி வைத்தார்கள்.

உம்மு உமாரா (ரலி) அவர்களிடமிருந்து சில நபிமொழிகள் கிடைத்துள்ளன. அவை உம்மு ஸஃத் (ரலி) மற்றும் ஹாரிஸ் இப்னு அப்துல்லாஹ், உப்பாத் இப்னு தமீம் லைலா மற்றும் இக்ரிமா (ரஹ்) ஆகியோரின் வாயிலாக அறிவிக்கப்பட்டுள்ளன.

தம்முடைய சிறிய தந்தையின் மகனார் ஜைத் இப்னு ஆலிம் என்பவரை மணம் முடித்திருந்தார்கள். அவர்களின் மூலம் அப்துல்லாஹ் (ரலி), ஹபீப் (ரலி) எனும் இரு ஆண்மக்களைப் பெற்றெடுத்தார்கள். ஜைத் இறந்த பிறகு அரபா இப்னு அம்ர் (ரலி) என்பவருக்கு மணம் முடிக்கப்பட்டார்கள். இருவருடன் வாழ்ந்து தமீம் என்று ஒரு ஆண் குழந்தையையும் கௌலா என்ற ஒரு பெண் குழந்தையையும் பெற்றார்கள்!

உம்மு உமாரா (ரலி) அவர்கள் மேற்கொண்ட மகத்தான வீரச்செயல்களின் மூலம் பெண் குலத்தின் மதிப்பு உயர்ந்துள்ளது. போர் வலிமையும் ஆற்றலுமிக்க ஆண்களைவிட வீரத்திலும் தியாகத்திலும் தாம் எந்த வகையிலும் குறைந்தவர் அல்லர் என்பதை உம்மு உமாரா (ரலி) அவர்கள் நிரூபித்துக் காட்டினார்கள்.

இஸ்லாத்திற்காகவும் முஸ்லிம்களுக்காகவும் அவர்கள் ஆற்றிய நற்சேவைகளுக்காக அல்லாஹ் அவர்களுக்கு நற்கூலி வழங்குவானாக!!

## ஃபாத்திமா பின்த் அஸத் (ரலி)

ஹிஜ்ரத் சகாப்தம் நடைபெற்று நான்கு அல்லது ஐந்து ஆண்டுகள் கழித்து விட்டிருக்கலாம். ஒரு நாள் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் ஒரு துக்கச் செய்தியைக் கேள்விப்பட்டுக் கடும் துயரத்திற்குள்ளானார்கள். பெரும் சோகத்தில் ஆழ்ந்தார்கள். அவர்களின் கண்களிலிருந்து கண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது! அது ஒரு பெண்மணியின் மரணச் செய்தி! உடனே அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மரணம் அடைந்த அப்பெண்ணின் வீட்டிற்குச் சென்றார்கள். நீண்ட நெடிய ஷதூக்கத்தில் ஆழ்ந்து விட்டிருந்த அப்பெண்ணின் தலையருகே துயரமே உருவாக நின்று கொண்டு, ஷஷஎன் அன்பிற்குரிய அன்னையே! இறைவன் உங்கள் மீது கருணை பொழியட்டும். என் தாய்க்குப் பிறகு நீங்கள் எனக்குத் தாயாக இருந்தீர்கள். நீங்கள் பசியோடு இருந்தும் எனக்கு உணவூட்டினீர்கள். நீங்கள் கந்தல் ஆடைகளை அணிந்து கொண்டு எனக்கு புத்தாடை வாங்கி அணிவித்து மகிழ்ந்தீர்கள்ஷஷ என்று கண்கலங்கியபடியே கூறினார்கள்!

அதன் பிறகு மாநபி (ஸல்) அவர்கள் தம்முடைய அங்கியைக் கொடுத்து அதில் தம் அன்னையை கஃபனிட்டு அடக்குவற்குப் பயன்படுத்துமாறு கூறினார்கள்.

பிறகு ஜன்னதுல் பகீஃ எனும் மதீனாவின் கப்ருஸ்தானில் ஒரு மண்ணறை தோண்டுமாறு உஸாமா இப்னு ஜைத் (ரலி), அபூ அய்யூப் அன்ஸாரி (ரலி) இருவரையும் நபி (ஸல்) அவர்கள் ஏவினார்கள். அவ்விருவரும் கப்றின் முதல் பகுதியை வெட்டி முடிந்தபோது நபி (ஸல்) அவர்களே உள்ளே இறங்கி தம்முடைய திருக்கரங்களால் கடைசிப் பகுதியைத் தோண்டினார்கள். தோண்டப்பட்ட

மண்ணையும் நபியவர்களே மேலே அள்ளிப் போட்டார்கள். முழுமையாக வெட்டி முடித்தபோது நபியவர்கள் அம்மண்ணரையில் படுத்துக் கொண்டு,

ஷஷஇறைவனே, என் அன்னைக்கு கருணை புரிவாயாக! அவர்களின் மண்ணரையை விரிவாக்குவாயாக!ஷஷ என்று துஆ செய்தார்கள்.

இவ்வாறு இறைவனிடம் இறைஞ்விட்டு, அம்மண்ணறையிலிருந்து வெளியே வந்ததும் மிகுந்த வேதனையோடு தம் திருக்கரத்தால் தாடியைப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்தார்கள். கண்ணீர் பெருக்கெடுத்து அவர்களின் கன்னங்களில் வழிந்தது!

நபி (ஸல்) அவர்கள் தங்களின் அங்கியை க∴பன் துணியாகக் கொடுத்தது பற்றியும் கப்றில் இறங்கி கொஞ்ச நேரம் படுத்திருந்தது பற்றியும் மக்கள் வியந்து நின்றபோது நபியவர்கள் வளக்கம் அளித்தார்கள்.

ஷஷஅபூ தாலிபுக்குப் பிறகு இவர்களைவிடவும் அதிகமாக யாரும் என் மீது கருணை காட்டவில்லை. இவர்களுக்கு சுவனத்தில் ஆடையாக இருக்கட்டும் என்பதற்காக என் அங்கியை அணிவித்தேன். மண்ணறைத் தொல்லைகளின் கடுமை குறைய வேண்டும் என்பதற்காகவே நான் அதில் கொஞ்சநேரம் படுத்திருந்தேன்.ஷஷ

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் இத்துணை உளப்பூர்வமான பாசத்தையும் அன்பையும் பொழியும் அளவுக்கு நன்மதிப்பும் நற்பேறும் வாய்க்கப்பெற்ற அந்தப் பெண்மணி யார் தெரியுமா? அவர்தான் அண்ணலாரின் பெரிய தந்தை அபூதாலிபின் மனைவியும் அலீ (ரலி) அவர்களின் தாயாருமான அன்னை ∴பாத்திமா பின்த் அஸத் (ரலி) அவர்கள்!

ஆம்! எந்த அபூதாலிப் அண்ணல் நபியவர்களை, அவர்களின் குழந்தைப் பருவம் முதலே பாதுகாத்து வளர்த்து வரும் பாக்கியம் பெற்றிருந்தும் கூட என்றோ வருகின்ற மறுமை வாழ்வின் தண்டனைக்கு அஞ்சி இஸ்லாத்தில் இணைந்து விட்டார் என்று குறைஷியர் இழிவாகப் பேசுவார்களோ என அஞ்சி அண்ணலாரை இறைத் தூதராக ஏற்றுக் கொள்ள மறுத்தாரோ – அந்த அபூதாலிபின் துணைவியர்தான் அண்ணலாரின் மீது ஈமான் கொண்டு – அதாவது அவர்கள் இறைவனின் திருத்தூதர்தாம் என ஏற்றுக் கொண்டு உண்மை விசுவாசியாக வாழ்ந்துள்ளார்கள்! உலக முஸ்லிம்கள் அனைவரும் என்றென்றும் பெருமையோடு நினைவு கூர்ந்து வருகின்ற கண்ணியத்திற்குரிய நபித்தோழியர்களில் ஒருவராய் ∴பாத்திமா பின்த் அஸத் (ரலி) திகழ்கின்றார்கள்.

## பிறப்பும் சிறப்பும்

அன்னை ∴பாத்திமா பின்த் அஸத் (ரலி) அவர்கள் குறைஷி வம்சத்தின் மிக உயர்ந்த கண்ணியமான குடும்பமாகிய பனூஹாஷிம் குலத்தில் பிறந்து அவர்களிடமே மிகச் சிறந்த முறையில் வளர்ந்தார்கள். குழந்தைப் பருவம் முதலே சிறந்த குணங்களுக்கும் உயர்ந்த பண்பாட்டுக்கும் உறைவிடமாய்த் திகழ்ந்தார்கள்.

அதனால்தான் தூர நோக்கும் தீர்க்கமான அறிவும் கொண்ட அப்துல் முத்தலிப், ஒழுக்கத்தின் சிகரமாய் விளங்கிய ∴பாத்திமா பின்த் அஸத் (ரலி) அவர்களைத் தேர்ந்தெடுத்து தம் மகன் அபூதாலிபுக்கு மணம் முடித்து வைத்தார்கள்.

அல்லாமா இப்னு அப்துல் பர் (ரஹ்) அவர்கள் இஸ்தீ-ஆப் எனும் நூலில் ஷஷ்ஹாஷிம் குலத்தில் பிறந்த இவர், அக்குலத்தில் பிறந்த ஒருவருக்கே வாழ்க்கைப் பட்டு, அவரின் மூலம் குழந்தைகளைப் பெற்றெடுத்த முதல் ஹாஷிம் பெண்மணி ஆவார் என்று கூறியுள்ளார்.

### நபியவர்களுக்கு பாதுகாப்பு அளித்தல்

அண்ணல் நபி (ஸல்) அவர்களின் பாட்டனார் அப்துல் முத்தலிப் மரணமான பிறகு நபியவர்களுக்கு பாதுகாப்பு அளிப்பது அபூதாலிப், ஃபாத்திமா பின்த் அஸத் (ரலி) இருவரின் பொறுப்பாயிற்று! இருவரும் நபியவர்களைப் பாதுகாக்க உளப் பூர்வமாக எல்லா ஏற்பாடுகளையும் செய்தனர். அவர்களுக்கு அவர்களின் பிள்ளைகளை விடவும் நபியவர்களின் மீதுதான் அதிக அன்பும் பாசமும் இருந்தன.

மக்காவில் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் இஸ்லாமிய அழைப்புப் பணியை மேற்கொண்ட ஆரம்ப காலத்தில் ஆபத்தான – கொடூரமான தாக்குதலைத் தொடுக்கும் அளவுக்குத் துணியவில்லை, குறைஷிகளுக்கு மத்தியில் பனூஹாஷிம் குலத்துக்கு இருந்த தனிப்பட்ட மரியாதைதான் அவர்களின் ஷைகைகளைக் கட்டி ப் போட்டிருந்தது. குறிப்பாக அபூதாலிப் - அவர்தம் மனைவி ஃபாத்திமா (ரலி) ஆகிய இருவரின் செல்வாக்கும் அந்தஸ்தும்தான் எதிரிகளை அந்த அளவுக்கு எதுவும் செய்யவிடாமல் தடுத்து வந்தன என்பது மிகையான ஒன்றல்ல!

### பொறுமையின் சிகரம்

குறைஷிகள் அண்ணலார் மீது கொடூரமான தாக்குதல் தொடுக்கத் துணியவில்லையே தவிர, நபி (ஸல்) அவர்களுக்கும் அவர்களை நம்பி வந்த ஏழை எளிய முஸ்லிம்களுக்கும் தங்களால் முடிந்த அனைத்து வழிகளிலும் தொல்லைகளையும் துன்பங்களையும் தொடர்ந்து கொடுத்து வந்தனர். இப்படி எதிரிகளால் இழைக்கப்பட்ட துன்பங்கள் அனைத்திலும் ஏனைய முஸ்லிம்களைப் போன்று ஃபாத்திமா பின்த் அஸத் (ரலி) அவர்களும் பொறுமையின் சின்னமாய் விளங்கினார்கள்.

குறைஷிகளின் அத்துமீறிய கொடுமைகளைத் தாங்க முடியாமல், நபிப்பட்டம் வழங்கப்பட்டு 5வது 6வது ஆண்டுகளில் அபிசீனியாவுக்கு ஹிஜ்ரத் செய்த முஸ்லிம்களின் குழுவுடன் ஜஅஃபர் இப்னு அபீ தாலிப் (ரலி) அவர்களும் அவர்களும் மனைவி அஸ்மா பின்த் உமைஸ் (ரலி) அவர்களும் புறப்பட வேண்டியதாயிற்று! அந்த சந்தர்ப்பத்தில் ஃபாத்திமா பின்த் அஸத் (ரலி) அவர்கள் தம் மகனும் மருமகளும் பிரிந்து போவதைப் பொறுமையோடு சகித்துக் கொண்டார்கள்.

இதேபோன்று :-

நபிப்பட்டம் வழங்கப்பட்டு 7ஆம் ஆண்டு அபூதாலிப் அவருடைய குடும்பத்தார்கள், முஸ்லிம்கள் - அவர்களின் ஆதரவாளர்கள் ஆகிய அனைவரையும் சமூகத்திலிருந்து ஒதுக்கி வைக்கத் தீர்மானித்தார்கள் மக்கத்து குறைஷிகள். ஊரில் எவரும் திருமண உறவு ஏற்பட எந்தத் தொடர்பும் அவர்களுடன் வைத்துக் கொள்ளக் கூடாது என்று தீவிரக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. அபூதாலிப், அவருடைய சகோதரரின் மகனார் முஹம்மத் (ஸல்) அவர்களைத் தங்களிடம் ஒப்படைக்க வேண்டும், தாங்கள் அவரைத் தீர்த்துக் கட்டிவிட்டு இஸ்லாத்தின் பிரச்சாரத்திற்கு ஒரு முடிவு கட்ட வேண்டும் என்பது குறைஷிகளின் கோரிக்கை! அது ஏற்றுக் கொள்ளப் படாததால் இந்த சமூக பகிஷ்கரிப்பு! இது ஒரு மாதம், இரண்டு மாதம் அல்ல, சுமார் மூன்றாண்டு காலம் வரையில் நீடித்தது!

இந்த நீண்டகால பகிஷ்கரிப்பினால் பாதிப்பிற்குள்ளான பனூஹாஷிம் குடும்பத்தினர், ஏழை முஸ்லிம்கள், பெண்கள், குழந்தைகள் உள்பட அனைவரும் பொறுமையை மேற்கொண்டு இஸ்லாமியப் பற்றையும் கொள்கைப் பிடிப்பையும் வெளிப்படுத்தினார்கள். குறிப்பாக அன்னை ஃபாத்திமா பின்த் அஸத் (ரலி) அவர்கள் - தமது முதுமை தளர்ச்சிகளினூடே அந்தச் சோதனைக் காலத்தில் வெளிப்படுத்திய ஊக்கத்துக்கும், உறுதிக்கும் ஈடிணை இல்லை என்றே சொல்லாம்!

நபித்துவத்தின் பத்தாம் ஆண்டில் அபூதாலிப் மரணம் அடைந்தார். அதன் பிறகு ஃபாத்திமா பின்த் அஸத் (ரலி) அவர்கள்தாம் பனூஹாஷிம் குலத்துக்கு இருந்த முழுச் செல்வாக்கையும் பிரயோகித்து நபியவர்களை பாதுகாத்திடச் சாத்தியமான அத்தனை வழிகளையும் மேற்கொண்டார்கள்!

மதீனாவுக்கு ஹிஜ்ரத் செய்யுமாறு முஸ்லிம்களுக்குக் கட்டளையிடப்பட்டபோது மூதாட்டி ஃபாத்திமா பின்த் அஸத் (ரலி) அவர்களும் தமது முதுமையையும் பொருட்படுத்தாமல் ஹிஜ்ரத் செய்து மதீனா வந்தார்கள்!

### மாமியாரும் மருமகளும்

ஹிஜ்ரத்திற்கு இரண்டு அல்லது மூன்று ஆண்டுகட்குப் பிறகு அன்னை ஃபாத்திமா பின்த் அஸத் (ரலி) அவர்களின் மகன் அலீ (ரலி) அவர்களுக்கும், அண்ணல் நபி (ஸல்) அவர்களின் மகள் கண்மணி ஃபாத்திமா (ரலி) அவர்களுக்கும் திருமணம் நடந்தது.

மங்கையர்த் திலகம் ஃபாத்திமா (ரலி) தம் கணவர் வீட்டிற்கு மருமகளாய் வருகை தந்தபோது அன்புக் கணவர் அலீ (ரலி) அவர்கள் மரியாதைக்குரிய தாயாரை நோக்கிக் கூறினார்கள்: ஷஷமுஹம்மத் நபி (ஸல்) அவர்களின் மகள் ஃபாத்திமா வந்துள்ளார். நான் தண்ணீர்த் தேவை போன்ற வெளிவேலைகளைச் செய்து முடிக்கிறேன். மாவு அரைப்பதிலும் அதனைச் சமைப்பதிலும் உங்களுக்கு ஃபாத்திமா உதவி செய்வார்.

கீர்த்திமிக்க இம்மாமியார் - மருமகள் இருவரின் மூலமாக வீரர் அலீ (ரலி)யின் குடும்பம் மட்டும் கண்ணியம் பெறவில்லை. ஃபாத்திமா எனும் பெயரும் - புகழும் சிறப்புப் பெற்றது!

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அன்னை ஃபாத்திமா பின்த் அஸத் (ரலி) மீது பெரிதும் நேசம் கொண்டிருந்தார்கள். அன்னையின் வீட்டிற்கு அடிக்கடி சென்று அவர்களைச் சந்திப்பார்கள். அங்கே ஓய்வு எடுப்பார்கள். அன்னை அவர்களின் மேன்மை, அன்பு மற்றும் நற்குணங்களைப் பற்றி நபியவர்கள் பலமுறை புகழ்ந்து கூறியிருக்கின்றார்கள்!

அன்னை ஃபாத்திமா பின்த் அஸத் (ரலி) அவர்களின் ஆண் மக்களில் அலீ (ரலி), ஜஅஃபர் (ரலி), உகைல் (ரலி) ஆகியோர் இஸ்லாத்தை ஏற்கும் பாக்கியம் பெற்றார்கள். பெண் மக்களில் உம்மு ஹானி (ரலி), ஜுமானா (ரலி) இருவரும் இஸ்லாத்தைத் தழுவினார்கள்.

அன்னை அவர்கள் கவிதைகள் புனைவதிலும் ஈடுபாடு கொண்டிருந்ததாகக் கூறப்படுகிறது. தம்முடைய மகனார் உகைல் (ரலி) அவர்களைப் பற்றி அவர் எழுதிய சில கவிதைகள் உள்ளன.

ஹிஜ்ரத்திற்குச் சில ஆண்டுகளுக்குப் பிறகு அன்னை ஃபாத்திமா பின்த் அஸத் (ரலி) அவர்கள் மரணம் அடைந்தபோது நபி (ஸல்) அவர்களே தமது மேலங்கியை கஃபன் (பொதி) துணியாக வழங்கியதிலிருந்தும், அடக்கம் செய்வதற்கு முன் தமது புனித உடலை சிறிது நேரம் மண்ணறையில் கிடத்தியதிலிருந்தும், அன்னை அவர்களின் மதிப்பும், அந்தஸ்தும் எத்துணை உயர்வானது என்பதை நாம் அறிந்திடலாம். அவர்களின் மீது அல்லாஹ் தனது முழுத் திருப்தியையும் பொழிவானாக!

## ஸுமைய்யா பின்த் கபாத் (ரலி)

**அ**ண்ணல் நபி (ஸல்) அவர்கள் தூதுவப்பணி ஏற்று சத்திய நெறியின் பக்கம் மக்களை அழைக்கத் தொடங்கிய போது

அன்று வரைக்கும் அஸ்ஸாதிக் - உண்மையாளர்'' அல் அமீன் - நம்பிக்கைக்குரியவர்'' என்று கூறி அண்ணலாரை அன்போடு போற்றிவந்த மக்கத்துக் குறைஷிகள், அன்று முதல் அவர்களின் உயிரையே குடிக்கத் துடிக்கும் கொடிய பகைவர்களாய் மாறலானார்கள்.

அவர்கள் நபியவர்களை மட்டுமல்ல, இஸ்லாமிய நன்நெறியை ஏற்றுக் கொண்ட நன்மக்கள் அனைவரையும் ஆண், பெண் என எவ்வித பாகுபாடுமின்றிக் கொடுமைப் படுத்தினார்கள்!

இக்காலகட்டத்தில், ஒருமுறை நபி (ஸல்) அவர்கள் பனூமக்ஸூம் கூட்டத்தார் வசிக்கும் வழியாகச் சென்றார்கள். அங்கே ஒரு படுபாதகச் செயல் நிகழ்ந்தது! இறைமறுப்பாளர்களான குறைஷிகள் முதுமை நிலையிலுள்ள ஒரு பெண்ணை இரும்புக் கவசம் அணிவித்துக் கடும் வெயிலில், தரையில் கிடத்தியிருந்தார்கள். அவளின் அருகே கும்பலாகச் சூழ்ந்து நின்று உரக்கச் சிரித்த வண்ணம், முஹம்மதின் மார்க்கத்தை ஏற்றுக் கொண்டாய் அல்லவா? அதன் பலனைச் சுவைத்துப் பார்!'' என்று கூறி பரிகாசம் செய்தார்கள்.

கொடியவர்களின் கைகளில் சிக்கிய அப்பெண்மணியின் பரிதாப நிலையைக் கண்டு காருண்ய நபியவர்கள் கண்கலங்கி நின்றார்கள். பொறுமையுடன் இருங்கள், நீங்கள் செல்லுமிடம் சுவனபதிதான்'' என்று அவருக்கு ஆறுதல் கூறினார்கள்! சத்திய வழியில் இத்தகைய கொடுமைக்கு இலக்காகி, நபியவர்களால் சுவனபதியின் நற்செய்தி சொல்லப்பட்ட அப்பெண்மணியின் பெயர்தான் ஸுமைய்யா பின்த் கபாத் (ரலி)!

அன்னை ஸுமைய்யா (ரலி) அவர்கள் பிரபலமான நபித்தோழியருள் ஒருவராவார். அவர்கள் தம்முடைய முதுமைக் காலத்தில் பலவீனமான நிலையிலும்கூட எதிரிகளால் தொடர்ந்து இழைக்கப்பட்ட திகிலூட்டும் கொடுமைகள் அனைத்தையும் சத்தியத்திற்காக சகித்துக் கொண்டார்கள்! ஏன் - அவ்வழியில் தம்முடைய இன்னுயிரையும் தியாகம் செய்து இஸ்லாத்திற்காக முதன் முதலில் உயிர்த்தியாகம் செய்த மகத்தான சிறப்பினை அடைந்தார்கள்!

## இஸ்லாத்தைத் தழுவுதல்

அன்னை ஸுமைய (ரலி) அவர்களின் மூதாதையருள் அவர்களின் தந்தை 'கபாத்' என்பவரின் பெயர் மட்டுமே தெரிய வருகிறது. அவர்களுடைய ஊர் எது? குலம் எது? எப்போது எப்படி மக்கா வந்தார்கள் என்பன பற்றி வரலாற்று ஏடுகளில் எந்தத் தகவலும் இல்லை!

இவர்களைப் பற்றி அறியக் கிடைத்த ஆதாரப்பூர்வமான தகவர்கள் வருமாறு:

ஸுமையா (ரலி) அவர்கள், அறியாமைக் காலத்தில் மக்கத்துத் தலைவர்களில் ஒருவரான மக்ஸூமி கோத்திரத்தைச் சேர்ந்த அபூஹுதை∴பா இப்னுல் முகீரா என்பவரின் அடிமையாய் இருந்தார்கள். இவர் அபூ ஜஹ்லின் பெரிய தந்தையாவார். இது நபித்துவத்திற்கு ஏறத்தாழ 45 ஆண்டுகளுக்கு முன்புள்ள செய்தி! இதே காலகட்டத்தில் கஹ்தான் கோத்திரத்தைச் சேர்ந்த யாஸிர் இப்னு அமீர் என்பவர் காணாமல் போய்விட்ட தன்னுடைய நான்காவது சகோதரரைத் தேடியவாறு ஹாரிஸ் மற்றும் மாலிக் எனும் இரு சகோதரர்களுடன் யமன் தேசத்திலிருந்து மக்கா நகர் வந்தார். பிறகு ஹாரிஸும் மாலிக்கும் யமனுக்கு திரும்பிச் சென்று விட்டனர். ஆனால் யாசிர் மட்டும் மக்காவில் தங்குவதற்கு தீர்மானித்து அபூஹுதை∴பா இப்னு முகீரா என்பவரின் நேசராகின்றார். இப்னு முகீரா ஸுமையாவை யாஸிருக்கு மணமுடித்து வைத்தார். இருவருக்கும் அப்துல்லாஹ், அம்மார் (ரலி-அன்ஹும்) என்று இரண்டு குழந்தைகள் பிறந்தார்கள். கொஞ்ச நாட்களில் அபூஹுதை∴பா காலமானார். அன்னை ஸுமைய (ரலி) அவர்கள் அவரின் வாரிசுதாரர்களுக்கு அடிமையாய் இருந்து வந்தார்கள்.

இந்தக் காலகட்டத்தில் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் இளமைப் பருவம் கடந்து வாலிபத்தை அடைந்திருந்தார்கள்.

முஹம்மத் (ஸல்) அவர்கள் நபித்துவத்திற்கு முன்புள்ள காலத்தில் யாஸிர், சுமைய்யா, அப்துல்லாஹ் மற்றும் அம்மார் (ரலி-அன்ஹு ம்) ஆகியோர் பழகும் இடத்தில் வாழ்ந்து வந்திருக்க வேண்டும். நபியவர்களைப் பற்றி இக்குடும்பத்தினர் நன்கு அறிந்திருக்க வேண்டும். மேலும் அவர்களின் மகத்தான ஆளுமையும் உயர்குணமும் சிறந்த பண்பும் அக்குடும்பத்தினரின் உள்ளங்களில் ஆழமான பாதிப்பை ஏற்படுத்தியிருக்க வேண்டும்.

ஆகையால்தான் நபித்துவம் அருளப்பட்டு, நபியவர்கள் சத்திய அழைப்பு விடுக்கத் தொடங்கியவுடன் இக்குடும்பத்தினர் அனைவரும் எவ்விதத் தயக்கமுமின்றி இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள்.

## கொள்கைப் பிடிப்பு

அன்றைய காலகட்டம், இஸ்லாத்தைத் தழுவிய அனைவருக்கும் மிகவும் சோதனை நிறைந்த கால கட்டமாக இருந்தது. மக்காவில் எந்த ஒரு மனிதர் ஏகத்துவக் கலிமாவை ஏற்றுக் கொண்டாலும் அவர், இணைவைப்பாளர்களான குரைஷிகளின் கடுஞ்சினத்திற்கு உரியவரானார். அவர்கள் இழைத்த கொடுமைக்கும் அக்கிரமத்திற்கும் அவர் இலக்காக வேண்டியதிருந்தது! செல்வமும் செல்வாக்கும் பெற்ற உயர் குடும்பத்தினரையும் ஏன், மிக நெருங்கிய தங்களின் உறவினர்களையும் கூட அக்கொடுமைக்காரர்கள் விட்டு வைக்கவில்லை!

ஆனால் யாஸிரும் அவருடைய இரு புதல்வர்களும் மிகவும் ஏழைகள் மட்டுமல்ல, வெளியூர்க்காரர்கள்! ஸு மைய்யா (ரலி) அவர்களோ இப்போதும் மக்ஸூ ம் கிளையார்களின் அடிமையாகத்தான் இருந்தார்கள். இந்நிலையில் இந்த அப்பாவி மக்கள் மீது கொடுமைகளைக் கட்டவிழ்த்து விடுவதில் குறைகூஷிகளுக்கு எவ்விதத் தடையும் இருக்கவில்லை. பலவீனமான அக்குடும்பத்தினர்க்கு அவர்கள் என்னென்ன துன்பங்களெல்லாம் கொடுத்தார்கள் தெரியுமா! அவற்றைக் கேள்வியுறும்போது மேனி நடுங்குகிறது. மனித உணர்வே உறைந்து போய் விடுகிறது!

சிலபோது அவர்களுக்கு இரும்புக்கவசம் அணிவித்து சுடுமணலில் கிடத்துவார்கள். சிலபோது இரும்பைப் பழுக்கக் காய்ச்சி அவர்களின் முதுகுகளில் சூடு போடுவார்கள். சில வேளைகளில் அவர்களைத் தண்ணீரில் அமிழ்த்துவார்கள்! இப்படி அந்த ஏழை மக்களை விதவிதமாகத் துன்புறுத்துவது அந்த இறைமறுப்பாளர்களின் அன்றாடத் ‘தொழிலாகி’ விட்டிருந்தது!

பெரியவர் யாஸிரும் அன்னை ஸு மைய்யாவும் வயது முதிர்ந்த நிலையில் மிகவும் பலவீனமாய் இருந்தார்கள். ஆயினும் அவர்களின் ஈமானிய உணர்வும் கொள்கைப்பிடிப்பும் இளமையோடு உறுதியாய் இருந்தன.

குறைகூஷியர் அவர்களுக்கு எத்தனையோ விதமான துன்பங்களைக் கொடுத்து ஏகத்துவத்தை விட்டுவிட்டு இணைவைப்புக் கொள்கையை ஏற்றிடும்படி எவ்வளவோ நிர்பந்தித்தார்கள். எனினும் அவ்விருவரும் சத்தியப் பாதையிலிருந்து இம்மியளவும் அடிசறுக்கவில்லை. அவர்களின் இரு புதல்வர்களும் இவ்வாறே ஏகத்துவக் கொள்கையில் எஃகு போல் விளங்கினார்கள்!

ஒரு சமயம் அக்குடும்பத்தினர் கொடுமைப்படுத்தப்பட்டபோது அவ்வழியாக நபி (ஸல்) அவர்கள் நடந்து செல்ல நேர்ந்தது. இந்நிகழ்ச்சிகளைக் கண்டதும் நபியவர்கள் கடும் துக்கம் அடைந்தார்கள். அந்றைய சூழ்நிலையில், யாஸிரின் குடும்பத்தினரே, பொறுமையுடன் இருங்கள்! உங்களுக்கு

சுவர்க்கம் வாக்கழிக்கப்பட்டிருக்கின்றது'' என்று ஆறுதல் மட்டும் கூறிடும் நிலையில் நபியவர்கள் இருந்தார்கள்!

மற்றோர் அறிவிப்பில் யாஸிர், ஸு மய்யா மற்றும் அவர்களின் இரு புதல்வர்கள் அனைவரையும் குறைகூஷிகள் கொடுமைப்படுத்திக் கொண்டிருந்த நிகழ்ச்சியை நபியவர்கள் பார்த்தபோது, பொறுமையுடன் இருங்கள்!'' என்று ஆறுதல் கூறிவிட்டு இறைவா, யாஸிரின் குடும்பத்தினர்க்கு மன்னிப்பு வழங்குவாயாக!'' என்று பிரார்த்தனை செய்தார்கள்!

## உயிர்த் தியாகம்

முதியவரான யாஸிர் இக்கொடுமைகளையெல்லாம் சகித்துச் சகித்து ஒருநாள் சத்திய வழியில் உயிர் துறந்தார். அதன் பிறகாவது அக்கொடுமைக்காரர்களுக்கு அக் குடும்பத்தினர் மீது இரக்கம் வரவேண்டுமே! ஊஹு ம்! கல்லாய் இறுகிவிட்ட அவர்களின் இதயங்களில் அறவே இரக்கம் வரவில்லை! ஸு மைய்யா அவர்களையும், அவருடைய இரு புதல்வர்களையும் கொடுமைப்படுத்துவதைத் தொடர்கதையாக் கினார்கள் அக்கல்நெஞ்சக்காரார்கள்!

ஒருநாள், அன்னை ஸு மைய்யா (ரலி) அவர்கள் பகல் முழுவதும் துன்பங்களைத் தாங்கிக் கொண்டிருந்துவிட்டு மாலையில் வீட்டிற்கு வந்தார்கள். அங்கே ஆபுஜஹில் நின்று கொண்டு அவர்களைக் கடுமையாகத் தூற்றலானான். அப்படி ஏசிப் பேசிக் கொண்டே பெரிதும் கோபாவேசம் கொண்ட அவன் தன்னுடைய கூர்மையான ஈட்டியினால் அன்னை ஸு மைய்யா (ரலி) அவர்களைக் கண்மூடித்தனமாகத் தாக்கினான். அந்தோ! ஸு மைய்யா (ரலி) அவர்கள் கீழே சாய்ந்து அதே இடத்தில் தமது இன்னுயிரைத் துறந்தார்கள்! இரவிலாவது அமைதியும் நிம்மதியும் கிடைக்கும் என்று இல்லம் திரும்பிய அவர்கள் இறைவனிடம் போய்ச் சேர்ந்தார்கள்.

மற்றோர் அறிவிப்பில் இப்படி உள்ளது: கொடியோன் அபூஜஹில் ஸு மைய்யா (ரலி) அவர்களின் புதல்வர் அப்துல்லாஹ்வையும் தன்னுடைய அம்பினால் தாக்கி கூஷிஹீதாக்கினான். இப்போது அக்குடும்பத்தில் அம்மார் (ரலி) அவர்கள் கடும் துயரத்தில் மூழ்கினார்கள். அழுதுகொண்டே அண்ணல் நபி (ஸல்) அவர்களின் சமூகம் வந்து நடந்த நிகழ்ச்சியை எடுத்துரைத்து அல்லாஹ்வின் தூதரே, இப்போது கொடுமை இந்த அளவுக்கு வந்துவிட்டதே! என்று முறையிட்டார்கள்.

நபி (ஸல்) அவர்கள் பொறுமையைக் கைக்கொள்ளும்படி அவரை வேண்டிக் கொண்டு, 'அல்லாஹ்வே யாஸிரின் குடும்பத்தினரை நரகத்திலிருந்து காப்பாற்று' என்று பிரார்த்தித்தார்கள்.

அம்மார் (ரலி) அவர்களின் உள்ளத்தில் அவரின் தாயார் கொடுமையாகக் கொல்லப்பட்ட நிகழ்ச்சி எப்போதும் பசுமையாய் இருந்தது. ஏன், அநியாயமாக நிகழ்ந்த அந்தக் கொலையும் அதனைச் செய்யத் துணிந்த அபூஜஹ்லின் துர்பாக்கியமும் அண்ணல் நபி (ஸல்) அவர்களுக்கும் நினைவில் இருந்தது!

ஹிஜ்ரி இரண்டாம் ஆண்டு நடந்த பத்ரு யுத்தத்தில் அபூஜஹ்ல் கொலையுண்டபோது நபியவர்கள் அம்மாரை அழைத்து உம்முடைய தாயாரைக் கொன்றவனிடம் அல்லாஹ் பழிவாங்கி விட்டான் என்று கூறினார்கள்.

அன்னை ஸு மய்யா கூஷிஹீதாக்கப்பட்டது ஹிஜ்ரி சகாப்தத்திற்கு பல ஆண்டுகட்கு முன்பு நடந்ததாகும். ஆகையால் வரலாற்றாசிரியர் அனைவரும் இஸ்லாத்தில் முதன் முதலாக கூஷிஹீதாக்கப்பட்டவர்கள் அன்னை ஸு மைய்யா (ரலி) அவர்களே என்று ஏகோபித்துக் கூறியுள்ளார்கள்!

## ஃபாத்திமா பின்த் கத்தாப் (ரலி)

அண்ணலாரின் அழைப்புப் பணியின் ஆரம்ப காலத்தில் ஒரு நிகழ்ச்சி!

ஒரு நாள் நபி (ஸல்) அவர்கள், ஆபூபக்கர் (ரலி) அவர்களைப் போன்ற முக்கியத் தோழர்கள் சிலருடன் கஅபா ஆலயம் சென்றிருந்தார்கள். அப்பொழுது அங்கே இணைவைப்பாளர்களான குறைஷித் தலைவர்களின் பெருங்கூட்டம் ஒன்று அமர்ந்திருந்தது. அவர்களின் முன்னிலையில் அபூபக்கர் (ரலி) அவர்கள் ஓர் உணர்ச்சிமிகு உரை ஆற்றினார்கள். அதற்கு அண்ணல் நபி (ஸல்) அவர்களின் அனுமதியும் கிடைத்திருந்தது.

அவ்வுரை, இறைவனை நிராகரிப்பதும் பிறிதொரு பொருளை அவனுக்கு இணையாக பாவித்து வணங்குவதும் தவறான போக்குகளாகும் என்று சுட்டிக்காட்டியதுடன், சத்திய நெறியாம் தீனுல் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளுமாறு அன்பான அழைப்பும் விடுக்கும் வண்ணம் சென்று கொண்டிருந்தது!

மக்கத்து இணைவைப்பவர்களாவது, ஏகத்துவக் கொள்கையை ஏற்றுக் கொள்வதாவது! அவர்களின் முன்னால் சமர்ப்பிக்கப்பட்ட சத்திய அழைப்பு எதிர்மறையான விளைவினைத்தான் ஏற்படுத்தியது! உரை முடிவடையும் முன்பே அசத்தியத்தின் பாதுகாவலர்கள் அனைவரும் கொதிப்படைந்தார்கள். நபி (ஸல்) அவர்களையும் அவர்களின் தோழர்களையும் நாற்புறங்களிலும் சூழ்ந்து கொண்டு தாக்கவும் - ஈவிரக்கமின்றி அடித்து நொறுக்கவும் தொடங்கினார்கள். அவர்களின் முதல்குறி அபூபக்கர் (ரலி) அவர்கள்தாம்!

உத்பா இப்னு ரபீஆ என்பவன் குறைக்ஷிகளின் தலைவன், வீரத்திலும் பேர் பெற்றவன். அவன், தான் அணிந்திருந்த முரட்டுச் செருப்பால் அபூபக்கர் (ரலி) அவர்களின் திருமுகத்தில் பலமாக பல அடிகள் அடித்தான். பிறகு அவர்களைக் கீழே வீழ்த்தி வயிற்றில் ஏறி நின்று குதித்தும் மிதித்தும் துன்புறுத்தினான். இந்தத் தாக்குதலினால் அபூபக்கர் (ரலி) அவர்கள் கடுமையான காயத்திற்கும் வேதனைக்கும் ஆளானார்கள். அவர்களின் திருமுகமே அடையாளம் காண முடியாத அளவுக்கு மாறிவிட்டிருந்தது,

அங்கு இருந்த முஸ்லிம்களில் அண்ணல் நபி (ஸல்) அவர்களை மட்டும் குறைக்ஷிகள் ஒன்றும் செய்யவில்லை. அவர்களைப் பிடித்துச் சற்று பின்னால் தள்ள மட்டும் செய்தார்கள்.

இந்நிலையில் அபூபக்கர் (ரலி) அவர்களின் பனூதைம் எனும் கோத்திரத்தாருக்கு, கஅபா ஆலயத்தின் அருகே சிலர் அபூபக்கர் (ரலி) அவர்களை அடித்துக் கொண்டிருக்கின்றார்கள் எனும் செய்தி எட்டியது! உடனே அவர்கள் விரைந்து வந்து அபூபக்கர் (ரலி) அவர்களை இணைவைபாளர்களின் பிடியிலிருந்து விடுவித்தார்கள். அப்பொழுது அபூபக்கர் (ரலி) அவர்களுக்குச் சுய உணர்வே இல்லை. உயிர் பிழைப்பதே கடினம் எனும் நிலை!

இந்நிலையைக் கண்டதும் பனூதைம் கோத்திரத்தினர் கடுஞ்சினம் கொண்டனர். அபூபக்கர் இறந்துவிட்டார்களெனில்.... அல்லாஹ்வின் மீது சத்தியமாக அதற்குப் பழிவாங்கியே தீருவோம். உத்பா இப்னு ரபீஆவை உயிருடன் விட்டுவைக்க மாட்டோம்!'' என்று கர்ஜித்தினர்.

பிறகு அபூபக்கர் (ரலி) அவர்களை ஒரு துணியில் வைத்து எல்லோரும் சேர்ந்து தூக்கி வீட்டுக்கு கொண்டு சென்றார்கள். அங்கே அவர்கள் தந்தை அபூகுஹாஃபாவும் மற்றவர்களும்

சூழ்ந்துகொண்டு அவர்களின் பெயர் கூறி சப்தமிட்டுக் தொடர்ந்து அழைத்தார்கள். அபூபக்கர் (ரலி) அவர்கள் மயக்க நிலையில் இருந்தார்கள். மாலை நேரத்தில் கொஞ்சம் உணர்வு வந்தது. மெதுவாகப் பேசத் தொடங்கினார்கள். அப்பொழுது அவர்களின் நாவிலிருந்து வெளிப்பட்ட கேள்வி அனைலவருக்கும் கோபமூட்டியது. அது என்ன?

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் எப்படி இருக்கின்றார்கள்?'' என்பதுதான்.

இப்பொழுது பனூதைம் குலத்தார்க்கு அபூபக்கர் (ரலி) அவர்கள் மீது கெட்ட கோபம்தான் வந்தது. இந்த நிலைமையிலும் நீர் முஹம்மதைப் பற்றிய நினைவை விடவில்லையே!'' என்று குத்தலாகப் பேசலாயினர். ஏகத்துவ நெறியாம் இஸ்லாத்தை அவர்கள் அதுவரை ஏற்றுக் கொள்ளவில்லை!

உடனே, அபூபக்கரின் (ரலி) அவர்களின் தாயார் உமமுல் கைர் அவர்களிடம் நீங்களே இவரைக் கவனித்து நன்கு குணப்படுத்துங்கள். எதையேனும் உண்ணவோ பருகவோ கேட்டால் கொடுத்துக் கொள்ளுங்கள்'' என்று கூறிவிட்டு கலைந்து சென்றுவிட்டார்கள்.

அவர்கள் சென்றதும் அன்னை உம்முல் கைர் அவர்கள், தம் மகனாரிடம் எதையாவது உண்ணவேண்டும் அல்லது பருக வேண்டும் என்று வற்புறுத்தினார்கள். ஆயினும் அவர்கள் பிடிவாதமாக மறுத்து விட்டார்கள்.

பழைய வினாவையே தொடர்ந்து எழுப்பினார்கள். அண்ணல் நபி (ஸல்) அவர்களின் நிலைமை என்ன?''

இறைவன் மீது சத்தியமாக! உம்முடைய தோழரைப் பற்றி எனக்கு எதுவும் தெரியாது! - இதுதான் அன்றுவரை இஸ்லாத்தில் இணையாதிருந்த அவர்களின் தாயார் அளித்த பதில்!

அப்பொழுது அபூபக்கர் (ரலி) அவர்களுக்கு சட்டென்று நினைவுக்கு வந்தது, சத்திய நெறியாம் இஸ்லாத்தின் மீது தமது உயிரையும் விடவும் அதிக நேசம் கொண்டு உழைத்து வந்த உம்மு ஜமீல் எனும் பெண்மணியைப் பற்றித்தான்! இப்போதைய நிலைமையில் அவர்களுக்குத்தான் அண்ணல் நபி (ஸல்) அவர்களைப் பற்றித் தெரிந்திருக்கும்! உடனே தம் அன்னையிடம் கூறினார்கள்:

நீங்கள் உம்மு ஜமீலிடம் சென்று அண்ணல் நபி (ஸல்) அவர்களைப் பற்றி விசாரித்து வாருங்கள்!''

உம்முல் கைர், உடனே உம்மு ஜமீல் (ரலி) அவர்களிடம் சென்று, அபூபக்கர் கடுமையான காயங்களுடனும் நோவினையுடனும் இருக்கின்றார். தம்முடைய தோழர் முஹம்மதைப் பற்றி உம்மிடம் விசாரிக்கச் சொன்னார்'' என்று கூறினார்கள்.

அதற்கு உம்மு ஜமீல் (ரலி) அவர்கள் பதிலேதும் அளிக்காமல், நீங்கள் விரும்பினால் நானும் உங்களுடன் அபூபக்கர் (ரலி) அவர்களிடம் வருகிறேன்'' என்று கேட்டுக் கொண்டார்கள்.

சரி, நடங்கள்.

...உம்மு ஜமீல் (ரலி) அவர்கள் அபூபக்கர் (ரலி) அவர்களின் நிலைமையைப் பார்த்ததும் பதறிப் போய்விட்டார்கள். தம்மை அறியாமலேயே அவர்களின் நாவு இவ்வார்த்தைகளை உச்சரித்தது:

இறைவன் மீது சத்தியமாக! தங்களிடம் இவ்வாறு நடந்து கொண்டவர்கள் ஐயமின்றி நிராகரிப்பாளர்கள்தாம், தீயவர்கள்தாம், உங்களை இவ்வாறு கொடுமைப் படுத்தியதற்கு அல்லாஹ் அவர்களைப் பழிவாங்கியே தீருவான் எனும் நம்பிக்கை எனக்கு உள்ளது.

ஏதேனும் உண்ண, பருக உம்மு ஜமீல் (ரலி) அவர்கள் வற்புறுத்தியும் கூட அபூபக்கர் (ரலி) அவர்கள் உடன்படவில்லை! முதலில் நபி (ஸல்) அவர்களின் நிலைமை என்ன என்று கூறுங்கள்'' என்பதையே பதிலாக அளித்தார்கள்.

நான் கூறும் விஷயம் உங்களின் தாயாருக்குத் தெரிந்துவிடுமே!''

அவர்களால் ஏதேனும் ஆபத்து நிகழுமோ என்று நீங்கள் அஞ்ச வேண்டியதில்லை.

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே! நபி (ஸல்) அவர்கள் நல்லபடியாக இருக்கின்றார்கள். நீங்கள் ஒன்றும் கவலைப்பட வேண்டாம்.''

சரி, இப்பொழுது நபி (ஸல்) அவர்கள் எங்கு இருக்கின்றார்கள்?''

அர்க்கம் (ரலி) அவர்களின் வீட்டில்தான்!''

அல்லாஹ்வின் மீது சத்தியமாக! நான் நபி (ஸல்) அவர்களைப் பார்க்காத வரையில் எதுவும் உண்ண மாட்டேன், அருந்தமாட்டேன்.''

நலம் விசாரிக்க வந்து கொண்டிருந்தவர்களின் வருகை நின்றதும் அன்னை உம்மு கைர் அவர்களும் உம்மு ஜமீல் (ரலி) அவர்களும் அபூபக்கர் (ரலி) அவர்களைத் தாங்கிப் பிடித்துக் கொண்டு மெதுவாக வெளியேறி தாருல் அர்க்கமுக்கு வந்தார்கள்.

அண்ணலெம் பெருமானார் (ஸல்) அவர்கள் தம் அன்புத் தோழர் அபூபக்கர் (ரலி) அவர்களைக் கண்டதும் உணர்ச்சிவசப்பட்டு போனார்கள். குனிந்து தம் தோழரின் நெற்றியில் அன்பு முத்தம் பொழிந்தார்கள். இக்காட்சியைக் கண்ணுற்ற தோழர்கள் அனைவரும் உள்ளம் உருகி நின்றார்கள்!

அபூபக்கர் (ரலி) அவர்களை அழைத்துச் சென்ற இரு பெண்களில் உம்முல் கைர், அபூபக்கர் (ரலி) அவர்களின் தாயார்! மற்றொரு பெண்ணாகிய உம்மு ஜமீல் (ரலி) அவர்களை யார் என்று நினைக்கின்றீர்கள்?

வேறு யாருமல்ல, ஃபாத்திமா பின்த் கத்தாப் (ரலி) அவர்கள்தாம்! கலீஃபா உமர் (ரலி) அவர்களின் அன்புக்குரிய சகோதரிதான் அவர்!

அவர்கள் ஆரம்ப காலத்திலேயே இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ளும் பாக்கியம் பெற்றார்கள் என்பது மட்டுமல்ல, அண்ணல் நபி (ஸல்) அவர்களின் மற்றும் அபூபக்கர் (ரலி) அவர்களைப் போன்ற முக்கியமான நபித் தோழர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களாயும் திகழ்ந்தார்கள். இஸ்லாத்தைத் தழுவிய நாள் முதலே அதன் உயர்வுக்காகவும் வளர்ச்சிக்காகவும் முழுமூச்சுடன் பாடுபடும் ஊழியராய் மாறினார்கள்!

### கணவருடன் இஸ்லாத்தைத் தழுவுதல்

கத்தாபின் மகள் ஃபாத்திமா (ரலி) அவர்கள் தம் தந்தையின் வீட்டில் வளர்ந்து வந்த ஆரம்பகால வாழ்க்கை பற்றி ஒருசில தகவல்கள்தாம் வரலாற்றில் காணக் கிடைக்கின்றன. சரித்திர ஏடுகள் அனைத்தும் விரிவாகக் குறிப்பிடுவது அவர்கள் இஸ்லாத்தை ஏற்ற பிறகு உள்ள நிகழ்ச்சிகளைத்தான், அதுவும் ஒரு சிலவற்றைத்தான்.

குறைஷிப் பெருங்குலத்தில் மக்ஸூம் கிளையைச் சார்ந்த கத்தாபின் குடும்பம் அனைத்துச் சிறப்புக்கும் உயர்வுக்கும் உரிய கண்ணியமிக்க குடும்பமாய்த் திகழ்ந்தது. அன்றைய அரபிகளுக்கே உரிய பண்பாடுகளும், பிரத்யோகக் குணங்களும் அந்தக் குடும்பத்தில் பிறந்த ஆண்கள், பெண்கள்

அனைவரிடமும் குடிகொண்டிருந்தன. அனைவரும் தம்முடைய ஆளுமையை புகழுக்குரியதாய் வளர்த்திருந்தார்கள்!

அத்தகைய புகழும் கீர்த்தியும் கொண்ட குடும்பத்தில் பிறந்த ஃபாத்திமா (ரலி) அவர்கள் நல்ல பருவ மங்கையாய் வளர்ந்து மலர்ந்தபோது அவர்களின் உறவுகார மாப்பிள்ளை ஸயீத் இப்னு ஜைத் இப்னு நுஃபைல் என்பவருக்கு பேசப்பட்டு திருமணம் நடைபெற்றது. நபி (ஸல்) அவர்களால் சுவர்க்கத்தைக் கொண்டு நற்செய்தி சொல்லப்பட்ட பத்து நபித்தோழர்களுள் இவரும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இத்தம்பதிகள் பரஸ்பர அன்பும் கண்ணியமும் கொண்டிருந்தார்கள். ஒருமித்த கருத்தும், உறுதியான இணக்கமும் அவர்களுடைய வாழ்வின் அனைத்து சூழ்நிலைகளிலும் மகிழ்வைப் பொங்கிடச் செய்தன.

சத்தியத்தை ஏற்றுக் கொள்ளும் நல்லிதயங்களை அல்லாஹ் அவ்விருவருக்கும் வழங்கிப் பேரருள் புரிந்திருந்தான். நபித் தோழர் கப்பாப் (ரலி) அவர்களின் தீவிர முயற்சியால் இருவரும் ஒருவர் பின் ஒருவராக இஸ்லாத்தின் முன்னணிக் குழுவில் தம்மை இணைத்துக் கொண்டார்கள். ஆரம்ப காலத்திலேயே இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட பெருமை அவ்விருக்கும் உண்டு. ஏனெனில் அன்றுவரை இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டவர்களின் எண்ணிக்கை 26தான்! அத்தம்பதிகள் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட வரலாற்றில், அழைப்புப் பணியில் ஈடுபடுவோர்க்கும் அதனை எதிர்கொள்ளும் மக்களுக்கும் பல அரிய படிப்பினைகள் உள்ளன!

இஸ்லாத்தின் அழைப்புப் பணியில் அண்ணல் நபி (ஸல்) அவர்களால் நியமிக்கப்பட்ட பிரபல நபித்தோழர்களுள் கப்பாக் (ரலி) அவர்களும் ஒருவர். அவர்கள், சத்தியத்தை ஏற்றுக் கொள்ளும் வகையில் தெளிவான சிந்தனையும், மாச்சரியங்களுக்கு பலியாகாத இதயமும் உடையவர்கள் யார் என்று தேடி அலைந்து, அவர்களிடம் இஸ்லாத்தின் தத்துவங்களைப் பக்குவமாய் எடுத்துச் சொல்லும் பணியில் இரகசியமாய் ஈடுபட்டு வந்தார்கள்!

கப்பாப் (ரலி) அவர்களும் ஸயீத் இப்னு ஜைதும் நெருங்கிய நண்பர்கள். கப்பாப் தன் தோழரிடம் இஸ்லாத்தைப் பற்றி விளக்கிக் கூறி அவரைத் தெளிவடையச் செய்தார். அதன் பயனால் இஸ்லாத்தின் கொள்கை — கோட்பாடுகளில் அவருக்கு முழு திருப்தி ஏற்பட்டது. உடனே அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் அவரைக் கையோடு அழைத்து வந்தார்கள். அண்ணலாரின் முன்னிலையில் ஸயீத் இஸ்லாத்தைத் தழுவினார். அல்லாஹ் ஒருவனே இறைவன், அவனுடைய தூதர்தான் முஹம்மத்'' என்று சாட்சி பகர்ந்தார்!

ஈமானின் பேரொளியுடன் - புரட்சித் தத்துவங்களுடன் - புத்தம் புதிய மனிதராய் இல்லம் திரும்பினார்கள் ஸயீத் (ரலி) அவர்கள்! அகமும் முகமும் மலர வரவேற்ற தம் அன்பு மனைவியிடம் நடந்த நிழ்ச்சியைக் கூறினார்கள். அண்ணல் நபி (ஸல்) அவர்களைச் சந்தித்ததையும் அப்பொழுது தம் இதயத்தில் உன்னதமான ஆண்மீக உணர்வு ஏற்பட்டதையும் விவரித்தார்கள்.

மேலும் கொள்கை கோட்பாடுகளிலும் அரசியல் மற்றும் கூட்டு வாழ்கையிலும் எத்தகைய அடிப்படை மாற்றங்களின் பக்கம் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அழைக்கின்றார்கள் என்பதையும் - அவற்றிற்கு முற்றிலும் மாற்றமாக அன்றைய சமூக அமைப்பு எத்தகைய சிக்கல்களை எதிர்கொண்டுள்ளது என்பதையும் அடுக்கடுக்காய் எடுத்துரைத்தார்கள். அப்பொழுது ஊக்கம் - உறுதியின் அடையாளங்கள் அவர்களின் முகத்தில் பளிச்சிட்டன! இஸ்லாத்தைத் தழுவ வேண்டுமென தாம் எடுத்த முடிவை ஒளிவுமறைவின்றி அறிவித்தார்கள்!

இவை அனைத்தையும் ஆழ்ந்த கவனத்துடன் செவிமடுத்துக் கொண்டிருந்த ஃபாத்திமா (ரலி) அவர்களால் தம் கணவர் தனது பேச்சை முடிக்கும் வரையில் பொறுமையுடன் இருக்க முடியவில்லை! வேறெதற்கும் அல்ல, ஏகத்துவக் கலிமாவை மொழந்து சத்திய மார்க்கத்தில் சேருவதற்குத்தான்! ஆம், அக்கணமே ஃபாத்திமா (ரலி) அவர்களும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதாக அறிவித்தார்கள். அப்பொழுது ஸயீத் இப்னு ஜைத் (ரலி) அவர்கள் அடைந்த ஆனந்தத்திற்கு அளவே இல்லை. தம் அழைப்பை ஏற்று தம்முடன் இஸ்லாத்தில் இணைந்த அன்பு மனைவியிடம் மகிழ்வையும் பாராட்டுதலையும் தெரிவித்தார்கள்!

### இஸ்லாமியப் பயிற்சி பெறல்

இஸ்லாத்தில் இணைந்ததும் அத்தம்பதியினரை விட்டும் கப்பாப் (ரலி) அவர்கள் ஒதுங்கிவிடவில்லை. தொடர்ந்து அவர்களின் இல்லம் வந்து இஸ்லாத்தின் அடிப்படை போதனைகளுடன் ஒழுக்கப் பண்புகளையும் அவர்களுக்கு ஊட்டுவார்கள். மனத்தடுமாற்றம், குழப்பம், வழிகேடு ஆகியவற்றில் சிக்கிவிடாமல் அவர்களைப் பாதுகாத்து இறைநெறியில் நிலைத்திருக்கச் செய்வார்கள். திருக்குர்ஆனையும் மார்க்கத்தின் வழிமுறைகளையும் போதித்துக் கொண்டிருப்பார்கள். மேலும் அத்தம்பதியினர் புரிந்து கொள்வதற்குச் சற்று சிரமமான விஷயங்களை நன்கு விளக்கிக் கூறி அவர்களின் இதயத்தில் ஈமானின் பயிரைச் செழித்தோங்கச் செய்வார்கள். ஆனால் அனைவரும் ஒரு விஷயத்தைக் குறித்து அஞ்சிக் கொண்டிருந்தார்கள், அது என்ன?

என்னைக் கொல்வது இருக்கட்டும்:

உன் தங்கையை என்ன செய்யப் போகிறாய்?

ஃபாத்திமா (ரலி) அவர்கள் தம் கணவருடன் இஸ்லாத்தைத் தழுவி, அழைப்புப் பணியில் தீவிரமாக ஈடுபட்டிருந்த அதே நேரத்தில் - அவர்களின் சகோதரர் உமர் (ரலி) அவர்கள் இஸ்லாத்திற்கு எதிராக – விரோதமான போக்கில் மும்முரமாய் இருந்தார்கள். இஸ்லாத்தின் கடும் விரோதி என்று பெயர் பெற்றிருந்த அபூஜஹ்லுக்கு நிகர் அன்று உமர் அவர்கள்தாம்!

தாங்கள் இருவரும் இஸ்லாத்தை தழுவிய செய்தி மக்களிடையே பரவி படிப்படியாக உமர் அவர்களின் காதுக்கும் எட்டி விட்டால் என்ன செய்வது என்பதுதான் ஃபாத்திமா தம்பதியை கவலையில் ஆழ்த்தியது.

உமர் அவர்களின் கோபம் எங்குபோய் நிற்குமோ என்று அவர்கள் அஞ்சிக் கொண்டிருந்தாலும், இறைவன் மீது அவர்கள் கொண்டிருந்த அசைக்க முடியாத நம்பிக்கை அவர்களுக்குத் துணிவை வழங்கியது. எது வரினும் சமாளிப்பதற்கு அவர்கள் தயாராகவே இருந்தார்கள்.

இக்காலகட்டத்தில் மக்கத் திருநகரில் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் அழைப்புப் பணி நாளுக்கு நாள் விரிவடைந்து முன்னேறிக்கொண்டு வந்தது. மக்களின் கவனம் இஸ்லாத்தின் பக்கம் திரும்பலானது. அண்ணலாரின் வார்த்தைகளில் மக்களுக்கு புதிய கவர்ச்சி ஏற்பட்டது கண்டு அசத்தியவாதிகள் பெரும் அதிர்ச்சிக்கு ஆளாயினர்.

மக்களே! உங்களைப் படைத்து உணவளித்து பாதுகாக்கும் இறைவன் ஒருவன்தான். அவனை மட்டும் வணங்குங்கள். நீங்களாகவே உருவாக்கிய இந்தச் சிலை வணக்கத்தை விட்டொழியுங்கள். தம் மீது உட்காரும் ஈயை விரட்டக்கூட இந்தச் சிலைகளால் இயலாதபோது அவற்றின் முன் ஏன் கையேந்திப் பிரார்த்திக்கின்றீர்கள்?'' என்று நபியவர்கள், அன்று மக்கள் மன்றத்தில் சமர்ப்பித்த தெள்ளத் தெளிவான கருத்தின் பக்கம் சத்தியத்தின் நேயர்கள் - ஒருவர் பின் ஒருவராக

விரைந்து வந்து கொண்டிருந்தார்கள். மக்காவில் பிரபல வீரர் ஹம்ஸா அவர்கள் 29வது நபராக இஸ்லாத்தில் இணைந்து விட்டதைக் கண்ட மக்கத்து இணைவைப்பாளர்கள் நிலைகுலைந்து போயினர்!

உடனே தம்முடைய 'தாருல் நத்வா' எனும் மன்றத்தைக் கூட்டி ஆலோசனை செய்யலானார்கள். அண்ணலாரின் தலைமையில் தோன்றியுள்ள 'புதிய இயக்கம் குறித்து விவாதம் தொடங்கியது.

இஸ்லாத்தைப் பற்றி எவ்வளவுதான் தவறான தகவல்களை அளித்தாலும் பயனில்லாமல் போகிறதே! இஸ்லாத்தை விட்டும் மக்களை திசைதிருப்ப முடியவில்லையே! அப்படி 'மதம் மாறி'ச் சென்று விட்டவர்களை எவ்வளவுதான் எண்ணி நகையாடினாலும், அச்சுறுத்தினாலும், ஆசைவார்த்தை கூறினாலும் அவர்களை அசைக்க முடியவில்லையே! அவர்கள் மீது கொடுமைகளைக் கட்டவிழ்த்து விட்ட பிறகும் கூட இஸ்லாத்தைக் கைவிட மறுக்கின்றார்களே! நாளுக்கு நாள் நம்பிக்கையாளர்கள் அதிகமாகின்றார்களே! அந்தோ! நமது சமுதாயம் இப்படிச் சின்னாபின்னப்பட்டுப் போகிறதே!'' என்று அனைவரும் மனம் நொந்து போனார்கள். எப்படியும் இதற்கு ஒரு முடிவு கட்டியாக வேண்டும் என்று தீர்மானித்தார்கள்.

அப்பொழுதுதான் அபூஜஹ்ல் நீண்டதொரு உரை நிகழ்த்திவிட்டு யார் முஹம்மதைத் தீர்த்துக் கட்டுகிறாரோ அவருக்கு 100 செந்நிற ஒட்டகங்களையும், ஆயிரம் வெள்ளி நாணயங்கயையும் அன்பளிப்பாய்த் தருவேன்'' என்று அறிவித்தான்.

அங்கே உமரும் இருந்தார்கள். அவர் கட்டான உடலும், கதிகலங்கச் செய்யும் தோற்றமும் பிரமிக்கத்தக்க வீரமும் கொண்ட துணிச்சலான இளைஞர்! இஸ்லாத்தைப் பற்றி கடும் விரோதம் கொண்டிருந்ததால், ஏற்கனவே குமைந்து கொண்டிருந்த அவர்களின் உள்ளத்தை இப்பொழுது அபூஜஹ்லின் வெறியூட்டும் பேச்சு எரிமலையாக்கியது! கண்களில் கோபக்கனல் தெறிக்க எழுந்து நின்று கூறினார்கள்:

அபுல் ஹிகமே, 'லாத், உஸ்ஸா' மீது ஆணையாக! நான் முஹம்மதைக் கொல்லாத வரையில் ஓயப்போவதில்லை!''

ஹம்ஸா (ரலி) அவர்கள் இஸ்லாத்தைத் தழுவிய பிறகு அண்ணல் நபி (ஸல்) அவர்களின் மனத்தில் ஓர் ஆசை பிறந்தது. குறைஷிகளின் தூண்களாக விளங்கும் அம்ருப்னு ஹிஷாம் (அபூ ஜஹ்ல்), உமருப்னுல் கத்தாப் இருவரில் ஒருவர் இஸ்லாத்தைத் தழுவுமாறு செய்யப்பட்டல் வேண்டும் என்பதுதான் அந்த ஆசை!

நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்தார்கள்: அல்லாஹ்வே, ஹிஷாமின் மகன் அம்ர் அல்லது கத்தாபின் மகன் உமர் இந்த இருவரில் ஒருவரைக் கொண்டு இஸ்லாத்திற்கு வலிமை சேர்ப்பாயாக!''

இந்தப் பிரார்த்தனையை இறைவன் ஏற்றுக்கொண்டு, இஸ்லாத்தைத் தழுவுவதற்கும், அதற்கு உயர்வும் சிறப்பும் சேர்ப்பதற்கும் உமர் (ரலி) அவர்களைத் தேர்வு செய்தான்.

இந்தப் பிரார்த்தனை நடைபெற்றதற்கு மறுதினம்தான் உமர் (ரலி) அவர்கள் அண்ணலாரைத் தீர்த்துக்கட்ட வேண்டும் எனும் உறுதியில் உருவிய வாளுடன் வெளிக் கிளம்பினார்கள்!

வழியில் எதிர்பாராதவிதமாக நுஐம் இப்னு அப்துல்லாஹ் (ரலி) எனும் நண்பரின் சந்திப்பு கிடைத்தது. அவர், உமர் (ரலி) அவர்களின் ‘பனூ அதி’ எனும் கோத்திரத்தைச் சேர்ந்தவர், முன்பே மறைமுகமாக இஸ்லாத்தைத் தழுவியிருந்தார்.

நுஐம் (ரலி) அவர்கள் கேட்டார்கள், உமரே! வாளும் கையுமாக எங்கே கிளம்பி விட்டீர்?”

உமர் (ரலி) அவர்கள் பதிலளித்தார்கள், மதம் மாறிவிட்ட அந்த மனிதரைக் கொலை செய்யப் போகிறேன். அவர், குறைகூஷிகளின் ஒற்றுமையைச் சின்னாபின்னமாக்கி விட்டார், நம்மையெல்லாம் பைத்தியக்காரர்களாக்கிக் கொண்டிருக்கின்றார். நம்முடைய தெய்வங்களை இழிவுபடுத்திப் பேசுகின்றார். நமது மதத்தில் களங்கம் ஏற்படுத்துகின்றார். ”

இது அபாயமானதொரு செயலாயிற்றே! இறைவன் மீது சத்தியமாக! நீர் தவறான கருத்துக்கு ஆளாகியுள்ளீர். நீர் முஹம்மத் (ஸல்) அவர்களைக் கொலை செய்து விட்டால் அப்து மனாஃப் குடும்பத்தார்கள் உம்மைப் பூமியில் நடந்து திரியும் வண்ணம் உயிருடன் விட்டு வைப்பார்கள் என்று நினைத்துக் கொண்டீரா?”

எனக்கு யாரைப் பற்றியும் பயம் கிடையாது. என்ன, நீர் கூட இஸ்லாத்தைத் தழுவி விட்டதுபோல் தெரிகிறதே! அதற்கான தண்டனையை முதலில் உமக்கு ஏன் கொடுக்கக் கூடாது?”

எனக்குத் தண்டனை கொடுப்பது இருக்கட்டும். முதலில் உமது குடும்பத்தைச் சார்ந்தவர்களைப் பற்றிய சேதி தெரியுமா உமக்கு?”

எனது குடும்பத்தைச் சேர்ந்தவர்களா? யார் அவர்கள்?”

உம்முடைய சகோதரி ஃபாத்திமாவும் அவருடைய கணவர் ஸயீதும்தான்! இஸ்லாத்தைத் தழுவியுள்ள அவர்களை என்ன செய்வது என்று முதலில் கவனியும்!”

அவர்கள் இருவருமே அப்படிச் செய்து விட்டார்களா? அது உண்மையென்றால் அவர்கள் இருவரையும் கொலை செய்தே தீருவேன்!” என்று ஆவேசமாகக் கூறினார்கள் உமர் அவர்கள். பிறகு ஃபாத்திமா (ரலி) அவர்களின் இல்லம் நோக்கி வேகமாக நடந்தார்கள்.

அப்பொழுது ஃபாத்திமா (ரலி) அவர்களின் இல்லத்தில் ஃபாத்திமா - ஸயீத் தம்பதிக்கு கப்பாப் (ரலி) அவர்கள் திருக்குர்ஆன் கற்றுக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். திருமறையின் 20வது அத்தியாம் ‘தாஹா’ எழுதப்பட்டிருந்த ஏடு ஒன்றும் இருந்தது. கதவு லேசான இடைவெளியுடன் உட்புறமாகத் தாழிடப்பட்டிருந்தது.

கதவின் அருகில் வந்துவிட்ட உமர் அவர்களின் காதில் குர்ஆன் ஓதும் குரல் விழுந்தது, கதவை பலமாகத் தட்டினார்கள்.

வந்திருப்பவர் தம் சகோதரர் உமர் அவர்கள்தாம்’ என்பதை ஃபாத்திமா (ரலி) அவர்கள் புரிந்து கொண்டார்கள். உடனே கப்பாப் (ரலி) அவர்களை, வீட்டின் பின்புறத்தில் ஓரிடத்தில் மறைந்து கொள்ளுமாறு சொன்னார்கள். பிறகு, திருக்குர்ஆன் வசனங்கள் எழுதப்பட்ட ஏட்டையும் ஒளித்து வைத்துக்கொண்டு படபடக்கும் இதயத்துடன் கதவைத் திறந்தார்கள் ஃபாத்திமா (ரலி) அவர்கள்!

## உமரை உருவாக்கினார்கள்

உமர் (ரலி) அவர்கள் வீட்டில் நுழைந்ததும் வினவினார்கள்:

சற்றுமுன் நான் கேட்ட குரல் எத்தகையது?

ஃபாத்திமா மற்றும் ஸயீது (ரலி) இருவரும் கூறினார்கள்: நீங்கள் எதையும் கேட்டிருக்க முடியாதே!

உமர் (ரலி) அவர்கள், இல்லை! நான்தான் சற்று முன் செவியுற்றேனே! இறைவன் மீது சத்தியமாக, நீங்கள் இருவரும் முஹம்மத் (ஸல்) அவர்களின் மார்க்கத்தைத் தேர்ந்தெடுத்துள்ளதாக நான் கேள்விப்பட்டேனே, உண்மையா? என்று கோபமாகக் கேட்டார்கள்!

இவ்வாறு கேட்டவண்ணம் தம்முடைய மைத்துணரை (ஸயீது இப்னு ஜைதை) தாவிப் பிடித்தார்கள். அவர்களின் முடியைப் பற்றி இழுத்துக் கீழே தள்ளினார்கள். அவர்களை பலமாக அடிக்கலானார்கள். ஃபாத்திமா (ரலி) அவர்கள் தம் கணவரைக் காப்பாற்றுவதற்காக முயன்றபோது அவர்களுக்கும் அடி விழுந்தது! ஒரு கட்டத்தில் ஸயீது (ரலி) அவர்களை ஒரு பலகையால் பலமாகத் தாக்கியபோது ஃபாத்திமா (ரலி) அவர்கள் குறுக்கே வந்து தடுத்திட முயன்றார்கள். அதனால் அந்த அடி அவர்களின் தலையில் விழவே தலையிலிருந்து இரத்தம் பீரிட்டு வரலாயிற்று. இந்த நேரத்தில் கணவரும் மனைவியும் ஒருமித்த குரலில்.....

நாங்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டோம். அல்லாஹ்வின் மீதும் அவனுடைய தூதரின் மீதும் நம்பிக்கை கொண்டுள்ளோம். உம்மால் செய்ய முடிந்ததை செய்து கொள்ளும். ஆனால் சத்திய மார்க்கத்தை நாங்கள் கைவிட மாட்டோம்!

மற்றோர் அறிவிப்பில் ஃபாத்திமா (ரலி) அவர்கள் இவ்வாறு கூறியதாக வந்துள்ளது:

உம் சகோதரியை விதவையாக்கிடவா வந்துள்ளீர்? அவ்வாறெனில் முதலில் என்னைக் கொன்று விடும்! ஆயினும் சத்திய மார்க்கம் எங்களின் இதயத்திலிருந்து வெளியேறாது! வெளியேறாது! வெளியேறாது! முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் கொண்டு வந்துள்ள மார்க்கத்தின் மீதே எங்களின் மரணம் இருக்கும்!”

இரத்த வெள்ளத்தில் கிடந்த சகோதரியின் நாவிலிருந்து இந்த வார்த்தைகளைக் கேட்டதும் உமர் அவர்கள் நிலைகுலைந்து போய்விட்டார்கள்! தணலாய்த் தகித்துக் கொண்டிருந்த அவருடைய கோபம் மாறியது! ‘ஆ! என்ன செயலைச் செய்து விட்டோம்’ என்று பெரிதும் மனம் வருந்தினார்!

ஃபாத்திமா (ரலி) அவர்களின் தலையிலிருந்து வழிந்தோடிய குருதி உமர் (ரலி) அவர்களின் வாழ்க்கைப் போக்கையே திருப்பியது! எதிர்காலத்தில் இஸ்லாத்தின் இரண்டாம் கலீஃபா என்று அரபுநாடு மட்டிலும் அல்ல, உலகம் முழுவதும் புகழப் போகும் மாமனிதராய் அவர்களை மாற்றி அமைத்தது!

ஆம்! சிறிது நேரம் அமைதியாக அமர்ந்திருந்த உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்:

அப்படியானால், சற்றுமுன் நீங்கள் ஓதிக் கொண்டிருந்ததை எனக்கும் காண்பியுங்கள்.

ஃபாத்திமா (ரலி) அவர்கள் கூறினார்கள்:

நீங்கள் அதனை வீணாக்கி விடுவீர்களோ என்று எனக்கு பயமாக இருக்கிறது.

அதற்கு உமர் (ரலி) அவர்கள் தம்முடைய கடவுளர் மீது ஆணையிட்டுக் கூறினார்கள்: நீங்கள் எவ்வித அச்சமும் கொள்ளவேண்டாம். அதனை நான் படித்துவிட்டு திரும்பத் தந்து விடுகிறேன்.”

அப்போது தம் சகோதரரின் இதயத்தில் இறைவேதம் இடம் பிடித்து விடக் கூடும் எனும் எண்ணம் ஃபாத்திமா (ரலி) அவர்களின் உள்ளத்தில் தோன்றியது. அவரை நோக்கி அறிவுரை நல்கும் தோரணையில் அழுத்தமாகக் கூறினார்கள்: நாங்கள் படித்துக் கொண்டிருந்தது இறைவேதத்தை! இதோ இந்த ஏட்டினைத்தான்! இதில் இறைவனின் வார்த்தைகள் எழுதப்பட்டுள்ளன. இதனை சுத்தத்துடன்தான் தொட வேண்டும்."

உமர் அவர்கள், இதோ நான் சுத்தமாகி வருகிறேன்" என்று கூறி உடனே குளித்துவிட்டு வந்தார்கள். ஃபாத்திமா (ரலி) அவர்கள் இறைவசனங்கள் எழுதப்பட்ட அந்த ஏட்டினை தன் சகோதரரிடம் வழங்கினார்கள்.

பெரிய பாறை ஒன்று சிறிய பாறையின் மீது மோதி நொறுங்கியது!

ஆம்!

ஃபாத்திமா (ரலி) அவர்கள் அளித்த அந்தப் புனித வேதத்தை படிக்கலானர்கள்.

அளவிலாக் கருணையும் இணையிலாக் கிருபையும் உடைய அல்லாஹ்வின் திருப்பெயரால்

தாஹா, நீர் துன்பத்திற்குள்ளாக வேண்டும் என்பதற்காக உம்மீது இந்தக் குர்ஆனை நாம் இறக்கியருளவில்லை. இதுவோ அஞ்சுகின்ற ஒவ்வொருவருக்கும் ஒரு நினைவூட்டியாய்த் திகழ்கின்றது. பூமியையும் உயரமான வானங்களையும் படைத்த இறைவனிடமிருந்து இறக்கியருளப்பட்டதாகும் இது! கிருபையுள்ள இறைவன் (பேரண்டத்தின்) ஆட்சிக் கட்டிலில் அமர்ந்துள்ளான்."

உமர் அவர்கள் இந்த வசனத்தை மட்டும் படித்தார்கள். அவர்களின் உடலில் ஒருவிதமான நடுக்கம் ஏற்பட்டது. பேராற்றல் கொண்ட இறைவனை மறுப்பது, அவனுடன் பிறவற்றை இணை வைப்பது போன்ற தவறான கொள்கைகளும் போக்குகளும் அவர்களை விட்டும் விலகிட ஆரம்பித்தன! அவ்வாறே தொடர்ந்து மேலே படித்துக் கொண்டே சென்றார்கள். இறைவசனங்களின் கம்பீரம், உரை நயம், தெள்ளிய நடை ஆகியன உமர் அவர்களைப் பெரிதும் கவர்ந்தன!

அவன்தான் அல்லாஹ்! வணக்கத்திற்குரிய இறைவன் அவனைத் தவிர வேறு இல்லை. மிகவும் அழகிய பெயர்கள் அவனுக்கு உண்டு."

இதைப் படித்ததும் உமர் அவர்களின் மனம் இளகியது. இது எத்தனை அழகான வார்த்தை! என்று தம்மையும் அறியாமலே உரக்கக் கூறினார்கள்.

உமர் இவ்வாறு கூறியதைக் கேட்ட கப்பாப் (ரலி) அவர்கள் மறைவிடத்திலிருந்து வெளியே வந்தார்கள். உமர் அவர்களை நோக்கி மகிழ்ச்சி பொங்கக் கூறினார்கள்:

உமரே, இறைத்தூதர் (ஸல்) அவர்கள் செய்த பிரார்த்தனையின் பலனை அல்லாஹ் உமக்கு வழங்க வேண்டுமென நான் அல்லாஹ்விடம் வேண்டுகிறேன். இறைவனே, அம்ருப்னு ஹிஷாமையோ, உமர் இப்னு கத்தாபையோ உன் விருப்படி இருவரில் யாரையாவது இஸ்லாத்திற்குக் கொண்டு வா!' என்று நபியவர்கள் நேற்று பிரார்த்தனை செய்ததை நான் செவியுற்றேன்."

இந்தக் கட்டத்தில்தான் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதென உறுதியாய் முடிவு செய்தார்கள் உமர் (ரலி) அவர்கள். கப்பாபே, முஹம்மத் (ஸல்) அவர்கள் எங்கே இருக்கின்றார்கள் என்று கூறும்! நான் அவர்களிடம் சென்று இஸ்லாத்தில் இணைந்திட வேண்டும் என்று கூறினார்கள்.

முஹம்மத் நபியவர்கள் ஸஃபா குன்றின் அருகில் உள்ள அர்க்கம் (ரலி) அவர்களின் வீட்டில் தம் தோழர்கள் சிலருடன் உரையாடிக் கொண்டிருக்கின்றார்கள்'' என்று கப்பாப் தெரிவித்தார்கள்.

உமர் அவர்கள் வாளை உறையினுள் போட்டுக் கொண்டு அர்க்கம் அவர்களின் இல்லம் நோக்கி நடந்தார்கள். 'இன்னும் சிறிது நேரத்தில் அண்ணல் நபியவர்களைக் காணப்போகின்றோம். அவர்களின் கரம் பிடித்து ஈமான் கொள்ளப் போகின்றோம்!' எனும் உயர்ந்த எண்ணம் அவர்களின் இதயத்தை ஆட்கொண்டிருந்தது! அதை நினைக்கும் போதெல்லாம் அவர்களின் நெஞ்சு வேகமாகத் துடித்தது! ஏனெனில் இப்பொழுது அவர்கள் சென்று கொண்டிருந்தது முன்னைவிடவுமம் துணிவான – மகத்தான ஒரு காரியத்திற்காக......

அவர்களின் நடையில் அமைதியும் கம்பீரமும் இருந்தன. எதிர்காலத்தைப் பற்றிய எண்ண அலைகளில் அவர்களின் சிந்தை மூழ்கியது! தாம் எடுத்த புதிய முடிவைப் பற்றிய –நபியவர்களைச் சந்தித்து புது மார்க்கம் சேரப்போவதைப் பற்றிய இனம் புரியாத அச்சமும் நடுக்கமும் அவர்களை ஆட்கொண்டன!

முன்பு உமர் எந்த மனிதருக்கும் அஞ்சியதில்லை. எவர் முன்னிலையிலும் அவர் நடுங்கியதில்லை. மாறாக, உமரைக் கண்டுதான் அனைவரும் திகிலடைந்தார்கள். அவரின் கடுஞ்சினத்திற்கும், சீற்றத்திற்கும் ஆளானவரின் இதயம் இடி விழுந்து நொருங்கியது போலானது!

அவருடைய சகோதரி ஃபாத்திமா (ரலி) அவர்கள் வெளிப்படுத்திய உறுதியான ஈமானிய நிலைமையும் கொள்கைப் பிடிப்பும்தான் உமரின் உள்ளத்தில் இத்தகைய அடிப்படை மாற்றத்தை ஏற்படுத்தியது! அவர்களின் உறுதியான நம்பிக்கைக்கு எதிரில் அவரது ஆணவம் அடங்கியது! ஆதிக்கப் போக்கு அகன்று முரட்டு சுபாவம் பனித்துளி போன்று முற்றாக மறைந்தது!

உமர் அவர்களை இவ்வாறு மாற்றிய பெருமை ஃபாத்திமா (ரலி) அவர்களையே சாரும். இஸ்லாமியச் சமுதாயம் அவர்களை மிகுந்த கண்ணியத்துடனும் உயர்வுடனும் என்றென்றும் எண்ணிப்பார்க்க கடமைப்பட்டிருகிறது!

நபித்துவம் வழங்கப்பெற்ற 13 வது ஆண்டு, தோழர்கள் அனைவரையும் மதீனா நோக்கி ஹிஜ்ரத் மேற்கொள்ளுமாறு நபியவர்கள் கட்டளை பிறப்பித்தபோது ஃபாத்திமா (ரலி) அவர்களும் ஸயீத் இப்னு ஜைத் (ரலி) அவர்களும் உடனே ஹிஜ்ரத் மேற்கொண்டு மதீனா வந்தார்கள். அங்கே அபூ லுபாபா (ரலி) எனும் அன்ஸாரித் தோழரின் இல்லத்தில் குடியேறினார்கள்.

ஃபாத்திமா பின்த் கத்தாப் (ரலி) அவர்கள் செயலாற்றலும், சிறந்த அறிவாற்றலும் கொண்ட பெண்மணியாய் இறுதிவரை திகழ்ந்தார்கள். நற்செயல்களை ஆற்றுவதில் முனைப்புடன் இருந்தார்கள். நன்மை செய்யுமாறு ஏவுதல், தீமையைத் தடுத்தல் போன்ற பணிகளில் முறையாக ஈடுபட்டிருந்தார்கள். அவர்களின் வாயிலாக சில நபிமொழிகளும் அறிவிக்கப்பட்டுள்ளன.

அல்லாஹ் அவர்களைத் திருப்தி கொண்டு, அவர்களின் சேவைகளை ஏற்று, சிறந்த மறுமைப் பேறுகளை வழங்குவானாக! ஆமீன்.

## உம்மு ஹகீம் (ரலி)

ஹிஜ்ரி 8 ஆம் ஆண்டு ரமளான் மாதத்தில் அல்லாஹ், மக்கத்து குறைஷிகளை ஒடுக்கிச் செயலிழக்கச் செய்து சத்தியவான்களான முஸ்லிம்களை மக்கா நகரினுள் பிரவேசிக்கச் செய்தான்!

முஸ்லிம்களின் வெற்றிப் பிரவேசம் உலகின் ஏனைய வெற்றியாளர்களுடையது போன்று இரத்தக்களறியை ஏற்படுத்தக் கூடியதாய் இருக்கவில்லை. விஷமத்தனத்தை மேற்கொண்ட தீயவர்கள் ஒருசிலரைத் தவிர – அல்லது அன்று காலித் இப்னு வலீத் (ரலி) அவர்களின் படையுடன் மோதியவர்கள் சிலரைத் தவிர வேறு எவருக்கும் ஒரு சிறு தொல்லைகூட நேரவில்லை. எவர் உடலிலிருந்தும் ஒரு சொட்டு இரத்தம்கூட சிந்தச் செய்யப்படவில்லை!

ஆம்! புனித மக்காவினுள் அண்ணலெம் பெருமானார் (ஸல்) அவர்களுடைய தலைமையில் சுமார் 10,000 தோழர்கள், அதிகாலைத் தென்றல் காற்று பூந்தோட்டத்தினுள் நுழைவது போன்று நுழைந்தார்கள். அண்ணலாரின் மன்னிப்பும் கருணையும் மக்காவாசிகளின் மீது ஆனந்தமாய்ப் பொழிந்து கொண்டிருந்தது!

அம்மக்கள் அன்று வரையிலும் முஸ்லிம்களின் உயிரைக் குடிக்கத் துடித்துக் கொண்டிருந்தவர்கள்தாம். சாத்தியமான எல்லா வழிகளிலும் அவர்களின் மீது அநீதிகளையும் கொடுமைகளையும் கட்டவிழ்த்துக் கொண்டிருந்தவர்கள்தாம். ஆயினும் கருணைக் கடலான காருண்ய நபி (ஸல்) அவர்கள் அம்மக்கள் அனைவரையும் மன்னித்தார்கள். எவ்விதக் குற்றச்சாட்டுக்கும் தண்டனைக்கும் எவரையும் உட்படுத்தவில்லை!

அன்று மக்காவாசிகளில் சிலர் இருந்தனர். அவர்களின் உள்மனம் அவர்களை உறுத்திக் கொண்டிருந்தது. அமைதி இழந்து காணப்பட்டார்கள். தங்களின் சென்ற கால நடவடிக்கைகளைத் திரும்பப் பார்த்த அவர்களுக்கு மாநபி (ஸல்) அவர்களின் மன்னிப்பின் மீது துளியும் நம்பிக்கை பிறக்கவில்லை. நபியவர்கள் தங்களின் மீது அதிகாரம் பெற்றுவிட்டால் - தங்களை உயிரோடு விட்டுவைக்க மாட்டார்கள் என்று கருதி அஞ்சி நடுங்கினார்கள். மக்காவை விட்டு வெளியேறுவதுதான் நல்லது என்ற முடிவுக்கும் சிலர் வந்தனர்.

இந்தக் காலகட்டத்தில் ஒரு நாள் ஒரு பெண்மணி நபியவர்களின் சமூகம் வந்து மனமகிழ்வுடனும் திருப்தியுடனும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார். பிறகு நபி (ஸல்) அவர்களிடம் பணிவோடு இப்படி வேண்டி நின்றார்:

அல்லாஹ்வின் தூதரே! என்னுடைய கணவர் உயிருக்கு அஞ்சி யமன் தேசம் நோக்கி ஓடுகின்றார். நீங்கள் அவருக்கு மன்னிப்பும் பாதுகாப்பும் வழங்கினால் நான் அவரைத் திரும்ப அழைத்துக் கொண்டு வருகின்றேன்.

நபியவர்களின் கருணை உள்ளம் மிகவும் கனிந்திருந்தது. எவ்விதத் தாமதமுமின்றி கூறினார்கள்: செல்லுங்கள்! நான் அவருக்கு பாதுகாப்பு அளித்து விட்டேன்!"

இதனைக் கேட்டதும் அப்பெண்மணி அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. ஏனெனில் அவருடைய கணவர் அப்படித்தான் இருந்தார், அதை எல்லோரும் அறிவர். இஸ்லாத்தின் மீதும் இறைத் தூதரின் மீதும் கடும்பகை கொண்டிருந்தார். முஸ்லிம்களைத் துன்புறுத்துவதற்குக் கிடைத்த எந்தச் சந்தர்ப்பத்தையும் அன்று வரையில் அவர் கைநழுவ விட்டதில்லை. இப்போது அவருக்கு மக்காவில்

ஒரு நாளைக் கழிப்பதுகூட சிரமம் எனும் நிலை! அப்படிப்பட்டவருக்கு அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மன்னிப்பும் பாதுகாப்பும் அளித்து விட்டார்களென்றால்...!

அப்பெண்மணி அக்கணமே தம் பணியாளை உடன் அழைத்துக் கொண்டு தம்முடைய கணவரைத் தேடிப் புறப்பட்டார்!

அண்ணல் நபி (ஸல்) அவர்களிடத்தில் இந்த அளவுக்கு நன்மதிப்பும், கணவரை மன்னிக்க வேண்டும் எனும் கோரிக்கை எவ்வித மறுப்புமின்றி ஏற்றுக் கொள்ளப்படும் அளவு சிறப்பும் பெற்றிருந்த இந்தப் பெண்மணிதான் உம்மு ஹகீம் பின்த் ஹாரீஸ் (ரலி) அவர்கள், அவர்களின் கணவர்தான் இக்ரிமா இப்னு அபூஜஹ்ல்!

## குடும்பச் சூழ்நிலை

மரியாதைக்குரிய உம்மு ஹகீம் (ரலி) அவர்கள் பிரபலமான நபித்தோழியருள் ஒருவராகத் திகழ்ந்தார்கள். வரலாற்றாசிரியர்கள் இவரை 'உம்மு ஹகீம்' எனும் பெயரில்தான் எழுதுகின்றார்கள். எங்கும் இவரின் இயற்பெயர் குறிப்பிடப்படவில்லை. இவர்களின் கோத்திரம் குறைஷிக் குலத்தின் ஒரு கிளையாகிய பனூமக்ஸூ ம் ஆகும்.

இவர் பிறந்து வளர்ந்த குடும்பம் இறைமறுப்பிலும் இறைவனுடன் இணைவைப்பதிலும் ஊறித் திளைத்திருந்தது. உம்மு ஹகீமின் தந்தை ஹாரிஸ் இப்னு ஹிஷாம், அபூ ஜஹ்லின் (அம்ரிப்னு ஹிஷாமின்) உடன்பிறந்த சகோதரார் ஆவார். இருவரும் இஸ்லாத்தின் கடும் விரோதிகள்! இவருடைய தாயார் ஃபாத்திமா பின்த் வலீதும் தாய்மாமன் காலித் இப்னு வலீதும் இதேபோன்றுதான் இஸ்லாத்துடன் பகைமை பாராட்டி வந்தார்கள்.

இத்தகைய சூழ்நிலையில் உம்மு ஹகீம் அவர்கள் இஸ்லாத்தின் வழிகாட்டலை ஏற்பது குறித்து கற்பனைகூட செய்து பார்க்க முடியாதிருந்தது! அவர்கள் திருமணம் முடித்ததும் கூட அபூ ஜஹ்லின் மகன் இக்ரிமாவைத்தான் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்! அவர் இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் எதிர்ப்பதில் தன்னுடைய தந்தை அபூ ஜஹ்லுக்கு வலது கரம் போன்று இருந்தார்!

ஹிஜ்ரி 2ஆம் ஆண்டில் பத்ருப் போரில் அபூ ஜஹ்ல் மிகவும் கேவலமான முறையில் கொல்லப்பட்டபோது இக்ரிமா, தன்னுடைய தன்னுடைய தந்தையார் விட்டுச் சென்ற 'மக்கட்சேவையை' நிறைவு செய்யும் பொறுப்பை ஏற்றார். மேலும் மக்கா நகர் வெற்றி கொள்ளப்படும் வரையில் அனைத்து வழிகளிலும் முஸ்லிம்களுக்கு துன்பம் இழைத்திட விரைந்து செயல்பட்டார்!

உஹதுப் போரில் தன்னுடைய மனைவி உம்மு ஹகீமையும் உடன் அழைத்துக் கொண்டு காலித் இப்னு வலீதின் படையுடன் சேர்ந்து முஸ்லிம்களுக்கு கடுமையான சேதங்களை ஏற்படுத்தினார்.

அகழ்ப்போரின்போது பனூ கினானா கோத்திரத்தாருடன் சேர்ந்து கொண்டு மதீனாவின் மீது தாக்குதல் தொடுத்தார்.

ஹிஜ்ரி 8ஆம் ஆண்டு முஸ்லிம்களுடன் ஒப்பந்தம் செய்திருந்த 'பனூகுஸாஆ' கூட்டத்தாரைக் கொலை செய்வதிலும் கொள்ளையடிப்பதிலும் ஈடுபட்டார்.

இதுமட்டுமல்ல, முஸ்லிம்களுடனும் அவர்களோடு நேசம் கொண்ட கூட்டத்தாருடனும், பகைமைப் போக்கை மேற்கொள்வதில்லை என்று தீர்மானிக்கப்பட்ட 'ஹுதைபிய்யா' உடன்படிக்கையை பகிரங்கமாக மீறியதும் அதை உடைத்தெறிந்ததும் இந்த இக்ரிமாதான்!

மேலும் இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் எதிர்ப்பதில் இக்ரிமா எந்த அளவுக்கு பிடிவாதமாக இருந்தாரெனில், அவருடைய நெருங்கிய உறவினரான – உம்மு ஹகீம் (ரலி) அவர்களின் சொந்த மாமனாரும் அபூ ஜஹ்ரின் பெரிய தந்தையின் மகனாருமாகிய காலித் இப்னு வலீத் (ரலி) அவர்கள் மக்கா வெற்றிக்குச் சிறிது காலம் முன்பே இஸ்லாத்தில் இணைந்து விட்டார்கள், அவர்கள் இஸ்லாத்தைத் தழுவிய பிறகும்கூட இக்ரிமாவிடம் எந்த மாற்றமும் ஏற்படவில்லை! மாறாக முன்பை விடவும் கடுமையாகத்தான் இஸ்லாத்தின் மீது வெறுப்புக் கொண்டார், அதை அழித்து விடுவதெனப் புறப்பட்டார்!

மக்கா வெற்றியின்போது – நபித்தோழர்கள் அணிஅணியாக புனித மக்காவினுள் பிரவேசித்த நேரத்தில் காலித் இப்னு வலீத் (ரலி) அவர்களின் தலைமையில் சென்ற அணியினருடன் இக்ரிமா துணிந்து தாக்குதல் தொடுக்கலானார். இணை வைப்பாளர்கள் சிலருடன் சேர்ந்துகொண்டு!

இக்ரிமா தொடர்ந்து மேற்கொண்டு வந்த இப்படிப்பட்ட பகைமைப் போக்குகள், இஸ்லாத்திற்கு எதிரான நடவடிக்கைகள்தாம் - இப்போது அவருக்கு மக்கா நகரின் வெற்றியாளராகத் திகழும் மாநபி (ஸல்) அவர்களின் முன்னிலையில் நிற்பதற்கு துணிவு வரமுடியாமல் செய்தன. தனது உயிருக்கு அஞ்சி யமன் தேசம் நோக்கி தப்பியோடத் தொடங்கினார்.....

### இஸ்லாத்தை ஏற்றல்

இங்கே.... உம்மு ஹகீம் (ரலி) அவர்கள் தம்முடைய தந்தை ஹாரிஸ் இப்னு ஹிஷாம், தாயார் ஃபாத்திமா பின்த் வலீத் இருவருடன் அண்ணலாரின் சமூகம் வந்து எல்லோரும் உளப்பூர்வமாக இஸ்லாத்தைத் தழுவுகின்றார்கள். உம்மு ஹகீமுக்குத் தம் கணவரின் பேரில் அதிகப்படியான அன்பு! அவர், இறைநிராகரிப்பு, இறைவனுக்கு இணைவைத்தல் எனும் தீய கொள்கைகளின் சேற்றில் சிக்கிக் கொண்டிருப்பதை அவர்களால் தாங்கிக் கொள்ள முடியாததால் ஞாலத்தின் அருட்பிழம்பு அண்ணலெம் பெருமானார் (ஸல்) அவர்களிடம், தம் கணவருக்குப் பாதுகாப்பு அளிக்குமாறு மிகவும் பரிவுடன் கோரிக்கை சமர்ப்பிக்க நபியவர்களும் அதனை ஏற்றுக் கொள்ள உம்மு ஹகீம் (ரலி) அவர்கள் தம் கணவரைத் தேடியவாறு கடற்கரை நோக்கிப் புறப்பட்டார்கள்!

### இது அல்லாஹ்வை அழைக்கும் நேரமல்லவா?

அங்கே.... இக்ரிமா மக்காவிலிருந்து புறப்பட்டு ‘குல்ஸூம்’ கடற்கரைக்கு வந்ததார். அங்கு யமனுக்குச் செல்லும் கப்பல் தயாராய் நின்று கொண்டிருந்தது. அதில் ஏறி அமர்ந்தார். கப்பல் சிறிது தூரம் சென்றதும் புயற்காற்றின் சுழலில் சிக்கிக் கொண்டது. கப்பலில் இருந்த அனைவரும் அஞ்சி நடுங்கினார்கள். அந்த இக்கட்டான நிலையில் இக்ரிமாவுக்கு தன்னுடைய கடவுளரின் மீது பக்தி ஏற்பட்டது. ‘லாத்’ மற்றும் ‘உஸ்ஸா’வை அழைத்து உதவி கேட்கலானார்.

இதனைக் கண்ணுற்ற கப்பலின் மாலுமிகள் சொன்னார்கள்: இது அல்லாஹ்வை அழைக்கும் நேரமாயிற்றே! புயல் ஆபத்திலிருந்து கப்பலைக் காப்பாற்ற லாத், உஸ்ஸாவினால் இயலாதே!

அவர்கள் இவ்வாறு கூறியது இக்ரிமாவின் உள்ளத்தில் பதிந்தது. ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கினார், தெளிவு பெற்றார்! உடனே அல்லாஹ்வை அழைத்து இவ்வாறு பிரார்த்தனை செய்தார்:

இறைவனே நான் உறுதியாகக் கூறுகின்றேன். இந்தக் கடல் கொந்தளிப்பிலிருந்து நீ என்னைக் காப்பாற்றினால், நானே முஹம்மத் (ஸல்) அவர்களின் முன்னிலையில் ஆஜராகிறேன். அவர் கருணையும் கிருபையும் உடையவர், என்னைத் தண்டிக்காமல் விட்டுவிடலாம்.

இறைவனின் ஆற்றல் அக்கப்பல் காப்பாற்றப்பட்டது. புறப்பட்ட இடத்திற்கே பத்திரமாக வந்து சேர்ந்தது!

இதற்குள்ளாக உம்மு ஹகீம் (ரலி) அவர்களும் தம கணவரைத் தேடியவாறு அங்கு வந்தார்கள். அங்கு இக்ரிமா இருப்பதைக் கண்டதும் அவர்களுக்கு அளவிலா ஆனந்தம்! முதலில் இறைவனுக்கு நன்றியறிதலைச் சமர்ப்பித்துக் கொண்டு தம் கணவரிடம் நிலைமையை விளக்கிச் கூறினார்கள்:

நான் ஒரு மனிதப் புனிதரிடமிருந்து வந்துள்ளேன். அவர் மிகவும் நல்லவர். மக்கள் அனைவரிலும் அதிகக் கருணையும் பரிவும் கொண்டவர். உறவினருடன் இணைந்து வாழ்பவர்! நான் அவர்களிடமிருந்து உமக்காகப் பாதுகாப்பு பெற்று வந்துள்ளேன். இப்போது என்னுடன் அவர்களின் சமூகத்திற்கு வாரும்!

இக்ரிமாவும் உடனே தம் மனைவியின் விருப்பத்தை ஏற்று அண்ணலெம் பெருமானார் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜரானார். அவரைக் கண்டதும் அண்ணலார் பெரிதும் மகிழ்ச்சி அடைந்தவர்களாக நாட்டை வெறுத்து ஓடியவரே, வாரும்! வாரும்!'' என்று மிகுந்த மரியாதையுடன் வரவேற்றார்கள்!

இக்ரிமா தம் மனைவி உம்மு ஹகீம் (ரலி) அவர்களைச் சுட்டிக்காட்டி தாங்கள் எனக்கு உயிர்ப்பிச்சை அளித்திருப்பதாக என் மனைவி என்னிடம் கூறினார்'' என்றார்.

ம்...ம்.... உம்மு ஹகீம் உரைத்தது உண்மைதான். நீர் தஞ்சம் அளிக்கப்பட்டுள்ளீர்!'' என்று மாநபி (ஸல்) அவர்கள் உறுதிப்படுத்தினார்கள்.

காருண்ய நபியவர்களின் கருணை உள்ளத்தைக் கண்டு இக்ரிமா பெரிதும் மாற்றம் அடைந்தார். அந்த இடத்திலேயே ஏகத்துவக் கொள்கையை ஏற்று இஸ்லாத்தில் இணைந்தார். மேலும் இஸ்லாத்திற்காக உழைக்கப் போவதாகவும் தன் உயிரையும் உடமையையும் இறைவழியில் போராடுவதற்காக அர்ப்பணிக்கப் போவதாகவும் உறுதிமொழி எடுத்தார்!

அதன் பிறகு இக்ரிமா (ரலி) அவர்களின் வாழ்க்கையில் பெரும் மாற்றம் ஏற்பட்டது! அன்று வரையில் எவ்வளவு கடுமையாக இஸ்லாத்தை எதிர்த்து வந்தாரோ அதைவிடவும் பன்மடங்கு ஆர்வத்துடன் இப்போது இஸ்லாத்தின் உயர்வுக்காகவும், வளர்ச்சிக்காகவும் பணியாற்றினார்! இருள் சூழ்ந்த வாழ்க்கையில் சிக்கிக் கொண்டிருந்த இக்ரிமா அவர்களின் இந்த மனமாற்றத்திற்கும் முன்னேற்றத்திற்கும் அவர்களின் மனைவி உம்மு ஹகீம் (ரலி) அவர்கள் மேற்கொண்ட முனைமழுங்காத முயற்சிதான் முக்கிய காரணம் ஆகும்!

### அந்நிய பூமியில் விதவையானார்

ஹிஜ்ரி 11ஆம் ஆண்டு அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மரணமடைந்ததை அடுத்து அபூபக்கர் (ரலி) அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றிருந்தபோது சில அரபுக் கோத்திரத்தினர் அறியாமையினால் இஸ்லாத்தை விட்டு வெளியேறும் குழப்பம் தலைதூக்கியது. அதனை முளையிலேயே கிள்ளி எறிவதற்காக தொடர்ந்து பல போர்கள் (ஹுரூபுர் ரித்தத்) நடைபெற்றன. அப்புனிதப் போர்களில் இக்ரிமா (ரலி) அவர்களும் கலந்து கொண்டார்கள். ஒருவாறாக அக்குழப்பம் அடக்கப்பட்டது.

மேலும் முஸ்லிம்கள் ஷாம் தேசத்தை நோக்கிப் புனிதப் போர்ப் பயணம் மேற்கொண்டபோது இக்ரிமா (ரலி) அவர்கள் தம் மனைவி உம்மு ஹகீம் (ரலி) அவர்களையும் உடன் அழைத்துக்

கொண்டு இஸ்லாமியப் படையுடன் சேர்ந்து தொடர்ந்து பயணமானார்கள். பல யுத்தங்களில் ரோமானியர்களை எதிர்த்து மிகுந்த தியாக உணர்வுடனும் வீரத்துடனும் போராடினார்கள்.

இறுதியில் பண்டைய ரோமப் பேரரசின் தலைநகரான (BYZANTIUM) – பைசாண்டிய நகரத்து ரோமானியர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே நடைபெற்ற 'அஜ்னாதைன்' போரில் இக்ரிமா (ரலி) அவர்கள் வீரமரணம் அடைந்தார்கள். உம்மு ஹகீம் (ரலி) அவர்கள் தம் கணவரின் இறைவழி உயிர்த்தியாகத்தை பொறுமையுடன் ஏற்று அந்நிய பூமியில் விதவையானார்கள்!

### எளிமையான மறுமணம்

கணவரின் மரணத்தை முன்னிட்டு கட்டாயம் அனுஷ்டிக்க வேண்டிய 'இத்தா' எனும் காலம் கழிந்த பிறகு உம்மு ஹகீம் (ரலி) அவர்களை மறுமணம் புரிந்துகொள்ள பல இடங்களிலிருந்தும் தூது வந்தது. இவ்விதம் தூது விடுத்தவர்களில் பிரபல நபித்தோழர் காலித் இப்னு ஸயீத் (ரலி) அவர்களும் ஒருவர்!

மரியாதைக்குரிய உம்மு ஹகீம் (ரலி) அவர்கள் ஆழ்ந்த சிந்தனைக்குப் பிறகு, இஸ்லாத்தின் மீதும் இறைத்தூதரின் மீதுமான அன்பிலும் இறைவழிப் போராட்டத்தின் ஈடுபாட்டிலும் யார் முன்னிலையில் உள்ளாரோ அவரையே கணவராக ஏற்றுக் கொள்வதென்று தீர்மானித்தார்கள். அதன்படி காலித் இப்னு ஸயீத் (ரலி) அவர்களுக்கு சம்மதம் தெரிவித்தார்கள்!

காலித் இப்னு ஸயீத் (ரலி) அவர்கள் எதிர்பார்த்த உயர் தகுதிகளும் சிறப்புகளும் நிறைந்திருந்தன. இஸ்லாத்தின் ஆரம்ப காலத்திலேயே இறைநம்பிக்கை கொண்ட நபித்தோழர்களுள் அவர்களும் முக்கியமானவராவார். அபிசீனிய ஹிஜ்ரத், மதீனா ஹிஜ்ரத் இரண்டையும் மேற்கொள்ளும் பாக்கியம் பெற்றவர்கள். மேலும் புனித மக்காவை வெற்றிகொண்டபோதும் ஹுனைன், தாயிஃப் மற்றும் தபூக் போன்ற போர்களிலும் அண்ணல் நபி (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டவர்கள்.

முறைப்படி நானூறு தீனார் - தங்க நாணயங்கள் மஹ்ராக நிர்ணயிக்கப்பட்டு உம்மு ஹகீம் (ரலி) அவர்களுக்கும் காலித் இப்னு ஸயீத் (ரலி) அவர்களுக்கும் திருமணம் நடந்தேறியது!

பல யுத்தங்களைச் சந்தித்தவாறு தொடர்ந்து பயணமாகிக் கொண்டிருந்த வீரர்களுடன்தான் புதுத்தம்பதிகள் இருவரும் சென்று கொண்டிருந்தார்கள் என்பதை நினைவில் கொள்ளவும். இடையே மர்ஜுஸ் ஸஃபர் என்ற ஊரில்தான் மணவிழாவும் நடைபெற்றது முடிந்துள்ளது. இந்த ஊர் திமஸ்கஸ் - (DAMASCUS) - நகருக்கு அருகில் உள்ளது. அப்போது இஸ்லாமியப்படை திமஸ்கை நோக்கிச் சென்று கொண்டிருந்தது!

உம்மு ஹகீம் (ரலி) அவர்களுடைய எளிமையான இந்த மறுமண நிகழ்ச்சி இஸ்லாமியத் திருமணத்துக்கு சிறந்ததோர் இலக்கணமாகத் திகழ்கின்றது! தொடர் பயணத்தை மேற்கொண்டு நடைபெற்றப் புனிதப் போர்களில் ஒரு வீரர் தம் மனைவியுடன் கலந்து கொள்வது எத்துணை சிறப்புக்குரியது! அப்படி நடைபெற்ற ஒரு போரில் அவர் 'ஷஹீதா'வதும் பின்னர் இத்தா தவணை கழிந்த பிறகு உம்மு ஹகீம் (ரலி) அவர்களிடம் பல பேர் திருமணத்திற்காக தூது அனுப்பியதும் உயர்ந்த இலட்சியத்தை அளவுகோலாகக் கொண்டு அவர்கள் சுயமாகக் 'கணவரை'த் தேர்வு செய்ததும் - முறையாகத் திருமணம் நடைபெற்றதும் - இவை அனைத்தும் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் உருவாக்கிச் சென்ற இஸ்லாமிய சமூக அமைப்பு எத்துணை உன்னதமானது, அந்தச் சமுதாய மக்கள் கடைபிடித்த வாழ்க்கை நடைமுறைகள் எத்துணை நேர்மையானவை, எளிமையானவை என்பதை தெளிவாய்க் காட்டுகின்றன!

முதலிரவோடு....!

திருமணம் முடிந்ததும் காலித் இப்னு ஸயீத் (ரலி) அவர்கள் 'முதலிரவு' விருப்பத்தை மனைவியிடம் வெளிப்படுத்தினார்கள். அதற்கு உம்மு ஹகீம் (ரலி) அவர்கள் கூறினார்கள்:

எதிரிகள் நம்மைக் குறி வைத்திருக்கின்றார்கள். அவர்கள் எந்நேரத்திலும் தாக்குதல் தொடுக்கலாம் எனும் அபாயம் உள்ளது. ஆகையால் சில நாட்கள் பொறுத்திருந்து பார்க்கலாம்!''

இந்தப் போரில் நான் மரணமடைவது உறுதி!'' என்று காலித் இப்னு ஸயீத் (ரலி) அவர்கள் கூறியதும் அதைக் கேட்ட உம்மு ஹகீம் (ரலி) அவர்கள் மௌனமானார்கள்!

பிறகு அன்றிரவே ஓர் பாலத்தின் அருகே அத்தம்பதிகள் தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. அந்தப் பாலம் இன்று வரைக்கும் கன்தறா உம்மு ஹகீம் (BRIDGE OF UMMU HAKEEM) என்றே விழங்குகிறது.

மறுநாள் அதிகாலையில் 'வலீமா' விருந்து நடைபெற்றது. அனைவரும் விருந்துண்டு முடிப்பதற்குள்ளாகவே முஸ்லிம்களின் மீது ரோமானியர்கள் தாக்குதல் தொடுக்க வந்துவிட்டார்கள்.

வலிமை கொண்ட ஒரு ரோமானியப் படைவீரன் அனைவர்க்கும் முன்னால் வந்து நின்று கொண்டு முஸ்லிம்களை நோக்கிச் சவால் விட்டு அழைத்தான். காலித் இப்னு ஸயீத் (ரலி) அவர்கள் பாய்ந்து வந்து அவனது சவாலை ஏற்று அவனோடு போரிட்டார்கள். மிகவும் கடுமையாக நடந்த அந்தச் சண்டையில் காலித் இப்னு ஸயீத் (ரலி) அவர்கள் 'ஷஹீதா'னார்கள்!

இக்காட்சியைக் கண்ட உம்மு ஹகீம் (ரலி) அவர்கள் ஆவேசத்துடன் எழுந்து தம் ஆடைகளை வரிந்து கட்டினார்கள்! பிறகு கூடாரத்தின் முளையைப் பிடுங்கி எடுத்துக் கொண்டு போரில் குதித்தார்கள். புயல்போல் பாய்ந்து தாக்குதல் தொடுத்துக் கொண்டே எதிரிகளினூடே முன்னேறிச் சென்றார்கள். அன்று அவர்களின் கரத்தால் ரோமானியப்படையினர் ஏழு பேர் கொல்லப்பட்டார்கள்!

உம்மு ஹகீம் (ரலி) அவர்கள் யர்மூக் யுத்தத்திலும் கலந்து கொண்டார்கள். பிற பெண்களுடன் சேர்ந்து ரோமானியர்களை எதிர்த்து பெரும் வீரத்துடன் போரிட்டார்கள்!

இஸ்லாமிய வரலாற்றை அலங்கரித்துக் கொண்டிருக்கும் வீரத்திருமகளான உம்மு ஹகீம் (ரலி) அவர்களுடைய வெற்றிக் காவியம் இதுதான். எழுச்சிமிக்க, படிப்பினைகள் நிறைந்த இவ்வரலாற்று நிகழ்ச்சி ஏடுகளில் தெளிவாக இடம் பெற்றுள்ளன. தவிர அவர்களின் மரணம் பற்றியும் குழந்தைப்பேறு பற்றியும் வரலாற்று நூல்கள் எவ்வதக் குறிப்பும் தரவில்லை! அல்லாஹ் அவர்களை முழுமையாகத் திருப்தி கொள்வானாக!

## கன்ஸா பின்த் அம்ர் (ரலி)

கன்ஸா பின்த் அம்ர் (ரலி) அவர்கள் அரபி இலக்கிய உலகில் புகழ் பெற்ற பெண் கவிஞர். குறிப்பாக இரங்கற்பா இயற்றுவதில் அவர்களுக்கிருந்த தனிப் புலமையை அனைத்துக் கவிஞர்களும் அன்று மட்டுமல்ல, இன்றும் போற்றுகின்றார்கள்.

அண்ணல் நபி (ஸல்) அவர்களுக்கு நபிப் பட்டம் வழங்குவதற்கு சுமார் ஐந்தாண்டுகளுக்கு முன்பு பிறந்த கன்ஸா (ரலி) அவர்கள், அன்று நிலவிய அஞ்ஞான சமூக அமைப்பையும், பிறகு

இஸ்லாத்தைத் தழுவி, அதன் ஏற்றமிகு ஆட்சியையும் சீர்மிகு கொள்கைகளின் சிறந்த பலன்களையும் கண்டவர்கள்!

கன்ஸா (ரலி) அவர்களுடைய வாழ்க்கையின் இரு காலகட்டங்களையும் - அறியாமைக்கால வாழ்க்கையையும் இஸ்லாமிய வாழ்க்கையையும் ஆராயும்போது

ஒரு மனிதனின் சிந்தனை தெளிவடைந்து, கொள்கை மாற்றம் ஏற்பட்டுவிட்டால் அவனுள் எத்துணை உறுதியான புரட்சி தோன்றிவிடுகிறது என்பது தெளிவாகப் புரிய வருகிறது. மேலும், இஸ்லாமிய வாழ்க்கைக்கும் இஸ்லாமல்லாத வாழ்க்கைக்கும் உள்ள வேறுபாடும், இஸ்லாமிய அழைப்பை ஏற்றுக் கொள்ளும் ஒருவன் அதன் அறிவுரைகளின் காரணத்தால் எத்துணைப் பொறுமையாளனாகவும் நன்றியுணர்வு கொண்ட நல்லடியானாகவும் ஆகிவிடுகின்றான் என்பதும் தெளிவாகின்றன!

கன்ஸா (ரலி) அவர்களுடைய முந்தைய — பிந்தைய இரு வாழ்க்கை முறைகளையும் இப்பொழுது காண்போம்.

### அறியாமைக்கால வாழ்க்கை

கன்ஸா (ரலி) அவர்களின் தந்தை அம்ர், பனூ ஸுலைம் கோத்திரத்தின் தலைவர். அவர் தன்னுடைய பணபலம், தலைமைப் பதவி ஆகியவற்றினால் மக்களிடையே நல்ல செல்வாக்கும் மதிப்பும் பெற்றிருந்தார். கன்ஸா அவர்களைத் தவிர முஆவியா, ஸக்ர் என்ற இரண்டு மகன்களும் அவருக்கு இருந்தார்கள்.

தன்னுடைய பிள்ளைகள் அனைவரையும் அன்போடும் பரிவோடும் வளர்த்தார். அவர்கள் எல்லாத் திறமைகளையும் பெற்றுத் திகழ்வதுடன் நற்குணமுடையவர் களாகவும் வளர்ந்து வரவேண்டும் என்பதில் தனிக்கவனம் செலுத்தினார்.

அம்ர் தம்முடைய பிள்ளைகளின் எதிர்காலம் குறித்து தம் மனதில் எழுப்பிக் கொண்டிருந்த ஆசைகள் அனைத்தையும் அவருடைய குறைந்த ஆயுள் இடித்துத் தகர்த்தது. ஆம்! கன்ஸா (ரலி) அவர்கள் பால்முகம் மாறாத சிறுமியாய் இருந்தபோதே அம்ர் உலகை விட்டு விடைபெற்றுச் சென்றார்.

தந்தையின் பிரிவினால் கன்ஸா (ரலி) அவர்கள் கடும் துயரத்திற்கு ஆளானார்கள். உள்ளம் நொந்து உடல் உருகலானார்கள். தந்தையின் திடீர் பிரிவினால் வாடி வதங்கிய கன்ஸா (ரலி) அவர்களை ஆறுதல் கூறித் தேற்றியது இரு சகோதரர்களும்தான்! தந்தையை விடவும் அதிகமாக பாசமழை பொழிந்து தம் தங்கையைப் பாதுகாத்து வந்தார்கள். அவ்விருவரின் பரிவான அரவணைப்பில் தந்தையின் பிரிவை மறந்து, கவலை நீங்கி இயல்பு நிலை அடைந்தார்கள் கன்ஸா (ரலி) அவர்கள்.

அவர்கள் பருவம் அடைந்ததும் அவர்களின் இரு அன்புச் சகோதரர்களே அவர்களுக்குத் திருமணம் செய்து வைத்தார்கள். பனூ ஸுலைம் எனும் அவர்களுடைய கோத்திரத்தைச் சேர்ந்த ஓர் இளைஞர்தான் மணமகன். அவருடன் வாழ்ந்து ஓர் ஆண்மகனை பெற்றெடுத்ததும் அவர் மரணமடைந்தார். பிறகு கன்ஸா (ரலி) அவர்கள் மர்தாஸ் இப்னு அபீ ஆமிர் என்பவரை மறுமணம் செய்து கொண்டார்கள். அவரின் மூலம் அம்ர், ஜைத், முஆவியா எனும் மூன்று மகன்களையும் உம்றா எனும் ஒரு மகளையும் பெற்றெடுத்தார்கள். பிறகு மர்தாஸும் நோய்வாய்ப்பட்டு மரணம் அடைந்தார்.

அதன்பிறகு கன்ஸா (ரலி) அவர்கள் திருமணம் செய்து கொள்ளவில்லை. விதவையாகவே வாழ்நாளை கழித்து வந்தார்கள்! இந்நிலையிலும் அவர்களையும் அவர்களின் பிள்ளைகளையும் அன்போடு கவனித்துப் பாதுகாப்பதில் அவர்களின் இரு சகோதரர்கள் எவ்வித குறையும் வைக்கவில்லை. சகோதரர்களின் அன்பாதரவில் கவலை மறந்திருந்த கன்ஸா (ரலி) அவர்கள் தம்

பிள்ளைகளை வளர்ப்பதிலும் அவர்களுக்கு ஒழுக்கப் பயிற்சி அளிப்பதிலும் முழுமையாக ஈடுபட்டு வந்தார்கள்.

கன்ஸா (ரலி) அவர்கள் முன்பே கவிபாடுவதில் திறன் மிக்கவர்களாய் இருந்தாலும் அவர்களின் கவிதைக்கு புது வேகத்தையும் கவர்சியையும் கொடுத்தது அவர்களுடைய சகோதரர்களின் மரணம்தான்! தம் சகோதரர்களின் நினைவாக இரங்கற்பாக்களை இயற்றி, சென்ற இடமெல்லாம் அவற்றைப் பாடினார்கள். அவர்களுடைய அந்தக் கவிதைகள் அரபி இலக்கிய உலகில் இன்றும்கூட போற்றப்படுகின்றன. அவை மிக உயர்வானவை, நயமிக்கவை என்று ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. அவருடைய சகோதரர்கள் மரணம் அடைந்தது எப்போது?

### அரபிகளின் போர் ஒரு தொடர்கதை

அன்றைய அரபிகள் இறைவனின் வழிகாட்டலை இழந்து மனஇச்சையின் அடிப்படையில் தம்முடைய வாழ்க்கையை அமைத்துக் கொண்டதால் பலவிதமான சிக்கல்களுக்கும் தொல்லைகளுக்கும் ஆளாகியிருந்தார்கள். எந்த அளவுக்கெனில், ஒரு சிறு பிரச்சனை எழுந்தாலும் வாளின் முனையில்தான் அதற்குத் தீர்வு காண முடியும் என்றாகிவிட்டிருந்தது! அதனால் தனிப்பட்டவர்களுக்கிடையிலும், குலங்களுக்கிடையேயும் நீண்ட நெடிய போர்கள் மூண்டு ஒருவருக்கொருவர் வெட்டி மாய்த்துக் கொண்டிருந்தார்கள்!

ஒரு முறை கன்ஸா (ரலி) அவர்களின் கோத்திரத்திற்கும் பனூஅஸத் என்ற கோத்திரத்திற்கும் மோதல் ஏற்பட்டு, பிறகு அது பெரியதொரு போராய் வெடித்தது. அதில் அவர்களின் சகோதரர் முஆவியா கொல்லப்பட்டார். அதற்குப் பழிவாங்குவது தொடர்பான சண்டையில் மற்றொரு சகோதரர் ஸக்ர் அம்பினால் தாக்கப்பட்டு பலத்த காயத்திற்கு ஆளாகி படுத்த படுக்கையானார்!

ஒரு சகோதரனை அநியாயமாக இழந்த கன்ஸா (ரலி) அவர்கள், மற்றொரு சகோதரனையாவது எப்பயாவது காப்பாற்றிவிட வேண்டும் என்று பெரிதும் முயற்சி செய்தார்கள். தமது உடல்நிலையைக்கூட கவனிக்காமல், உரிய சிகிச்சையளித்துப் பணிவிடைகள் செய்வதில் கண்ணும் கருத்துமாய் இருந்தார்கள். ஆனாலும் ஸக்ர் குணமடையவில்லை. படுத்த படுக்கையாய்க் கிடந்து இறுதியில் இவ்வுலகிலிருந்து விடைபெற்றுச் சென்று விட்டார்.

### அளவு கடந்த துக்கமும் ஆண்டவனின் மீது அவநம்பிக்கையும்

கன்ஸா (ரலி) அவர்கள் தம்முடைய இரு சகோதரர்களின் மீதும் அளவு கடந்த அன்பு கொண்டிருந்தாலும் ஸக்ரின் மீதுதான் உயிரையே வைத்திருந்தார்கள். அவருடைய வீரம், கொடைத்தன்மை மற்றும் பிற நல்ல அம்சங்கள் ஆகியன அவர்களைப் பெரிதும் கவர்ந்திருந்தன. ஆகையால் ஸக்ரின் மரணம் அவர்களின் இதயத்தையே நொருக்கி விட்டது. இரவு பகல் எந்நேரமும் அவர்களின் கண்கள் கண்ணீர் வடித்துக் கொண்டே இருந்தன!

இந்தச் சந்தர்ப்பத்தில்தான் ஸக்ரைப் பற்றிய பசுமையான எண்ணங்களில் சஞ்சரித்த அவர்களின் சிந்தனைக்கு ‘வடிகால்’ தேவைப்பட்டது. அதுதான் இரங்கற்பாவாக வடிவம் பெற்றது. அவர்களின் நாவிலிருந்து வெளிப்பட்ட பாடல்களைப் பொது மன்றங்களில் சமர்ப்பித்தார்கள். இதயமே உருகி ஓடும் வண்ணம் கடும் சோகத்துடன் பாடுவார்கள். தாமும் அழுவார்கள். கேட்போரையும் அழவைத்து விடுவார்கள்.

அப்படி அழும்போது தம் சகோதரரை நினைத்து அவர் காட்டிய அன்பை – பாசத்தை எண்ணியெண்ணி... உள்ளம் நொந்து, நிலைகுலைந்து நெஞ்சில் அடித்துக் கொண்டு கதறுவார்கள். அருகில் உள்ள கற்களிலும் சுவர்களிலும் தலையால் மோதிக் கொள்வார்கள். ஐயகோ!” என்று

பெருங்கூக்குரலிட்டு அலறி ஒப்பாரி வைப்பார்கள். அதைக்கேட்ட, பார்த்த மக்களெல்லாம் அலறினார்கள். எதிரிகள் கூட அதைக்கேட்டு கன்ஸா (ரலி) அவர்கள் மீது இரக்கப்படலானார்கள்!

கன்ஸா (ரலி) அவர்கள் இவ்வளவு தூரம் மனவேதனைப் பட்டு அழுது புலம்பியதற்கு அன்றைய அறியாமைக்கால சமூக அமைப்பும் அதன் தவறான நடைமுறைகளுமே காரணமாகும். அன்று கன்ஸா அவர்களும் கடவுள் நம்பிக்கை கொண்டிருந்தவர்கள்தாம். என்றாலும் பல தெய்வ வழிபாட்டினாலும் அதன் அடிப்படையிலான கண்மூடித்தனமான போக்குகளாலும் கன்ஸா (ரலி) அவர்களின் கடவுள் நம்பிக்கைகூட எடுபட்டுப் போயிருந்தது. ஆகையால்தான் தமது வாழ்வுக்கும் மகிழ்வுக்கும் தம்முடைய சகோதரர் ஸக்ர்தான் மூலகாரணம் என்று எண்ணிக் கொண்டிருந்தார்கள். அன்று அவர்கள் பாடிய பின்வரும் கவிதை வரிகளும் இதையே உறுதிப்படுத்துகின்றன.

(ஸக்ரே) நீ உயிருடன் இருந்தபோது உனது ஆதரவு கொண்டுதான் துன்பங்கள் துயரங்களை விட்டு என்னை நான் தற்காத்துக் கொண்டிருந்தேன். ஐயகோ! இப்போது இப்பெருந் துன்பத்தை அகற்றுவதற்கு யார் இருக்கிறார்?”

## இஸ்லாத்தைத் தழுவுதல்

உலகில் இறைவன் தன் படைப்பினங்களின் மீது கொண்டுள்ள பரிவும் கிருபையும் அளவிட முடியாதவை. துன்பங்களைக் கொடுத்து சோதனைக் குள்ளாக்குவதும் அவனே. அவற்றைக் களைந்து இன்பங்களை வழங்கும் ஆற்றலும் அவனிடமே உள்ளது எனும் உண்மையை அறியாதிருந்த காரணத்தால், தம்முடைய அன்புச் சகோதரர்களின் பிரிவு குறித்து சதா அழுது புலம்பிக் கொண்டும், இனி நம்மைப் பாதுகாப்பதற்கு யாரும் இல்லையே என்று அலட்டிக் கொண்டும் திரிந்த கன்ஸா அவர்களின் வாழ்க்கைப் போக்கு சத்திய நெறியாம் இஸ்லாத்தின் பக்கம் திரும்பலானது. அதற்கான நல்ல சூழ்நிலை மலர்ந்தது!

அண்ணல் நபி (ஸல்) அவர்களும், முஸ்லிம்களும் மதீனாவுக்கு ஹிஜ்ரத் செய்த பிறகு அங்கு சிறிய அளவில் ஓர் இஸ்லாமிய அரசு நிறுவப்பட்டது. மதீனா நகரம் அதன் மையக்கேந்திரமாய்ச் செயல்படலானது. அப்பொழுது சத்திய இஸ்லாத்தின் அழைப்பு அரபு நாட்டின் எல்லாப் பகுதிகளுக்கும் கொஞ்சம் கொஞ்சமாய்ப் பரவியது. கன்ஸா (ரலி) அவர்களின் காதுக்கும் எட்டியது!

சத்தியத்தை ஏற்றுக்கொள்ளும் இயல்பை அல்லாஹ் கன்ஸா (ரலி) அவர்களுக்கு வழங்கியிருந்தான். ஏகத்துவ அழைப்பைச் செவியேற்றதும் அவர்களின் உள்ளத்திலும் சிந்தையிலும் பெரும் மாற்றம் ஏற்பட்டது. ஏகத்துவக் கருத்துக்களின் எளிமையும் தெளிவும் அவர்களைப் பெரிதும் கவர்ந்தன. அதே நேரத்தில் பல தெய்வக் கொள்கை, அது தொடர்பான நடைமுறைகள், அவற்றால் மனித வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள தீராத சீர்குலைவுகள் ஆகிய அனைத்தையும் ஆழமாக அணுவளவும் மனமாச்சரியத்திற்கு இடமளிக்காமல் சிந்தித்தார்கள். பலதெய்வக் கொள்கையில் குழப்ப நிலையைத்தான் கண்டார்கள். ஆகையால் இறைத்தூதரைச் சந்தித்து, இஸ்லாத்தைக் குறித்து தெளிவான விளக்கம் பெற்று அதில் இணைந்திட முடிவு செய்தார்கள்.

கன்ஸா (ரலி) அவர்கள் தம்முடைய குலத்தைச் சேர்ந்த சிலரையும் அழைத்துக்கொண்டு மதீனா நோக்கிப் புறப்பட்டார்கள். பயணத்தின் கஷ்ட, நஷ்டங்களையும் பொருட்படுத்தாமல் ‘மைல்’கள் பல கடந்து மாநபி (ஸல்) அவர்களின் இல்லம் வந்தடைந்தார்கள். அப்போதே இஸ்லாத்தை உளப்பூர்வமாக விரும்பி ஏற்றுக் கொண்டார்கள்.

இந்தச் சந்தர்ப்பத்தில் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கன்ஸா (ரலி) அவர்களுடனும், அவர்களுடன் வந்த குழுவினருடனும் வெகு நேரம்வரை உரையாடிக் கொண்டிருந்தார்கள்.

கருத்தாழத்துடனும் பொருள் நயத்துடனும் தெளிவாகப் பேசும் கன்ஸா (ரலி) அவர்களின் பேச்சின் இடையிடையே ‘சபாகூஷ் கன்ஸா’ என்று நபியவர்கள் கூறிக் கொண்டிருந்தார்கள். அந்த அளவுக்கு – அரபி இலக்கியத்தில் கைதேர்ந்த கன்ஸா (ரலி) அவர்களின் பேச்சுக்களில் நல்ல கவர்ச்சி இருந்தது. அவர்களிடம் அமையப் பெற்ற இத்தகைய பேச்சுவன்மை அவர்கள் மேற்கொண்ட இஸ்லாத்தின் அழைப்புப்பணியில் நல்ல பயனை விளைவித்தது.

ஆம்! கன்ஸா (ரலி) அவர்கள் தம் குலத்தார்களிடம் திரும்பிச் சென்று, அவர்களிடம் இஸ்லாத்தைப் பற்றி எடுத்துச் சொன்னபோது எண்ணற்ற மக்கள் அவர்களின் பிரச்சாரத்தால் தெளிவடைந்து இஸ்லாத்தில் சேர்ந்தார்கள்.

அவ்வப்போது மதீனா நகர் வந்து மாநபி (ஸல்) அவர்களைச் சந்தித்து இஸ்லாத்தைக் குறித்து மேலும் விளக்கங்களையும், அறிவுரைகளையும் பெற்றுச் செல்வது கன்ஸா (ரலி) அவர்களின் வழமையாய் இருந்தது. அதற்கேற்ப நபியவர்கள் மரணமான பிறகும் மதீனா வருவார்கள், அன்னை ஆயிஷா (ரலி) அவர்களைச் சந்தித்து பேசிக் கொண்டிருப்பார்கள். அப்போது முன்பு தம்முடைய சகோதரர்களுக்கு நடந்த கதியை எடுத்துச் சொல்வார்கள். அவர்களின் பெயரில் தாம் பாடிய இரங்கற்பாக்களையும் படித்துக் காட்டுவார்கள். அந்நேரத்திலும் அவர்களின் துக்கமும், சோகமும் வெளிப்படும். பொறுமையைக் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவுறுத்துவார்கள்.

## இஸ்லாத்தைத் தழுவியதால் ஏற்பட்ட மாற்றங்கள்

இவ்வாறு - இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட பிறகும் தம் சகோதரர்களின் பசுமையான நினைவால், குறிப்பாக ஸக்ரின் பாசத்தால் அவ்வப்போது மனநிலை பாதிக்கப்பட்டுக் கொண்டிருந்த கன்ஸா (ரலி) அவர்களை, அறியாமைக் காலத்தின் தவறான பழக்கம் ஒன்றும் தொற்றிக் கொண்டிருந்தது. அதாவது தம்முடைய கூந்தலின் ஒரு பகுதியை ஒருவிதமாக அள்ளி முடித்து கொண்டை போட்டிருந்தார்கள். அது ஸக்ரின் மீதான துக்கத்தை வெளிப்படுத்தக் கூடியதாய் இருந்தது. அளவுகடந்த கவலையை வெளப்படுத்துவதற்கு அன்றைய அறியாமைக்கால அரபிகள் இப்படிச் செய்வது வழக்கம்.

இஸ்லாத்திற்கு முரணான இந்த வழக்கத்தையும் அவர்களைக் கைவிடச் செய்தது பற்றி வரலாற்றில் ஒரு நிகழ்ச்சி கூறப்படுகிறது:

ஒருமுறை கன்ஸா (ரலி) அவர்கள் தலையில் இந்தக் கொண்டையுடன் கஅபா ஆலயத்தை தவா∴ப் - சுற்றி வந்து கொண்டிருந்தார்கள். அதைக் கண்ணுற்ற கலீ∴பா உமர் (ரலி) அவர்கள் கன்ஸா (ரலி) அவர்களை அழைத்து இப்படித் துக்கம் கொண்டாடுவதற்கு, தலையில் கொண்டை போடுவதற்கு இஸ்லாம் அனுமதி அளிக்கவில்லை” என்று எடுத்துச் சொன்னார்கள்.

இறைநம்பிக்கையாளர்களின் தலைவரே, என்னைப் போன்று எந்த ஒரு பெண்ணுக்கும் இவ்வளவு கொடுமையான துன்பமும் துயரமும் ஏற்பட்டிருக்காது. என் சகோதரர்களின் இழப்பால் ஏற்பட்ட இத்துன்பத்தை நான் எவ்வாறு சகித்துக் கொள்வேன்!” என்று கன்ஸா (ரலி) அவர்கள் பதிலளித்தார்கள்.

உமர் (ரலி) அவர்கள் ஆறுதல் அளித்தவாறு கூறினார்கள்:

இவ்வுலகில் மக்கள் இதனை விடவும் பெரிய பெரிய துன்பங்களுக்கும் துயரங்களுக்கும் ஆளாகிக் கொண்டுதான் இருக்கின்றார்கள். வேண்டுமானால், கொஞ்சம் அவர்களின் உள்ளத்தைப் பிளந்து பாருங்கள்! இஸ்லாம் தடைசெய்துள்ளதை மேற்கொள்வது இறைவனுக்கு மாறு செய்வதாகும்.

இதன் பிறகு கன்ஸா (ரலி) அவர்கள் அவ்வாறு கொண்டை போட்டுக் கொள்வதைக் கைவிட்டு விட்டார்கள். ஸக்ரைப் பற்றி அவர்கள் அழுது புலம்புவதும் வெகுவாகக் குறைந்தது. பிறகு பாடிய ஒரு சில கவிதைகளில் இஸ்லாமியச் சிந்தனையும் கொள்கையும் இடம்பெற்றிருந்தன. அவற்றுள் ஒன்றுதான் இது:-

குன்து அப்கீ லஹூ மினஸ் ஸஃரி

வ அனல் யெவ்ம அப்கீ லஹூ மினந் நாரி

அதாவது முன்பு நான் ஸக்ருக்காகப் பழிவாங்குவது குறித்து அழுத் கொண்டிருந்தேன்! இப்பொழுது அவர் (தவறான கொள்கையில் இருக்கும் நிலையில் கொல்லப்பட்டு விட்டாரே, ஆகையால்) நரகில் அல்லவா தள்ளப்படுவார் என்பதற்காக அழுகின்றேன்.

## உமர் (ரலி) அவர்களின் பாராட்டு

கன்ஸா (ரலி) அவர்களுக்கு இவ்வாறு இஸ்லாத்தின் அடிப்படைக் கொள்கைகளில் நல்ல பிடிப்பும் உறுதியும் படிப்படியாக ஏற்பட்டு வந்தன. மறுமை வெற்றியை மட்டுமே வாழ்க்கையின் முழு இலட்சியமாகக் கொண்டு வாழலானார்கள்.

கலீஃபா உமர் (ரலி) அவர்களின் சகோதரர் ஜைதுப்னுல் கத்தாப் (ரலி) அவர்கள் ஒரு போரில் ஷஹீதானார்கள். அவர்கள் இறை அச்சமும் ஒழுக்கமும் கொண்ட உத்தமராய்த் திகழ்ந்தார்கள். இப்படி வாய்மையுடன் வாழ்ந்த தம் சகோதரர் மீது கலீஃபா உமர் (ரலி) அவர்கள் அளவுகடந்த அன்பு வைத்திருந்தார்கள். அவருடைய திடீர் மரணத்தால் பெரும் துக்கத்திற்கும் துயரத்திற்கும் ஆளானார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் கலீஃபாவைச் சந்தித்து ஆறுதல் கூறுவதற்காக கன்ஸா (ரலி) அவர்கள் வந்திருந்தார்கள். அவர்களிடம் தம் பாசத்திற்குரிய சகோதரர் மீது இரங்கற்பா எழுதித் தருமாறு உமர் (ரலி) அவர்கள் கேட்டுக் கொண்டார்கள். அதனை ஏற்றுக் கருத்தாழமிக்க - இலக்கிய நயம் செறிந்த கவிதைகளைப் பாடினார் கன்ஸா (ரலி) அவர்கள்!

இஸ்லாத்தைத் தழுவிய பிறகு, இறைப்பற்று மற்றும் மறுமை நம்பிக்கை ஆகியவற்றில் எவ்வளவு உறுதியான நிலையை அடைந்துவிட்டிருந்தார்கள் என்பதற்கு அக்கவிதைகளிலிருந்து இதோ சில வரிகள்:-

இறைவன் மீது சத்தியமாக
ஸக்ர், முஆவியா மீது
ஒருபோதும் நான் அழுதுகொண்டு
திரிந்திருக்க மாட்டேன் -
அவர்கள்
ஜைதைப் போன்று மரணமடைந்திருந்தால்!

கன்ஸா (ரலி) அவர்கள் எத்துணை உண்மையைக் கூறினார்கள்! அவர்களின் இரு சகோதரர்கள் ஸக்ரும், முஆவியாவும் குஃப்ர் - இறைவனை நிராகரிக்கும் நிலையில் கொல்லப்பட்டார்கள். ஆனால் உமர் (ரலி) அவர்களின் சகோதரர் ஜைத் (ரலி) அவர்கள்

இஸ்லாத்திற்காக நடைபெற்ற போரில் இறைவழியில் மரணத்தைச் சந்தித்தார்கள். ‘கூஹீத்’ எனும் இறைவனுக்கு உவப்பான பதவியை – மிக உயர்ந்த மறுமைப் பேற்றினை ஈந்து தரக்கூடிய மகத்தான அந்தஸ்தை அடைந்தார்கள்!

இதனைச் செவியுற்றதும் கலீஃபா உமர் (ரலி) அவர்கள் உற்சாக மேலீட்டால் தம்மையும் அறியாமல் என்னுடைய சகோதரர் குறித்து கன்ஸாவை விடச் சிறப்பாக வேறு யாரும் ஆறுதல் மொழி கூறவில்லை” என உரக்கக் கூறினார்கள்.

## பிள்ளைகளுக்கு ஊக்கமளித்தல்

அன்னை கன்ஸா (ரலி) அவர்களின் உறுதியான இறைநம்பிக்கையையும், தம்முடைய உயிர் உடமைகளையும் ஏன், பாசத்திற்குரிய பிள்ளைச் செல்வங்கள் அனைத்தையும், இறைவழியில் அர்ப்பணிக்கும் அவர்களின் தியாக மனப்பான்மையையும் எடுத்துக்காட்டும் ஒரு நிகழ்ச்சி காதிஸிய்யா போரின் போது நிகழ்ந்தது. இது கலீஃபா உமர் (ரலி) அவர்களின் ஆட்சிக் காலத்தில் ஈராக் நாட்டில் நடைபெற்ற முக்கியமான போராகும்.

இதில் அன்றைய ஈரான் அரசாங்கம் சுமார் இரண்டு இலட்சம் போர் வீரர்கள் கொண்ட பெரும் சேனையையும் பெரியதொரு யானைப் படையையும் முஸ்லிம்களுக்கு எதிராக அனுப்பி வைத்திருந்தது. முஸ்லிம்களின் படையோ சுமார் 30-ல் இருந்து 40 ஆயிரம் வரையிலான வீரர்களை மட்டும் பெற்றிருந்தது.

அப்போது கன்ஸா (ரலி) அவர்களும் ஜிஹாதின் - இறைவழிப் போராட்டத்தின் ஆர்வமிகுதியால் களம் நோக்கிப் புறப்பட்டார்கள். போர்த்திறனும் இளமைத் துடிப்பும் மிக்க தம்முடைய நான்கு மகன்களையும் உடன் அழைத்து வந்திருந்தார்கள்.

முதல் நாள் முன்னிரவில் அனைத்து வீரர்களும் சிந்தனை வயப்பட்டிருந்தனர். மறுநாள் விடிந்ததும் நடைபெற உள்ள பயங்கரமான காட்சியைத் தங்களின் மனத்திரையில் ஓடவிட்டுக் கொண்டு மௌனத்தில் ஆழ்ந்திருந்தார்கள். ஆனால் அங்கே களத்தின் ஓர் ஓரத்தில் அன்னை கன்ஸா (ரலி) அவர்கள் தம்முடைய நான்கு புதல்வர்களையும் அருகே அழைத்து அமர்த்தி ஓர் உணர்ச்சிமிகு உரையைத் தொடங்குகின்றார்கள்.

என்னுடைய அருமந்தப் புதல்வர்களே! நீங்கள் சுய விருப்பமுடனும் மகிழ்ச்சியுடனும்தான் இஸ்லாத்தை ஏற்றிருக்கின்றீர்கள், விரும்பித்தான் ஹிஜ்ரத்தை மேற்கொண்டீர்கள். எந்த இறைவனைத் தவிர வேறு இறைவன் இல்லையோ – எவன் என்றென்றும் நிலைத்திருப்பானோ அந்த இறைவன் மீது சத்தியமாக! எவ்வாறு நீங்கள் ஒரு தாயின் வயிற்றிலிருந்து பிறந்தீர்களோ – அவ்வாறே ஒரே தந்தைக்குப் பிறந்த சகோதரர்களாய் இருக்கின்றீர்கள். நான் உங்களின் தந்தைக்குத் துரோகம் செய்யவுமில்லை. உங்களின் மாமனார்களை இழிவு படுத்தவும் இல்லை. உங்களுடைய பரம்பரை மாசற்றது. உங்களுடைய குலம் குற்றமற்றது.

என் அன்புச் செல்வங்களே! இறைவழியில் ஜிஹாத் செய்வதை விடவும் அதிகமான நம்மையைப் பெற்றுத் தரும் காரியம் வேறொன்றும் இல்லை என்பதை நன்றாகப் புரிந்து கொள்ளுங்கள். மேலும் மறுமையின் நிலையான வாழ்க்கை, அழியும் இவ்வுலக வாழ்க்கையைவிட எவ்வளவோ சிறந்ததாகும் என்பதையும் நன்கு அறிந்து கொள்ளுங்கள்!

அல்லாஹ் கூறுகின்றான்:-

இறைநம்பிக்கை கொண்டவர்களே! பொறுமையைக் கைக்கொள்வீர்களாக! அசத்தியவாதிகளுக்கு எதிரில் உறுதியாக நிலைத்து நிற்பீர்களாக! (சத்தியத்திற்காகத் தொண்டு புரிய) எப்பொழுதும் ஒருங்கிணைந்து முனைப்புடன் இருப்பீர்களாக! மேலும் அல்லாஹ்வுக்கு அஞ்சியே வாழ்வீர்களாக! இதனால் நீங்கள் வெற்றியாளர்களாய்த் திகழக்கூடும். (3:200)

என் அருமைப் புதல்வர்களே! போர் சூடுபிடிக்க ஆரம்பித்து அதன் தீ கொழுந்து விட்டெரியத் தொடங்குவதை நீங்கள் கண்டதும் கிளர்ந்தெழுந்து – ஆர்ப்பரித்து எதிரிகளின் அணிகளிடையே ஊடுருவிச் செல்ல வேண்டும். இறைவழியில் பித்துப்பிடித்தவர்களாக வாட்களைச் சுழற்றித் தாக்குதல் தொடுத்திட வேண்டும். அல்லாஹ்விடம் உதவிகோரிப் பிரார்த்தனை புரிந்த வண்ணம் இருங்கள். வெற்றி கிட்டினால் அது நல்லது. ஆனால், மரணம் அடைந்திட நேர்ந்தால், மறுமையின் சிறப்பற்குரியவர்களாய் ஆவீர்கள் என்பது அதைவிடவும் மிக உயர்வானதாகும்.

மறுநாள் காலையும் போர் உச்சக்கட்டத்தை அடைந்தபோது அந்த நான்கு புதல்வர்களும் தங்களுடைய தாயின் அறிவுரைக்கு ஏற்ப வீராவேசத்துடன் எதிரிப்படையினர் மீது ஊடுருவி தாக்குதல் தொடுக்க ஆரம்பித்தார்கள். வெகுநேரம் வரை அயராமல் சுழன்று சுழன்று தீர்க்கமாகப் போர் புரிந்து கொண்டிருந்தார்கள். இறுதியில் ஒருவர் பின் ஒருவராக ஷஹீதாக்கப்பட்டார்கள்.

தம்முடைய புதல்வர்கள் போரில் வீரமரணம் அடைந்த செய்தியை அன்னை கன்ஸா (ரலி) அவர்கள் கேள்விப்பட்டதும், என்னுடைய புதல்வர்களுக்கு ‘ஷஹாதத்’ எனும் உயர்ந்த பதவியை வழங்கிய இறைவனுக்கு நன்றி உரித்தாவதாக! அல்லாஹ்வுடைய அருளின் நிழலில் என்னுடைய பிள்ளைகளை நான் சந்திப்பேன் எனும் நம்பிக்கை – அவனுடைய கருணையால் எனக்கு உள்ளது.

அன்று தம்முடைய சகோதரர்களின் பிரிவால் அழுது புலம்பிக்கொண்டு அளவு கடந்த துக்கத்தையும் மனவேதனையையும் வெளிப்படுத்தியவாறு அலைந்து திரிந்த அதே கன்ஸா (ரலி)தான் - இப்போது தங்களின் அன்பிற்குரிய புதல்வர்கள் போரில் மரணமடைந்த செய்தியைக் கேட்டதும் இறைவனுக்கு நன்றி செலுத்திப் பெருமைப்பட்டுக் கொள்கின்றார்கள். இஸ்லாத்தின் அடிப்படைக் கொள்கைகளும் அதன் அழுத்தமான அறிவுரைகளும் கன்ஸா (ரலி) அவர்களை எந்நிலையிலிருந்து எந்நிலைக்கு உயர்த்திக்கொண்டு வந்துள்ளது என்பதை அறிபவர் எவரும் இஸ்லாத்தின் ஆற்றல் குறித்து ஆச்சரியப்படாமல் இருக்க முடியாது.

கன்ஸா (ரலி) அவர்களின் வீரமிக்க இந்நான்கு புதல்வர்களும் காதிஸிய்யாப் போரைத் தவிர, அதற்கு முன் நடைபெற்ற வேறு பல போர்களிலும் கலந்து கொண்டு இஸ்லாத்திற்காக உழைத்துள்ளார்கள். அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஆண்டு தோறும் அரசின் சார்பில் 200 வெள்ளி நாணயங்கள் வழங்கப்பட்டு வந்தன. இந்தப் போரில் அவர்கள், உதவித் தொகை முழுவதையும் அவர்களின் அன்னை கன்ஸா (ரலி) அவர்களுக்குத் தொடர்ந்து வழங்கப்படுவதற்கு ஏற்பாடு செய்தார்கள்.

### படிப்பினை

மரியாதைக்குரிய கன்ஸா (ரலி) அவர்களின் புகழ்மிக்க வாழ்க்கையில் பல படிப்பினைகள் உள்ளன. குறிப்பாக ஏகத்துவக் கொள்கைக்கு முரணான சமூக அமைப்பில் பிறந்து, அதன் தவறான நடைமுறைகளில் ஊறித் திளைத்து விட்டவர்களுக்கு நல்ல முன்மாதிரி உள்ளது.

பாருங்கள்! அன்றைய அறியாமைக்கால சமூக அமைப்பு ஆண்டாண்டு காலமாக நடைமுறைப்படுத்தி வைத்திருந்த மௌட்டீகக் கொள்கைகளிலும் அநாச்சாரங்களிலும் கன்ஸா (ரலி) அவர்கள் எவ்வளவுதான் பழகிப் போய் விட்டிருந்தாலும் இஸ்லாமிய அழைப்புப் பணி ‘சத்தியம்

இதுதான்' என்று அவர்களின் முன் தெளிவுபடுத்தியபோது எவ்விதத் தயக்கமுமின்றி அதனை ஏற்றுக் கொண்டார்கள். முதலில் ஏகத்துவக் கொள்கையை உளப்பூர்வமாக ஏற்றுக்கொண்டு இஸ்லாத்தில் இணைந்தார்கள். பிறகு தம்மிடம் இருந்துவந்த சில தவறான பழக்கங்களை இறைநம்பிக்கையின் வலிமை கொண்டு படிப்படியாகக் களைந்து, தமது வாழ்க்கையைப் புனிதப்படுத்தி முழுமையாக சீர்திருத்தம் அடையத் தொடங்கினார்கள்.

இது பாரம்பரியமாக நாம் பின்பற்றி வரும் நம்முடைய மூதாதையரின் பழக்கமாயிற்றே, அதை நாம் விட்டுக் கொடுப்பதா?'' எனும் மனமாச்சரியத்துக்கு அவர்கள் ஆளாகவில்லை!

கன்ஸா (ரலி) அவர்கள் சொகுசு வாழ்கையைத் தேடி இஸ்லாத்திற்கு வரவில்லை. இஸ்லாத்தை ஏற்ற பிறகும் அவர்களின் வாழ்க்கையில் கஷ்டநஷ்டங்கள் தொடர்ந்து கொண்டுதான் இருந்தன. ஆயினும் பொறுமையை மேற்கொண்டு மனத்தைக் கொஞ்சம் கொஞ்சமாகத் தைரியப்படுத்தி, சகிப்புத்தன்மையை வளர்த்துக் கொண்டார்கள்.

இறுதிக் காலத்தில் இஸ்லாத்தின் வெற்றிக்காக தம் புதல்வர்கள் அனைவரையும் அவர்கள் தியாகம் செய்த சந்தர்ப்பத்தைப் பாருங்கள். போரில் அப்புதல்வர்கள் மரணம் அடைந்த செய்தியைக் கேட்டு எவ்வித சஞ்சலத்துக்கும் ஆளாகாமல் கொள்கைப்பிடிப்புடனும் நெஞ்சுரத்துடனும் அவர்கள் அளித்த பதில் இஸ்லாத்தை நேசிக்கும் - அதன் உயர்வுக்காக உழைக்க விரும்பும் அனைவர்கும் உற்சாகத்தையும் உத்வேகத்தையும் அளிக்கும் என்பதில் சந்தேகமே இல்லை.

இஸ்லாமிய சமுதாயம் காலமெல்லாம் கன்ஸா (ரலி) அவர்களை நினைவு கூர்ந்து பெருமைப்பட்டு வருகின்றதெனில் அவர்கள் முற்றிலும் அதற்குத் தகுதியானவர்கள்தாம். அல்லாஹ் அவர்களைப் பொருந்திக் கொண்டு நற்கூலி வழங்குவானாக!

## ஃபாத்திமா (ரலி) பின்த் முஹம்மது (ஸல்)

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தனது மகள் ஃபாத்திமா (ரலி) அவர்களிடம் கூறினார்கள் :

"சுவனத்துப் பெண்களின் தலைவியாக நீங்கள் விரும்புகின்றீர்களா?"

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

"ஒருநாள் வானவர் தலைவர் ஜிப்ரீல் (அலை) அவர்கள், ஃபாத்திமா (ரலி) அவர்கள் சுவனத்துப் பெண்களின் தலைவியாக இருப்பார்கள்" என்ற நன்மாராயத்தைக் கூறினார்கள்.

ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் :

இறைத்தூதர் (ஸல்) அவர்களைப் போலவே (குணாதிசயங்களைப் பெற்று) இருந்தார்கள். அவர்களது பேச்சு, உட்காரும் முறை, எழுந்திருக்கும் முறை மற்றும் நடக்கும் முறை - இன்னும் வேறு வார்த்தைகளில் சொல்வதாக இருந்தால் அவர்களது அனைத்து குணநலன்களும் மற்றும் பாவனைகளும் (இறைத்தூதர் (ஸல்)) அவர்களைப் போலவே இருந்தது.

இறைத்தூதர் (ஸல்) அவர்களின் இளைய மகள் மற்றும் பிரியத்திற்குரிய மகளாக ஃபாத்திமா (ரலி) அவர்கள் திகழ்ந்தார்கள். ஃபாத்திமா (ரலி) அவர்கள், தனது அபீதாலிப் அவர்களது மகனாரான அலீ (ரலி) அவர்களை மணம் புரிந்து கொண்டார்கள். அதன் மூலம் வீரத்தியாகிகளான ஹஸன் (ரலி) மற்றும் ஹு ஸைன் (ரலி) ஆகியோரின் தாயார் என்ற சிறப்பையும் பெற்றுக் கொண்டவரானார்கள்.

இறைத்தூதர் (ஸல்) அவர்களுக்கு தூதுத்துவம் கிடைத்த சில ஆண்டுகளுக்கு முன்பு தான் ஃபாத்திமா (ரலி) அவர்கள் பிறந்தார்கள். இன்னும், இறைத்தூதர் (ஸல்) அவர்கள் மற்றும் கதீஜா (ரலி) ஆகிய தம்பதிகளுக்கு பாசமிகு மகளாக ஃபாத்திமா (ரலி) அவர்கள் பிறப்பதற்கு முன்பே, இந்தத் தம்பதிகளுக்கு மூன்று பெண் மக்கள் இருந்தார்கள். அன்றைய கால வழக்கப்படி, பிறந்த குழந்தையை பால் குடிப்பதற்காக பக்கத்துக் கிராமத்திற்கு அனுப்பி வைக்கின்ற வழக்கத்திற்கு மாற்றமாக, அன்னை கதீஜா (ரலி) அவர்கள் தனது இளைய மகளை தன்னுடனேயே வைத்துக் கொண்டு, பாலூட்டி வளர்த்து வந்தார்கள். கடைசி மகளை பாசத்தோடு வளர்ப்பதில் மிகவும் அக்கறை காட்டிய அன்னையவர்கள், பிறரிடம் தனது மகளை வளர்ப்பதற்காக விடுவதை ஏற்றுக் கொள்ளவில்லை. சில ஆண்டுகளிலேயே, இறைத்தூதர் (ஸல்) அவர்களுக்கு நபித்துவப் பட்டமும் இறைவனால் வழங்கப்பட்டது.

இறைத்தூதர் (ஸல்) அவர்களைத் தனது தூதராக அல்லாஹ் பிரகடனப்படுத்தியவுடன், தனது தந்தையார் அவர்களின் மார்க்கத்தை தனது தாயார் ஏற்றுக் கொண்ட ஆரம்ப காலப் பொழுதிலேயே, இறைத்தூதர் (ஸல்) அவர்கள் மற்றும் கதீஜா (ரலி) அவர்களின் அருந்தவப் புதல்விகளான ஸைனப், ருக்கையா, உம்மு குல்தூம் (ரலி) ஆகியோர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டது போலவே, ஃபாத்திமா (ரலி) அவர்களும் இஸ்லாத்தை அதன் ஆரம்ப காலத்திலேயே ஏற்றுக் கொண்டார்கள்.

ஃபாத்திமா (ரலி) அவர்கள் தனது தாய் மற்றும் தந்தையின் அரவணைப்பிலேயே வளர்ந்தார்கள். எனவே சத்தியத்திற்காகப் போராடும் குணம் அவருக்கு இயல்பாகவே வளர்ந்து வந்தது. இன்னும் தன்னால் இயன்ற நேரத்திலெல்லாம் தனது தந்தையாருக்கு வந்த எதிர்ப்புகளை எதிர்த்து நடை போட்டு வந்த வீரத்திற்குச் சொந்தக்காரராகவும் அவர் திகழ்ந்தார். இன்னும் தனது வசந்த கால இளமைப் பருவத்தை சொல்லொண்ணா துயரங்கள் நிறைந்த அபீதாலிப் பள்ளாத்தாக்கினிலும் அவர் கழித்திருக்கின்றார். இந்த அபீதாலிப் பள்ளத்தாக்கில் தான், முஸ்லிம்கள் சமூக பகிஷ்காரம் செய்யப்பட்டு இரண்டு வருடங்கள் கடுந் துன்பங்களுக்கு ஆளாக்கப்பட்டிருந்தார்கள். இதில் தனது தந்தை மற்றும் தாய், சகோதரிகள் மற்றுமுள்ள முஸ்லிம்களுடன் முஸ்லிம்களாக துயரங்களை ஃபாத்திமா (ரலி) அவர்கள் உறுதியான மனநிலை கொண்டவராக அனுபவித்த சரித்திரத்திற்குச் சொந்தக்காரராகவும் அவர் இருந்தார். இந்த சோதனைகளும், வேதனைகளும் அந்த அபீதாலிப் கணவாயோடு மட்டும் முடியவில்லை. அங்கு அவரது உடல் நிலையில் ஏற்பட்ட தாக்கமானது, அவரது மரணம் வரைக்கும் அவரைத் துரத்திக் கொண்டே வந்தது. அன்றாட அலுவல்களான மாவரைத்தல், தண்ணீர் இரைத்தல், சமையல் வேலைகள் போன்றவைகள் கூட அவரை எளிதில் களைப்படைய வைத்தன. எனவே, அன்றாட வீட்டு வேலைகளில் தனக்கு உதவிகரமாக இருக்கட்டும் என நினைத்து, தனது தந்தையாரிடம் ஒரு அடிமைப் பெண்ணைப் பெற்றுக் கொள்ள விண்ணபித்த பொழுது, பொறுப்பான தந்தையாக இறைத்தூதர் (ஸல்) அவர்கள் இவ்வாறு பதிலளித்தார்கள். மகளே..! உங்களது வீட்டு வேலைகள் உங்களைச் சோர்வடையச் செய்யும் பொழுதெல்லாம் வல்ல இறைவனை நீங்கள் துதித்து, அதன் மூலம் உங்களது களைப்பைப் போக்கிக் கொள்ளுங்கள் என்று அறிவுரை கூறினார்கள்.

ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள் :

சத்தியத்திற்காக தன்னை அற்பணித்துக் கொண்ட பெண்மணிகளுள் ஃபாத்திமா (ரலி) அவர்களைப் போல நாம் வேறு பார்த்ததில்லை". உஹதுப் போர்க்களத்தில் படுகாயம் அடைந்த நபித்தோழர்களுக்கு உதவுவதில் மற்ற அன்ஸாரி மற்றும் முஹாஜிர்ப் பெண்களோடு பெண்களாக உதவி, சிகிச்சை அளித்தார்கள். தனது தந்தையும் இறைத்தூதருமான முஹம்மது (ஸல்) அவர்கள் உஹதுப் போர்க்களத்தில் கடுமையான காயங்களைப் பெற்ற பொழுது, அதனை வெகு எளிதான ஒன்றாக

எடுத்துக் கொள்ளவில்லை. தனது தந்தைக்கு ஏற்பட்ட காயங்களுக்கு விரைந்து மருந்திட்டு, அதில் கட்டுப் போட்டு சிகிச்சை அளித்தார்கள்.

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தன்னை இறுதித்தூதர் என்று பிரகடனப்படுத்திக் கொள்வதற்கு முன்பதாக, இறைத்தூதர் (ஸல்) அவர்கள் குறைஷிக் குலத்தில் மிகவும் போற்றுதற்குரியவராக போற்றப்பட்டார்கள். கௌரவிக்கப்பட்டார்கள். வரலாற்றில் நீங்காத இடத்தைப் பெற்றுக் கொண்ட அந்த கறுப்புக் கல்லான ஹஜருல் அஸ்வத் கல்லை கஃபாவில் பதிப்பதற்கு நீதி வழங்கிய அவரது தீர்ப்பு, இன்றும் வரலாற்றில் வைர வரிகளாகப் பதியப்பட்டு பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இன்னும் தங்களது விலை மதிப்பற்ற பொக்கிஷங்களை பாதுகாப்பாக வைப்பதற்கு அந்தக் குறைஷிகள் அண்ணலார் (ஸல்) அவர்களைத் தான் நாடினார்கள். இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தனது இளமைக் காலத்திலேயே தான் ஒரு தொலைநோக்குச் சிந்தனை உள்ள திறமை கொண்ட வெற்றிகரமானதொரு வியாபாரியாகவும் திகழ்ந்தார்கள். அண்ணாரின் இளமைக்காலமானது மிகவும் செல்வாக்கு வாய்ந்த, பார்ப்பவர்கள் பிரமிப்பை ஏற்படுத்தக் கூடிய அளவில் அவர் ஒரு போற்றத் தக்க மனிதராக மக்காவில் வலம் வந்தார்கள். ஆனால், என்றைக்கு இறைத்தூதர் (ஸல்) அவர்கள், தன்னை ஒரு இறைத்தூதர் என்று அறிவித்துக் கொண்டார்களோ, அன்றிலிருந்து அவரது வாழ்க்கை தலைகீழாக முற்றிலும் மாறிப் போனது. முழு மக்கா நகரமும் பூமி அதிர்ச்சியால் பாதிக்கப்பட்ட நகரமாக காட்சியளிக்க ஆரம்பித்தது. எதிர்ப்புகளும், குற்றச்சாட்டுகளும் அவர் மீது இடி கொண்ட மழையாக வீசப்பட்டதோடு, சமூகத்தின் கடைக் கோடி மனிதனைப் போல அண்ணலார் (ஸல்) அவர்களை மக்கத்துக் குறைஷிகள் நடத்தத் துவங்கினர். இன்னும் அவர் கொண்டு வந்த தூதை தடம் தெரியாமல் ஆக்குவதற்காக, அந்தத் தூதை ஏற்றுக் கொண்ட மக்களுக்கு எதிராக கடுமையான துன்பங்களையும், துயரங்களையும், சித்ரவதைகளையும் மக்கத்துக் குறைஷிகள் கட்டவிழ்த்து விட ஆரம்பித்தார்கள். முன்பு மலர்களாலும், புகழ் மாலைகளாலும் தொடுக்கப்பட்ட வீதி வரவேற்புகள் இப்பொழுது கற்களும், முற்களாலும், கொடு மதியாளர்களின் சூழ்ச்சியினாலும் பின்னப்பட்ட வஞ்சக வளையமாகக் காட்சியளிக்க ஆரம்பித்தது. ஏன், இறைத்தூதர் (ஸல்) அவர்களைக் கொலை செய்யக் கூட அந்தக் கூட்டம் தயாராகவே இருந்தது. இந்த கடுமையான சோதனையான நாட்கள் இறைத்தூதர் (ஸல்) அவர்களது வீட்டில் எந்த தாக்கத்தையும் ஏற்படுத்த இயலவில்லை. இந்த சோதனையான கால கட்டத்தில் தான் ஃபாத்திமா (ரலி) அவர்கள் தனது இளமைப் பருவத்தை கடந்து வந்து கொண்டிருந்தார்கள். அவர்களது இளமை வாழ்க்கை முதிர்ச்சியான தேர்ந்த பொறுமைசாலிகளுக்கே உரிய பொறுமையோடும், தன்னம்பிக்கையோடும், உறுதியோடும் கழிந்து கொண்டிருந்தன.

இன்னும், தனது இளமைப் பருவத்தை தனது தந்தையைக் காப்பாற்றும் புலியாகவும் அவர்கள் வீரத்தோடு செயல்பட்டார்கள். அபூ ஜஹ்ல் மற்றும் உத்பா, ஷைபா போன்றோர்கள் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் மீது தங்களது பலப் பிரயோகங்களைப் பிரயோகித்த பொழுது, ஃபாத்திமா (ரலி) அவர்கள் தனது தந்தைக்கு முன்பாக பாதுகாப்பு அரண் போல நின்றார்கள்.

ஒரு சமயம், இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தனது தோழர்களுடன் கஃபா ஆலயத்திற்குள் தொழுது இறைவனைப் பிரார்த்தித்துக் கொண்டிருந்த பொழுது, அந்த நேரத்தில் தான் மக்கத்து இறைநிராகரிப்பாளர்கள் ஒரு ஒட்டகத்தை பலி கொடுத்திருந்தனர். அறுக்கப்பட்ட அந்த ஒட்டகத்தின் மலம் மற்றும் குடலைப் பார்த்த அபூ ஜஹ்ல் என்பவனுக்கு ஒரு வித்தியாசமான திட்டம் உருவானது. தனது திட்டத்தை தனது நெருங்கிய சகாவான மனித குலம் அருவருக்கத்தக்க இழி பிறவியான உக்பா பின் முஈத் என்பவனிடம் அபூ ஜஹல் தெரிவித்தான். அபூ ஜஹ்ல் ன் திட்டத்தை நிறைவேற்ற துள்ளிக் குதித்து எழுந்த உக்பா பின் முஈத், அறுக்கப்பட்ட அந்த ஒட்டகத்தின் இரத்தம் தோய்ந்த மலத்துடன் கூடிய அந்த குடலை இறைத்தூதர் (ஸல்) அவர்கள் சிரம் தாழ்த்தி தனது இறைவனைத்

தொழுது கொண்டிருந்த பொழுது, கழுத்திலேயே அந்தக் குடலை தூக்கி வந்து போட்டான். உக்பா வின் இந்தச் செய்கை அங்கிருந்த ஏனைய நிராகரிப்பாளர்களுக்கு சிரிப்பையும் ஏளனத்தையும் ஊட்டியது. அந்த நேரத்தில் தனது வீட்டிலிருந்து ஃபாத்திமா (ரலி) அவர்களுக்குச் செய்தி எட்டியது தான் தாமதம், கஃபாவை நோக்கி விரைந்து வந்தார்கள். தனது தந்தையின் மீது போடப்பட்டிருந்த அந்த மலம் தோய்ந்த ஒட்டகக் குடலை, தனது பிஞ்சு விரல்களால் அப்புறப்படுத்தினார்கள். தனது தந்தையின் முதுகையும் சுத்தம் செய்து விட்டார்கள். இந்த ஈனச் செயலைச் செய்த அந்தக் குறைஷிகளைப் பார்த்து, கோபமான வார்த்தைகளால் வீசினார்கள். பின், இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தனது தொழுகையை நிறைவேற்றி முடிந்தவுடன், தன்னைப் படைத்த வல்லோனிடம் இரு கரம் ஏந்திப் பிரார்த்திக்க ஆரம்பித்தார்கள். யா அல்லாஹ்..! இந்த ஈனச் செயலுக்குக் காரணமாக அமைந்த அபூ ஜஹ்ல் பின் ஹிஷாம், ஷைபா பின் ரபீஈ உக்பா பின் முஈத் மற்றும் உமைய்யா பின் கலஃப் ஆகியோரை விட்டு விடாதே, உனது இறுக்கமான பிடியாக அவர்களைப் பிடித்துக் கொள் என்று பிரார்த்தித்தார்கள்.

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் பிரார்த்திப்பதைக் கண்ட அச்சமடைந்த அவர்கள், கஃபாவின் முன்பாக நின்று கொண்டு பிரார்த்திக்கப்படும் பிரார்த்தனையை நிச்சயம் அல்லாஹ் ஏற்றுக் கொள்வான், தங்களுக்கு மிகப் பெரிய தண்டனை வரக் காத்திருக்கின்றது என்று கலவரமடைந்தார்கள். ஆம்..! அந்த ஷைத்தானிய சக்திகள் அச்சமடைந்தவாறே நடந்தது. இவர்களில் உக்பா பின் அபீ முஈத் என்பவனைத் தவிர மற்ற அனைவரும் பத்ருப் போர்க்களத்தில் படுகொலை செய்யப்பட்டு, வேரறுந்த மரமாக வீழ்ந்தார்கள். உக்பா பின் அபீ முஈத் என்பவன் மட்டும் சிறை பிடிக்கப்பட்டு, இறைத்தூதர் (ஸல்) அவர்கள் முன் நிறுத்தப்பட்டான்.

உக்பா பின் அபீ முஈத் திற்கு மரண தண்டனை வழங்குமாறு தனது தோழர்களுக்கு இறைத்தூதர் (ஸல்) அவர்கள் உத்தரவிட்டதும், அவன் அச்சத்தால் துடிக்க ஆரம்பித்தான். ‘எனக்கு அதிகமான குழந்தைகள் இருக்கின்றனர், அவர்களின் நிலை என்னாவது’ என்று கெஞ்சினான். அதற்கு, அவர்கள் நரகத்திற்குச் செல்ல வேண்டியவர்களே..! என்றார்கள். நான் குறைஷி குலத்தின் ஒரு தலைவன் என்பதற்காகத் தானே, நீங்கள் என் மீது மரண தண்டனை விதித்திருக்கின்றீர்கள் என்றும் கேட்டான். இறைத்தூதர் (ஸல்) அவர்கள், ஆம்..! என்னும் பாவனையோடு அவனைப் பார்த்தார்கள்.

பின்பு, தனது தோழர்களின் பக்கம் திரும்பிய இறைத்தூதர் (ஸல்) அவர்கள், என்னருமைத் தோழர்களே..! இவன் செய்த காரியம் என்னவென்பதை நீங்கள் அறிவீர்களா? என்று கேட்டு விட்டு, ஒருமுறை நான் இறைவனைத் தொழுது எனது நெற்றியை நிலத்தில் வைத்து கஃபாவின் முன் வணங்கிக் கொண்டிருந்த பொழுது, எனது கழுத்தின் மீது தனது பாதங்களை வைத்து அழுத்தினான். அவன் என் கழுத்தின் மீது மிதித்து அழுத்தியதன் காரணமாக, எனது கண்கள் இரண்டு பிதுங்கி வெளியில் வந்து விடுமோ என்று அச்சம்படும் அளவுக்கு அவன் என்னைக் கொடுமைப்படுத்தினான். இன்னுமொரு முறை நான் தொழுது கொண்டிருந்த பொழுது, எனது தலை நிலத்தில் பதிந்திருந்த பொழுது, அவர்களது இணை தெய்வங்களான லாத்திற்கும், உஸ்ஸாவிற்கும் அறுத்துப் பலியிட்ட ஒட்டகத்தின் மலக் குடலை எனது பின்புறமாக என்மீது போட்டு விட்டு சிரித்து விளையாடி வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது, என்மீது வீழ்ந்து கிடந்த அந்த அழுக்குகளை தனது பிஞ்சு விரல்களின் மூலமாக சுத்தம் செய்து விட்டார்கள் எனது அருமை மகளார் பாத்திமா (ரலி) அவர்கள் என்று கூறினார்கள்.

ஒருமுறை அபூஜஹ்ல் தனது தோழர்களுடன் கஃபாவின் முன்பதாக உட்கார்ந்து கொண்டு, ஏகத்துவப் பிராச்சாரத்தை மக்காவின் வீதிகளில் பரப்பிக் கொண்டும், தன்னை இறுதித்தூதராக அறிவித்துக் கொண்டும் இருக்கின்ற, இறைத்தூதர் (ஸல்) அவர்களை எவ்வாறு தீர்த்துக் கட்டுவது என்ற

ஆலோசனையில் இருந்தனர். நமது தெய்வங்களை மறுக்கக் கூடிய குற்றத்தைப் புரிந்த இவருக்கு சரியான பாடம் புகட்ட வேண்டும் என்று அவர்கள் சூளுரைத்துக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது, அந்த வழியாகச் சென்று கொண்டிருந்த பாத்திமா (ரலி) அவர்களுக்கு இவர்களது திட்டம் காதில் விழுந்து விடுகின்றது. இதனால் கலவரப்பட்ட பாத்திமா (ரலி) அவர்கள், விரைந்து தன்னுடைய தந்தையாராகிய இறைத்தூதர் (ஸல்) அவர்களிடம் சென்று, இந்த அரக்கத்தனமாக மூடர்களின் சதித்திட்டத்தினை விவரிக்கின்றார்கள். இன்னும் அவர்கள் அழுது கொண்டே, தந்தையே..! அவர்கள் அவர்களது தெய்வங்களாக லாத், உஸ்ஸா, மனாத் மற்றும் நாயிலா ஆகியவற்றின் மீது சத்தியம் செய்துள்ளனர். நீங்கள் வீட்டினை விட்டு வெளியே வரும் பொழுது, அனைவரும் ஒன்று சேர்ந்து உங்களைத் தாக்கிக் கொலை செய்ய முடிவு செய்துள்ளனர் என்று கூறினார்கள்.

மகளே..! நீங்கள் அச்சப்பட வேண்டாம், உமது தந்தையின் பாதுகாவலனாக அல்லாஹ் இருக்கின்றான் என்று இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தனது மகளுக்கு ஆறுதல் கூறினார்கள். அதன் பின் எழுந்த இறைத்தூதர் (ஸல்) அவர்கள் அமைதியாக தொழுகைக்காக ஒளுச் செய்து விட்டு, கஃபாவை நோக்கி நடக்கலானார்கள். அப்பொழுது அபூஜஹ்ல் மற்றும் அவனது தோழர்களை இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கடந்து சென்ற பொழுது, இறைத்தூதர் (ஸல்) அவர்கள் வானத்தை அன்னாந்து பார்த்தார்கள், பின்பு அவர்களது பார்வை நிலத்தை நோக்கித் திரும்பியது. அப்பொழுது அவர்கள், அல்லாஹ் அவர்களது முகங்களை புழுதி படியச் செய்யட்டும் என்று கூறினார்கள், அவ்வாறு கூறிக் கொண்டே குனிந்து கைநிறைய மண்ணை அள்ளி, அவர்கள் இருந்த திசையின் பக்கம் வீசி எறிந்தார்கள். இதனால் கலவரமடைந்த அபூஜஹ்ல் மற்றும் அவனது தோழர்கள், அவர்களில் எவரும் அந்த இடத்தை விட்டும் நகரச் சக்தி அற்றவர்களாக அல்லது பேச இயலாதவர்களாக உட்கார்ந்திருந்தார்கள். அல்லாஹ்வின் வல்லமை அவர்களை எதுவும் செய்யச் சக்தி அற்றவர்களாக ஆக்கி வைத்திருந்தது.

ஒருமுறை ஃபாத்திமா (ரலி) அவர்கள் அபூஜஹ்லைக் கடந்து சென்ற பொழுது, எந்தக் காரணமுமின்றி அந்த பிஞ்சுக் குழந்தையின் கன்னத்தில் ஓங்கி ஒரு அறை விட்டான். அப்பொழுது குறைஷிகளின் தலைவராக இருந்த அபூசுப்யான் அவர்களிடம் சென்று, நாகரீகமற்ற முறையில் தனது கன்னத்தில் அபூஜஹ்ல் அறைந்து விட்டது பற்றி புகார் கூறினார்கள். அபூஜஹ்ல் இருக்கும் இடத்திற்கு ஃபாத்திமா (ரலி) அவர்களை அழைத்துச் சென்ற அபூசுப்யான் அவர்கள், இந்த கேடு கெட்ட அரக்க குணம் படைத்த அபூஜஹ்ல் உங்கள் கன்னத்தில் எவ்வாறு அறைந்தானோ, அதனைப் போலவே நீங்களும் அவனது கன்னத்தில் அறையுங்கள் என்று கூறினார். ஃபாத்திமா (ரலி) அவர்கள் வீட்டிற்குத் திரும்பி தனது தந்தையாரிடம் நிகழ்ந்தவற்றை விவரித்த பொழுது, அபூசுப்யான் அவர்களின் நீதமான நடவடிக்கையினால் கரவப்பட்ட இறைத்தூதர் (ஸல்) அவர்கள், அபூசுப்யான் அவர்கள் சத்திய மார்க்கத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காக இறைவனிடம் அவருக்காகப் பிரார்த்தனை செய்தார்கள். இறைத்தூதர் (ஸல்) அவர்களது பிரார்த்தனை அங்கீகரிக்கப்பட்டது, பின்னாளில் அபூசுப்யான் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள்.

அல்லாஹ்வினால் தேர்ந்தெடுக்கப்பட்ட தூதர் என்று இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தன்னைப் பிரகடனப்படுத்திக் கொண்டு, ஏழு ஆண்டுகள் உருண்டோடி விட்டன. குறைஷிகள் தங்களது முழுப் பலத்தைப் பிரயோகித்தும், இஸ்லாத்தையும், அதன் தூதையும், அதற்குச் செவிமடுத்து இஸ்லாத்தினை ஏற்றுக் கொள்பவர்களின் எண்ணிக்கையையும் எந்தவிதத்திலும் கட்டுப்படுத்த இயலவில்லை. கொடுமைகளுக்கு மேல் கொடுமைகளைக் கட்டவிழ்த்தும், பாலைவனச் சுடுமணலில் வெற்றுடம்புடன் தெருத் தெருவகாச் சிறுவர்களை விட்டு இழுத்துத் துன்புறுத்திய பொழுதும், இறைத்தூதர் (ஸல்) அவர்களின் தோழர்கள், “வணங்கத்தக்க இறைவன் அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை,

முஹம்மது (ஸல்) அவர்கள் இறைவனின் தூதராக இருக்கின்றார்கள்" என்றே முழங்கினார்கள். இந்தளவு கொடுமைகளைக் கண் முன்னால் கண்ட பொழுதிலும், முன்னைக்காட்டிலும் இஸ்லாத்தை தங்களது வாழ்வியல் நெறியாக ஏற்றுக் கொள்ளக் கூடியவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வந்தது.

இதனை விட, ஹம்ஸா பன் அப்துல் முத்தலிப் (ரலி) அவர்களும், உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு விட்டபின், மக்காவில் பூகம்பமே வெடித்து விட்ட பிரளயமே ஏற்பட்டது. இஸ்லாத்தின் மீதும், அதன் கொள்கைகள் மீதும், அதனைப் பின்பற்றுபவர்கள் மீதும் காழ்ப்புணர்ச்சி கொண்ட கூட்டம், குறைஷித் தலைவர்கள் மீது நெருக்கதல்களைக் கொடுக்க ஆரம்பித்தது. முஹம்மதையும், அவர்களைப் பின்பற்றுபவர்களையும் நாம் ஏதாவது செய்தாக வேண்டும், அவர்களையும், அவர்களது பிரச்சாரத்தையும் முடக்கிப் போட வேண்டும் என்று குரல் கொடுக்க ஆரம்பித்தார்கள். இதன் பின்னணியில், மக்காவின் மிகப் பிரதான முக்கியஸ்தர்கள், செல்வந்தர்கள், செல்வாக்கு மிக்க பெருந்தலைகள் ஆகியோர்கள் கொண்டதொரு ஆலோசனைக் கூட்டத்தைக் கூட்டினான். அந்தக் கூட்டத்தில், நமது முன்னோர்கள் வழிவழியாகப் பின்பற்றி வருகின்ற கொள்கை செல்வாக்கிழந்து வருகின்றது, அதே நேரத்தில் முஹம்மதும் அவரது ஆதரவாளர்களின் கூட்டமோ பெருகிக் கொண்டே வந்து கொண்டிருக்கின்றது. இதே நிலை தொடருமானால், நாளை நம்முடைய நிலைமைகள் என்ன? இதனை தடுத்து நிறுத்துவது எவ்வாறு? என்ற கருப் பொருளில் விவாதம் தொடங்கியது.

அப்பொழுது நடைபெற்ற கூட்டத்தில், ஷைத்தானின் தோழனான நதர் பின் ஹாரித் என்பவனும் கலந்து கொண்டான். இவன் சிறுமதி படைத்த மற்றும் கேடு கெட்ட எண்ணங்களுக்குச் சொந்தக் காரனாகத் திகழ்ந்தான். அவனது எண்ணங்களும், கருத்துக்களும் கீழ்த்தரமானவைகளாகவே இருந்து வந்தன. அவன், முஸ்லிம்களை முழுமையான சமூக மற்றும் பொருளாதார பகிஷ்கரிப்பிற்கு உட்படுத்த வேண்டும் என்று கருத்துத் தெரிவித்தான். இவர்களுக்கு பேருதவி புரிந்து வருகின்ற பனூ ஹாஷிம் மற்றும் பனூ அப்துல் முத்தலிப் கோத்திரத்தார்களையும் பகிஷ்கரிப்பிற்குள் உட்படுத்த வேண்டும். உணவோ அல்லது தண்ணீரோ கூட அவர்களுக்கு வழங்கக் கூடாது. மேலும், அவர்களுக்கு உணவு மற்றும் தண்ணீர் சப்ளை செய்யப்படுகின்றதா என்பதைக் கண்காணிக்கக் குழு ஒன்றையும் அமைக்க வேண்டும். அதன் மூலம் இந்த புதிய மார்க்கத்தை அதன் முளையிலேயே கிள்ளி எறிய வேண்டும் என்று கொக்கரித்தான். யாரும் எதிர்ப்பார்க்காத இந்தத் திட்டத்தை, அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவரும் ஏற்றுக் கொண்டார்கள். இப்பொழுது சதித்திட்டம் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டதன் விளைவாக, முஸ்லிம்கள் சமூக மற்றும் பொருளாதார பகிஷ்கரிப்பிற்கு உட்படுத்தப்பட்டு, முஸ்லிம்களிடம் எந்தவித கொடுக்கல் வாங்கல்கள், திருமண உறவுகள், வியாபாரத் தொடர்புகள் என எதுவித உறவுகளும் வைத்துக் கொள்ளக் கூடாது என்ற முடிவின் அடிப்படையில், சிஐப் அபீதாலிப் என்ற அபீதாலிப் பள்ளத்தாக்கில் ஒதுக்கப்பட்டனர்.

இவ்வாறாக சமூக பகிஷ்கரிப்பினால் ஒதுக்கப்பட்ட முஸ்லிம்கள் மூன்று வருடங்கள் துன்பத்தை அனுபவித்தார்கள். இருப்பினும், முஸ்லிம்களில் எவருடைய இதயமும் சத்தியத்தை நிராகரித்து விட்டு, அசத்தியத்திற்கு இணங்கிப் போகவில்லை. பசியினால் துடித்தன குழந்தைகள், சோபை இழந்து தவித்தனர் தாய்மார்கள், சகோதரிகள், உதவியற்ற முதியோர்கள் ஆகிய இத்தனை துன்ப துயரங்களுக்கிடையேயும், முஸ்லிம்களின் எவருடைய இதயமும் இளகி விடவில்லை. இதனை வரலாறு இவ்வாறு குறித்து வைத்துள்ளது. "இறைத்தூதர் (ஸல்) அவர்கள் மீதும், அவர்களது தோழர்கள் மீதும் முழுமையான சமூக பகிஷ்கரிப்பு அமுல்படுத்தப்பட்ட பொழுதும், அவர்களில் குழந்தைகள், முதியவர்கள், பெண்கள் என பன்முகம் கொண்டவர்கள் இருந்த போதிலும், இவர்களில் எவரும் அந்த புதிய மார்க்கத்தைத் துறந்து விடவில்லை, அவர்களின் எவருடைய இதயத்தையும், அதன்

வலிமையையும் அசைத்தும் கூடப் பார்க்க முடியவில்லை, என்ன அதிசயம்..!, ஆச்சரியம்..!” என்று வியந்து போற்றுகின்றது.

சத்தியமும் அந்த சத்தியத்திற்காகவே நாம் இத்தகைய கொடுமைகளைத் தாங்கிக் கொண்டிருக்கின்றோம் என்ற அவர்களது மனவலிமையும், இன்னும் நம்முடன் இறைத்தூதர் (ஸல்) அவர்களும் உடனிருக்கின்றார்கள் என்ற உள வலிமையும், அந்தத் தோழர்கள் மற்றும் தோழியர்களை எந்தவிதக் கஷ்டத்தையும் நாங்கள் தாங்க வல்லவர்கள் என்று பறைசாட்ட வைத்தது. இன்னும் இந்த சிஐப் பள்ளத்தாக்கில் சமூக பகிஷ்காரத்திற்கு உட்படுத்தப்பட்டமையால், அவர்களிடமிருந்த சில தீய குணங்கள் அவர்களிடமிருந்து அகன்றன, இறைநம்பிக்கையில் புடம் போடப்பட்ட தங்கங்களாக அவர்கள் மாறினார்கள். நாட்கள் செல்லச் செல்ல அவர்களது இறைநம்பிக்கையும், அதில் உறுதியும் சேர்ந்தே வளர்ந்ததே ஒழிய, அணுவளவு கூட குறையவில்லை. மக்காவின் செல்வச் சீமாட்டியான கதீஜா (ரலி) அவர்களின் ஆருயிர் மகளான பாத்திமா அவர்களுக்கு அப்பொழுது பத்து வயதே ஆகியிருந்த பொழுதும், அவர்களும் சிறிதும் இறைநம்பிக்கையில் அசைந்து கொடுக்காமல், மலை போல உறுதியாக இருந்தார்கள். சத்தியத்திற்காகவும், இறைத்தூதர் (ஸல்) அவர்களுக்காகவும் தங்களது உயிர்களையும் கூட அவர்கள் தத்தம் செய்ய சித்தமாகவே இருந்தார்கள். அவர்கள் இந்த சமூக பகிஷ்கரிப்பின் காரணமாக பட்ட துன்பங்கள், பின்னாளில் அவர்களது வாழ்நாளின் எஞ்சிய நாட்களை உடல் ரீதியாகப் பாதிக்கவும் செய்தது.

சத்தியத்திற்குச் சான்று பகர்ந்த மக்களை இறைவன் ஏன் தான் இவ்வாறு சோதனை செய்கின்றானோ? இதற்குப் பின்னால் உள்ள இறைக் கட்டளை தான் என்ன? என்பன போன்ற கேள்விகளுக்கான விடைகளை மனித மனங்களால் மிகச் சிறிதளவே கணக்கிட இயலும். அதற்குப் பின்னால் உள்ள இறைநியதிகள் என்னவென்பதை மனிதனால் கணக்கிட இயலாததொன்றாகும்.

இந்த அற்பமான உலகத்தின் இன்ப துன்பங்களை அற்பமெனக் கருதி அதனைப் பற்றிய ஆசை எதுவும் கொள்ளாமல் வாழ்கின்ற ஆத்மாக்களைப் பற்றி, இந்த உலக வாழ்க்கையின் அற்ப சுகங்களே கதி என்று கிடப்பவர்கள் அறிந்து கொள்ள மாட்டார்கள். அவர்கள் படுகின்ற கஷ்டங்களும், துன்பங்களும் அவர்களது இறைவேட்கயை அதிகரிக்கச் செய்கின்றன, அதில் கிடைக்கின்ற அலாதியான இன்பத்தைப் பற்றி இந்த உலக வாழ்வே கதியென்று கிடப்பவர்கள் அறிந்து கொள்ள மாட்டார்கள், அதனைக் கணக்கிடவும் இவர்களால் இயலாது. அந்த சத்தியத்திற்குச் சான்று பகர்பவர்கள் வடிக்கின்ற கண்ணீர் அவர்களது பாவக் கறைகளைப் போக்குகின்றன, இன்னும் இதயங்களையும் மனங்களையும் சூழ்ந்து கிடக்கின்ற அழுக்குகளை அவை சுத்தம் செய்கின்றன. இறைவனையும் அவனது தண்டனையையும் பற்றி அஞ்சுகின்ற அந்த இதயங்கள், தனது இறைவனின் முன்னால் சிரம் பணிந்து விடுகின்றன, அவ்வாறு அவர்கள் தங்களது நெற்றிகளை இறைவன் முன் சரணடைந்து விட்டபின் அவர்களது கண்கள் கண்ணீரை வடிக்கின்றன, அவ்வாறு அவர்கள் தங்களை வருத்திக் கொள்வதன் மூலம் இறைவனுக்கு மிக நெருக்கமான அடியானாக அவன் மாறி விடுகின்றான், அதனைத் தானே ஒவ்வொரு நம்பிக்கை கொண்ட ஆத்மாவும் விரும்புகின்றது.

நிச்சயமாக, ஏக இறைவன் மீது யார் யாரெல்லாம் நம்பிக்கை கொண்டார்களோ அவர்கள் மீண்டும் உயிர் கொடுத்து எழுப்பப்படுகின்ற அந்த நாளிலே, நிச்சயமாக அவனது பேரருட் கொடைகளைப் பெற்றுக் கொள்வார்கள், இன்னும் யார் யாரெல்லாம் அவனது சத்திய வேதத்தையும், அவனது கட்டளைகளையும் மீறினார்களோ அவர்கள் அந்த நாளிலே கெட்டதையே பெற்றுக் கொள்வார்கள்.

சமூக பகிஷ்காரத்தைக் குறைஷிகள் நீக்கிக் கொண்டு விட்டதன் பின்னாள், இறைவனுடைய தூதர் முஹம்மது (ஸல்) அவர்களும், அவர்களது மகள் ஃபாத்திமா அவர்களும், அன்னை கதீஜா (ரலி)

அவர்களை இழந்த சோகத்திற்கு ஆளானார்கள். சமூக பகிஷ்காரத்தினுடைய முற்றுகையில் இருந்த பொழுது ∴பாத்திமா (ரலி) அவர்கள் நோய்ப்பட்டவர்களானார்கள். இப்பொழுது இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தன்னை இறைவனுடைய திருத்தூதர் என்று தன்னைப் பிரகடனப்படுத்திக் கொண்டதன் பத்து வருடம் பூர்த்தியாகி இருந்தது. இன்னும் இந்த கால கட்டத்தில் இறைத்தூதர் (ஸல்) அவர்களுக்கு எதிராக குறைஷிகள் சொல்லொண்ணா கொடுமைகளை அவிழ்த்து விட்ட பொழுது, அதற்கெல்லாம் மருந்து தடபுபவராக, குறைஷிகளின் தாக்குதல்களிலிருந்து இறைத்தூதர் (ஸல்) அவர்களைப் பாதுகாக்கின்ற கேடயமாகத் திகழ்ந்த அபூதாலிப் அவர்களும் மரணமடைந்து விட்டார்கள். இதன் காரணமாக, இறைத்தூதர் (ஸல்) அவர்கள் உதவி செய்வதற்கு யாருமற்ற அநாதையாகி விட்டார் என்று கருதி, அண்ணலார் (ஸல்) அவர்கள் மீது சொல்லொண்ணா கொடுமைகளைக் கட்டவிழ்த்து விடத் துணிவு கொண்டார்கள் இந்தக் குறைஷிகள்.

அப்பொழுது ∴பாத்திமா (ரலி) அவர்கள் மிகவும் இளமையாக இருந்த கால கட்டமாக இருந்தாலும் கூட இறைத்தூதர் (ஸல்) அவர்கள் அனுபவித்து வந்த சொல்லொண்ணா துன்பங்களையும், இவர்களும் அனுபவித்து மிகவும் பொறுமையுடன் இருந்து வந்தார்கள். இந்த கால கட்டத்தில் தான் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் மக்காவிற்கு அருகில் உள்ள தாயி∴ப் நகரத்து மக்களுக்கு சத்தியத்தை எடுத்து வைப்பதற்காகச் சென்றார்கள். மக்காவில் வாழ்ந்து கொண்டிருந்த குறைஷிகளைப் போலவே இந்த தாயி∴ப் நகரத்து மக்கள், இறைத்தூதர் (ஸல்) அவர்களை மலர் கொடுத்து வரவேற்பதற்குப் பதிலாக கல்லால் துவம்சம் செய்தார்கள், அதனால் ஏற்பட்ட காயத்துடன் இரத்தம் சொட்டச் சொட்ட அந்த தாயி∴ப் நகரத்தை விட்டும் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் வெளியேறினார்கள். தனக்குச் சொல்லொண்ணா துன்பத்தைக் கொடுத்து விட்ட தாயி∴ப் மக்களை சாபமிடாத இறைத்தூதர் (ஸல்) அவர்கள், அவர்களது அறியாமையை எண்ணி, அவர்கள் நேர் வழியை விரைவில் கண்டு கொள்ள வேண்டும் என்று இறைவனிடம் பிரார்த்தனை செய்தார்கள்.

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தாயி∴ப் நகரத்திலிருந்து திரும்பி வந்த கோலத்தைக் கண்ட, ∴பாத்திமா (ரலி) அவர்களும் அவர்களது தமக்கை உம்மு குல்தூம் (ரலி) அவர்களும் வேதனை தாளாமல் கண்ணீர் விட்டு அழலானார்கள். அவர்களது கண்ணீரைத் துடைத்து விட்ட இறைத்தூதர் (ஸல்) அவர்கள், அவர்களைப் பொறுமையுடன் இருக்குமாறு ஆறுதலும், தேறுதலும் கூறினார்கள். சத்தியப் பாதையில் இவையெல்லாம் தவிர்க்க முடியாதவைகள், விரைவில் அல்லாஹ் இந்த மார்க்கத்தை மேலோங்கச் செய்வான், தனது சத்திய மார்க்கத்தை மற்ற மார்க்கங்களை எல்லாம் மிகைக்கும் படிச் செய்வான் என்றும் கூறினார்கள். கஷ்டத்திற்குப் பின் தான் இலேசு இருக்கின்றது, கஷ்டத்திற்குப் பின் தான் இலேசு இருக்கின்றது என்றும் கூறினார்கள், இறைத்தூதர் (ஸல்) அவர்கள்.

இப்பொழுது மதீனாவிற்கு சத்தியத்தை பரப்புவதற்காக இறைத்தூதர் (ஸல்) அவர்களால் அனுப்பி வைக்கப்பட்ட முஸ்அப் இப்னு உமைர் (ரலி) அவர்கள், மதீனத்து மக்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு விட்டார்கள் என்ற சுபச் செய்தியை இறைத்தூதர் (ஸல்) அவர்களுக்கு எத்தி வைத்தார்கள். இன்னும் இறைத்தூதர் (ஸல்) அவர்களை தங்களது மதீனத்து நகரத்தில் வந்து குடியேறி விடும் படியும், இன்னும் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் விரும்புகின்ற எத்தகைய உதவியையும் தாங்கள் செய்வதற்கு சித்தமாக இருக்கின்றோம் என்றும் அவர்கள் வாக்குறுதி அளித்தார்கள். அல்லாஹ்வின் கட்டளைப் படி இறைத்தூதர் (ஸல்) அவர்கள் மதீனத்து மக்களின் அந்த வேண்டுகோளை ஏற்றுக் கொண்டதுடன், மதீனாவை நோக்கி ஹிஜ்ரத் மேற்கொண்டார்கள். அதற்கு முன்பாக, தனது தோழர்களை மதினாவை நோக்கிப் பயணப்படுமாறு கட்டளையிட்ட இறைத்தூதர் (ஸல்) அவர்கள், அவர்களை அடுத்து தனது ஆருயிர்த் தோழரான அபுபக்கர் சித்தீக் (ரலி) அவர்களுடன் பயணப்பட்டார்கள். கதீஜா (ரலி) அவர்களது மறைவுக்குப் பின் இறைத்தூதர் (ஸல்) அவர்கள்

மணந்து கொண்ட சௌதா பின்த் ஸமஆ (ரலி) அவர்களுடன், தனது இரண்டு பெண் மக்களையும் மக்காவில் உள்ள தனது இல்லத்தில் விட்டு விட்டு மதீனா சென்றார்கள் இறைத்தூதர் (ஸல்) அவர்கள்.

அதன் பிறகு சில காலங்கள் கழித்து, இறைத்தூதர் (ஸல்) அவர்கள் இந்த மூன்று பெண்களையும் மதீனாவுக்கு ஹிஜ்ரத் செய்து வரும்படி கட்டளையிட்டதற்கு இணங்க, ஹிஜ்ரத் செய்தவர்களின் பட்டியலில் இந்த மூன்று பெண்களும் தங்களது பெயர்களை வரலாற்றுப் பக்கங்களிலே பதித்துக் கொண்டார்கள். ஆனால், ஒருவர் பின் ஒருவராக மக்காவை விட்டும் மக்கள் இடம் பெயர்ந்து மதீனாவிற்குச் சென்று கொண்டிருப்பதைப் பார்த்த மக்கத்துக் குறைஷிகளுக்குப் பொறுக்கவில்லை. இதனை எப்பாடு பட்டாகிலும் தடுத்து நிறுத்தி விட வேண்டும் என்று, மக்காவின் புறநகர்ப் பகுதியில் கண்காணிப்பை அதிகப்படுத்திக் கொண்டனர். இவ்வாறு கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டிருந்த மக்காவின் சில கொடூர மதி படைத்த குறைஷிகளில் சிலர், இந்த மூன்று பெண்கள் சென்ற ஒட்டகத்தை வழி மறுத்து நின்றனர். இவ்வாறு வழி மறித்து நின்றவர்களில் முக்கியமானவன், குறைஷி குலத்தைச் சேர்ந்த, ஹுவைரத் பின் நகீத் என்பவனாவான். இவன் இறைத்தூதர் (ஸல்) அவர்களின் மகள்கள் பயணித்த ஒட்டகத்தை அதட்டி அடிக்கத் துவங்கவும், அவர்கள் பயணம் செய்த அந்த ஒட்டகம் எகிறிக் குதிக்க ஆரம்பித்தது, இதன் காரணமாக இறைத்தூதர் (ஸல்) அவர்களின் இரண்டு பெண்மக்களும் ஒட்டகத்திலிருந்து தவறிக் கீழே விழுந்தனர். இதனைப் பார்த்த அவன் ஓட்டமெடுக்க ஆரம்பித்தான். இவ்வளவு நடந்ததன் பின்பும், அவர்களது இறைநம்பிக்கையும் அந்த இறைநம்பிக்கை தந்த தைரியமும், உள வலிமையும் பயணத்தை நிறுத்த இடம் கொடுக்கவில்லை, மாறாக அவர்கள் தங்களது பயணத்தைத் தொடர ஆரம்பித்தார்கள் மதீனத்து மாநகரை நோக்கியவர்களாக..!

மதீனாவின் எல்லையை அடைந்ததும், இறைத்தூதர் (ஸல்) அவர்களே முன்வந்து தங்களது இளவல்களை வரவேற்றார்கள். அவர்கள் உயிருடன் மீண்டு வந்தது குறித்து மிகவும் சந்தோஷமடைந்தார்கள். இறைநம்பிக்கையுடன் தங்களது பயணத்தைத் தொடர்பவர்களுக்கு இறைவனே மிகச் சிறந்த பாதுகாவலனாக இருக்கும் பொழுது, யார் தான் அவர்களுக்கு தீங்கிழைத்து விட முடியும்..!

ஹிஜ்ரி 2 ம் ஆண்டில் சத்தியத்தையும் அசத்தியத்தையும் பிறித்தறிவிக்கக் கூடிய பத்ரு யுத்தம் நிகழ்ந்தது. இந்த யுத்தத்தில் அலி (ரலி) அவர்கள் மிகத் தீரமாக போரிட்டுத் தனது வீரத்தை வெளிப்படுத்திக் காட்டினார்கள். இந்தப் போரில் இறைநம்பிக்கையாளர்கள் பெரு வெற்றி பெற்றதோடு, இறைநிராகரிப்பாளர்களும் அவர்களின் மிக முக்கிய தலைவர்களாக அபூஜஹ்ல் போன்றோர்கள் இந்த யுத்தத்தில் தோற்கடிக்கப்பட்டு, படுகொலையும் செய்யப்பட்டார்கள். எதிரிகளில் பலர் உயிருடன் பிடிக்கப்பட்டு, யுத்தக் கைதிகளாக மதீனா நகருக்குக் கொண்டு வரப்பட்டார்கள். முன்பைக் காட்டிலும் இதுவரை இல்லாத அளவுக்கு, இந்த யுத்தத்தின் மூலமாக இறைநம்பிக்கையாளர்கள் மிகச் சிறந்த ஆன்மீக பலத்தைப் பெற்றுக் கொண்டார்கள்.

இப்பொழுது ஃபாத்திமா (ரலி) அவர்களுக்கு பதினெட்டு வயது பூர்த்தியாகியிருந்தது, மேலும் முக்கிய நபர்களாகக் கருதப்பட்ட பலர், ஃபாத்திமா (ரலி) அவர்களை மணந்து கொள்வதற்காக இறைத்தூதர் (ஸல்) அவர்களிடம் அனுக ஆரம்பித்தார்கள். ஆனால் இறைத்தூதர் (ஸல்) அவர்களோ, இறைவன் தரப்பிலிருந்து அதற்கான சம்மதத்தை எதிர்பார்த்துக் காத்திருக்க ஆரம்பித்தார்கள்.

ஒருநாள் அலி(ரலி) அவர்கள் மிகவும் வெட்கப்பட்டவராக, தனது முதுகுப் பின்னால் எதையோ மறைத்து கொண்டவராக முன்னெப்பொழுதும் இல்லாத பாங்காக இறைத்தூதர் (ஸல்) அவர்களின் முன்பதாக வந்து நின்றார்கள். அலி (ரலி) அவர்களின் வித்தியாசமான அந்த கோலத்தைப் பார்த்த

இறைத்தூதர் (ஸல்) அவர்கள், அலி (ரலி) அவர்களது உள்ளத்தில் ஓடுகின்ற வரிகளை வாசித்துக் காட்டுபவர்கள் போல, அலியே..! நீங்கள் எனது மகளை மணந்து கொள்வதற்குச் சம்மதம் கேட்டுத் தான் இங்கே வந்திருக்கின்றீர்கள் என்றார்கள். அதற்கு அலி (ரலி) அவர்கள், நீங்கள் நினைத்தபடியே தான்.., அதற்குத் தான் இங்கே உங்கள் முன்னால் வந்து நிற்கின்றேன் என்று கூறினார்.

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தனது அருமை மகளார் பாத்திமா (ரலி) அவர்களிடம் சென்று, தங்களுக்கு அலி அவர்களை மணமுடித்து வைக்க நான் நாடுகின்றேன், நீங்கள் என்ன சொல்கின்றீர்கள்? என்று கேட்டார்கள். இதனைக் கேட்ட மாத்திரத்திலேயே மிகவும் அமைதியாக ஃபாத்திமா (ரலி) அவர்கள் விம்மி அழ ஆரம்பித்தார்கள்.

ஃபாத்திமாவே..! அலி மிகவும் கற்ற ஞானமுள்ள மனிதர், இன்னும் இரக்க சுபாவமுள்ளவரும், வீரமுள்ள ஆண்மகனுமாவார்கள் என்று இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். இறைத்தூதர் (ஸல்) அவர்களின் தேர்வை ஃபாத்திமா (ரலி) அவர்கள் ஏற்றுக் கொண்டு, திருமணத்திற்குச் சம்மதம் தெரிவித்தார்கள்.

இப்பொழுது அலி (ரலி) அவர்களிடம் வந்த இறைத்தூதர் (ஸல்) அவர்கள், அலியே..! எனது மகளுக்கு மஹர்ப் பணமாக நீங்கள் என்ன வைத்திருக்கின்றீர்கள், வைத்திருந்தால் அதனைக் கொண்டு வாருங்கள் என்றார்கள். அலி (ரலி) அவர்களின் இளமைப் பருவம் முதலே அவர்களையும், அவர்களது பொருளாதார நிலைமையையும் நன்கு அறிந்தவர்களான இறைத்தூதர் (ஸல்) அவர்கள், சரி..! உங்களிடம் எதுவுமே இல்லாயென்றால், உங்களது பாதுகாப்புக் கவச உடை இருக்கின்றதல்லவா, அதனையே எனது மகளுக்கு மஹராகக் கொடுத்து விடுங்கள் என்று இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். தனது கவச உடையை தனது அடிமையிடம் கடைத்தெருவுக்குக் கொடுத்து விட்ட அலீ (ரலி) அவர்கள், அதன் மூலம் நானூறு திர்ஹம்களைப் பெற்றுக் கொண்டார்கள். கவச உடையை விற்ற பணத்தைக் கொண்டு வந்து இறைத்தூதர் (ஸல்) அவர்களிடம் கொடுத்த பொழுது, அதனைப் பெற்றுக் கொள்ளாமல், இதனை நீங்களே வைத்துக் கொண்டு திருணமத்திற்கு தேவையான பொருட்களையும், இன்னும் வாசனைத்திரவியங்களையும் வாங்கிக் கொள்ளுங்கள் என்று இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறி விட்டார்கள்.

இந்த ஆரம்ப கட்ட வேலைகள் முடிந்ததன் பின், தனது உதவியாளரான அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்களை அழைத்த இறைத்தூதர் (ஸல்) அவர்கள், அபுபக்கர் (ரலி), உதுமான் (ரலி), உமர் (ரலி), தல்ஹா (ரலி), சுபைர் (ரலி) போன்றவர்களையும், அன்ஸார்கள் மற்றும் முஹாஜிர் தோழர்களையும் இந்தத் திருமண வைபவத்தில் கலந்து கொள்ள அழைத்து வருமாறு அனுப்பி வைத்தார்கள். அனைத்துத் தோழர்களும் அங்கே குழுமியதன் பின்னால், அலீ (ரலி) அவர்களை அழைத்த இறைத்தூதர் (ஸல்) அவர்கள், நீங்களே உங்களது திருமண உரையை வாசியுங்கள் என்றார்கள். பின் எழுந்து நின்ற அலி (ரலி) அவர்கள் கீழ்கண்ட வாசகத்தை வாசிக்க ஆரம்பித்தார்கள் :

எல்லாப் புகழும் ஏக இறையோனாகிய வல்ல அல்லாஹ்வுக்கே உரித்தாகட்டும். அவன் நம் மீது சொறிந்திருக்கக் கூடிய பூரணமான அருட்கொடைகளுக்காகவும், அவனால் ஆசீர்வதிக்கப்பட்ட மக்களாகவும் நாம் இருந்து கொண்டிருப்பதற்காகவும் அவனுக்கு நன்றிக் கடன் செலுத்தக் கூடியவர்களாக நாம் இருந்து கொண்டிருக்கின்றோம். அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரிய இறைவன் வேறு யாரும் இல்லை என்று நான் சாட்சி கூறுகின்றேன், இன்னும் அவனை நான் கண்ணியப்படுகின்றேன், அது அவனது கருணையின் மீது நான் ஆதரவு வைக்கின்றேன். இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தனது மகள் ஃபாத்திமா (ரலி) அவர்களை எனக்கு மணமுடித்துக் கொடுக்கின்றார்கள், மணக்கொடையாக 400 திர்ஹம்கள் நிச்சயிக்கப்பட்டிருக்கின்றது. இப்பொழுது

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் சொல்ல வருகின்றவற்றைக் கவனமாகச் செவிமடுத்துக் கொள்ளுங்கள், அதற்கான சாட்சியங்களாகவும் இருந்து கொள்ளுங்கள்.

இதன் பின்னர் ஃபாத்திமா (ரலி) அவர்களின் சம்மதத்தைப் பெற்றுக் கொண்டதன் பின்னர், இறைத்தூதர் (ஸல்) அவர்கள் இறைவனைப் போற்றிப் புகழ்ந்தவர்களாக திருமண வாசகத்தை மொழிய ஆரம்பித்தார்கள். மஹர் தொகையை அறிவித்தவுடன், அங்கு கூடியிருந்த தனது தோழர்களை நோக்கி இறைத்தூதர் (ஸல்) அவர்கள், அலீ (ரலி) அவர்களுக்கு ஃபாத்திமா (ரலி) அவர்களை மணமுடித்துக் கொடுக்குமாறு இறைவன் தான் எனக்கு கட்டளையிட்டான். இதன் பின்னர், தம்பதிகளின் சந்தோஷமான வாழ்க்கைக்காகவும், நல்ல எதிர்காலத்திற்காகவும் பிரார்தித்தார்கள். பின்னர் விருந்தினர்களுக்கு பேரீத்தம் பழம் வழங்கப்பட்டது. இறைவன் புதுமணத்தம்பதிகளுக்கு சந்தோஷமான வாழ்க்கை அமைவதற்காக அங்கு கூடியிருந்த அனைவரும் பிரார்த்தனை செய்து தங்களது சந்தோஷத்தை வெளிப்படுத்திக் கொண்டார்கள். தனது சகோதரனின் மகனாகிய அலீ (ரலி) அவர்களின் திருமணம் நடந்ததன் மறுநாள் ஹம்ஸா பின் அப்துல் முத்தலிப் (ரலி) அவர்கள் ஒரு ஒட்டகத்தை அறுத்து தோழர்கள் அனைவருக்கும் விருந்தளித்தார்கள்.

புதுமணத்தம்பதிகளாக புது வீட்டுக்கு குடிபோகவிருக்கின்ற தம்பதிகளுக்கு சில அடிப்படையான பொருள்கள் கொள்முதல் செய்யப்பட்டன. ஒரு படுக்கை, காய்ந்த பேரீத்தம் மர மட்டைகளால் ஆன தலையணை, ஒரு தட்டு, ஒரு தம்ளர், தோலால் செய்யப்பட்ட தண்ணீர்ப் பை ஒன்று மற்றும் மாவு அரைக்கக் கூடிய திருகை ஒன்று - இவை தான் இறைத்தூதர் (ஸல்) அவர்களின் அன்புக்கினிய மகள் ஃபாத்திமா (ரலி) அவர்களின் திருமணத்திற்காக வாங்கப்பட்ட பொருட்களின் பட்டியலாகும். இந்த புதுமணத்தம்பதிகளின் இல்லம் இறைத்தூதர்(ஸல்) அவர்களின் பள்ளிக்குச் சற்றுத் தொலைவில் இருந்தது. தனது பிரியத்திற்குரிய மகள் இன்னும் தனக்கு மிகவும் நெருக்கமான இடத்தில் இருந்தால் தன்னால் அடிக்கடி பார்த்துக்கொள்ள முடியுமே என்று இறைத்தூதர் (ஸல்) அவர்கள் விரும்பினார்கள். இறைத்தூதர் (ஸல்) அவர்களின் விருப்பத்தை அறிந்துகொண்ட ஹாரிதா இப்னு நுஃமான் (ரலி) என்ற அன்ஸாரித் தோழர் மிகவும் மரியாதையாக இறைத்தூதர் (ஸல்) அவர்களை அனுகி, இறைத்தூதர் (ஸல்) அவர்களே..! உங்களது பள்ளிக்கு அருகில் எனக்குச் சொந்தமான வீடுகள் பல உள்ளன. இவற்றில் ஏதாவதொன்றை நீங்கள் எடுத்துக் கொள்ளுங்களேன்..! என்று கூறினார்கள். மிகவும் அருகில் அமைந்த வீடு ஒன்று இறைத்தூதர் (ஸல்) அவர்களை மிகவும் கவர்ந்திருந்தது. தனது தோழரின் வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட இறைத்தூதர் (ஸல்) அவர்கள், அந்த வீட்டைத் தனது பிரிய மகளுக்காகத் தேர்ந்தெடுத்துக்கொண்டார்கள். இன்னும் தனது மகளுக்காகத் தனது வீட்டை விட்டுக் கொடுத்த அந்தத் தோழரின் செல்வம் பெருகுவதற்கும், அவருக்காகவும் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் இறைவனிடம் பிரார்த்தித்துக் கொண்டார்கள். இந்த இல்லத்தில் அலீ (ரலி) அவர்களும் ஃபாத்திமா (ரலி) அவர்களும் தங்களது புது வாழ்க்கையைத் துவங்க ஆரம்பித்தார்கள். மாபெரும் சாம்ராஜ்யத்தின் தலைவரது மகளாக இருப்பினும், மாவு அரைத்தல், கிணற்றிலிருந்து தண்ணீர் இறைத்து வருதல் இன்னும் சமைத்தல் ஆகிய அனைத்து வீட்டு வேலைகளையும் ஃபாத்திமா (ரலி) அவர்களே செய்தார்கள்.

அபீதாலிப் கணவாயில் சமூக பகிஷ்காரம் செய்யப்பட்ட பொழுது அவர்களது உடலில் ஏற்படுத்தியிருந்த பலவீனங்கள் இதனூடே தொடர்ந்து கொண்டே இருந்தன. இதன் காரணமாக வீட்டு வேலைகளுடன் மிகவும் களைப்படைய ஆரம்பித்தார்கள். ஒரு போரின் பொழுது அதிகமான செல்வங்களும், போர்ப் பொருட்களும், கைதிகளாக ஆண்களும், பெண்களும் முஸ்லிம்கள் வசமாகின. அப்பொழுது தனது துணைவியாரான ஃபாத்திமா (ரலி) அவர்களை அழைத்த அலீ (ரலி) அவர்கள், ஃபாத்திமா அவர்களே..! வீட்டு வேலைகளின் நிமித்தம் நீங்கள் அதிகக் களைப்படைந்து விடுகின்ற காரணத்தால், உங்கள்

தந்தையிடம் சென்று, கைதிகளாகப் பிடிக்கப்பட்டு வந்துள்ளவர்களில் உங்களுக்கென ஒரு வேலைக்காரியைத் தருமாறு கேளுங்களேன் என்றார்கள்.

அலீ (ரலி) அவர்களின் ஆலோசனையைக் கேட்ட பின், நேராகத் தனது தந்தையைத் தேடி வீட்டிற்குச் சென்றார்கள். இவர்கள் தேடிச் சென்ற நேரத்தில் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் வீட்டில் இல்லாத காரணத்தால், தான் வந்த நோக்கத்தை இறைத்தூதர் (ஸல்)அவர்களிடம் தெரிவித்துவிடுமாறு ஆயிஷா (ரலி) அவர்களிடம் தெரிவித்து விட்டு வந்து விடுகின்றார்கள். அன்றைய இரவு, தூங்கச் செல்வதற்கு சற்று முன்னால் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தனது மகளாரைத் தேடி மகளின் வீட்டிற்கு வருகின்றார்கள். அப்பொழுது, மகளே..! ஒரு அடிமைப் பெண்ணை விடச் சிறந்த ஒன்றை நான் உங்களுக்கு தரட்டுமா..! என்று கேட்டு விட்டு, அல்லாஹ்வைப் புகழ்ந்து கூறக் கூடிய சில வசனங்களை தனது மகளாருக்குக் கற்றுக் கொடுக்கின்றார்கள். மகளே..! நான் சொல்லித்தரக் கூடிய இந்த வசனங்கள் ஒரு வேலைக்காரியை விடச் சிறந்தது. நீங்கள் 33 தடவை சுப்ஹானல்லாஹ் என்றும், 33 தடவை அல்ஹம்துலில்லாஹ் என்றும், இன்னும் 34 முறை அல்லாஹு அக்பர் என்று கூறுங்கள் என்று கற்றுக் கொடுத்தார்கள்.

ஃபாத்திமா (ரலி) அவர்கள் தனது வாழ்நாளை இறையச்சத்துடன், இறைவனுக்கு உகந்த நல்லடியார்களின் வாழ்வினை வாழ்ந்தார்கள். எப்பொழுதும் அவர்கள் பொறுமையுடையவராகவும், படைத்தவனுக்கு நன்றியுடைய நல்லடியாராகவும் வாழ்ந்து காட்டினார்கள். எத்தகைய கஷ்டமான சூழ்நிலையிலும் கூட எந்த முனுமுனுப்பும் காட்டாதவர்களாக இருந்தார்கள். இந்த உலகமும், அதன் அலங்காரங்களும் எந்த வகையிலும் அவரது வாழ்வை திசை மாற்றிடவில்லை. அவரது முழு வாழ்க்கையும் இஸ்லாத்திற்கு சேவை செய்வதற்காகவும், இறைவழியில் போராடக் கூடிய முஜாஹிதுகளுக்குப் பணிவிடை செய்வதற்காகவுமே அற்பணிக்கப்பட்டதாக இருந்தது. போர் முனைகளில், காயம்பட்டவர்களுக்குச் சேவை செய்யக் கூடிய தாதியாக முன்னணியில் நின்றார்கள். உஹதுப் போர்க்களத்தில் ஃபாத்திமா (ரலி) அவர்களது தந்தையாரான இறைத்தூதர் (ஸல்) அவர்கள் காயம்பட்ட பொழுது, தனது படுக்கை விரிப்பை தீயில் கரிக்கி, அந்த சாம்பலைக் கொண்டு மடை திறந்த வெள்ளம் போல் பாய்ந்து கொண்டிருந்த இரத்த ஒழுக்கை நிறுத்த உதவினார்கள். ஸஹீஹ் புகாரியில் காணக்கிடக்கின்றதொரு நபிமொழியில், "இந்த உலக வாழ்வில் உங்களது அதிகமான விருப்பத்திற்குரியவர் யார் என இறைத்தூதர் (ஸல்) அவர்களிடம் வினவப்பட்ட பொழுது, தனது இளைய மகளாரான ஃபாத்திமா (ரலி) அவர்களது பெயரையே மொழிந்தார்கள்.

அன்னை ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் : "ஃபாத்திமா (ரலி) அவர்கள் தனது தந்தையைப் போன்ற குணநல அம்சங்களைப் பெற்றவர்களாக இருந்தார்கள்" என்றார்கள். இறைத்தூதர் (ஸல்) அவர்களைப் போன்ற உருவ அமைப்பில் அல்ல, மாறாக அவர்களது பேச்சு, நடை, பாவனை, உட்காருவது, நிற்பது, மற்றும் நடப்பது ஆகிய அனைத்தும் - சுருங்கச் சொன்னால் அவர்களது மொத்த பண்புநலன்களும் இறைத்தூதர் (ஸல்) அவர்களைப் போன்றே இருந்தது. தனது மகளாரைச் சந்திக்கச் செல்லும் நேரமெல்லாம், தனது தந்தையார் அவர்களை மனதார வரவேற்று அவர்களை அனைத்து உச்சி முகர்ந்து முத்திமிட்டு வரவேற்கக் கூடியவர்களாகவும் மரியாதை செய்யக் கூடியவர்களாகவும் ஃபாத்திமா (ரலி) அவர்கள் திகழ்ந்தார்கள். இருவரும் மிக நெருக்கமான பாசப்பிணைப்புடன் இருந்தார்கள், இறைத்தூதர் (ஸல்) அவர்களை ஃபாத்திமா (ரலி) அவர்கள் சந்திக்கச் செல்லும் பொழுதெல்லாம், இறைத்தூதர் (ஸல்) அவர்கள் எழுந்திருந்து தனது மகளை ஆசையோடு வரவேற்கக் கூடியவர்களாக இருந்தார்கள். ஃபாத்திமா (ரலி) அவர்கள் செல்லுமிடமெல்லாம், தனது பண்பு முத்திரைகளை பிறரது மனங்களில் பதிக்கக் கூடியவர்களாக இருந்தார்கள். ஃபாத்திமா (ரலி) அவர்களை பாதிக்கக் கூடிய அத்தனை அம்சங்களும்

இறைத்தூதர்(ஸல்) அவர்களை பாதித்தது, கவலையடையச் செய்தது. இன்னும் செல்ல மகளை சந்தோஷப்படுத்தக் கூடிய அனைத்தும், இறைத்தூதர் (ஸல்) அவர்களையும் சந்தோஷமடையச் செய்தது.

ஒருமுறை ஃபாத்திமா (ரலி) அவர்களுக்கும், அவரது கணவர்அலி (ரலி) அவர்களுக்குமிடையே ஏதோ கருத்துவேறுபாடு எழுந்து விட்டதாக இறைத்தூதர் (ஸல்) அவர்கள் அறிய வந்தவுடன், தனது மகளைச் சந்திக்கக் கிளம்பினார்கள். அவர்கள் செல்லும் வழி நெடுகிலும் கலங்கிய மனதுடனும், கவலை தோய்ந்த முகத்துடனும் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் சென்றார்கள், தனது மகளாரின் வீட்டை விட்டு வெளியேறிய பின்பு தான் அவர்களது முகத்தில் அமைதி தவழ்ந்தது. இறைத்தூதர் (ஸல்) அவர்களின் இந்த மாற்றத்தைக் கண்ணுற்ற அவரது தோழர்கள், “ இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தனது மகளாரின் வீட்டிற்குச் செல்லும் பொழுது ஒரு மனிதராகவும், அங்கிருந்து திரும்பி வரும் பொழுது இன்னொரு மனிதாரகவுமே வந்தார்” என்று குறிப்பிடுகின்றார்கள். இதைப் பற்றி இறைத்தூதர் (ஸல்) அவர்களிடம் அவரது தோழர்கள் வினவிய பொழுது, எனது பிரியத்திற்குரிய எனது இரண்டு இளவல்களிடம் காணப்பட்ட கருத்துவேறுபாட்டைத் தீர்த்து விட்டு வருகின்றேன் என்று கூறினார்கள். கருத்துவேறுபாடுகள் களையப்பட்டவுடன், அதன் நிம்மதிப் பெருமூச்சால் அண்ணலார் (ஸல்) அவர்களின் வதனங்களில் மகிழ்ச்சிப் பூக்கள் பூத்திருந்தன. இன்னொரு முறை அலி (ரலி) அவர்கள் அபூஜஹ்ல் ன் மகளை மணக்க விருப்பம் கொண்டார்கள். இதனை அறிந்து கொண்ட ஃபாத்திமா (ரலி) அவர்கள், தனது தந்தையாரிடம் வந்து அலி (ரலி) அவர்கள் அபூஜஹ்ல் ன் மகளை அலி (ரலி) அவர்கள் மணந்து கொள்ளத் திட்டமிட்டிருப்பதாகத் தெரிவிக்கின்றார்கள். இதனைக் கேட்ட இறைத்தூதர் (ஸல்) அவர்கள் மிகவும் கலவரமடைந்தார்கள். நேரே பள்ளிவாசலுக்கு விரைந்து சென்ற இறைத்தூதர் (ஸல்) அவர்கள், எனது மகள் ஃபாத்திமா (ரலி) அவர்கள் எனது இதயத்தின் ஒரு பகுதியாவார், அவருக்கு யார் துன்பம் கொடுக்கின்றார்களோ அந்தத் துன்பம் என்னையும் பாதிக்கும். அல்லாஹ்வின் விருப்பத்திற்குரிய அடியாரின் மகளும், அல்லாஹ்வின் எதிரியின் மகளும் ஒரே மனிதனை எவ்வாறு மணந்து கொள்ள இயலும். இறைத்தூதர் (ஸல்) அவர்களின் உரையைக் கேட்ட அலி (ரலி) அவர்கள் தனது எண்ணத்தை மாற்றிக் கொண்டவராக, தன்னால் விளைந்த துன்பத்திற்கு ஃபாத்திமா (ரலி) அவர்களிடம் மன்னிப்புக் கோரினார்கள். அதன் பின் அவர்களது வாழ்வு மீண்டும் இயல்புநிலைக்குத் திரும்பியது.

ஒரு முறை, “உங்களது நெருக்கத்திற்கு மிகவும் உரித்தானவர் நானா? அல்லது ஃபாத்திமாவா? என்று அலி (ரலி) அவர்கள் இறைத்தூதர் (ஸல்) அவர்களிடம் வினவினார்கள். அதற்கு, நான் ஃபாத்திமா (ரலி)அவர்களிடம் அதிகமான அன்பு வைத்திருக்கின்றேன், ஆனால் அலியே..! நீங்கள் எனது மகளைக் காட்டிலும் எனக்கு நெருக்கமானவராக நேசத்திற்குரியவராக இருக்கின்றீர்கள் என்று கூறினார்கள். இதுவே இறைத்தூதர் (ஸல்) அவர்களின் மிகச் சிறந்த பண்புநலனுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். இதுவே உண்மையுமாகும். ஏனெனில், இருவரையும் மிகவும் ஆழமான முறையில் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் நேசித்தார்கள்.

அலி (ரலி) மற்றும் ஃபாத்திமா (ரலி) தம்பதிகளுக்கு ஹிஜ்ரி 3 ம் ஆண்டு ரமளான் மாதத்தில் முதல் குழந்தை பிறந்தது. தனக்குப் பேரக் குழந்தை பிறந்திருப்பதை அறிந்த இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தனது மகளையும், பேரனையும் காண விரைந்து சென்றார்கள். பேரனுக்கு ஹஸன் என்ற பெயரைச் சூட்டி, அதானும் கூறினார்கள். (Fathimah Bint Muhammad (Pbuh) Page 157, Maktaba Darussalam) பிறந்ததிலிருந்து ஏழாவது நாளில் தலை முடியைச் சிரைத்து சுத்தமாக்கி, அந்த முடியின் எடையின் அளவுக்கு வெள்ளியை நிறுத்து, அதனை ஏழைகளுக்குத் தானமாக வழங்கினார்கள்.

ஹிஜ்ரி 4 ம் வருடம் ஷ.்பான் மாதம் ஃபாத்திமா (ரலி) அவர்களுக்கு இரண்டாவது குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தைக்கு ஹு ஸைன் என்று இறைத்தூதர் (ஸல்) அவர்கள் பெயரிட்டார்கள். அந்தக் குழந்தையின் காதிலும் பாங்கு சொன்னார்கள். மூன்றாவது குழந்தையாக மு.்ஸின் என்பவர் பிறந்தார், அவர் குழந்தையாக இருந்த பொழுதே இறந்து விட்டார் என்று கூறப்படுகின்றது. தனது இரண்டு பேரக் குழந்தைகளையும் மிகவும் நேசித்தார்கள் இறைத்தூதர் (ஸல்) அவர்கள். மேலும், அவர்களைக் குறித்து, "இவர்கள் எனது வாச மலர்கள், இன்னும் சுவனத்தின் இளைஞர்களது தலைவர்கள்" என்று பெருமை படக் கூறக் கூடியவர்களாக இருந்தார்கள்.

ஒருமுறை இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தனது கைகளில் ஏதோ ஒன்றைச் சுற்றி எடுத்துக் கொண்டு செல்வதைக் கண்டார்கள். இறைத்தூதர் (ஸல்) அவர்களே..! தங்களது கைகளில் என்ன இருக்கின்றது என்று கேட்டார்கள் உஸாமா (ரலி) அவர்கள். தனது கைகளில் சுற்றப்பட்டிருந்த துணியை விலக்கி உஸாமா (ரலி) அவர்களுக்கு இறைத்தூதர் (ஸல்) அவர்கள் காண்பித்த பொழுது, அதில் அவர்களது இரண்டு பேரக் குழந்தைகளைத்தான் அவ்வாறு சுற்றி எடுத்துச் செல்கின்றார்கள் என்பதைக் கண்டு கொண்டார்கள். அப்பொழுது, இவர்கள் என்னுடைய மகள் வயிற்றுப் பிள்ளைகள், இவர்களை யார்யாரெல்லாம் நேசிக்கின்றார்களோ, அவர்கள் அனைவரையும் நான் நேசிக்கின்றேன் என்று இறைத்தூதர் (ஸல்) அவர்கள் உஸாமா (ரலி) அவர்களிடம் கூறினார்கள்.

ஹிஜ்ரி 5 ம் ஆண்டு, ஃபாத்திமா (ரலி) அலி (ரலி) தம்பதிகளுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. அதற்கு ஸைனப் என்று இறைத்தூதர் (ஸல்) அவர்கள் பெயரிட்டார்கள். மீண்டும் ஹிஜ்ரி 7 ம் ஆண்டு ஒரு பெண் குழந்தை பிறந்தது. அதற்கு உம்மு குல்தூம் என்று இறைத்தூதர் (ஸல்) அவர்கள் பெயரிட்டார்கள். ஸைனப் பின்த் அலி (ரலி) அவர்கள் பருவமடைந்ததன் பின்னர், அப்துல்லா பின் ஜா.்பர் பின் அபீதாலிப் (ரலி) அவர்களுக்கு மணமுடித்துக் கொடுக்கப்பட்டார்கள். உம்மு குல்தூம் (ரலி) அவர்களை உமர் பின் கத்தாப் (ரலி) அவர்கள் மணந்து கொண்டார்கள். இவர்களுக்கு ஸைத் மற்றும் ருக்கைய்யா என்ற இரண்டு குழந்தைகள் பிறந்தன. உம்மு குல்தூம் (ரலி) அவர்களை உமர் (ரலி) அவர்கள் மணந்து கொண்டதன் பின்னர், தனது தோழர்களாக அன்ஸார்களையும், முஹாஜிர்களையும் அழைத்து, தனக்கு வாழ்த்துக் கூறுமாறு கேட்டுக் கொண்டார்கள். இதற்கான காரணத்தை அந்தத் தோழர்கள் வினவிய பொழுது, அலி (ரலி) அவர்களது மகளாரான உம்மு குல்தூம் (ரலி) அவர்களை நான் மணந்து கொண்டதன் மூலம், இறைத்தூதர் (ஸல்) அவர்களின் குடும்பத்தாருடன் நான் சம்பந்தம் என்ற தொடர்பை ஏற்படுத்திக் கொண்டு விட்டேன் அல்லவா..! அத்தகைய சந்தோஷமான, சிறப்பு மிக்க கௌரவத்தை நான் அடைந்து கொண்டதற்காக, என்னை வாழ்த்துங்கள் என்று உமர் (ரலி) அவர்கள் சந்தோஷமாகக் கூறினார்கள்.

இமாம் அஹ்மத் அவர்களிடம் அலி (ரலி) மற்றும் அவர்களது குடும்பத்தவர்கள் பற்றி நீங்கள் என்ன கருதுகின்றீர்கள் என்று கேட்கப்பட்டது. அதற்கு அவர், அவர்களது வரலாறு ஈடுஇணையற்றது. அல்லாஹ் தனது திருமறையில் கூறியவாறு, அனைத்துவிதமான பாவங்களிலிருந்தும் இறைவனால் தூய்மைப்படுத்தப்பட்டவர்களாக, இறைநம்பிக்கையில் கலப்படமற்றவர்களாக, இறைவனது விதிக்கு மாறு செய்யாதவர்களாக, மற்றும் சமூகப் பாவங்களிலிருந்தும் விலகியவர்களாக அவர்கள் தங்களது வாழ்க்கையை வாழ்ந்து காட்டிச் சென்றவர்கள் என்று குறிப்பிட்டார்கள்.

இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள், இறைத்தூதர் (ஸல்) அவர்கள் பயணத்திலிருந்தோ அல்லது போரிலிருந்தோ எப்பொழுதெல்லாம் அவர்கள் திரும்பி வருகின்றார்களோ அப்பொழுதெல்லாம் முதலில் தனது பள்ளிக்குச்சென்று இரண்டு ரக்அத் தொழுது விட்டு, முதலில் தனது மகள் ஃபாத்திமா

(ரலி) அவர்களது வீட்டிற்குச் சென்று அவர்களைச் சந்தித்து விட்டுத்தான், தனது மனைவிமார்களைக் காணச் செல்பவர்களாக இருந்தார்கள்.

ஃபாத்திமா (ரலி) அவர்களது வாழ்வில் நிகழ்ந்ததொரு அற்புத நிகழ்ச்சி ஒன்றை பிதாயா வந் நிஹாயா என்ற நூல் இவ்வாறு விவரிக்கின்றது. ஒருசமயம் ஒரு பெண் ஃபாத்திமா (ரலி) அவர்களுக்காக சிறியதொரு தட்டில் சில ரொட்டித் துண்டுகளையும், சில இறைச்சித் துண்டுகளையும் அனுப்பி வைத்தார்கள். அதனை ஒரு பெரிய தட்டில் வைத்து, அதனை ஒரு துணியினால் மூடி வைத்து விட்டு, தனது தந்தையாரான இறைத்தூதர் (ஸல்) அவர்களுக்கு செய்தியனுப்பி, தன்னுடைய வீட்டில் வந்து சாப்பிட வருமாறு அழைத்தார்கள். இறைத்தூதர் (ஸல்) அவர்களும் தனது அன்பு மகளின் அழைப்பை ஏற்று ஃபாத்திமா (ரலி) அவர்களின் வீட்டிற்கு சாப்பிட வந்ததன் பின்னர், அந்தத் தட்டை மூடியிருந்த துணியினை ஃபாத்திமா (ரலி) அவர்கள் விலக்கிய பொழுது, அந்தத் தட்டு முழுவதும் ஏராளமான ரொட்டித் துண்டுகளும், இறைச்சித் துண்டுகளும் நிறைந்திருக்கக் கண்டு, அதிசயத்துப் போனார்கள். இறைவனுக்கு நன்றி தெரிவித்தவர்களாக, இது இறைவன் தனது தூதர் (ஸல்) அவர்களுக்குச் செய்த பேருபகாரம் என்றெண்ணிக் கொண்டவர்களாக, இறைவனின் திருப்பெயரை மொழிந்தவர்களாக தனது தந்தையாருக்கு அந்த உணவைப் பரிமாற ஆரம்பித்தார்கள். தட்டில் காணப்பட்ட ஏராளமான உணவைப் பார்த்த இறைத்தூதர் (ஸல்) அவர்கள், தனது மகளைப் பார்த்து புன்னகை பூத்தவர்களாக, இவ்வளவு உணவை தங்களுக்கு அனுப்பி வைத்தவர் யாரம்மா? என்று கேட்டார்கள். அல்லாஹ் தான் இந்த அருட்கொடைகளை தனக்கு வழங்கினான் என்று கூறியவர்களாக, "அவன் தான் விரும்பியவர்களுக்கு வாழ்வாதாரங்களை கணக்கின்றி தாரளமாக வாரி வழங்கக் கூடியவனாக இருக்கின்றான்" என்றும் தனது தந்தையை நோக்கிக் கூறினார்கள். மீண்டும் புன்னகை பூத்தவர்களாக இறைவனுக்கு நன்றி கூறிய இறைத்தூதர் (ஸல்) அவர்கள், "மகளே..! நீங்கள் அந்த மரியம் (அலை) அவர்களைப் போலப் பேசுகின்றீர்கள்" என்று கூறினார்கள். பின் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தனது மகளுடனும், தனது மருமகனார் அலி (ரலி) அவர்களுடனும் இன்னும் தனது பேரக் குழந்தைகளுடனும் ஒன்றாக அமர்ந்து உணவருந்தினார்கள். அவர்கள் உண்டது போக ஏராளமான உணவு இன்னும் எஞ்சியிருந்தது. அதனை இறைத்தூதர் (ஸல்)அவர்களின் மனைவிமார்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது, அவர்களும் அதனை உண்டதன் பின் எஞ்சியிருந்ததை அக்கம் பக்கத்தவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது.

அப்துல்லா இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள், திருமறைக்குர்ஆனின் ஒரு அத்தியாயமான சூரா அந்நஸ்ர் இறங்கியதன் பின்னர், தனது மகளை அழைத்த இறைத்தூதர் (ஸல்) அவர்கள், இறைவன் தன்னை மிகவும் நெருக்கமாக்கி வைக்கவிருப்பதாகவும், இன்னும் தனக்கு இந்த உலக வாழ்க்கையின் இறுதி நேரம் மிகவும் அண்மித்து விட்டதாகவும் தெரிவித்தார்கள். இஸ்லாம் இப்பொழுது நாலா பக்கமும் பரவ ஆரம்பித்து, மக்கள் கூட்டம் கூட்டமாக இஸ்லாத்திற்குள் நுழைய ஆரம்பித்திருந்தார்கள். இறைத்தூதர் (ஸல்) அவர்களிடமிருந்து அந்தச் செய்தியைக் கேட்ட மாத்திரத்திலேயே தனது பிரியமுள்ள தந்தையின் நெருக்கத்தை விட்டும் தான் பிரிய இருப்பதை எண்ணி, ஃபாத்திமா (ரலி) அவர்கள் அழ ஆரம்பித்து விட்டார்கள். அதனை அடுத்து, நான் இறந்ததன் பின்னாள் எனது குடும்பத்தவர்களில் எல்லாம் என்னை முதலில் வந்து சந்திக்கக் கூடிய நபர் நீங்களாகத் தான் மகளே இருப்பீர்கள் என்ற நற்செய்தியையும் ஃபாத்திமா (ரலி) அவர்களுக்கு இறைத்தூதர் (ஸல்) அவர்கள் முன்னறிவிப்புச் செய்தார்கள். அதனைக் கேட்ட மாத்திரத்திலேயே ஃபாத்திமா (ரலி) அவர்கள் புன்னகை பூக்க ஆரம்பித்தார்கள். இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தனது இறுதிக் கட்டத்தை அடைந்த பொழுது, நோய்வாய்ப்பட்டதன் காரணமாக அவர்கள் மிகுந்த அவஸ்தைகளுக்கு ஆளாகிக் கொண்டிருப்பதைப் பார்த்த ஃபாத்திமா (ரலி) அவர்களது மனது மிகுந்த

கவலைக்குள்ளானது. இதனைக் கண்ட இறைத்தூதர் (ஸல்) அவர்கள், "மகளே..! இந்த நாளைக்குப் பின்னர் வேறு எப்பொழுதும் உனது தந்தை இதுபோன்ற வேதனைகளை அனுபவிக்க மாட்டார் என்றும், மறுமையின் உன்னதமான சுகந்தங்களை அடைந்து கொள்வதற்காக நான் பயணப்பட்டுக் கொண்டிருக்கின்றேன்" என்று கூறினார்கள்.

இப்னு கதீர் அவர்கள் தனது அஸத் அல் கா∴பா என்னும் நூலில், இறைத்தூதர் (ஸல்) அவர்கள் மரணமடைந்த அந்த நாளைக்குப் பின், எந்த நாளிலும் ∴பாத்திமா (ரலி) அவர்கள் புன்னகையே பூத்ததில்லை என்று குறிப்பிட்டிருக்கின்றார்கள். அவர்கள் மரணமடையும் வரையிலும், அவர்களது தந்தையின் பிரிவுத் துக்கம் அவர்களது முகத்தில் காணப்படக் கூடியதாகவும் இருந்தது. இறைத்தூதர் (ஸல்) அவர்கள் மரணமடைந்ததன் பின், ஆறு மாத காலம் கழித்து ∴பாத்திமா (ரலி) அவர்களும் மரணத்தைச் சந்தித்தார்கள்.

"இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்"

அலி (ரலி) அவர்களும், அவர்களது நான்கு குழந்தைகளான ஹஸன், ஹுஸைன், ஸைனப் மற்றும் உம்மு குல்தூம் (ரலி- அன்ஹுமா) ஆகியோர்கள் தங்களது இளமைக் காலத்திலேயே தனது தாயை இழந்தவர்களானார்கள். ∴பாத்திமா (ரலி) அவர்களது உடலை அலி (ரலி) அவர்களும், இன்னும் அஸ்மா பின்த் உமைஸ் (ரலி) அவர்களும், இன்னும் ஸலமா உம் ரா∴ப் (ரலி) அவர்களும் குளிப்பாட்டி, கபனிட்டார்கள். அவர்களது உடல் ஜன்னத்துல் பக்கியில் இரவில் நல்லடக்கம் செய்யப்பட்டது. அலி (ரலி) அவர்களும், அப்பாஸ் (ரலி) அவர்களும் இன்னும் ∴பதல் பின் அப்பாஸ் (ரலி) அவர்களும் ∴பாத்திமா (ரலி) அவர்களை அவர்களது இறுதித் துயில் கொள்ளும் இடத்தில் - மண்ணறையில் வைத்தார்கள். சுவனத்து இளைஞர்களின் தலைவர்களது தாயாரும், இன்னும் சுவனத்துப் பெண்களின் தலைவியுமான ∴பாத்திமா (ரலி) அவர்களின் சுவனத்தை நோக்கிய பயணம் தொடர்ந்தது.

(ஆனால், அந்நாளில் நல்லடியார்களிடம்) சாந்தியடைந்த ஆத்மாவே! நீ உன்னுடைய இறைவன்பால் திருப்தி அடைந்த நிலையிலும், (அவன்) உன்மீது திருப்தியடைந்த நிலையிலும் மீளுவாயாக. நீ என் நல்லடியார்களில் சேர்ந்து கொள்வாயாக. மேலும், நீ என் சுவர்க்கத்தில் பிரவேசிப்பாயாக (என்று இறைவன் கூறுவான்). (89:27-30)

## உம்மு ஹரம் பின்த் மல்ஹான் (ரலி)

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் ஒருமுறை கூறினார்கள் :

'எனது உம்மத்தவர்களில் ஒரு இராணுவப் படையானது அரியணையில் அமர்ந்திருக்கும் அரசனைப் போல (கம்பீரமாகக்) கடலில் பயணம் செய்யும்' என்றார்கள்

உம்மு ஹரம் கேட்டார்கள், அவர்களில் ஒருத்தியாக நான் இருப்பேனா..! அதற்கு, 'அவர்களில் முதன்மையானவர்களில் ஒருத்தியாக நீங்கள் இருப்பீர்கள்' என்று கூறினார்கள்.

உம்மு ஹரம் அவர்கள் மிகச் சிறந்த குடும்பத்தில் பிறந்தவர்களாவார்கள். அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்களின் தாயார் இவரது சகோதரியாவார். இவரது இரண்டு சகோதரர்கள், ஹரம் பின் மல்ஹான் (ரலி) மற்றும் ஸலீம் பின் மல்ஹான் (ரலி) ஆகியோர்கள் பத்ர் மற்றும் உஹத் யுத்தத்தில் பங்கேற்றவர்களாவார்கள். அபூ தல்ஹா (ரலி) என்ற மிகச் சிறந்த நபித்தோழருக்கு திருமண உறவுடையவர்களாக இருந்தார்கள். உம்மு ஹரம் பின்த் மல்ஹான் (ரலி) அவர்களின் கணவர் அம்ர்

பின் கைஸ் பின் ஸைத் (ரலி) அவர்களாவார்கள், இன்னும் இவர்களது மகனாரான கைஸ் பின் அம்ர் பின் கைஸ் (ரலி) - இந்த இரண்டு மிகப் பெரும் நபித்தோழர்கள் பத்ருப் போரில் வீர மரணமடைந்தவர்களாவார்கள். இவரது கணவர் பத்ருப் போரில் இறந்து போனதன் பின்னர் உபாதா பின் ஸாமித் (ரலி) அவர்களை மணந்து கொண்டார்கள், இந்தத் திருமண உறவின் மூலமாக முஹம்மது பின் உபாதா பின் ஸாமித் என்ற மகனாரைப் பெற்றெடுத்தார்கள்.

எளியோர்க்கு இரங்குவது, தான தர்மங்கள் செய்வது என்பது அவர்களது பிறப்புடன் பிண்ணிப் பிணைந்த பண்பாக இருந்தது. இவரது முழு நோக்கமும் இஸ்லாத்தின் நன்மைக்காக தன்னையே இழந்து வீர மரணமடைய வேண்டும் என்பதாகவே இருந்தது, இந்த நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக அவர்கள் தனக்குக் கிடைக்கும் எந்தச் சந்தர்ப்பத்தையும் அவர்கள் விட்டு விடுவதில்லை. மதீனாவில் புறநகர்ப் பகுதியான கூ.:பாவில் தான் இவர்கள் வாழ்ந்து வந்தார்கள். இறைத்தூதர் (ஸல்) அவர்கள் மக்காவிலிருந்து ஹிஜ்ரத் செய்து மதீனாவிற்கு வந்த பொழுது, மதீனாவிற்குள் நுழைவதற்கு முன்பாக கூ.:பா சற்று ஓய்வெடுத்து தங்கிக் கொண்டார்கள். அன்றைய தினத்தில், உம்மு ஹரம் அவர்கள் இஸ்லாத்தை மற்றும் ஏற்றிருக்கவில்லை, மதினாவில் உள்ள அன்ஸாரிப் பெண்களில் முதன் முதலாக இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதோடல்லாமல் அதனை அறிவிப்பும் செய்தார்கள், இன்னும் இறைத்தூதர் (ஸல்) அவர்களின் மதீனா வருகைக்கு முன்பதாகவே இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட பெருமை மிக்க பெண்மணியாகத் திகழ்ந்தார்கள். உம்மு ஹரம் (ரலி) அவர்கள் மிகவும் நீதமான, நடுநிலையாகச் சிந்திக்கக் கூடிய பெண்மணியாவார், இறையச்சமுடையவராகவும், நல்லடியாராகவும் திகழ்ந்தார்கள். அன்ஸாரிப் பெண்களிலேயே மிகவும் உன்னதமான இடத்தைப் பெற்றவராகத் திகழ்ந்தார்கள். இறைத்தூதர் (ஸல்) அவர்கள் இவர்களது வீட்டிற்கு அடிக்கடி செல்லக் கூடியவர்களாகவும், இன்னும் களைப்பேற்படும் சமயங்களில் அங்கு சென்று ஓய்வெடுக்கக் கூடியவர்களாகவும் இருந்தார்கள். இறைத்தூதர் (ஸல்) அவர்கள் உம்மு ஹரம் (ரலி) அவர்களின் வீட்டிற்கு வரும் பொழுதெல்லாம், அது தனக்குக் கிடைத்த பெரும் பேறாக, கௌரவமாகக் கருதி இறைத்தூதர் (ஸல்) அவர்களுக்கு பணிவிடை செய்யக் கூடியவர்களாக இருந்தார்கள்.

அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் அறிவிப்பதாவது, ஒருமுறை இறைத்தூதர் (ஸல்) அவர்கள் இவரது வீட்டிற்கு வருகை தந்த பொழுது அங்கு இருந்திருக்கின்றார். அங்கு இருந்த அவருடைய தாயும், சகோதரியும் இருந்தார்கள். அப்பொழுது அனைவரையும் எழச் சொல்லி, கடமையல்லாத சிறப்புத் தொழுகை ஒன்றை முன்னின்று நடத்தினார்கள். தொழுகை முடிந்ததன் பின்பாக, எங்களது குடும்பத்தாரின் இம்மை மற்றும் மறுமைக்காக இறைத்தூதர் (ஸல்) அவர்கள் பிரார்த்தனை செய்தார்கள்.

உம்மு ஹரம் (ரலி) அவர்கள் அம்ர் பின் கைஸ் பின் ஸைத் (ரலி) அவர்களைத் தான் முதலில் திருமணம் செய்து கொண்டார்கள். இவர்களுக்கு கைஸ் என்ற மகன் இருந்தார். முன்பு நாம் கூறியது போல, இருவரும் பத்ர் யுத்தத்தில் இறைத்தூதர் (ஸல்) அவர்களுடன் இணைந்து போரிட்டவர்களாவார்கள். உஹத் யுத்தத்தில் களம் புகுந்த இந்த இருவரும் வீரமரணமடைந்தார்கள். முதல் கணவர் உஹத் யுத்தத்தில் மரணமடைந்ததன் பின்னாள், இஸ்லாத்தின் வீரத்திருமகன்கள் வரிசையில் போர்ப்படைத் தளபதியாக வீற்றிருக்கின்ற உபாதா பின் ஸாமித் (ரலி) அவர்களை மணந்து கொள்கின்றார்கள். இவர்களுக்கு முஹம்மத் பின் உபாதா (ரலி) என்ற திருமகனார் பிறந்தார்கள். இறைத்தூதர் (ஸல்) அவர்களிடம் உடன்படிக்கை செய்து கொள்வதற்காக மதீனாவிலிருந்து மக்காவிற்கு சென்ற மூன்று குழுக்களிலும் இடம் பெற்ற சிறப்புப் பெருமையைப் பெற்றவர்களாக இருந்தார்கள், அதாவது முதல் குழுவில் சென்ற ஆறு பேர்களில் ஒருவராக, இரண்டாவது குழுவில் சென்ற 12 நபர்களில் ஒருவராக, மூன்றாவது குழுவில் சென்ற 72 நபர்களில் ஒருவராக இருந்தார்.

உபாதா பின் ஸாமித் (ரலி) அவர்கள் நல்ல கணவராகவும், நல்ல தந்தையாகவும் திகழ்ந்தார்கள். உம்மு ஹரம் (ரலி) அவர்களின் முதல் கணவருக்குப் பிறந்தவரான அப்துல்லா பின் அம்ர் (ரலி) அவர்களுக்கு நல்ல தந்தையாகவும் இவர்கள் திகழ்ந்தார்கள். தனக்குப் பிறந்த குழந்தைகளின் எந்தளவு பாசத்தைப் பொழிந்தாரோ அதேபோன்ற பாசத்தை தனது மனைவிக்குப் பிறந்த குழந்தைகளின் மீதும் பொழிந்த அருட்கொடைக்குரியவராகத் திகழ்ந்தார்கள். கிப்லாவின் திசையை மஸ்ஜிதுல் அக்ஸாவிலிருந்து மக்காவின் திசையை நோக்கித் திருப்பிய ஆயத் இறங்கிய பொழுது நடந்த கூட்டுத் தொழுகையில் கலந்து கொண்ட நபர்களில் ஒருவராக முஹம்மது பின் உபாதா (ரலி) அவர்கள் இருந்தார்கள். இதன் மூலம் இரண்டு கிப்லாக்களையும் முன்னோக்கித் தொழுத சிறப்புத் தகைமை பெற்றவர்களில் ஒருவராக அவர்கள் திகழ்ந்தார்கள்.

உம்மு ஹரம் (ரலி) அவர்கள் வழியாக பல நபிமொழிகளை மிகச் சிறந்த நபித்தோழர்களான உபாதா பின் ஸாமித் (ரலி), அனஸ் பின் மாலிக் (ரலி), உமைர் பின் அஸ்வத் (ரலி), அதா பின் யாஸர் (ரலி) மற்றும் யாலி பின் ஷத்தாத் பின் அவ்ஸ் (ரலி) ஆகியோர்கள் அறிவித்திருக்கின்றார்கள். இறைத்தூதர் (ஸல்) அவர்கள் மீதான அன்பும் மரியாதையும் உம்மு ஹரம் (ரலி) அவர்களின் மனதில் மிகவும் அதிகம் நிலை கொண்டிருந்தது. எப்பொழுதெல்லாம் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் உம்மு ஹரம் வீட்டிற்கும் அல்லது உம்மு ஹரம் அவர்களின் சகோதரியான உம்மு சுலைம் (ரலி) அவர்களின் வீட்டிற்கு வருகை தருகின்றார்களோ அப்பொழுது, இவர்களின் சந்தோசத்திற்கு எல்லையே கிடையாது என்ற உணர்வைப் பெற்றவர்களாகி விடுவார்கள். இறைத்தூதர் (ஸல்) அவர்களுக்காக சிறப்பான உணவுப் பதார்த்தங்களைத் தயார் செய்வதும், அவர்கள் படுத்து ஓய்வெடுத்து கொள்வதற்காக படுக்கை வசதிகளையும் அவர்கள் சிறப்பாக ஏற்பாடு செய்து தரக் கூடியவர்களாக இருந்தார்கள். இந்தச் சூழ்நிலைகள் இறைத்தூதர் (ஸல்) அவர்களுக்கு நல்லதொரு சூழ்நிலையை ஏற்படுத்தித் தருவதோடு, மன நிம்மதியையும், சந்தோசத்தையும் கொடுத்தது. நீங்கள் அடிக்கடி உம்மு ஹரம் (ரலி) அவர்களின் வீட்டிற்கு வருகை தருவதன் காரணமென்ன என்று இறைத்தூதர் (ஸல்) அவர்களிடம் ஒருமுறை வினவப்பட்ட பொழுது, எப்பொழுது இவரது இரண்டு சகோதரர்களுக்கும் பீர் மாஊனா போரில் இஸ்லாத்திற்காக தங்களுடைய இன்னுயிர்களை ஈந்தார்களோ அப்பொழுதிலிருந்து அவர்கள் மீது நான் இரக்கம் கொண்டேன், அவர்களது குடும்பத்தார்களுக்கு ஆறுதலாக என்னுடைய வருகை அமைவதோடு, அவர்களது தேவைகள் என்னவென்பதை அறிந்து அவற்றைச் செய்து கொடுப்பதற்காகவுமே நான் அவர்களது வீட்டிற்கு வருகை தரக் கூடியவர்களாக இருக்கின்றேன் என்று கூறினார்கள்.

பொதுவாக அன்ஸார்கள் அற்பணிப்பிற்கும், தாராளத்தன்மைக்கும் இன்னும் விருந்தோம்பலுக்கும் சிறந்த எடுத்துக்காட்டுகளாகத் திகழ்ந்தார்கள் எனினும், அவர்களில் மிகச் சிறந்த எடுத்துக் காட்டானவர்களாக உம்மு ஹரம் (ரலி) அவர்கள் திகழ்ந்தார்கள். அவர்கள் இந்த சிறப்புக்கு கீழ்க்கண்ட திருமறைக் குர்ஆனின் வசனங்களே உந்துதலாக இருந்தன.

இன்னும் சிலருக்கும் (இதில் பங்குண்டு அவர்கள் மதீனாவில் முஹாஜிர்களுக்கு) முன்னரே ஈமானுடன் வீட்டை அமைத்துக் கொண்டவர்கள் அவர்கள் நாடு துறந்து தங்களிடம் குடியேறி வந்தவர்களை நேசிக்கின்றனர் அன்றியும் அ(வ்வாறு குடியேறி)வர்களுக்குக் கொடுக்கப்பட்டதிலிருந்து தங்கள் நெஞ்சங்களில் தேவைப்பட மாட்டார்கள் மேலும், தங்களுக்குத் தேவையிருந்த போதிலும், தங்களைவிட அவர்களையே (உதவி பெறுவதற்குத் தக்கவர்களாகத்) தேர்ந்தெடுத்துக் கொள்வார்கள் - இவ்வாறு எவர்கள் உள்ளத்தின் உலோபித்தனத்திலிருந்து காக்கப்பட்டார்களோ, அத்தகையவர்கள் தான் வெற்றி பெற்றவர்கள் ஆவார்கள். (59:9)

மக்காவிலிருந்து தங்களது இல்லங்களைத் துறந்து மதீனாவிற்கு அடைக்கலம் தேடி வந்த மக்களின் மீது அன்ஸார்கள் பொழிந்த கருணையையும், இரக்கத்தையும், விருந்தோம்பல் பண்மையும் இன்னும் தியாகத்தையும் இறைவனே தனது திருமறைக் குர்ஆனில் மெச்சிப் புகழ்ந்து பாராட்டி இருப்பதோடு, இனி காலம் காலமாக வரும் சமுதாயத்தினருக்கு அதனை இரவாப் பாடமாகவும் நிலைப்படுத்தி விட்டான். இதில் உம்மு ஹரம் (ரலி) அவர்களின் தயாள குணத்தின் மூலமாக அளவிட முடியாத அருட்கொடைகளைப் பெற்றவர்களாகத் திகழ்ந்தார்கள் என்றால் அதில் மிகையில்லை. மேலும், இறைத்தூதர் (ஸல்) அவர்களின் ஆசியையும், நல்லெண்ணத்தையும் பெற்றுக் கொண்டவர்களாக அவர்களது குடும்பத்தவர்கள் திகழ்ந்தார்கள். இதனை விட ஒருவருக்கு என்ன தான் இந்த உலகத்தில் தேவை இருக்கின்றது? இறைத்தூதர் (ஸல்) அவர்கள் மரணத்தைச் சந்திக்கும் வரையிலும் உம்மு ஹரம் அவர்களுடைய சேவை குறித்து மிகவும் சந்தோசப்பட்டவர்களாக இருந்தார்கள்.

ஹிஜ்ரி 27 ல் உதுமான் பின் அஃப்பான் (ரலி) அவர்களின் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்த பொழுது, சைப்ரஸ் தீவின் மீது படையெடுத்து அந்தப் பூமியை வெற்றி கொள்ளுமாறு முஆவியா பின் அபூ சுஃப்யான் (ரலி) அவர்களுக்கு வழங்கப்பட்டது. அந்தத் தீவைச் சென்று சேர்வதற்கு ஒரு கப்பல் படையும் தயார் செய்யப்பட்டது. இஸ்லாமிய வரலாற்றில் முதன் முதலாக கப்பல் படை இந்தப் போருக்காகத் தான் தயார் செய்யப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. இந்தக் கப்பல் படையில் உபாதா பின் ஸாமித் (ரலி) அவர்கள் தனது மனைவி உம்மு ஹரம் (ரலி) அவர்களுடன் பயணம் செய்தார்கள். இன்னும் கவர்னர் முஆவியா (ரலி) அவர்களுடன் அவரது மனைவி ஃபக்தாஹ் பின்த் குர்தா (ரலி) அவர்களும் பயணம் செய்தார்கள்.

உபாதா பின் ஸாமித் (ரலி) அவர்கள் ஹமஸ் பகுதியின் கடற்கரையில் தங்கியிருந்த பொழுது, தான் அவரைச் சந்தித்தாக உமைர் பின் அஸ்வத் பின் அன்ஸி அவர்கள் எழுதுகின்றார்கள். அப்பொழுது, எனது உம்மத்தவர்கள் இறைவழியில் போர் செய்யும் பொருட்டு கடற்பயணம் செய்வார்கள் என்று இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறியிருப்பதை நான் செவிமடுத்தேன் என்று உம்மு ஹரம் (ரலி) அவர்கள் அப்பொழுது உமைர் பின் அஸ்வத் பின் அன்ஸி அவர்களிடம் கூறினார்கள். அப்பொழுது நான் அவர்களில் ஒருவராக நான் இருப்பேனா என்று நான் கேட்டதற்கு, இறைத்தூதர் (ஸல்) அவர்கள் ஆம் என்றார்கள். இதன் மூலம் உம்மு ஹரம் (ரலி) அவர்கள் இறைவனது பாதையில் போராட்டத்தில் கலந்து கொள்வதற்காக எந்தளவு ஆர்வத்துடன் இருந்திருக்கின்றார்கள் என்பதைப் புரிந்து கொள்ள முடிகின்றது. இந்தப் போரில் அல்லாஹ்வின் பேருதவியால் முஸ்லிம்கள் வெற்றி வாகை சூடினார்கள். சைப்ரஸ் போருக்கான கடற்பயணம் முடிந்ததன் பின்னர், சைப்ரஸ் ல் தங்கியிருந்த பொழுது நில மார்க்கமாக ஒரு குதிரையில் ஏறிப் பயணம் மேற்கொண்டார்கள். அப்பொழுது அந்தக் குதிரை மிரண்டு, துரதிருஷ்டவசமாக அந்தக் குதிரையிலிருந்து உம்மு ஹரம் (ரலி) அவர்கள் தவறி கீழே விழுந்து விட்டார்கள். அப்பொழுது ஏற்பட்ட கழுத்து எலும்பு முறிவு அவர்களது உயிரையே பறிக்கக் காரணமாக அமைந்து விட்டது. இறைவழியில் உயிர் துறக்க வேண்டும் என்ற அவர்களது ஆசை இதன் மூலம் நிறைவேறி விட்டது. அவரது உடல் சைப்ரஸ் ல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இறைத்தூதர் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பின்படி, கடற்போரின் பொழுது இறைவழியில் உயிர் துறந்த நற்பேறுக்கு உரித்தானவராக, வீர உயிர்த்தியாகிகளின் பட்டியிலில், இறைத்தூதர் (ஸல்) அவர்களின் ஆசியைப் பெற்று சுவனத்தை அனந்தரங் கொள்ளக் கூடியவர்களின் வரிசையில் இணைந்து கொண்டார்கள்.

அவர்கள் இந்தப் பூமியில் வாழ்ந்த பொழுது மதிப்பு மிக்க வாழ்க்கையையே வாழ்ந்தார்கள், இன்னும் இஸ்லாத்தின் சேவைக்காக நடத்தப்பட்ட முதன்முதல் கடல் போரில் கலந்து கொண்டு, தான் விரும்பிய உயிர்த்தியாகி என்ற அந்தஸ்தையும் அவர்கள் அடைந்து கொண்டார்கள்.

அல்லாஹ் இத்தகைய நல்லடியார்களின் மீது மனநிறைவு கொண்டான், அவர்களும் தன் இறைவன் மீது மன நிறைவு கொண்டார்கள்.